Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமலிவுப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

"தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலை ஸ்தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவர்கள். ஆதலினாலே நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும், இடையறா முயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும் சைவசாத்திரங்களையும் கற்பித்தல்வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்."

—ஆறுமுகநாவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம

# ஈழகேசரி

## ஆண்டுமடல்

செந்தமிழ்ப் பாட்டு முறையுந் தீட்டிய
செய் வெண் மடல்

"மலரவனும் வண்டமிழோர்க்கொவ்வான்"

## The Eelakesari Annual Illustrated Supplement

1935.

யுவ ஆண்டு


விலை சதம் 50.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனலக்குமி புத்தகசாலை

**சுன்னுகம் : வண்ணார்பண்ணை**

இயற்றமிழ் இலக்கண இலக்கிய இதிகாச இலங்கை இந்திய
பதிப்புகள் இங்கே கிடைக்கும்.



கலாசாலைகளுக்கு வேண்டிய எல்லாப் பொருட்களும்
விலை சகாயமாய் விற்கப்படும்.

# THANA LUCKUMY BOOK DEPOT,

**CHUNNAKAM & VANNARPONNAI.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எல்லாம் வல்ல இறைவன் திருவருளைத் துணையாக்கொண்டு வாரந்தோறும் எம்மால் வெளியிடப்பெறும் "ஈழகேசரி"யின் அங்கமாக "**ஆண்டு மடல்**" ஒன்றினை ஆண்டுதோறும் வெளியிடல் வேண்டுமென்னும் பேரவாவானது நீண்ட நாட்களாக அகத்தே குடிகொண்டு எம்மை அவ்வழியில் ஈர்த்து நின்றது. அதனை முற்றுவிக்கும் பெற்றி அடியேனது தகுதிக் கியலாதாயினும் "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார், திண்ணிய ராகப் பெறின்" என்னும் தேவர் திருவாக்கொப்ப, எவ்வித இடர் வரினும் தளராது எண்ணியவெண்ணத்தை முற்றுவித்தலே கடனெனத் துணிந்தேம். துணிந்து, பல தமிழ்ப் பேரறிஞர்க்கும் நமது எண்ணத்தைத் தெரிவித்துக் கட்டுரைகள் எழுதி உதவும்படி வேண்டினேம். எமது வேண்டுதலை ஏற்று யாம் விரும்பியவாறு கட்டுரை உதவியும், நிழலுருவப் படங்களை உதவியும், எம்மை அப்பேரறிஞர் பலரும் ஊக்கப்படுத்தினர். அங்ஙனம் ஊக்கப்படுத்திய அப்பெரியார்களுக்கு எமது தாழ்மையான வணக்கம் உரியதாகுக.

இன்னும், நாம் விரும்பியவாறு பரிசுக் கட்டுரைகள் பல கிடைத்தன. முதலாவது பரிசுக்குரித்தாய கட்டுரை அவற்றுள் காணப்படாமையான் அது இடம் பெறவில்லை. மற்றைய இருபரிசுக் கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன. சிறுகதைப் போட்டியில் பல கதைகள் கிடைத்தன. அவைகளில் பரிசில் பெறுதற்குரிய அம்சம் பெற்ற கதைகளின்மையால் இடம்பெறுவாயின. நாம் வேண்டாதிருக்கவும் இவ்வாண்டுமடலில் வெளியிடும்பொருட்டு அன்பர்கள் சிலர் கட்டுரைகளும் பாக்களும் அனுப்பியுள்ளார்கள். அவைகளையெல்லாம் வெளியிட இயலாமைக்குக் காரணம் யாவரும் அறிந்ததே. அதுபற்றி அவர்கள் கவலாதிருக்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றேம். அவை வாரவெளியீட்டில் காலந்தோறும் வெளியிடப்படும்.

கட்டுரைகள், பாக்கள் எமக்குக் கிடைத்த முறையே பிரசுரம் பெற்றுள்ளன. சிலர் பெரியார்களின் நிழலுருவப் படங்களைத் தருவதாக ஒப்புக்கொண்டு பின்னைக் காரணத்தினாலோ அவற்றைத் தக்கசமையத்தில் தராது மறுத்துவிட்டமையால், நாம் விரும்பிய சில பெரியார்களின் திருவுருவங்களை அமைத்துக்கொள்ள முடியாதாயிற்று. யாழ்ப்பாணத்தில் அச்சுத்தொழிலுக்குரிய சாதன வசதிகளை நன்குணர்வோர் இவ்வித வெளியீடொன்றினை வெளியிடுவதற்குரிய இடர்ப்பாடு எத்துணையென்பதை அறியாதிரார்.

இவ்வெளியீட்டின் கண்ணே மிளிரும் நிழலுருவப்பட அச்சுக்கள் பலவற்றை உதவியும், ஊக்கப்படுத்தியும் வேறு வகையில் ஆதரித்தும் உறுதுணை புரிந்த எமது அன்பரும் ஆசிரியருமாகிய திரு. ஆ. வீ. சோமசுந்தரம் அவர்களுக்கும், கொழும்பு மெய்கண்டான் அச்சியந்திரசாலை அதிபர்களுக்கும் நாம் பெரிதுங்கடப்பாடுடையேம்.

இடையறாது பாதிக்கும் பொருளாதார நிலையும், குடும்பக்கவலையும், பிரபஞ்ச விசாரமும் ஒருபுறமிருக்க, குறுகியகால எல்லையுள் (பத்து நாட்களுள்) இதனை முற்றுவித்தற்கு எம்முடன் உறுதுணையாக நின்று அல்லும்பகலும் சலியாதுளைத்த எமது தொழில்நிலையத் தொண்டர்களுக்கும் வேறு வகையில் துணைபுரிந்த ஏனைய நண்பர்களுக்கும் எமது நன்றி உரியதாகுக.

இவ்வாண்டுமடலின் முதல் வெளியீடு இதுவேயாதலின், இதன்கண் பலகுறைகளும் வழூஉக்களும் காணுதல்கூடும். அவற்றைப் பொறுத்துக் கொள்ளுமாறு அறிஞர்களை வேண்டிக் கொள்ளுகின்றேம்.

"ஈழகேசரி நிலையம்"
சுன்னகம்,
ய வ—சித்திரை—க.

நா. பொன்னையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டுக் காங்கிரஸ்சபைத் தலைவராகும்

**ஸ்ரீஜத். C. இராசகோபாலாச்சாரியாரவர்கள்**

அனுப்பிய அன்பான அறிக்கை

காங்கிரஸ் மண்டபம்,
சென்னை, 29-3-35.

**அன்பார்ந்த ஐயா,**

தங்கள் கடிதம் இன்றுதான் எனது கையிற் கிடைத்தது. இப்போது ஏதாவது ஒரு விஷயத்தைக் குறித்து எழுதியனுப்புவதற்குச் சாவகாசமில்லாதிருக்கின்றமைபற்றித் துயரடைகின்றேன். உங்கள் பத்திரிகை நல்வழியிற் றொண்டாற்றுவதில் விருத்தியடைவதாக. தாங்கள் பிரசுரிக்கவிருக்கும் வருட அனுபந்தமும் விரும்பிய பயனை அளிக்க எனது ஆசியுடையதாக.

கிராமவாசிகள் மேனிலையடையவேண்டுமாயின், ஒவ்வொரு தமிழ்மகனும், அவன் எங்கு வசித்தாலும் சரி, தமிழ்நாட்டில் செய்யப்பட்ட பொருட்களையே உபயோகிக்க மனவிருப்பங் கொள்ளவேண்டும். வேற்றுநாடுகளிலிருந்து வரும் பொருட்கள் எவ்வளவு அழகுள்ளனவாகவும், உபயோகிப்பதற்கு இலகுவானவையாகவுமிருப்பினும் அவைகளை ஆதரிப்பது எவ்வளவு தேசவிரோதமான செயல்.

உங்கள்மீது அன்புமிக்க,
C. **இராசகோபாலாச்சாரியார்.**

Congress House,
Mount Road, Madras.
29th March, 1935.

*Dear Sir,*

I am very sorry your letter has come into my hands only just now and there is no time for me to write anything. My best wishes to the journal and the special annual.

The best plan for rural uplift is that every Tamil citizen, wherever he may be, should love to use articles made in Tamil villages even though other articles may appear prettier and more handy for the time being.

*Yours sincerely,*
**C. Rajagopalachari**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி யுவவருஷ வாழ்த்து

புலம்பூத்த சீரீழ கேசரியே நேசரிதம் புணர வாய்ந்த
நலம்பூத்த தமிழ்க்கொடியே நந்தேச சந்தேச ஞான பானு
நிலம்பூத்த கற்பகமே நீநிலவி யுவவருட நிறைவித் தென்னப்
பலம்பூத்த யுவவருடப் பல்லாண்டு நினக்கெவரும் பாடு வாரே.

மாணிக்க மணியென்கோ மயிலென்கோ குயிலென்கோ மகவா னென்கோ
ஆணிப்பொன் னவிர்கங்கை நதியென்கோ மதியென்கோ அமுதே யென்கோ
பூணுற்ற வினஞ்சிறந்தாட் டயர்ந்துசெவி குளிர்வித்தெப் பொருளு நாடிப்
பாணிக்க ணமர்ந்துவிடாய் தணித்திருள்சீத் தெமைவளர்க்கும் பரிசா னின்னே.

பொருந்தியசுன் னாகநிகர் சுன்னாகப் பொன்னைய னேர்பொன் னையாவால்
பெருந்தகைநல் லீழகே சரியைநினை தரத்தொடரும் பெற்றி வாய்ந்த
மருந்துநிகர் தருமீழ கேசரியே யாசிரியர் வழியை நோக்கி
விருந்துவிருந் தெனவெதிர விலாசமுட னவரையெதிர் விநோத வாழ்வே.

பண்டிதர். ம. வே. மகாலிங்கசிவம்.

# புத்தாண்டு வாழ்த்து

அருள்வாழி யறம்வாழி யன்பு வாழி
ஆன்வாழி முகில்வாழி யறவோர் வாழி
திருவாழி கலைவாழி தேசம் வாழி
செந்தமிழு மாரியமுஞ் சிறந்து வாழி
குருவாகு மாசிரியர் குழாமும் வாழி
கோதிலாத் தேசியக் கொள்கை வாழி
ஒருவாது நீதிநெறி யுலகில் வாழி
உன்னதமா ருண்மைமிக வோங்கி வாழி.

பாரதியின் கலைமணக்கும் புலவர் வாழி
பலகலைதேர் பண்டிதர்கள் பல்கி வாழி
தேரவரி தாயமறை திகழ்ந்து வாழி
தெய்விக சன்மார்க்கம் செகத்தில் வாழி
நேரதிலா மாதர்கற்பு நிறைந்து வாழி
நித்தியமு மிலங்கைகலை நிலைத்து வாழி
பாரதநா டுயர்நிலையைப் படைத்து வாழி
பக்தியுடன் பணிபுரிவோர் பலரும் வாழி.

புத்தாண்டி லிவைபல்வும் பொலிந்து வாழி
பூலோக மொற்றுமையிற் பொருந்தி வாழி
எத்தாலுந் நிகரில்லா திலங்கு மெங்கள்
"ஈழகே சரி" விருத்தி யெய்தி வாழி
பத்திமையோ டீழ நாட்டுக் கேற்ற
பணியோவா தேபுரியும் பான்மை யாளன்
உத்தமனற் குணவாளன் பரந்த நோக்க
முள்ளவன்கற் றோர்பரவும் உசிதன் சுன்னைத்

திருமகளச் சியந்திரப்பேர்ச் சாலை நாட்டிச்
செந்தமிழு மரசியலுந் தேர்ந்தே நாங்கள்
பெருமையுற வீழகே சரியென் றோதும்
பெயருடைய தேசியம் பெரிதும் பேசும்
ஓநூல்ல பத்திரத்தை யுதவி யஃதை
யுற்சாகத் தொடுகடாத் தூரவோன் மேன்மை
தருதெற்கு மயிலைநகர் வாசன் சீர்த்தி
சாலவுறு பொன்னையன் தழைத்தே வாழி.

புன்னாலைக்கட்டுவன், க சி. சங்கரசாமிஐயர்.

## பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | பாம்புகள் | பாப்புப்புதல்வர்கள் | 10 | 11 | (இறைவனிலும்) | இறைவனிலும் |
| 9 | 11 | பாப்புகள் | பாம்புப்புதல்வர்கள் | 12 | 10 | பையையின் | வையையின் |
| 10 | 15 | (நருதலுந் தருதியீங்கு) | நருதலுந் தருதியீங்கு | 12 | 25 | இன்னும் இதன்கண் | |
| 10 | 31 | திருமாலிலே | திருமாலே | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராவ் பகதூர், சி. வை. தாமோதரம்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி வாழ்த்துப்பா

ஏழிசைச் சூழலான் ஈட்டிய சிறப்பின்
ஆழிசூழ்ந்(து) இலகும் ஈழநாட் டகத்தில்
சூழ்ந் தீய விலங்கெலாந் துணுக்குற்(று)
ஆழுமா(று) உருமி அதிர்க்குஞ் சீர்த்தி
**ஈழகே சரியே!** வாழிநீ பெரிதே.
நன்றுசெய் பெயலெலாம் ஒன்றுகலந்(து) அளாவிக்
குன்றிழிந்(து) ஊரெலாம் கோலிப் புலமெலாம்
சென்றுபயன் விளைக்குஞ் சிறப்பியா(று) அனையோய்!
ஆண்டி லிளையை! அறிவிற் பெரியோய்!
வேண்டுரு வேண்டியாங்குப் பூண்டு விளங்குவோய்!
நீயே,
பணிபல ஆற்றும் பணிஞனும் ஆகுவை;
பலபொருள் விற்கும் விலைஞனும் ஆகுவை;
செங்கோல் தாங்கும் எங்கோவும் ஆகுவை;
செந்தண்மை பூண்ட அந்தணனும் ஆகுவை;
வெண்நரர் வவும் வேலைபுரி தற்கென
மண்ணிடைக் கடவுளால் வரையப் பட்டுத்
தோன்றிய தாகநெஞ்(சு) ஊன்றி என்றவரும்
அடிமை களைந்து மிடிமை யகற்றி
வடுவிலா மானக் குடிமை புதுக்கப்
படிமிசைத் தோன்றிய நெடுவேள் ஆகுவை;
ஒழுக்கம் உடையார்க்(கு) ஊறமிழ்தம் ஆகுவை;
இழுக்கம் உடையார்க்(கு) இயமனும் ஆகுவை;
நற்றமிழ் நவில்நா வலவனும் ஆகுவை;
கற்றவர் காமுறும் கவிஞனும் ஆகுவை;
ஒற்றி யுரைக்குமோர் ஒற்றனும் ஆகுவை;
பெற்றோரும் ஆகுவை; பிள்ளையும் ஆகுவை;
இனிநீ,
வண்ண மாமணி வனைகலன் மிளிர
எண்ணெண் கலையும் இனிதிற் புனைந்து
சிவமாண்(பு) அமைந்த உவஆண்டு தோன்றுறு
பொழுதறிந்து தமிழகம் போந்தனை; நிற்கண்டு
தொழுதுபுகழ் வந்தி விழாவாற்றி மகிழ.
ஆதலின்,
வாழிய பெரிதே வாழிய
ஈழகே சரியெனும் இளந்தமிழ் ஏறே.

**க. சு. நவநீதகிருஷ்ணபாரதி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஈழகேசரி ஆண்டுமடல் பாட்டு

## வாயுறவாழ்த்தி மதியுரைத்தது

### கலிவெண்பா

உலகமாய் வேறாய் உடனாகி ஒன்றாய்
அலகிலா வாடல்புரி ஐயன் — நிலவுவளர்
செஞ்சடையான் வெண்ணீற்றான் சேர நினையாதார்
நெஞ்சடையான் முக்கோணை நீள்குவடும் — அஞ்சுவரு
வேலுடையா னன்பர் வினையுடைய வேமிதிக்குங்
காலுடையான் பன்னிரண்டு கண்ணுடையான் — நாலுமறை
தேடுந் திருப்பாதந் தீண்டி யுலகமுய
வாடுங் கதிரை யருட்சிலம்பும் — நீடுபுகழ்ப்
பொன்னுலகம் மண்ணுலகம் போகவரச் செய்தவழி
யென்னுஞ் சமனை யெழில்வரையும் — மன்னுவளம்
பூமலிய வின்பப் புதுநீர் பெருக்கிவரும்
மாவலி யென்னும் வரநதியும் — ஆவலுடன்
ஆடினோ ருள்ளும் புறமு மழுக்கறுத்துப்
பீடினோ ராக்குமணிப் பேராறும் — கூடிவரு
வேற்று முகமும் வினைமுகமுந் தோயுநர்க்கு
மாற்று நகுலமலை வான்புனலும் — தோற்றஞ்சால்
கொண்டல் முழவியம்பக் கோகிலங்கள் பாவியம்ப
வண்டு முரல மயிலாடும் — தண்டலையும்
செந்நெல் வயலுஞ் செழுநீ ரிலஞ்சிகளும்
இன்ன பிறவு மியைவதனால் — முன்னவர்கள்
பூமாது நாமாது பொன்மா தடனாடுந்
தேமாம் பொழிலென்று தேர்ந்துரைத்த — நாமத்துப்
பொன்னும் மணியும் பொழியும் புனலாடை
மன்னும் மணியீழ மண்டலத்தின் — சென்னியாய்
நஞ்சுக் கிளைய கடலமுதை நாவிளைத்தே
அஞ்சொற் பொதியி லமுதருந்துஞ் — செஞ்சொற்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்ப்புலவ ரோடுவினை பூமி திருத்தியுணும்
ஏர்ப்புலவர் வாழு மியாழ்நகரில் — சீர்ப்புலமைப்
பொன்னாக வில்லியமர் பொற்றையென வேபொருள்செய்
சுன்னாக மென்னுமுயர் தொல்பதியில் — முன்னாகும்
அன்னையாய்த் தந்தையா யன்புடனே யோம்பிவரும்
பொன்னையா தந்தகலைப் புத்திரனாய்ச் — சென்னிமேல்
பூமுதல்வன் முன்னாட் பொருள்முதல்கூ றாமையினால்
மாமுருகன் குட்டவைத்த மந்திரமும் — ஏமமுறு
வானவரு முண்ணா மதியமுதுண் டோன்தாயு
மானவன்செய் மோன மணியுமணிந் — தானமலர்ச்
சேவடியிற் றெய்வத் திருவள் ளுவனருளும்
பாவடிப் பைம்பொற் சிலம்பணிந்து — மேவடியில்
வைத்துரைத்துக்கோத்துவிட்டவன்னப்பொருட்டொடைகள்
பத்திபத்தி யாகப் பலவணிந்து — கத்துகடல்
ஞான மிசைப்புதுமை நாட்டு கலம்பகச்சீர்
மாலை யிரண்டுநிரை மார்பணிந்து — நாலுதவு
நன்மை கடைப்பிடித்து நாடொப் பனசெயற்குப்
பன்னுதமிழ்ப் பாரதிபாப் பாகனாய் — மன்னுகதிர்
நாளா லெழுந்தேழு நாளி லவணிபல
தாளால் நடந்துவருந் தன்மையுடன் — நீளொருமை
வாழ்விற் பொருளில் மனுமுறையில் கல்வியினில்
கேள்வியினிற் போமீழ **கேசரியே** — நாளூழி
ஆயுள் பெருகி அறிவு நலஞ்சிறந்து
தீயன நீங்கித் திருவடைந்து — பாயபுகழ்
எங்கும் பரப்பிமன வெண்ணங்கள் கைகூடி
மங்கா மணிவிளக்காய் வாழியரோ — செங்கரத்து
மையாண்ட வேடு மருவும் பருவமெனும்
ஐயாண் டகன்ற தகமகிழ்வாய்க் — கையாளுங்
கூறு விராயபல கொள்கை குறித்தறியும்
ஆறு பராய மடைந்தனையால் — கூறுங்கால்
காலமுஞ் செல்கதியுங் கற்பனைக ளும்பிறழ்ந்து
சாலவும் மேல்கீழ் தடுமாறும் — ஞாலத்துச்
சூழ்வன சூழ்ந்து தொழில்புரிக வென்றதனால்
சூழு முறுதிசில சொல்லுவேன் — ஊழ்முறையால்
ஆக்கிப் பலகோடி யண்டங்க ளைப்பரிந்து
காக்குங் கடவுளடி கைதொழுவாய் — நோக்கியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையப்ப னாசா னறிவால் முதிர்ந்தவர்கள்
தம்மையொப்பி லன்புடனே தாழ்ந்துநட — மெய்ம்மையினும்
இன்சொற் பயனீயு மெவ்வெவர்க ளோடுமென்றும்
வன்சொற்க ளொன்றும் வழங்காதே — வெஞ்சினத்தால்
கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டு கோபித்துப்
பேர்த்துநாய் கௌவுநரைப் பேணாதே — ஆர்த்தங்
கொறுத்தாரை வெல்லு முபாயமுண்டு தீமை
பொறுத்தா தரவு புரிவாய் — கறுத்துநின்று
முன்னே குறைகள் மொழிந்தாலும் முன்னினித்துப்
பின்னே குறையொன்றும் பேசாதே — மன்னும்
உடுக்கை யிழந்தவன் கைபோ லுதவும்
நடுக்கிலார் நட்பையென்றும் நாடு — நடுக்கம்
உறுங்கால் உயிர்முன்னர்க் குற்றுகரம் போல்வார்
வெறுங்கேண்மையெஞ்ஞான்றும்வேண்டாம் — பெறுங்காலம்
கொக்கிற் பதுங்கியதன் குத்திற் கொலையிழைக்கும்
மிக்கபுலிக் கூட்டமுண்டு மேவாதே — மிக்கெறிந்த
கல்லுக் கவுண்மறைத்துக் காலம்பார்த் துப்பகையைக்
கொல்லும்மால் யானைகளைக் கூடாதே — பல்லாற்றால்
நேயவுருக் காட்டி நினைவுவே றாயிருக்கும்
மாயமான் கூட்டம் மருவாதே — வாய்திறந்து
நாமாண் புறநக்கி நல்லுயிரை யுண்ணுகின்ற
ஆமா வினத்தை யடையாதே — பூமேவு
பந்திற் சுருண்டிருண்டு பாயும் பலபாணஞ்
சிந்தும்முட் பன்றிகளைச் சேராதே — வந்துகுந்தி
வாலறுத்தேன் நீரு மறுமீன்கள் வாய்ப்பென்னும்
சால நரியினத்தைச் சாராதே — பால்வரைந்து
சோலிமேற் போகாது தோல்விவெல்வி பார்த்திறங்கும்
வேலிமேற் பூனைகளை மேவாதே — ஞாலத்தில்
ஆன்ற வுயிர்மே லருளுடைய ராயொழுகுஞ்
சான்றோ ரினத்தைத் தழுவிக்கொள் — தோன்றுகின்ற
நல்லறிவி னூலெங்கள் நாடு குறைதவிரப்
புல்லும் பொருள்முட்டுப் போயகல — அல்லல்
அடிமைத் தனம்நீங்க ஆண்மை பெருக
மடிமையின்றி யுண்டுடுத்து வாழக் — கடைமுறையில்
ஐய னருள்மேவ வங்கங் கறிவுசொல்லி
வையகத்து மெய்புரைத்து வா !

**நவாலியூர், க. சோமசுந்தரப்புலவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அபிமானிகள் கவனிக்க!

தமிழகப் பெரியீர்! சாற்றுவ கேண்மின்!
தமிழக மாணவிர்! தக்கன செய்மின்!
கண்டினு மினிமை மண்டிய செந்தமிழ்
எண்டிசை யோர்கள் கண்டு மதிக்கயாம்,
செய்யா திருப்பது செம்மை யாகுமா?
மெய்வாழ் பெருந்தகை மேதையீர்! நாடுமின்!
செல்வச் சிறார்க்குச் செந்தமி ழுடனே
கல்விகள் பிறவுங் கற்கச் செய்மின்!
கைத்தொழில் பயின்றால் கவின்பெற வாழலாம்
சுத்த வீரர்கள் சுகமாய் வாழ்ந்தனர்
சமயக் கொள்கை தடுமா றுறாமல்
சமய நூலுட் சாற்றுவ போற்றித்
தெய்வம் பேணுந் திருநெறி யானும்
உய்வகை காட்டுமின்! உயர்ச்சி வாயில்
மாத்திரம் வதிவது மாணெறி யன்றாம்
சாத்திரம் எட்டில் தங்கிடி னின்பம்
தானே வந்து சற்பயன் றராது
மானார் விழியுடை மங்கை நல்லாரும்
தேனார் மொழியுடைச் செல்வர் யாவரு
மேனாட் டவர்போல் மேன்மை மேவச்
செழுந்தமி ழாரியச் செம்மாண் மொழிகளைக்
கொழுந்து நிகர்மனங் குளிரக் கொண்டு
செய்ய வாழ்வு திகழச் செய்மின்!
மய்யகல் மாட்சி மருவி வாழ்விர்!
இளைஞர் முயன்றால் இன்பம் பெருகும்!
கிளைகளும் கிளர்புகழ் மிளிரத் திகழும்
"**ஈழ கேசரி**" எய்துபுத் தாண்டில்
மாண்ழ மன்றோன் மாணருள் கூட
வாழிய வென்று வாழ்த்துவம் நன்றே!
சுபம்! சுபம்!! சுபம்!!!

**தமிழ்ப்பண்டிதர், வ. மு. இரத்திநேசவரையர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாடற்சிறப்பு.


வித்துவான்,
பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

பரிபாடலென்னும்இந்நூல், பரிபாடலாகிய செய்யுளால் தொகுக்கப் பெற்றமையின், இப்பெயர் பெற்றது. இது கடைச்சங்க மிருந்து தமிழ் ஆராய்ந்த நல்லிசைப் புலவர்களாற் செய்யப்பட்ட செய்யுள்களைத் தொகுத்துச் செய்த தொகை நூல் எட்டனுள் ஒன்று. அதனை,

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல், கற்றறிந்தா ரேத்துங் கலியோ டகம்புறமென், றித்திறத்த வெட்டுத் தொகை." என்னும் வெண்பாவாலறிக.

**பரிபாடற் செய்யு ளிலக்கணம்**

பரிபாட்டென்பது பரிந்து வருவது. அஃதாவது, கலி யுறுப்புப் போலாது பல அடியும் ஏற்றுவருவது பலவடியென்பது, பல வகைப் பாவடியை. *



[வித்துவான், சி. கணேசையர்]

தொல்காப்பியனார்,

"நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே, கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ, டொத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின." என்னுஞ் சூத்திரத்துள், பரிபாடற் செய்யுள் வெண்பாவென்னும் உறுப்பினால் யாக்கப் படுமென்று கூறி,

"பரிபாடல்லே தொகைநிலை விரியி, னிதுபாவென்னு மியனெறியின்றிப், பொதுவாய் நிற்றற்கு முரித்தென மொழிப." என்னும் புறநடைச் சூத்திரத்தால் அது நால்வகைப் பாவுள் இது பாவென்னுமியனெறியின்றிப் பொதுவாய் நிற்றற்கு முரித்தென்று கூறி, மேல்,

"கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தொடு, செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக், காமங் கண்ணிய நிலைமைத் தாகும்." என்பதனால் அப்பாவின் உள்ளுறுப்பும் பொருளும் கூறி,

* இளம்பூரணர், ஒரு வெண்பாவாகி வருதலின்றிப் பல வுறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப்பெறுவது என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொற்சீ ரடியு முடுகிய லடியு
மப்பா நிலைமைக் குரிய வாகும்."

என்னுஞ் சூத்திரத்தால் சொற்சீரடியு முடுகியலடியும் அப்பரிபாடலுக்கு உள்ளுறுப்பாக வருமென்றும்,

"பரிபாட் டல்லே,—
நாலீ ரைம்ப துயர்படி யாக
வையைந் தாகு மிழிபடிக் கெல்லை."

என்னுஞ் சூத்திரத்தால் பரிபாடற் செய்யுளுக்கு அடி அளவு பெருக்கத்திற் கெல்லை நானூறும், சுருக்கத்திற் கெல்லை இருபத்தைந்தும் என்றும் கூறுதலானும், இச் சூத்திரங்களுக்கு உரையாசிரியர்கள் உரைத்த உரையானும் பரிபாடற் செய்யுளிலக்கணம் இதுவென்பது அறியப்படும்.

**கடைச்சங்ககாலப் பரிபாடற் செய்யுட்டொகை**

இந்நூல் தொகுக்கப்பட்ட காலத்தில் எழுபது பாடல்களையுடையது. அஃது "அன்பினைந்திணை" (இறை–சூ–க) என்பத னுரையிலும், "தாவின்றுகி" (தொல்–செய்–சூ–கசக) என்பதனுரையிலும் கஙo கலியும், எo பரிபாடலுமென வரையறை செய்திருத்தலானும்,

"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று—மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்."

என்னும் பாடலானும் அறியப்படுகின்றது.

**பரிபாடலில் இப்போதுள்ள செய்யுட்டொகை**

இப்பாடல்களுள்; இப்பொழுதுள்ளவைகள் இருபத்துநான்கு பாடல்களும், சில உறுப்புக்களுமே. இவற்றுள்ளே தொடர்ச்சியாகவுள்ள பாடல் இருபத்திரண்டு. அவற்றுள் திருமாலுக்குரியன ஆறும், முருகக்கடவுளுக்குரியன எட்டும், வையைக்குரியன எட்டுமாகும். கடவுள் வாழ்த்துள் திருப்பரங்குன்றமும், திருமாலிருஞ் சோலைமலையும் கூறப்பெற்ற பாடல்களில் மலைவிளையாட்டும், வையைக்குரிய பாடல்களில் நீர்விளையாட்டும் வந்துள்ளன.

இப்பாடல்கள் ஒவ்வொன்றும் மிகவுஞ் சிறந்த பொருளமைந்தனவாகக் காணப்படுகின்றவை. இவற்றிலுள்ள சிறந்த பொருள்களுள் எமக்குத் தெரிந்த சிலவற்றை ஈண்டு எடுத்துக் காட்டுதும்.

### க-ம் பாடல். கடவுள் வாழ்த்து

இது திருமாலை முன்னிலையாக்கி வாழ்த்தியது. இச் செய்யுளில் பரிபாடற் செய்யுளுக்குரிய உறுப்புக்களுள் தரவும், கொச்சகமும், அராகமும், சுரிதகமும், எண்ணும், தனிச்சொல்லும் வந்துள்ளன. இதனுள் எண், பரிபாடற்குச் சொல்லப்படாத கலிக்குரியவுறுப்பு. தனிச்சொல், சொற்சீரடி.

இவ்வாழ்த்துள் முதலில் திருமாலின் தோற்றமாய் விளங்கிய பலராமனை வைத்து,

**பலராம வழிபாடு**

"ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலை
தீயுமிழ் திறனொடு முடிமிசை யணவர
மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனிச்
சேயுயர் பணைமிசை யெழில்வேழ மேந்திய
வாய்வாங்கும்வளை நாஞ்சிலொருகுழையொருவனை"

எனப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. அதன் காரணம் நன்கு தெரியவில்லை. ஆயினும் இக்கவி, பலராம வழிபாடுடையரா யிருந்தமைபற்றித் தம் வழிபடு கடவுளாகிய அப்பலராமனை முதலில் வைத்துப் புகழ்ந்து கூறியிருக்கலாமென்று ஊகிக்கத்தக்கது. அக்காலத்திலே பலராமனுக்குக் கோயில் சமைத்து அவனுருவை நாட்டி வழிபட்டு வந்தமை,

"வால்வளைமேனி வாலியோன் கோவிலும்." (சில–கள–கo)

என்றும்,

"புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம்." (சில–கள–கo)

என்றும்,

"மேலி வலனுயர்த்த வெள்ளை நகரமும்." (சில–ஊர்–க)

என்றும் வரும் அடிகளான் அறியக்கிடந்தது. இனிக் கண்ணபிரானையும், பலராமனையும் இந் நூலில் வரும் வேறு செய்யுள்களினும் சேர்த்துவைத்துப் புகழ்தல் காணப்படலின், அங்ஙனமே இதன்கண்ணும் பிறப்பு முறைபற்றிப் பலராமனை முந்திவைத்துப் பாடியிருக்கலாமென்றும் கொள்ளலாம்; கண்ணனையே திருமாலாகக் கருதலின்.

இனி அவ்வடிகளுள், அவன் முடிமேல் ஆயிரந் தலையையுடைய பாம்பு தீயையுமிழும் தன்மையோடும் மேல்நோக்கியபடி யிருக்குமென்றும், அவன் மார்பு திருவும் பரப்புமுடையதா யிருக்குமென்றும், மேனி (நிறம்) வால்வளை (சங்கு) போன்றிருக்குமென்றும், படை நாஞ்சில் (கலப்பை) என்றும், ஒரு காது குண்டலமுடைத்தாயிருக்குமென்றும், அவன் வடிவை கண்டாங்குப் புலப்படக் கூறியிருப்பது வியக்கத்தக்கது. அவனுக்குக் கொடி பனையன்றி யானையென்பதும் ஈண்டு அறியத்தக்கது. அச்செய்யுளில் திருமாலின் வடிவையமைத்துக் கூறுங்கால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையு மேனியை மேனித்
திருவொருமர்ந் தமர்ந்த மார்பினை மார்பிற்
றெரிமணி பிறங்கும் பூணினை மால்வரை
யெரிதிரிந் தன்ன பொன்புனை யுடுக்கையை,"

என அவன் கண்ணினழகையும், மேனியினழகையும், மார்பினழகையும், பூணினழகையும், உடுக்கையினழகையும் சிறப்பித்துக் கூறுமுகத்தா னவர் வடிவு தோன்றக் கூறியிருப்பதூஉம், இவற்றின்கண் தாமரைக்கண்ணன், காயாவண்ணன், திருமறுமார்பன், கௌத்துவதரன், பீதாம்பரன் என்னும் பெயர்கள் அமைந்திருப்பதூஉம் பாராட்டப்படத்தக்கன. ஒருமர்தல்—பரத்தல். உடுக்கை—ஆடை. ( வஸ்திரம். ) திரிதல்—சூழ்தல். பொன்புனையுடுக்கை—பீதாம்பரம்.

மேலும், இதன்கண் திருமாலின் வரவு முனிவராலும் அறிதற்கரியதென்னுங் கருத்தமைய, " மாஅல்—தெருளநின் வரவறிதல்மருளறு தேர்ச்சி முனைவர்க்குமரிதே." என்று கூறப்பட்டதூஉம் சிறப்புடையதாகும். அது;

" வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்." (நாலடியார்—க)

என்றும்,

" மற்றவன்றேவனாகி வானிடுசிலையிற்றோன்றி." (சிந்—குண—கoக)

என்றும் பிறருங் கூறியிருத்த லறியத்தக்கது.

அன்றியும், திருமாலை விளித்து, உன்னியல்பை இன்னதென் றுரைத்தல் எமக்கரிதாயினும் அன்பை நினக்குச் செய்யமாட்டாத யாம் உன்னைப் புகழ்ந்து சொல்லுமவற்றை ( உன்னியல்புகள் முற்றும் அமையாமையின் ) மெல்லியனவென்று வெறுது நீ யருளல் வேண்டுமென்று அன்பும் பணிவுந் தோன்ற,

" அருமைநற் கறியினு மார்வ நின்வயிற்
பெருமையின் வல்லா யாமிவண் மொழிபவை
மெல்லிய வெனாஅ வெறாஅ தல்லியந்
திருமறு மார்பநீ யருளல் வேண்டும்."

எனக் கூறுவதூஉம், இறைவனாகிய அவன் எப்பொருளுமாய் நிற்கு மியல்புகூறி, அதனால் நீயே முதல்வன்; நீயே உனக்கு ஒப்பு எனவுங் கூறிப் பின் நின்னடியுறைதலை யாம் நவகலும் பொருந்திப் பொலிகவென்று உன் தாள்களைத் தொழுது பரவுதும் என அவன் அடியுறைதலை வேண்டி வாழ்த்துவதூஉஞ் சிறப்புடையதாம். அடியுறைதல் — அடியின்கீழ்த் தங்குதல்.

உ-ம் பாடல்

இதுவும் திருமாலை முன்னிலையாக்கிக் கூறிய கடவுள் வாழ்த்து. இது கீரந்தையார் என்னும் புலவர் பாடியது.

இதன்கண்

**ஊழியின்பின் உலகந் தோன்றுமுறை**

" தொன்முறை யியற்கையின் மதியோ ......
.............................. மரபிற்றாகப்
பசும்பொ னுலகமு மண்ணும் பாழ்பட
விசும்பி னூழி யூழூழ் செல்லக்
கருவளர் வானத் திசையிற் றோன்றி
யுருவறி வாரா வொன்ற னூழியு
முந்துவளி கிளர்ந்த வூழூ ழூழியுஞ்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெய றழீஇய வூழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கு
முள்ளீ டாகிய விருநிலத் தூழியும்."

என்னுமடிகளால் இவ்வுலக மழிந்தபின் பஞ்சபூதங்களுந் தோன்றுங்கால் வானமாகிய முதற்பூதம் ஒலியுடனே தோன்றிஎத்தனையோ ஊழி கழிந்தபின் காற்றுத் தோன்றுமென்றும், காற்றுத் தோன்றி எத்தனையோ ஊழி கழிந்தபின் அதினின்றும் செந்தீத் தோன்றுமென்றும், அதுதோன்றிஎத்தனையோ வூழி கழிந்தபின் நிலம் தோன்றுமென்றும் கூறியிருப்பது தமிழர் உலகின் தோற்றமுறையை ஆங்கில கலாநிபுணர்கள் உணர்தற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே அறிந்திருந்தாரென்பதை உணர்த்துகின்றது.

இதன்கண் வளர்வான மென்புழி, வளர்தலாகிய இடத்து நிகழ்பொருளின் றொழில் இடத்து மேனின்று தோன்றியென்னும் வினையெச்சத்திற்கு வினைமுதல் முடிபாயிற்று என்று பரிமேலழகர் கூறியவாறே, நச்சினார்க்கினியரும் " அம்மக்கிளவி " என்னும் (வினை-34) சூத்திரவுரையுள் " ஆகிடந்து செறுவிளைந்தது " என்பதனை முடித்துள்ளார். சேனாவரையர், செய்தெனச்சம் சிறுபான்மை பிறவினையோடும் முடியுமெனக்கொண்டு " வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய " (எச்ச—61) என்பதனை விதியாகக் கொள்வர்.

**நெய்தல் முதலிய பேரெண்கள்**

மேலும், நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் என்னும் பெயர்களும் எண்களுக்கும் பெயர்களாயிருந்தமை, இதன்கண் வரும்,

" நெய்தலுங் குவளையு மாம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செயகுறி ஈட்டம்."

என்னும் அடிகளான் உணரத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பத்து, நூறு, ஆயிரம் என்ற தலைகளையுடைய அவுணர்களது அத்தலைகள் வெட்டுண்டு விழுதற்கு, பனையின் குலைகள் வெட்டுண்டு விழுதலை யுவமையாக்கி,

உவமைச் சிறப்பு

"குருகு பறியா நீளிரும் பனைமிசைப்
பலபதி னயிரங் குலைதரை யுதிர்வபோ
னில்லா தொருமுறை கொய்பு கூடி
யொருங்குருண்டு பிளந்து நெரிந்துருள்பு சிதறு
பளறு சொரிபு நிலஞ் சேரச்
சேரா ரின்னுயிர் செருக்கும்."

எனக் கூறியதூஉம் சிறப்புடையதாகும்.

இன்னும், வேதவேள்வியை நிந்தனை செய்யாது வேள்வி ஆசானுரையைத் திருமாலின் உருவமாகவும், பசுவை உண்டியாகவும், எரியின் தோற்றத்தை விண்டுவின் வெளிப்பாடாகவும் அமைத்து,

வேள்விக்குந் திருமாலுக்கும் (இறைவனுக்கும்) இயைபுகூறல்

"கேள்வியுட் கிளந்த வாசா னுரையும்
படிநிலை வேள்வியுட் பற்றியாடு கொளலும்
புகழியைக் கிசைமறை யுறுகனன் முறை
மூட்டித்
திகழொளி யொண்சுடர் வளப்பாடு கொள
நின்னுரு புடனுண்டி லும்
பிறருடம் படுவாரா
நின்னொடு புரைய
வந்தணர் காணும் வரவு."

என்னுமடிகளால் கூறியிருப்பதும் தமிழ்மக்கட்கும், பிறர்க்கும் பயன்படத்தக்கதாகி விளங்குகின்றது.

### ௩-ம் பாடல்

இதுவுந் திருமாலை 'முன்னிலையாக்கி வாழ்த்தியது. இது, கடுவனிளவெயினனார் பாடியது.

இதன்கண் திருமாலின் ஊர்தியாகிய கருடன் கத்துருவின் பிள்ளைகளாகிய பாம்புகளுக்குத் தேவாமிர்தத்தைக் கொணர்ந்து கொடுத்துத் தன் தாயாகிய வினதையை அடிமையினின்றும் மீட்ட கதையை அமைத்து,

"ஏளர், வயங்குபூ ணமரரை வௌவிய வமிழ்திற்
பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளினை." என்றும்,

கேசியென்னும் அசுரன் கதையை அமைத்து,

"கூந்த லென்னும் பெயரொடு கூந்த
லெரிசினங் கொன்றோய்நின் புகழுரு வினகை."

என்றும் கூறியன, முறையே கருடனின் பெற்றோர் வழிபாட்டின் பெருமையையும், திருமாலின் அருட்டன்மையோடு, வலியையும் சிறப்பித்து நின்றன. இவ்வடிகளுளமைந்த கதையை மாணுக்கர்க்குப் பயன்படும் பொருட்டு முறையே ஈண்டுத் தருதும்:—

## கருடன் தாயைச் சிறைமீட்ட சரிதம்

பிரமாவுக்குக் கத்துருவென்றும் வினதையென்றும் இரு புதல்வியர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் காசிபமுனிவருக்கு மனைவியரானார்கள். அவருள் கத்துருவென்பாள் பாம்புகளைப் பெற்றாள். தங்கையாகிய வினதை கருடனையும் அருணனையும் பெற்றாள். இருவருங் காண உச்சயிச்சிரவமென்னும் பெயர்படைத்த இந்திரன் குதிரை வந்தது. அது வெண்ணிறமுடையது. அதனைக் கண்ட அவ்விருவருள் மூத்தாளாகிய கத்துரு, தங்கையாகிய வினதையைப் பார்த்து இக்குதிரையின் வால் வெள்ளையோ, கறுப்போ என்றாள். வினதை வெண்மை என்றாள். கத்துரு தங்கையை நோக்கி, "நீ சொன்னது பிழை" கறுப்பு என்றாள். இவ்வாறு மாறுபட்டபொழுது, இதன்கண் எவள் தோற்றாளோ, அவள் வென்றாட்கு அடியளாகவென ஒருவர்க்கொருவர் சபதம் பேசிக்கொண்டு கத்துரு வினதையறியாதபடி அனந்தன் வாசுகி முதலிய புத்திரர்களைப் பார்த்து இவ் வெண்ணிறமான வால் கருநிறமாகும்படி சுற்றிக் கொள்ளுங்கள் என்றாள். அதற்கவர்கள் மறுத்தார்கள். அவள் கோபங்கொண்டு அவர்களைச் சபித்தாள். அப்பொழுது கார்க்கோடன் தாயின் சாபத்திற்கஞ்சி அவளின் பாதங்களை வணங்கி நான் இதன் வால்முழுவதையும் இருட்பிழம்பாகச் செய்வேனென்றான். அவளும் அங்ஙனமே செய்கவென்றாள். கார்க்கோடன் குதிரையையடைந்து அதன் வால் கருநிறமாகும்படி சூழ்ந்துகொண்டான். அப்பொழுது இருவரும் பாற்கடலையடைந்து குதிரையின் வாலைப் பார்த்தார்கள். அது கருநிறமாகவிருந்தது. அப்பொழுது வினதை மனம் மெலிந்தாள். கத்துருவும் அவளைப் பார்த்து, வீட்டுவேலைகளைத் தாதியர்போலச் செய்யும்படி பணித்தாள். அப்பொழுது கருடன் தாயின் பக்கத்தை யடைந்தான். அப்பொழுது கத்துரு வினதையைப் பார்த்து நின் புதல்வனாகிய கருடன் என் புத்திரரைச் சுமந்து கொண்டு வரும்படி கட்டளையிடுகவென்றாள். அப்பொழுது வினதை கருடனைப் பார்த்து, இவளை யான் சுமந்துவருகின்றேன். நீ இவள் புதல்வர்களைச் சுமந்துவருக; ஏனென்று கேளாதே என்றாள். கருடனும் அவர்களை முதுகிற்கொண்டு வழிக்கொண்டான். வினதையும் கத்துருவைச் சுமந்துவந்தாள். அராப்புதல்வர்கள் கருடன் முதுகிலேறிப்போய்ப் பாதலத்தையடைந்தபின், கருடனைப் பார்த்து எமக்கு இப்பொழுது பிறதீவுகளிலுள்ள சிறப்புக்களையெல்லாம் பார்த்தற்கு விருப்பமுண்டு. எங்கள் வேலைக்காரி புதல்வனாகிய நீ விரைவிற் சுமந்து கொண்டு போகுதியென்றார்கள். அப்பொழுது கருடன் தாயைப் பார்த்துக் கவலையுற்று, நீ இவளைச் சுமக்கவந்த காரணமென்னே? இப்பாம்புகள் என்னைத் தங்கள் வேலைக்காரி புத்திரனென்று சொன்னதற்குக் காரணமென்னையோ? இவற்றின் காரணத்தைச் சொல்லுதி என்றான். அப்பொழுது தாயாகிய வினதை நிகழ்ந்ததைச் சொன்னாள். கருடன் தாயை நோக்கி, "அன்னே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்னிடத்தினின்றும் அடிமைத்தனம் நீங்கும் விதமெப்படி? அதற்கேற்ற உபாயம் யாது சொல்லுதி" என்றான். அப்பொழுது தாய் கருடனை நோக்கி, நீ பணிப்புதல்வரை யடைந்து என் தாய் சிறையினின்றும் நீங்குதற்பொருட்டு நீங்கள் எதை விரும்பிச் செய்யச்சொன்னீர்களோ, அதை யான் என் தாயின் அடிமை நீங்கும்பொருட்டுச் செய்வேன்; அதை எனக்குச் சொல்லுங்களென்று கேட்குதி என்றாள். கருடனும் அவ்வாறே அவரைக் கேட்டான். பணிமைந்தர், கருடனே! நீ தேவரூர்க்குப் போய் அமுதங் கொண்டுவந்து தந்தால் நின் தாய் அடிமையினீங்குமென்றார். கருடனும் தாயிடம் வந்து, தேவரூர்க்கு அமுதங் கொண்டுவரும்படி போவேன். வழிக்கு யாதாயினும் உணவு தருதியென்றான். அவளும் உணவைக் கொடுத்து மைந்தனே! நீ சென்று தேவரூர் அமிர்தத்தைக் கொண்டுவருக என்று கூறிப், பின்னும் மகனே! உன் அங்கங்களையெல்லாம் வாயுதேவர்கள் புரக்குகவென்று வாழ்த்தி விடுத்தாள். தாயின் வார்த்தையைக் கேட்டு மனங் களித்துத் தேவருலகத்திற்குச் செல்லுமாறு எழுந்து விரைவாகச் சென்று, தன் பிதாவாகிய காசிபமுனிவ ரிருக்குமிடமடைந்தான். அப்பொழுது புதல்வனே! நீ யெங்கே போகின்றாய் என்று காசிபமுனிவர் கேட்டவளவில், கருடன் அவரை நோக்கி, என் தாயின் அடிமை நீக்கும்படி அமுதம் கொண்டுவரப் போகின்றேன்; பசி மிகுதியினால் என் சிறகுகள் கருகிப்போயின; எனக்கு உணவு தருவீர் என்றான். அப்பொழுது காசிபர் கருடனை நோக்கி, இத் தடாகத்தினிடத்தே ஓர் யானையும் ஆமையும் போர் விளைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை யுண்டு உன்பசி தீர்த்துச் செல்லுதி யென்றார். அவ்வாறே யவனும் செய்துகொண்டு போகும்பொழுது தேவநாட்டில் பல உற்பாதங்கள் தோன்றின. அப்பொழுது இந்திரன் வியாழனை நோக்கி, இவ்வுற்பாதங்கள் நிகழ்தற்குக் காரணமென்னை யென்றான். அதற்கு வியாழன், கருடன் அமுதங்கொள்ள வருகின்றான். அதனாற்றான் இந்நிமித்தங்கள் தோன்றினவென்றான். இந்திரன் அக்கினி முதலிய தேவர்களைப் பார்த்து, கருடன் அமுதங்கொள்ள வருகின்றான். அவன் கொள்ளாதபடி நீவிர் சென்று காப்பீர்களென்றான். அவர்களு மவ்வாறே அங்கு அமுதத்தைச் சூழ்ந்து காத்து நின்றார்கள். அப்பொழுது கருடன் செல்ல அவன் வருகையைத் தூரத்திலே கண்ட தேவர்கள் அஞ்சினார்கள். பின் தேவர்களுக்கு மவனுக்கும் போர் தொடங்கிற்று. அவர்களை யெல்லாம் கருடன் வென்று அமிர்த கும்பத்திற்குச் சமீபத்திற்போய் அதனைச் சக்கரம் காத்துக்கொண்டு இருப்பதைக்கண்டு தன் வடிவைச் சுருக்கி அச்சக்கரத்தினுள்ளாகப் புகுந்தபொழுது அவ்வமுதத்தினடுவே இரு பாம்புகள் இருக்கக் கண்டான். கண்டு அவற்றை வாலிற் பிடித்துத் தூக்கிச் சுழற்றிப் பக்கத்திலே யடித்துக் கொன்றுவிட்டு அவ் வமிர்தமிருந்த வளையத்தைப் பீறி, அதையெல்லாம் வாரிக்கொண்டு ஆகாயத்தெழுந்தான். அப்பொழுது திருமால் கருடனை நோக்கி உன்னுடைய மகிமையை மகிழ்ந்தாம்; வேண்டிய வரங்களைக் கேளென்றார். கருடன், உன்னை யானடையவேண்டும்; என் மரணத்தையும் மூப்பையும் நீக்கியருளவேண்டுமென்றான். விஷ்ணு அவ்வரங்களைக் கொடுத்தார். பின் கருடன் அமுதத்தை எடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாசச் செல்லும்பொழுது இந்திரன் வச்சிரப்படையை விட்டான். அப்பொழுது வச்சிரத்துக்கு வயமுண்டாகவென்று தன் சிறகில் ஒரு இறகை வீழச்செய்தான். அப்பொழுது வச்சிரப்படை மீண்டது. கருடன் இந்திரனை நோக்கி நீ என்னை வெல்ல முடியாது. நீ யென்னோடு எதிர்த்து இறவாது செல்லுதி யென்றான். அப்பொழுது இந்திரன் எங்கள் அமிர்தத்தை நீ பிறருக்குக் கொடுத்தால் அவர்கள் அதனை உண்டு எங்களைக் கொல்ல முயல்வார்கள். ஆகையால் நாங்கள் உய்யும்படி அமிர்தத்தைத் தந்து செல்லுதி யென்றான். அப்பொழுது கருடன் இந்திரனை நோக்கி யான் இதனை யெங்கே வைக்கின்றேனோ அங்கே நீ வந்து கவர்ந்துகொண்டு செல்லுதி யென்றான். அப்பொழுது இந்திரன் மகிழ்ந்து வேண்டிய வரத்தைக் கேட்குதி என்றான். அப்பொழுது கருடன் பாம்புகள் என் தாயை வேலைக்காரியாக்கினார்கள்! அவர்களை உண்ணும் வரந் தரல்வேண்டுமென்றான். அவ்வரத்தை இந்திரன் கொடுத்தான். கருடன் தன் தாயின் பக்கத்தையடைந்து பாம்புகளைப் பார்த்து நீங்கள் நீராடிச் சுத்தராய் வந்து அதனை யுண்ணுங்கள்; அவ்வமிர்தம் பசிய தருப்பைப் புற்களுள் வைக்கப்பட்டு இருக்கின்றதென்றான். அப்பொழுது பாம்புகள் உன் தாயின் அடிமை யின்றோடு நீங்கியதென்று சொல்லி நீராடும்படி சென்றார்கள். அவர்கள் நீராடச் செல்வதை இந்திரன் நோக்கி அமிர்தத்தை யெடுத்துக்கொண்டு விரைவாகச் சென்றான் பணிப் புதல்வர்கள் நீராடிவிட்டுவந்து அமிர்தத்தைப் பார்த்து அதனைக் காணாது திகைத்தவராய் நறிய தருப்பையை நீக்கி நெடுநேரம்நாக்குகளாலுளர்ந்து புதிய அவ்வமிர்தத்தைநாடி அயர்ந்தார்கள். அவர்கள்நாக்குகளும் தருப்பைப் புல்லினால் பிளக்கப்பட்டுக் கவராயின என்பதே அக்கதை.

அன்றியும், புருடனும் கன்மேந்திரியங்களைந்தும் ஞானேந்திரியங்களைந்தும் பூதங்களைந்தும் அகங்காரமும் மனமும் மூலப்பகுதியுமாகிய தத்துவப் பொருள்களால் ஆராயப்படுவன் திருமாலே என்னுங் கருத்தமைய,

**தத்துவப் பொருள்**

"பாழெனக் காலெனப் பாகென வொன்றென
விரண்டென மூன்றென நான்கென வைந்தென
வாறென வேழென வெட்டெனத் தொண்டென
நால்வகை யூழியெண் ணவிற்றுஞ் சிறப்பினை"

எனக் கூறப்பட்டுள்ளது. இதனுள் பாழென்றது புருடனை. காலென்றது ஆகாயம் முதலிய பஞ்சபூதங்களை. (கால்—வழி) பாகு என்றது கர்மேந்திரியங்களைந்தையும். பாகு—பகுப்புடையது. ஒன்று—ஓசை. இரண்டு—ஊறு. மூன்று—உருபு. நாலு—சுவை. ஐந்து—நாற்றம். ஆறு—ஞானேந்திரியங்களைந்தும் மனமும். ஏழு—அகங்காரம். எட்டு—மான் (புத்தி). தொண்டு—மூலப்பகுதி. (தொண்டு—ஒன்பது.) இவைகளைக் கூட்டத் தத்துவம் இருபத்தைந்தாகும். இவற்றைச் "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்—வகைதெரிவான் கட்டே யுலகு." என்னுங் குறளுரைக்குப் பரிமேலழகருரைத்த உரையானுமறிக.

**திருமாலின் நால்வகை வியூகவடிவு**

இன்னும் திருமாலின் நால்வகை வியூகவடிவும் "செங்கட்காரி கருங்கண் வெள்ளை பொன்கட்பச்சை பைங்கண்மால்" என்னுமடிகளிலமைத்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வடிகளில் முரண் என்னுமணி யமைந்துநிற்றலும் சிறப்புடைத்து. செங்கட்காரி—வாசுதேவன். கருங்கண் வெள்ளை—சங்கருடணன். பொன்கட்பச்சை—பிரத்தியும்நன். பைங்கண்மால்—அநிருத்தன்.

மேலும் எல்லாப்பொருளும் அவற்றின் உட்பொருளும் நீ ஆதலால் நீயுறைதலுமில்லை; உறையுமிடமுமில்லை எனத் திருமாலின் வியாபகத்தன்மை கூறியிருத்தலும் வியக்கப்படத்தக்கது.

## ௪-ம் பாடல்

இதுவும் திருமாலை முன்னிலையாக்கிப் பாடிய வாழ்த்து. இதுவுங் கடுவனிளவெயினனார் பாடியது.

மனத்தை ஒருவழிப்படுத்திய நின்னன்பர் நின் புகழை விரித்துரைத்தல் நினக்கு அதிசயமன்று. அத் தன்மையரல்லாத யாம் நின்புகழிற் சிலவற்றை ஈங் கும் ஊங்குமாகப் பிறழக் கூறுவதற்கு நீ நகுதலும் (சிரித்தலும்) எமக்கோர் தகுதியாம். (பெரியோனாகிய நீ நகுதலும் எமக்கோர் பெருமையாகும்) என்னுங் கருத்தமைய,

"ஐந்திருளற நீக்கி நான்கினுட் டுடைத்துத்த
மொன்றாற்றுப் படுத்தநின் னார்வலர் தொழுதேத்தி
நின்புகழ் விரித்தனர் கிளக்குங்கா லவைநினக்
கிறும்பூ தன்மைநற் கறிந்தே மாயினு
நகுதலுந் தகுதியீங் கூங்குநிற் கிளப்ப"

எனக் கூறியதூஉம், (நகுதலுந் தகுதியீங்கு) என்பதும் தேனைப்பாலை..............."தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மையாமென் றன்மையே" (திருவாசகம் திருச்சதகம் ௩௮) என்பதும் ஒத்த கருத்துடையனவாம். இவ் வடிகளின் கருத்தினை, ௩-ம் பாடலில் ௧0—௧௧-ம் அடி களுக்குப்பரிமேலழகருரைத்த விரிவுரையானு முணர்க.

இன்னும் உலகிலுள்ள எப்பொருள்களிலும் நின் னியல்புகளே காணப்படுதலின் அவை நின்னின் வே றல்ல. ஆதலாற்றான் அவை நின்னிற் பிரிந்து தோன்றி நின்று நின்னிலொடுங்குகின்றன என்னுங்கருத்தமைய;

**எல்லாப் பொருள்களுந் திருமாலிலே**

"நின், வெம்மையும் விளக்கமு ஞாயிற்றுள
நின், தண்மையும் சாயலுந் திங்களுள
நின், சுரத்தலும் வண்மையு மாரியுள
நின், புரத்தலு நோன்மையும் ஞாலத்துள
நின், நாற்றமும் வண்மையும் பூவையுள
நின், தோற்றமு மகலமும் நீரினுள
நின், உருவமு மொலியு மாகாயத்துள
நின், வருதலு மொடுக்கமு மருத்தினுள
அதனால் இவ்வு முவ்வு மவ்வும் பிறவு
மேம மார்ந்த நிற்பிரிந்து
மேவல் சான்றன வெல்லாம்"

எனக்கூறியதூஉம் ஆழ்ந்த கருத்துடையவாதல் காண்க. சாயல்—மென்மை. வண்மை—கொடை. பூவை—காயா. வண்மை—நிறம். வண்ணத்தன்மை—வண்மை என்று யிற்று.

இன்னும் உனக்குப் பகையும் உறவும் இல்லை; உனக்குப் பகையும் உறவும் உண்டாதற்குக் காரணம் நின்னொடு பகைப்பாருடைய பகையும் நினக்கு அன்பு செய்வாருடைய அன்புமே காரணம் என்னுங் கருத் தமைய,

**திருமாலுக்கு (இறைவனுக்கு)ப் பகையும் உறவும் இல்லை**

"கடுநவை யணங்குங் கடுப்பு நல்கலுங்
கொடுமையுஞ் செம்மையும் வெம்மையுந் தண்
முள்வழி யுடைமை யில்வழி யிலையே [மையு
போற்றா ருயிரினும் போற்றின ருயிரினும்
*மாற்றே மாற்ற லிலையே நினக்கு
மாற்றோ ரும்மிலர் கேளிரு மிலரெனும்
வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே'

எனக் கூறியதூஉம் சிறப்புடையதாகும். "வேண்டுதல் வேண்டாமை யிலான்" என்பர் தேவரும்.

**(இறைவனிலும்) அவன்றாள் சிறந்தது**

இன்னும் வீடளித்தலால் நின்னி லும் நின்னுடைய தாள் சிறந்ததென் னுங் கருத்தமைய,

"நின்னிற் சிறந்த நின்றா ளிணையவை"

என வைத்த வைப்பு எந்நூலினு மிலதாகிய ஒரு புது வைப்பாய் மிகவும் போற்றத்தக்கதாகும். வீட ளித்தற் சிறப்பு நோக்கியே, "நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க" என மணிவாசகரும் தாளை வாழ்த்தியதூஉ மென்க.

## ௫-ம் பாடல்

இதுவும் கடுவனிளவெயினனார் பாட்டு இது செவ் வேளை முன்னிலையாக்கிப் பாடிய கடவுள் வாழ்த்து. இதன்கட்கூறிய செவ்வேளின் தோற்றம் கந்தபுரா ணத்தின்கட்கூறிய தோற்றத்தோடு மாறுபடுகின்றது. புராணபேதம்போலும்.

**கடவுளைத் தொழுவோர் வீடுவேண்டித் தொழவேண்டும் உலகப்பயனை வேண்டித்தொழலாகாது**

இன்னும், இதன்கண் கடவுளை வணங்குவோர் உலகபோகங்களை வேண்டாது வீடுபேற் றையே வேண்டவேண்டும் என்னுங் கருத்தமைய,

"......................யாமிரப்பவை
பொருளும்பொன்னும் போகமுமல்லநின்பா
லருளு மன்பு மறனு மூன்று
முருளிணர்க் கடம்பி னொலிதா ராயோ"

எனக் கூறியதூஉம் சாலச் சிறப்புடைய தாகும். இக்கருத்தமையவே மணிவாசகரும்,

"உற்றாரையான்வேண்டேன் ஊர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே."

எனக் கூறியிருத்தல் காண்க.

## ௬-ம் பாடல்

இது வையையைப் பாடியது. ஆசிரியனல்லந்துவ னார் பாட்டு.

இச்செய்யுள், வையைநீர் விழவணியிற் காதற் பரத்தை, இற்பரத்தையுடன் நீராடினான் தலைமகனென னக் கேட்டுப் புலந்தாளைப் புலவிநீக்கிப் புணர்ந்தானென

---

*மாற்று-மாற்றுதல். ஏமாற்றல்-ஏமஞ்செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னக் கேட்ட தலைமகள், வாயிலாகப் புக்க விறலிக்கு அவ் வையை நீர்விழவணியும் ஆங்குப் பட்ட செய்தியுங் கூறி வாயின் மறுத்தது.

**புண்ணிய நீராடுவோர் பொன்மீன் முதலியவற்றை நீரிலிட்டு ஆடுதல்**

இதன்கண், நீராடுவோர் பொன் முதலியவற்றாற் செய்வித்த மீன்முதலியவற்றை விடுத்து நீராடும் முறையை,

> " அவியாராதனை யழல்பலவேந்தி."

என்னுமடியாற் கூறப்பட்டுள்ளது. அவ் வழக்கைப் பின் கா-ம் பாடலில்,

> " நத்தொடு நள்ளி நடையிறவு வயவாளை
> வித்தியலை யில்விளைக பொலிக வென்பார்."

என வருமடிகளானு முணரலாம்.

**நீர்விளையாட்டு நிகழ்த்துவோர் நீரணி யணிதல்**

இன்னும், நீர்விளையாட்டு நிகழ்த்தச் செல்வோர் அதற்கென உடை முதலியவற்றை அணிந்துசெல்லும் வழக்கினை,

> " ஏரணி யணியி னிளையரு மினியரு
> மீரணி யணியி னிசன்மிக நவின்று."

என்னும்அடிகளால் கூறப்பட்டுள்ளது.

**உவமைச்சிவப்பு**

இனி, வையைப் புனல் வலிய அணைகளை உடைத்துச் செல்வதற்கு உவமையாக அன்பு ஒத்துக் கூடும் ஆணும் பெண்ணுமாகிய இருவருடைய உள்ளம் அப் புணர்ச்சிக் காலத்தே அவருடைய நிறையாகிய வரம்பை உடைப்பதை உவமை ஆக்கி,

> " தொடிதோள் செறிப்பத் தோள்வளை யியங்கக்
> கொடிசே ராத்திருக் கோவை காழ்கொளத்
> தொகுகதிர் முத்துத் தொடைகவிழ்பு மழுக
> வுகிருங் கொடிறு முண்டசெம் பஞ்சியு
> நகிலணி யளறு நனிவண்டன் மண்ட
> விலையு மயிரு மீர்ஞ்சாந்து நிழத்த
> முலையு மார்பு முயங்கணி மயங்க
> விருப்பொன்று பட்டவ ருளநிறை யுடைத்தென
> வரைச்சிறை யுடைத்ததை வையை."

எனக் கூறிய பொருளும் ஆழ்ந்து நோக்குவார்க்குச் சுவை பயப்பதாகும். என்னை? தலைவனுக்குரிய குணங்களையும் தலைவிக்குரிய குணங்களையும் உள்ளத்தின் மிக்க வேட்கை யுடைக்க, அவர் வேட்கை வசப்பட்டு அக் குணங்களாகிய தடையைக் கடந்து ஒத்த மனமும் செயலு முடையராய்க் கூடுதலைக் குறிப்பித்து நின்றமையின்.

இன்னும், ஆடவரும் பெண்களும் நீராடுதற்கேற்ற அணிகளை யணிந்துகொண்டு யானை யெருத்தத்தின் மேலும் பாய்மாமிசையும் இவர்ந்து வையைநோக்கிச் சேறலை போர்வீரரின் செல்லுகையாகவும், வையைப் புனலைப் போர்க்களமாகவும், முற்பட்டுச் செல்வோரைத் தூசிப்படையாகவும், நீராடுதற்கேற்ற கருவிகளைப் படைக்கலங்களாகவும் உருவகித்திருப்பதும் வியக்கற் பாலது.

இன்னும், " வெண்கிடை மிதவையர் நன்கிடைத் தேரினர் " என்பது, அக்காலத்திலுள்ளாரது கைத் தொழில் வன்மையைக் காட்டும்.

**ஊடலின்பம்**

இன்னும், காதற்பரத்தை தலைவனோடு ஊடல் நிகழ்த்தியதைக் கவி மிக அழகாகக் கூறி யிருக்கின்றார். அதனையும் இங்கே காட்டு கின்றாம். தலைவன் தான் கொய்த தளிர்களைக் காதற்பரத்தைக்குக் கையுறையாகக் கொடுத்தானாக, அவள் இற்பரத்தையுடன் நீராடினான் என்பதையே காரணமாகக் கொண்டு அதனை ஏற்றுக்கொள்ளாது புலந்து அவனை நோக்கி, இத்தளிர் கொய்தது பழையேனாகிய எனக்கன்று. எப்பொழுதும் புதியராக விரும்பும் மகளிர்க்குக் கொய்தாயென,

மேல் தலைமகன்:—

ஆம்; நீ அறிந்தாய். அவைதாம் இவை. மெய்யென்றான். என்றது, நீ அறிந்திலை. இத்தளிர்கள் அத்தன்மையவல்லவென்று குறிப்பித்தான்.

மேல் காதற்பரத்தை:—

அன்பில்லாதாய்! இப்பொழுது உன் களவைக் காட்டுகின்றேன். முன்பெல்லாம்எனக்கென்றுநீகொய்து கொண்டுவந்த தளிர்கள் வாடுவதில்லை. இவை வாடியுள்ளன. அதக்குக் காரணம், இத்தளிர்களைக் கொய்து சென்று நீ விரும்பியவளால் மறுக்கப்பட்டபின் இங்குக் கொண்டுவந்தமையாற் காலம் நீட்டித்தமையே. அவள் தான் இவற்றை, நின்மார்பிற் தார் வாடும்படி நின்று கொய்ததற்காகவாயினும் இரங்கி ஏற்றிலளோ? இவற்றைக் கொண்டுசென்று நீ செய்த தாழ்ச்சிக்காயினும் இரங்கி ஏற்றிலளோவென,

மேல் தலைமகன் :—

நீ சொல்லிய காரணத்தால் இத்தளிர்கள் வாடியவன்று. நீர்ப்பெருக்கு மிக்க வையையைக் கடத்தற்குப் புணையேறி வருதலால் காலம் தாழ்த்தது. அதனால் இத்தளிர்கள் வாடியன. சேய்குன்றத்து ஆணையெனச் சூளுற;

மேல் காதற்பரத்தை :—

தலைவன் வையைப்பெருக்கு என்று கூறியதை எடுத்துக்கொண்டு புலக்கின்றாள்.

ஆம்! ஆம்!! நீ சொல்லுகின்ற தொக்கும். காதலையுடைய காமம் எப்பொழுதும் ஒருதன்மையிலே நிற்குமோ? சிலர்பால் விரையச் சுருங்கும். சிலர்பால் விரையப் பெருகும். அவற்றால் வையைப்பெருக்கை யொக்குமன்றே. அதனால் வையைப் பெருக்குக் காரணமாகத் துவண்டன என்று கூறியது உண்மையே. நீ வாளா சூளுற்றுப் பிழைத்தாய். இனிச் சூழுறல், வானம் பொழிந்து வையையில் நீர் மிகுகின்ற கார்காலத்திலே என்பதி நின்பதிக் கருகாயிருக்க (என்றது தாமதமின்றி வருவாயென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு.) இவ் வையையில் நீர் சுருங்கும் இவ் விளவேனிற் காலத்திலே என்பதி நின்பதிக்குத் தூரமாயது எவ்வாறு பொருந்தும்? (என்றது தாமதித்து வந்தாய் என்பது குறிப்பு.) அதனால் நீ வையை நீர்ப்பெருக்குத் தடையாயிற் றென்றதன் கருத்து யான் முற்கூறியதே. ஆதலால் என்பால் வருதலை யொழிகென அவள் வாயில் மறுக்க;

மேல் தலைமகன் :—

ஒருத்தி கரையின்கண் நிற்ப நான் வையையின் ஓர் தடத்துள் சென்று குளித்தேன். அவள் பேதமையாற் கரையில் நில்லாது புகுந்து திரையின்கண் அழுந்திப் பின்னர் அதனை நீங்கி எழுந்து என்மேல் துன்பமுற்று வந்துவிழுந்தாளைக் குளித்த யான் எழுந்து அணுகிப் பற்றித் தூக்க, அவள் எழுந்து கரைக்கட் சென்றாள். அவள் காமநுகர்ச்சி யறியும் பருவத்தாளல்லள். அவளொழிய என் மார்போடு தழுவப்பட்டவள் யாவள்? அவளோடு யானுடிய யாறு யாது? என, மேற் காதற்பரத்தை :—

அத்தன்மையது பிறிதுமொரு யாறு உண்டோ? அது வையையாறு என,

மேல் தலைமகன் :—

**தலையிற்றெட்டுச் சூளுறல்**

வையையாறு என்று நீ கூறியபடியென்னை? முன்பு போலன்று தண்பரங்குன்றின் தலையைக் கையாற் றொட்டேன் எனக் கூற, மேல் அக்காதற் பரத்தையை ஊடலில் மிகுக்காதபடி அவளில்லின் முதுபெண்டிர் கழறுதலானும், உணர்த்தவல்ல வாயில்கள் ஊடலுணர்த்தலானும் அவளூடல் தீர்ந்து தலைவனைக் கூடினாளென்று விறலிக்குத் தலைவி கூறியதாகக் கவி கூறியதூஉம் மிக இன்பந் தருவதாகும்.

## எ-ம் பாடல்

இது மையோடக் கோவனார் வையைமேற் பாடிய செய்யுள்.

இது, தலைமகன் தலைமகளோடு புனலாடினானெனக் கேட்டு இன்புற்ற செவிலித்தாய் தோழியை, நீங்களாடிய புனலணியின்பங் கூறுகென்றாட்கு, அவள் அப் புனலணியின்பமும், பல்வேறு வகைப்பட்ட இன்பமும், தலைமகன் காதற்றன்மையும் கூறி, என்றும் இந்த நீரணியின்பம் பெறுக யாமென்று வையையை நோக்கி இந்த நீரணியின்பத்தை எமக்கு என்றுந் தருகவென்று கூறிய கருத்தமைந்தது.

இதன்கண், சையை மலையின்கண் மழைபெய்தலால் வையை நீர்மிக்கு மலையினின்று கீழ் இழியுமாறும், இழிந்து மருதநிலத்திற் பெருகுமாறும், பெருகுங்கால், அது தன்கண் ஆடுவாருடைய அணி முதலியவற்றைக் கொண்டு செல்லுமாறும் கூறி, அதன்கண் ஒரு தலைமகனும் தலைமகளும் புனலாடி இன்புற்றவாறும், பிறவுங் கூறப்பட்டுள்ளன.

**உவமைச் சிறப்பு**

இதன்கண், வையை பெருகுங்கால் செல்லுமிடமறிதென்னாது ஒலியோடும் பெருகிச் சென்ற நிமிர்ச்சிக்கு ஒலிக்கும் முரசினையுடைய தென்னவர்கோன் தானையது நிமிர்ச்சியை உவமை கூறியதூஉம், அவ் வையை தான் விரும்பியவாறு அங்குமிங்குமாகப் பெருகிச் செல்லு மியல்புக்கு "ஆடலறியா அரிவை" யின் ஆடலியல்பை உவமை கூறியதூஉம், தடுத்த அணைகளை முறித்துச்சேறற்கு "ஊடலறியா உவகையளை" உவமை கூறியதூஉம், அதன் விரைவிற்கு "ஊடலை உணர்த்த உணராத மாதினைத்" தன்னோடு கூட்டுவித்தற்கு முயலும் கணவனது ஆசைவெள்ளத்தை உவமை கூறியதூஉம், அது தன்கண் ஆடுவாருடைய அணி முதலியவற்றைக் கொண்டுசென்றதற்கு ஒன்னார் உடைபுலம் புக்கு தென்னவன் சேனை கொள்ளைகொள்ளுமாற்றை உவமையாகக் கூறியதூஉம் வியக்கப்படத் தக்கனவாகும்.

ஊடலறியா வுவகையள் என்றது, ஊடல் தணியுமளவையறியாது அதின்மிக்குச் செல்பவள் என்றபடி. அவள்போல என்றதனால், அவள் கணவனுணர்த்தவும் தன் ஊடல் தணியாது அவனைக் கடந்து நீங்குமாறு போல, வையையும் அணையை முறித்துச் சென்றதென்பது கருத்தாகும். இன்னும் இதன்கண்,

## அ-ம் பாடல்

இதுவும் செவ்வேளை முன்னிலையாக்கி, ஆசிரியனல்லந்துவனார் பாடியது.

இதன்கண், மும்மூர்த்திகளும் ஏனைத் தேவர்களும் முருகக்கடவுளைத் தரிசித்தற்பொருட்டு வந்திருத்தலால், திருப்பரங்குன்றம் இமயமலையை ஒக்குமென்றும், அதிலுள்ள சுனை சரவணப் பூம்பொய்கையை யொக்குமென்றும் இமயத்தையும் பொய்கையையும் உவமித்தது, அவன் பிறந்த இயைபுமுண்மையாற்போலும்

**ஒலிச் சிறப்பு**

இன்னும், அம்மலையின்கண் மேகம் முழங்க, அம் முழக்கத்தைக் கேட்ட கோழி வெருவிக் கூவ, அதற்கெதிராகக் குன்று கூவ, அதற்கு மாறாக யானை பிளிற, அதற்கு எதிராக மலை யெதிரொலிசெய்ய, இப்படி ஒலிக்கு மாறாக ஓரொலி எழாநின்றது என, அங்கு நிகழும் ஒலிச் சிறப்பைப் புலப்படவமைத்து,

"யானை முழக்கங்கேட்ட
கதியிற்றே காரின்குரல்
குரல்கேட்ட கோழி குன்றதிரக் கூவ
மதநனி வாரண மாறுமா றதிர்ப்ப
வெதிர்குதிராகின் றதிர்ப்புமலைமுழை."

எனக் கூறியதூஉம் சிறப்புடைத்து. எதிரொலியை எதிர் குதிர் என்று சொல்வது அக்கால உலகவழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளவேனிலிற் திருப்பரங்குன்றம் இருக்கும் இயல்பு**

அன்றியும், வண்டுகளொலிப்பப் பலவகைப் பூநாற அந்நாற்றத்தோடு தென்றலசையும் தன்மையையுடையது. குன்றத்தோடு கூடலிடை வழியென இளவேனிற் காலத்தில் குன்றத்தோடு கூடலிடை வழிகளும் இருக்குமியல்பு கூறியிருப்பதூஉம்; களவுப்புணர்ச்சியை,

"வரையா நுகர்ச்சி முடியா நுகர்ச்சி
முற்றுக் காதல்."

எனச் சிறப்பித்திருப்பதூஉம் சிறப்புடையனவாகும்.

**களவுப்புணர்ச்சியை வரையாநுகர்ச்சி எனல்**

வரையாநுகர்ச்சி—வரையாத நுகர்ச்சி என்றது களவுப் புணர்ச்சியை. நுகர்ச்சி—ஆகுபெயர் முடியா நுகர்ச்சி – முடிவு பெறாத இன்பம். முற்றுக்காதல்—நிறைவுபெறாத காதல். முடியா நுகர்ச்சி, முற்றுக் காதலென்பன களவுப்புணர்ச்சியைச் சிறப்பித்துநின்றன. இக்கருத்தமையவே,

'புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய்
மணந்தாள் புரிகுழலா ளல்குல்போல வளர்கின்றதே.'

என்று திருக்கோவையாரும் கூறுதல் காண்க.

மேலும், தலைவனுடைய பொய்ச்சூளைத் தோழி விலக்கத் தலைவன் அவளை நோக்கி, முருகக்கடவுள் என் சூளைப் பொய்ச்சூளெனக் கருதி என்னைத் துயர் கூரச் சுடும். இது செய்யாமல் நீ சென்று ஆற்றுவாயாக வென்று அவளை நகையாடிக் கூறிப், பின் தன் ஏவலிளையரை நோக்கி, இவ்வுரையை எல்லார்க்கும் அறிவியுமின்! முருகன் தாளில் பரங்குன்றத்தின்கட் சென்று யாம் மலரை ஏற்றுதும், அவியையூட்டுதும், பாட்டைத் தோற்றுவிப்போம், கிணையொலியை யெழுவிப்போம் என்னுங் கருத்தமைய,

**நகைச்சுவை**

"இடுதுனி கையாறு வெற்றுயர் கூரச்
சுடுமிறை யாற்றிசி னடிசேர்ந்து சாற்றுமின்
மிக,ஏற்று தும‌ல ரூட்டுதமவி
கேட்டுதும் பாணி யெழுதுங் கிணைமுருகன்
றேட்டொழு தண்பரங் குன்று."

என்று கூறியதூஉம், பின் மூன்றடிகளினுமுள்ள இசை தோழியை நகையாடிக் கூறுந் தன்மையைக் காட்டுமாறு அதனைக் கவி அமைத்திருப்பதூஉம் வியக்கப்படத் தக்கன. இறை—முருகக்கடவுள்.

**மகளிர் முருகனை வழிபட்டு வரம்வேண்டுமியல்பு**

இன்னும், அக்குன்றத்தின்கண் வழிபடச் செல்லும் மகளிர் இக்காலத்திற் போலத் தாம் வழிபடற்கேற்ற பொருள்களையும், தம் நேர்த்திக்குரிய பொருள்களையும் தாங்கிச் சென்று முருகன் அடியைத் தொழுது பலவகையாக வரம்வேண்டு மியல்பைச் சிறப்பித்து,

"கனவிற் றொட்டது கைபிழை யாகாது
நனவிற் சேஎப்பநின் னளிபுனல் வையை
வருபுன லணிகென வரங்கொள் வோரும்
கருவயி றுறுகெனக் கடம்படு வோருஞ்
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரு
மையம ரடுகென வருச்சிப் போரும்"

எனக்கூறியதூஉம் சிறப்புடையதாகும்.

சேப்ப—எய்த. வருபுனல்—புதுநீர். கடம்படல்—நேர்தல்.

### கூ-ம் பாடல்

இதுவும் செவ்வேளை படர்க்கையாகவும் முன்னிலையாகவும் வைத்துக் குன்றம் பூதனார் பாடிய கடவுள் வாழ்த்து.

**களவுப்புணர்ச்சியைத் தலைமையாகச் சொல்லும் பொருள் இலக்கணம் உடைமையால் தமிழ் சிறப்புடையது**

இதன்கண் காமங்களுக்குள்ளே காதற்காமமாகிய களவுப்புணர்ச்சி சிறந்ததென்றும் கற்பிற்புணர்ச்சி ஊடலாற்பெறுமின்பமுடைத்தாதலின் சிறப்பிலதென்றும் அக்களவுப்புணர்ச்சியை உணர்த்தும் பொருளிலக்கணம் தமிழுக்கே உரியதென்றும் அத்தமிழையறியாதார் களவுப்புணர்ச்சியிலக்கணத்தை அறியாராதலின் அவர்க்கு அவ்வின்பமில்லையென்றும் முருகன் அப்பொருளிலக்கணத்தை அறிந்தபடியாற்றான் வள்ளிபாற் களவொழுக்கத்தை நிகழ்த்தினனென்றும் நான்மறைப்புலவரை விளித்து,

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்போ டொத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே யதுதா
னிரத்தலு மீதலு மிவையுள் வீடாப்
பரத்தையுள் ளதுவே பண்புறு கழற
றோள்புதி துண்ட பரத்தையிற் சிவப்புற
நாளணிந் துவக்குஞ் சுணங்கறை யதுவே
கேளணங் குறமனைக் கிளந்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனு மூடலுள் ளதுவே
அதனால்,
அகற லறியா வணியிழை நல்லா
ரிகறலைக் கொண்டு துனிக்குந் தவறிலரித்
தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்"

எனக்கூறியதூஉம் தமிழ்மொழியின் சிறப்பை உணர்த்துதலாற் போற்றப்படத்தக்கது. சுணங்கறை—புணர்ச்சி.

இதன்கண் நான்மறைப்புலவரை விளித்துக் கற்புப்புணர்ச்சியினுங் களவுப் புணர்ச்சி சிறந்ததென்றுகூறி, அதனைத் தலைமையாகக்கோடலால் தமிழ்சிறப்புடையதென்பது தோன்றக்கூறியது என்னையெனின்? அந்நான்மறைப் புலவர் கரணமொடு புணரும் கற்பிற்புணர்ச்சியே பெரிதும் சிறப்புடையதென்று கோடலின், அவர் சிறப்புடையதென்று கொள்ளும் அன்பு ஒவ்வாத கற்பு ஊடலால் பெறும் இன்பமுடையதாதலானும், களவுப் புணர்ச்சி ஒத்த அன்பாற் பெறும் இன்பமுடையதும், கணவரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிதல் அறியாமையின் அவரோடு மாறுகொண்டு துனிக்குங் குற்றத்தைத் தலைவியர் அடையாமை உடையது மாதலானும் கற்பினும் களவுப்புணர்ச்சியே சிறந்ததென்றும், அக்களவுப் புணர்ச்சியினைத் தலைமையாகக் கொள்ளும் பொருளிலக்கணத்தைத் தனக்குச் சிறப்பாக உடைமையால் தமிழ் சிறப்புடையதென்றும் அவர்க்கு உணர்த்துதற்கே. அங்ஙனேல், இக்கருத்து "மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுட்........டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே" (தொல்-களக) என்றதனேடும், "அந்தண ரருமறை மன்ற லெட்டினுட்—கந்தருவ வழக்க மென்மனர் புலவர்" (இறை-கழ.க) என்றதனேடும் மாறுபடுமன்றே? எனின், அக்கந்தருவ வழக்கத்தைத் தமக்கியல்பாகக் கொள்ளாது சிறுபான்மையாகக் கோடலும், வரைந்தெய்துங் கற்பிற் புணர்ச்சியையே தமக்கு இயற்கையாகக் கோடலுமே மறையோர் வழக்கு; அங்ஙனமன்றித் தமிழ்நாட்டார் ஆதிகாலந் தொட்டு களவுப் புணர்ச்சியே தமக்கு இயற்கையாகக் கொண்டு வந்தமையானே அவற்றோடு மாறுபடாதென்க. இதுபற்றியே இதனை, "இலைபுறங் கண்ட கண்ணியின் றமிழியற்கை யின்பம்" (சிந்தாமணி சுரமஞ்சரி ௩௬) என்னுஞ் செய்யுளில் திருத்தக்கதேவரும் சிறப்பித்துக் கூறினர். முன் தமிழ்நாட்டார் களவையே சிறந்த இன்பமாகக்கொண்டு ஒழுகினரென்பதை இந்நூல் அ-ம் பாடலில் "வரையகத் தியைக்கும் வரையா நுகர்ச்சி—முடியா நுகர்ச்சி முற்றாக் காதல்" (௯க-ம் அடி) என்று சிறப்பித்துக் கூறியதனுலும் உணரலாம்.

இனி, வரைந்தெய்துங் கற்பிற் புணர்ச்சியும் தொல்காப்பியம் முதலிய பொருளிலக்கணத்திற் கூறப்பட்டுள்ளதேயெனின்? அவை பிற்காலத்தே எய்தியதென்க. அதுபற்றியே தொல்காப்பியரும் "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணமென்ப" என்று கூறியருளினர்.

இனித் தொல்காப்பியத்துப் பாயிரத்துள்ளே "தமிழ் கூறு நல்லுலகத்து—வழக்குஞ் செய்யுளுமா யிருமுதலி னெழுத்துஞ் சொல்லும் பொருளுநாடி" என்று கூறலினலும், "முந்துநூல் கண்டு" என்றதனுலும் அகத்தியரும் தாம் இலக்கணஞ்செய்த காலத்து அத்தமிழ்நாட்டு வழக்கையும் செய்யுளையும் ஆராய்ந்தே இலக்கணஞ் செய்தாரென்பது கொள்ளக்கிடத்தலின் அகத்தியர் காலத்துக்கு முன் இக்களவுப் புணர்ச்சியே தமிழ்நாட்டார் வழக்காயிருந்து பின் அவர் காலத்தேயோ, அவர்க்கு முன்னேயோ வரைந்தெய்தும் கற்பும் தமிழ்நாட்டார்க்கு எய்தியதென்பதும் ஊகிக்கத்தக்கது.

இனி இப்புணர்ச்சியின்பத்தைச் செய்யுள் செய்வார் பலதுறைப்பட விரித்துச் செய்திருந்தமையின் அத்துறைகளையெல்லாம் இலக்கணவரம்பின்றேல் அறிந்து கோடல் அரிதென்பது கருதி இதனையும், இதனேடு அறம் பொருளென்பவற்றையுஞ் சேர்த்து அகத்தியரும் அவர் வழித்தாகத் தொல்காப்பியரும் வடநூலிற்போலாது எழுத்தொடுஞ் சொல்லொடுஞ்சேர்த்துப் பொருளிலக்கணத்தையுந் தமிழிற் செய்தனர் என்க. இக்கருத்தமையத் தொல்காப்பியச் சூத்திர விருத்தியுள், "ஈண்டுப்பொருளென்றது அகம் புறம் என்னும் இருகூற்றுப் பதினேற்றிணைப் பகுதியவாய்ச் செய்யுளிற் பாடுதற்குரிய இன்பம் முதலிய வுலகியற் பொருளை; மொழித்திற முணர்த்தற் பொருட்டுச் செய்யுளாராய்ச்சிக் கொருதலையான் வேண்டப்படுதல்பற்றி இயற்றமிழொழிபாகக் கொண்டோதற்பாலன அவையே ஆகலின். அற்றேல் இஃது எழுத்துஞ் சொல்லும்போலச் செந்தமிழியற்கைச் சிவணுதற்கேதுவாகாமையானும், வடமொழியார் வேறோதுவதல்லது, சத்தநூலுளோதாமையானும், ஈண்டு ஓதல்வேண்டாம்; பிறவெனின்; ஈண்டுக் கூறும் பொருட் பாகுபாடுகள் பொதுவாகாது, தமிழிற்கே சிறந்து வேறொன்றாற் பெறப்படாமையின் இப்பொருள்பற்றி வரும் பரிபாடல், கலி, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, ஆற்றுப்படை, பதிற்றுப்பத்து முதலிய செய்யுள் ஆராயப்புகுந்தார்க்கு இப் பொருட் பாகுபாடுணராக்காற் குன்றுமுட்டிய குரீஇப்போல இடர்ப்பட்டுச் செய்யுண் மொழித்திற முணரமாட்டாமையிற் செய்யுண் மொழித்திறமுணர்ந்து செந்தமிழியற்கை சிவணுதற்கு ஒருதலையா னோதல்வேண்டுமென்க எனச் சிவஞான முனிவர் உரைத்தமையானும் அறியப்படும்.

இனி இக்களவுப்புணர்ச்சியையுடைய தமிழ்க்குடிகளே எக்குடிகட்கும் முற்றோன்றிய குடிகளாதலின், இக் களவுப் புணர்ச்சியும் மிகத் தொன்மைவாய்ந்ததென்பர். தமிழ்க்குடிகளே முதுகுடிகளென்பது பெறுமாறென்னையெனின் "கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே—முற்றோன்றி மூத்தகுடி" என்னும் (புறப்பொருள்-வெண்) செய்யுளிற் சொல்லிய முதுகுடிகள் சையமலையிலே (பொதியமலையிலே) தோன்றினவென்று ஆராய்ச்சியாளர் கூறுதலிற் பெறுதுமென்பது. இக்கருத்தினைச் செந்தமிழிலே 'தமிழின் பழமை' யென்ற பொருளுரையில், அச்செந்தமிழ்ப்பத்திராதிபர் ஸ்ரீமாந் நாராயண ஐயங்கார் அவர்கள் உரைத்தமையானறிந்துகொள்க. (செந் பகுதி ௩௦ தொகுதி க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிமேலழகர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்
பண்டிதர், திரு. ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்.

பண்டைச் செந்தமிழ்ப் பனுவல்கட்குரையியற்றிய பேரறிஞர் பலருள்ளும் தம் உரையோவிய நுட்ப வினைத் திறத்தால் எம் உள்ளங் கவர்ந்து நிற்பவர் பரிமேலழகராவர். உலகளந்த மேன்மையையுடைய தெய்வச் செந்தமிழ்ப் பொதுமறையாகிய திருக்குறட்கு உரையியற்றினோர் பலராயினும் அன்னோருரையனைத்தையும் கீழ்ப்படுத்து ஒளி விரித்து விளங்குவது கச்சி உலகளந்த பெருமாள் திருவடித் தொழும்பர் கண்டவுரையே. எட்டுத்தொகையுளொன்றாகிய பரிபாடற்கும் அவரன்றி வேறியாவர் உரைகாண வல்லார்?



ந. மு. வேங்கடசாமிநாட்டார்.

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம்."

எனத் தகைசான்ற தமிழ் நூற்களில் வகைதோறும் ஒன்றினையெடுத்துப் பாராட்டிய பெரியார் பரிமேலழகர் உரையை அந்நூற்களோடொப்ப வைத்துப் போற்றியிருப்பது அதன் பெருமைக்கு ஏற்ற சான்றாகும்.

சொல்வன்மை கூறுமதிகாரத்தே 'கேட்டார்ப் பிணிக்கும் தகை' என்பதனை விளக்குழி, 'அக்குணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன்றருதல் என்றிவை முதலாயின' என்றியம்பிய பரிமேலழகர் அவற்றிற்கு எடுத்துக்காட்டாகுமாறே தம் உரையை ஆக்கியுள்ளமை கண்கூடு. கண்கவர் வனப்பிற்றாயதோர் படிவமமைக்கும் ஓவியப் புலவன் ஏற்புடைய வண்ணங்களை இடனறிந்து அளவானுய்க்குமாறு போல இவரும் அவ்வவ்விடங்கட்கு ஏற்ற சொற்களை மிகை குறையின்றி அளவானே பெய்து அணிநலம் விளங்கத் தம் உரையை யாத்தமைத்துள்ளார். அதனால் இவரது உரையின்கண் உள்ள ஒவ்வொரு சொல்லும் நல்லியற்கவிஞர் நாவிற் பொருள்குறித்தமர்ந்த நாமச் சொல்லெனவே விளங்கும் பெற்றியன. கற்போர்க்குச் சான்றோரது செஞ்சொற் கவிதையிற்போன்றே இவ்வுரையானும் ஒருகாலைக்கொருகால் இன்பம் மிகுதல் ஒருதலை.

இத்தகைய செவ்விய விழுப்பமுடைய தீவிய உரை தோன்றுதற்கு இவரது இயற்கை நுண்ணறிவும், எல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்லா நூலறிவும் கலக்கமில் சிந்தையும் காரணங்களாகும். இவர் தமிழ் இலக்கிய விலக்கணங்கள் யாவற்றினும் துறைபோய கல்வியுடையவர் என்பதும், வடமொழி வேதம், வேதாங்கம் என்பவற்றின் கருத்துக்களையும், சாங்கியம், மீமாஞ்சம் முதலிய வைதிக நூற்களின் நுண்பொருள்களையும், பொருணூல் முதலியவற்றையும் அறிந்தவர் என்பதும் இவருரைக்குறிப்புக்களால் வெளிப்படுகின்றன.

> 'உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
> றப்பானாற் கூற்றே மருந்து.'

என்னும் குறள் முதலியவற்றுக்கு இவரெழுதிய சில குறிப்புக்களிலிருந்து ஆயுள்வேதம் முதலிய பிறகலைகளினும் இவருக்குப் பயிற்சி யுண்மை புலனாகின்றது.

நல்லிசைப் புலவர்களின் செய்யுட்களையும், செய்யுட் பகுதிகளையும் இன்றியமையாத இடங்களில் மேற்கோளாக எடுத்துக் காட்டுவதேயன்றி, அவற்றைச் சிறிது திரித்தும் திரியாமலும் ஏற்ற பெற்றி உரைநடையில் அமைத்து அழகுபடுத்துஞ் சதுரப்பாடு இவரது சிறப்பியல்புகளிலொன்றாம். "சிறுகையாளனளாவலாவது இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும் நெய்யுடையடிசில் மெய்பட விதிர்த்தல்" எனவும், "என்பு முரியாதல் தன்னகம்புக்க குறுநடைப் புறவின் றபுதியஞ்சிச் சீரைபுக்கோன் முதலாயினார்கட் காண்க" எனவும் புறப்பாட்டுப் பகுதிகளையும், "பொருளளவுதான் சிறிதாயினும் தக்கார் கைப்பட்டக்கால் வான் சிறிதாப் போர்க்கும் ஆகலின் இணைத்துணைத்தென்ப தொன்றில்லையென்றுங் கூறினார்" எனவும், "ஈட்டிய வொண்பொருளைக் காத்தலு மாங்கே கடுந்துன்பம் ஆகலின் பரிந்தோம்பி யென்றார்" எனவும் நாலடிச் செய்யுட் பகுதிகளையும், "பிறவும் தம்போற் செய்தலாவது கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்பநாடிச் செய்தல்" எனப் பட்டினப்பாலை யடிகளையும், "உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலும் அரிது ஆகலான் எழினலங்களும் ஓர் பயனேயெனினும் நூலறிவில் வழிச் சிறப்பில வென்பதாம்" எனச் சிந்தாமணிச் செய்யுளடியையும் இவர் உரைநடைப்படுத்தியிருப்பது காண்க. "மன்னுயிர்த்தே மலர்தலை யுலகம்" என்னும் புறப்பாட்டடியினை, "மலர்தலை யுலகிற் குயிரெனச் சிறந்த அரசன்" என்றாங்கு, ஊன்றி யுணருமாறு இவர் மாற்றி யமைப்பனவுமுள. இங்ஙனம் செய்யுட் டொடர்களைத் தம் உரையின் வேற்றுமையின்றி விளங்குமாறு இவர் அமைத்திருப்பதுகொண்டே இவ்வுரை பாவின்றெழுந்த கிளவியாயினும் பாக்கள் போலும் பண்பிற்றெனை அறிதல் சாலும்.

> "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
> வகைதெரிவான் கட்டே யுலகு."

என்னுங் குறளில் சாங்கிய நூலோதும் தத்துவமனைத்தும் அடங்கியிருக்கு மாற்றை உய்த்துணர்ந்து விளக்குவதும், அங்ஙனமே பரிபாடல் மூன்றாஞ் செய்யுளினுள்ள

> "பாழெனக் காலெனப் பாகென வொன்றென
> இரண்டென மூன்றென நான்கென வைந்தென
> ஆறென வேழென வெட்டெனத் தொண்டென
> நால்வகை யூழியெண் ணவிற்றுஞ் சிறப்பினை."

என்னும் பகுதியில் இருபத்தைந்து தத்துவங்களும் அமைந்திருக்குமாற்றை எடுத்தியம்புவதும் போல்வன இவரது நுண்மாணுழை புலமேன்மையை இனிது தெரிப்பனவாகும். இதிலுள்ள 'கால்' என்னுஞ் சொல்லுக்கு ஆகாயமுதற் பூதங்களைந்தும் என்றும், 'பாகு' என்னுஞ் சொல்லுக்குக் கன்மேந்திரியங்களைந்தும் என்றும் இவர் பொருள்கூறி விளக்கியிருப்பதும் அங்ஙனமே இப்பாட்டிலுள்ள "ஏஎஇன கிளத்தலின்" என்னுந் தொடருக்கு "நின்னைச் சாமவேதம் இத்தன்மையை எனச் சொல்லுதலின்" என்று பொருளுரைத்திருப்பதும் வியத்தொறும் வியத்தொறும் வியப்பின் எல்லையைக் கடந்துநிற்கின்றன. பரிபாடலின் பதினொன்றாஞ் செய்யுளில் வரும் எரி, சடை, வேழம் என்னுஞ் சொற்களுக்கு முறையே கார்த்திகை, திருவாதிரை, பரணி எனப் பொருள்கொண்டு, அவற்றால் இடபம், மிதுனம், மேடம் என்பன குறிக்கப்பட்டவாகக் கூறியிருப்பது போல்வனவும் இவரது மதிநுட்பத்தைக் காட்டுவனவாகும்.

இனி, இவ்வாசிரியர் விண்டு சமயத்தினரேனும், சமயச் சார்புபற்றி ஒருபாற் கோடுதலின்றித் துலைநாவன்ன சமனிலையுடையராய், எவ்வெக் கொள்கைகள் எவ்வெத் திறத்தினர்க்கு மிக்க உரிமைப்பாடுடையன என்பதனை ஆய்ந்தறிந்து அந்நெறியே கூறிச்செல்லுமியல்புடையர். திருக்குறளுரையில் இறைவற்குரிய தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்களை யெடுத்துக் காட்டி, 'இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டன' என இயம்பியதும், பரிபாடலில் "தீ வளி விசும்பு நிலனீரைந்தும், ஞாயிறுந் திங்களு மறனும்" என்புழிச் சிவனைக் குறிக்குஞ் சொல்லொன்றும் ஆண்டில்லாதிருப்பவும் 'ஈசற்கு வடிவாகிய அட்டமூர்த்தங்கள் கூறுகின்றார்" என்றுரைத்ததுவும் இதற்கு உதாரணங்களாம். அட்டமூர்த்தம் சிவபெருமானுக்குக் கூறுதலே தொன்றுதொட்ட வழக்காதலை, மணிமேகலையின் சமயக்கணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கர் தந்திறங்கேட்ட காதையில் சைவவாதி கூற்றாக வுள்ள,

"இருசுட ரோடிய மானனும் பூதமென்
றெட்டு வகையு முயிரும் யாக்கையுமாய்க்
கட்டிநிற் போனுங் கலையுருவி னோனும்
படைத்து விளையாடும் பண்பி னோனுந்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனுந்
தன்னின் வேறு தானொன் றிலோனு
மன்னோ னிறைவ னாகு................."

என்னும் பகுதியானறிக. ஈசன் என்னும் பெயரும் சிவனுக்கே காரண விடுகுறியாதலை நன்குணர்ந்து பரிபாடலுரையிற் பலவிடத்தும் அப்பெயரால் அவ்விறைவனைக் கூறிச் செல்லுதலும் அறியற்பாற்று. "அறனெனப்பட்டதே" என்னுங் குறளுரையில் 'அஃது' என்பதனாற் சுட்டப்படுவது துறவறமெனக்கொண்டு, அது முரணாகாமை காட்டி நிறுவுவதும், "அறம் பொருள் கண்டார்கணில்" என்புழி 'அறம் பொருள்' என்பதனை உம்மைத்தொகை என்னாது, 'செவ்வெண்ணின் றொகைவிகாரத்தாற் றொக்கு நின்றது' எனக் கூறுவதும், "நாளென வொன்றுபோற் காட்டி" "அதிநுட்பம் யாவுள" "கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்" "கோட்டிகொளல்" என்னுந் தொடர்களுக்குப் பிறர் கூறிய உரைகளை நியாயங் காட்டி மறுத்துச் செல்வதும் போல்வனவற்றால் இவரது இலக்கணவறிவின் நுண்மை விளங்குகின்றது. 'ஒளி' என்னுஞ் சொல்லுக்குப் 'புகழ்' என்றும், 'உறங்காநிற்கவும் தாம் உலகங் காக்கின்ற அவர் (அரசர்) கடவுட்டன்மை' என்றும், 'தானுளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை' என்றும், அவ்வவ்விடங்களுக்கேற்ப வெவ்வேறு பொருள் கூறி இன்றியமையாத மேற்கோள் காட்டிச் செல்வதும், அங்ஙனமே 'சிறப்பு' முதலிய சொற்களுக்குப் பொருள் விளக்குவதும், இவரது கருத்தின் ஆழத்தைத் தெரிக்கின்றன.

இனி, "வகையறச் சூழாது" என்னுங் குறளுரையில் 'அத்திறங்களாவன—வலி, காலம், இடனென்றிவற்றால் தனக்கும் பகைவர்க்குமுளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனாற் பெறும் பயனும் முதலாயின' என்றும், "செய்தக்கவல்ல" என்னுங் குறளுரையில் "செய்யத்தக்கன வல்லவாவன—பெரிய முயற்சியினவும், செய்தாற் பயனில்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவும், பின்றுயர் விளைப்பனவுமென இவை; செய்யத்தக்கனவாவன — அவற்றின் மறுதலையாயின' என்றும், விரித்து விளக்கியிருப்பனபோல்வன பயன் மிக்கனவும், பாராட்டப்படுவனவுமாகும். மற்றும் "பிறப்பென்னும் பேதைமை நீங்க" "ஈன்றாள் பசி காண்பானாயினும்" என்பனவாதிய பாக்களுக்கு இவர் கூறியிருக்கும் உரையின் சொல்லும் பொருளும் சுவைத்துச் சுவைத்து இன்புறற்பாலன. "சூடிதன்னு முகடி" என்பதற்குத் 'தன் பெயர் சொல்லல் மங்கலமன்மையிற் சூடிதன்று சொல்லப்படும் முகடி' என்றும், "இரையான்" என்பதற்கு 'இரையை அளவின்றியெடுத்து அதனான் வருந்தும் விலங்கோடொத்தலின் இரையானென்றார்' என்றும், பரிபாடலில் "தொடிமுன்கைக், காரிகையாகத் தன் கண்ணி திருத்தினாள், நேரிறை முன்கை நல்லவள் கேள் காண்மின்" என்பதற்கு 'முன்கையாலே தன் கூந்தலிற் கண்ணியை அழகுடைத்தாகத் திருத்தினாள்; இவள் செய்த இக்குறிப்புத் தொழிலால், இவன் இந்நல்லவள் கொழுநனாயிருந்தான்; இதனைக் காண்மின்' 'நெஞ்சம் பிணிப்பதோர் அவயவங் காண்டல் குறித்து அவள் செய்தலால், இது குறிப்புத் தொழிலாயிற்று' என்றும், உரைத்திருப்பன போல்வன உன்னுந்தொறும் இன்பம் விளைப்பன.

இவருரையிற் காணப்படுஞ் சிறப்பியல்புகள் எத்தனையோ பல. விரிவஞ்சி ஒரு சில ஈண்டுச் சுருங்கவுரைக்கப்பெற்றன. செவ்விய உரைநடையை விரும்பும் மாணாக்கர்கள் இவருரையைப் பலகாலும் பயிறல் நன்று. இங்ஙனம் சிறப்பித்துரைத்தல் கொண்டு, இவருரையிற் சிறிதும் வழுவின்று என்றாதல், இவர் கூறிய யாவற்றையும் ஆராய்வின்றியே கொள்ளவேண்டுமென்றாதல் யாம் கருதியுள்ளோமென அறிஞரெவரும் மதியாரென்னுந் துணிபுடையேம்.

"அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு."

என்பது வறிதாகாவாறு இப்பேரறிவாளரும் இழுக்கிய இடங்கள் பலவுள. அவையிற்றை மறுத்து நற்பொருள் காண்டல் குற்றமாகாது. இச்சிற்றுரை அவற்றை ஆராய்தல் கருதியதன்று.

"பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்
றெரித்த வுரையாமோ தெளி."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலக் கல்லூரியும் செந்தமிழ்க் கல்வியும்

பண்டிதமணி
திரு. வெண்ணெய்க்கண்ணனார் எழுதியது.

## தோற்றுவாய்

இற்றைஞான்று தமிழ்ப்பனுவல்களைப் பின்னும் பின்னும் பன்னிப் பன்னித் துருவித் துருவி ஆராய்வான் புகுதல் காலங்கடந்த உறுதிகளாலே பொருள் பெறுதற்கு முயன்று மனக்கோட்டை கட்டிவருதலையே ஒக்கும்.

இதனைத் துணைக்கொண்டு வயிறு வளர்ப்பதூஉம் நன்கு மதிப்புப்பெறுவதூஉம் இயலாவென்க. வண்ணானுக்குப் பொதிசுமக்கும் கழுதைபோன்று வெறித்தே அல்லும் பகலும் உழைத்து மூலவைத்த இதனது முடிபாம். பிறரானே உதவப்படும் பொருமை முதலாய அணிகலன்களையும் வேண்டுமே, லணிந்து கொள்ளலாம் என்பது.

இன்னவாறெல்லாம் எண்ணிய எமது நெஞ்சில் யாம் ஆறுதல்கொண்டு உய்தற்கேற்ற மெய்ந்நெறியொன்று புலப்பட்டது. அதுதான் குடும்பப் பாதுகாப்பின்பொருட்டுச் சிறிது முயன்றதுபோக எஞ்சிய நேரங்களுள்ளே பெரும் பாகத்தையும் கடவுள் வழிபாட்டிலே செலவுசெய்தலாம். எமது நெஞ்சினைப் பிறரும் அங்ஙனமே பிறர் நெஞ்சினையும் அறிந்து கோடற்கியலாது ஒருவர்மேல் மற்றொருவர் வீணே பழியேற்றிக் கேடெய்தும் உலகப்போரும் அதனுன் எய்தும் துன்பும் என்பாற் சில்லாண்டுகளாகக் குறைந்துவருபவாயின.

இத்தகைய வாழ்க்கையைப் பூண்டுவரும் என்னை இடையிடையே தமிழ்த்தொண்டாற்றிவரும்வண்ணம் வற்புறுத்தி நெருக்கிவரும் சில நண்பர்களுள்ளே தாழ்வூக்கத்து 'ஈழகேசரி' இதழாசிரியரும் ஒருவராவர். இப்பெரியார் ஈழகேசரி ஆண்டுமடலுக்குத் தாங்கள் யாதாயினும் ஒரு பொருள்பற்றிய செந்தமிழ்க் கட்டுரை ஒன்று வரைந்து தருதல் வேண்டும் என்று இயம்பினர். இவர்களது கள்ளங்கலவாத மாசற்ற மானசவாவியிலிருந்து வாய்வழிவந்து எனது செவியகம்புக்க அற்புச் செந்தேனுரை எம்மைச் சோம்பினின்றும் எழுப்பியூக்கிவிட்டது. இவ்வூக்கத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு சிறியதொரு கட்டுரை எழுதுதற்கு முன்வந்துள்ளேம்.

இங்ஙனம் முன்வந்த யான் தமிழ்நாட்டுப் பழைய வரலாற்றினைப்பற்றிச் சாற்றலாமா? அஃதன்றியும் இயற்கைப் பொருளழகையெடுத்து இயம்பலாமா? அஃதன்றியும் இளமாணவர்க்கு இனிமை பயக்கும் சிறுகதை யெழுதலாமா? அஃதன்றியும் எனது இளமைக் காலத்து வாழ்க்கையைக் குறிக்கலாமா? என்றாங்கு என்றாங்கு என்னையே பலபடியாக வினவிக்கொண்டு வரும்போது "ஆங்கிலக் கல்லூரியும் செந்தமிழ்க் கல்வியும்" என்னும் பொதுமொழி யிட்டதொரு கட்டுரை எழுதுதல் வேண்டும் என்னும் முடிபிற்கு வந்தேன்.

செந்தமிழ்க் கல்வியின் பண்டைய நிலைமையும் அஃது ஆங்கிலக்கல்லூரிக்கு வந்த வகையும் இதுபோது அக்கல்விக்குளதாகும் பெற்றியும் இப்பெற்றியான் எதிர்காலத்திலே அதனது விளைவும் விளக்கிப்போவது இக்கட்டுரைக்கு ஏற்றதோர் இலக்கணமாகும். இங்ஙனம் எல்லாம் எழுதப் புகின் கட்டுரையும் நனி விரிந்துவிடும். நேரமும் இல்லை. ஆகலின் சில சில பொதுக் குறிப்புக்களைத் தழுவியே இக்கட்டுரை இயங்கும். இங்ஙனம் இஃது இயங்கிவரும் குற்றத்தை அறிஞர்கள் பொறுத்தருள்வாராக.

## எனது உள்ளக்கிடை

இலங்கைத் தமிழ்மாணவர் பயின்றுவரும் ஆங்கிலக் கல்லூரிகளைப்பற்றிய அநுபவம் எனக்குப் பெரிதும் உண்டு. தமிழ்ப் பெற்றோர்கள் பலரும் தத்தம் மக்களின் கலையாக்கங் கருதிப் பெரும் பொருள்களைச் செலவு செய்து வருகின்றனர். அரசாங்கமும் ஆண்டுதோறும் உதவிப்பொருளும் உதவிவருகின்றது. அங்கே அளிக்கப்படுங் கல்வியோ தையற்றொழில் உடையான் தன்னிடத்தில் எஞ்சிப் பல்கிவந்த பல நிறச் சிதைவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டுகளையெல்லாங் கொண்டு தைத்ததொரு தலையணை யுறைபோன்று நகைக்கிடனாகி விளங்கிவருகின்றது. கலாசாலை அதிபர்களும் அரசாங்கத்தின் உதவிப் பொருளின்றிக் கல்லூரி நடத்துதற்கு இயலாதிருந்து வருதலினான் கல்விப் பகுதியார் 'எள்' என்பதன் முன்னே 'எண்ணெய்' என்று கூறிவருகிறார்கள்.

இதற்கிடையில் ஆசிரியர்களின் இயல்பினை அறைதலும் வேண்டுமோ? அவர்களின் இருப்புத் திரிசங்கு சுவர்க்கமேயாகும். இந்த நிலையிலே தமிழ்க்கல்வியைப் பற்றிச் சாற்றவும்வேண்டுமா? வேண்டவே வேண்டாம். தமிழ்த்தாய்க்குச் சிரசிலும் காலிலும் கொள்ளி வைத்தே வருகின்றார்கள். அதன்பாடு சாப்பாடுதான்—அன்றி முறைப்பாடுதான்.

ஆங்கிலநாட்டு மக்களும் ஆகாமல் தமிழ்நாட்டு மக்களும் ஆகாது நமது ஆங்கிலக்கல்லூரி மாணவர்கள் எதிர்காலத்தில் உழல்வர் என்பது திண்ணம். சுயராச்சியப்போர் நடத்தற்கு ஆங்கிலக்கல்லூரியே இடனாக வமைந்துளது. அங்கே ஆங்கிலமொழியை அப்பிரதானமாக்கித் தமிழைப் பிரதானமாக்காதுபோனாலும் ஆங்கிலமொழியின் அடிமைப் பாங்கிப் பதவியையேனும் நமது தமிழ் நங்கைக்கு உதவிவருதற்குத் தமிழர் அனைவரும் முயலுதல்வேண்டும் என்பதே எமது நெஞ்சக்கிடக்கையென்க. இனிக் கட்டுரைப் பொருட் கண்ணே புகுவல்:—

## மக்கள் ஒற்றுமையும் இன்றியமையாமையும்

நமக்குளவாகிய உடைமை முழுவதையும் எவரையும் நம்பாது காவன்மிகுந்த இடத்திலே வைத்துக் காவல்புரிந்துவருதலும், பிறர்க்கு அறிவிப்பான் ஏதம் விளைக்கும் அறக்கடுஞ் செயல்களையெல்லாம் நெஞ்சார நினைத்தலும், மெய்ம்மையைப் பொய்யாக்குதலும் நல்லனவற்றை அல்லனவாக்கி ஒதுக்குதலும் அல்லனவாக நல்லனவாகக் கைக்கோடலும் அன்னபிறவும் தயக்கமைந்த இயல்பாகக் கொண்டுள்ளார். அன்றியும் இவர்கள் ஒன்றிரண்டு தொழில்களையே உணர்ந்துகொண்டவர். பலவகைத் தொழிலாலே தமது வாழ்க்கையைக் கழித்தற்குரியராகவும் இருந்துவருகின்றனர். இவர்க்கு நேர்மை நம்பிக்கை முதலியன இல்லை என்பது முன்னரே காட்டப்பட்டது. நேர்மை முதலாயன இலவேல் ஒற்றுமையும் நிலவாது. ஒற்றுமை நிலவாவிடிலோ வாழ்க்கையும் நிரம்பாது. இவர் எல்லாம் தீய குணஞ் செயல்களையொருவி நற்குண நற்செயல்களை மருவி வாழ்தற்பொருட்டுச் சான்றோர்கள் பல்வேறு திறத்த நூல்களை நாம் எல்லேமும் உய்யும்வண்ணம் நல்கியருளினர் என்க.

E

## கலையும் கல்வியும்

தவத்தாலும் திருவருள் நலத்தாலும் பெருமைசான்றோர் தம்மைப்போலவே நற்குணநற்செய்கைகளில் மேம்பட்டு இவ்வுலகினை உய்வித்த உதவியாளர்களையும் தீக்குணங்களையும் தீச்செயல்களையும் திருவெனப் படைத்துத் தக்கார்க்கெல்லாம் தகவில செய்து கேடு சூழ்ந்து உலகினைப் புரட்டிவரும் வன்கணாளர்களையும் நன்மையமைந்து சான்றுகளாக்கிக் காட்சி முதலாகிய அளவைகளானே அறமுதலிய நான்கினையும் அணிபெறப் புலப்படுத்துவதே கலையாகும். அதனைக் கற்பதுவே கல்வியாகும்.

## கற்றலின் உயர்வும் கல்லாமையின் இழிவும்

காலத்தானும் இடத்தானும் சேய்மைப்பட்டவற்றையெல்லாம் அண்மைப்படுத்தி வரிவடிவத்தானும் ஒலிவடிவத்தானும் நம்மையெல்லாம் ஆட்சிகொண்டு அன்புசெய்து அறனெல்லாங் காட்டி ஆகற்பால பொருட்டிறனெல்லாம் கூட்டி உயரிய இன்பமெல்லாம் ஊட்டிவரும் இக்கல்வியைக் கற்றான், ஆண்டால் இளைஞனேனும் அவன் உலகந் தோன்றிய காலமுதலாகக் கொண்டு வரும் வழக்காறெல்லாம் அறிந்த பெற்றியன் ஆகலின் அன்றுதொட்டு இன்றுகாறும் இருந்துவருவோனேயாவன். கல்லாதவனோவெனில், ஆண்டால் முதுமை பெற்றானேனும் கல்வி நலன் ஒன்றேனும் உணராதவனாகலின் இன்றும் வயிற்றகத்தே வதிந்து வரும் கருவை ஒத்தவனாவான்.

## கல்வியில்லாக் கருமம் சவின்பெறு

ஒரு வழக்கினை வினவி முடிபுசெய்வோன் எவ்வெவர் எவ்வெவ் வழக்குகளை எவ்வெவ்விதம் முடிபு கண்டுள்ளார் என்று உணர்ந்திருக்கவேண்டியது இன்றியமையாதவாறேபோல, உலகத்துள்ளோர் யாதாயினும் ஒன்றனை நினைத்தற்கும் நினைத்தவற்றை யுணர்தற்கும் அவ்வாறே யாக்கற்கும் முன்னோரது பழக்க வழக்கங்களையெல்லாம் நன்குணர்ந்துகொண்ட பின்பே முற்படுதல் வேண்டும். அவையிற்றையெல்லாம் செவ்விதாகத் தெரிப்பன நூல்களாதலின் அந்நூல்களைக் கல்லாது கருதி ஒன்றனை ஆற்றுவான் துணிதல் பெரியதோர் ஏதத்திற் கிடனாகும் என்றுணர்க.

## கல்வி முதலியவும் இடப் பாகுபாடும்

ஒவ்வொரு நாடும் இயல்பானே அமைந்த தட்பவெப்பங்களுக்கு ஏற்றவாறே இயைந்துவரும் ஓசைசான்ற மொழியையும் உணவு முதலாகியவற்றையும் அவ்வவற்றிற் கேற்றவாறியைந்த வழக்க பழக்கங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் மரபுகளையும் அன்னபிறவற்றையும் மருவிவருதல் கண்கூடு. எங்கள் தமிழகப் பகுதிகளுக்குள்ளேயே பாரதத் தமிழ்நாட்டின் உணவுவகையும் உரையாடும் மரபும் ஈழநாட்டகத்தே முரண்படுவது கண்கூடன்றே!

அங்குக் கொடுக்கன் (தேள்) கொட்டுமேற் சில போது உயிரும் அகன்றுவிடும். இங்கு அதன் கொட்டு எறும்புக்கடியினும் இலகுவாகிவிடும். அந்நாடு தேயிலையைப் பித்தமுடைத்தென்று ஒதுக்கிக் கோப்பியை நல்லதெனக் கொள்ளாநிற்கும். இந்நாடோவெனில் கோப்பியையழித்துத் தேயிலையை நன்றெனக் கொள்ளாநிற்கும். இங்ஙனமே, இவ்விரு நாடுகளும் பல்வேறு வகையானும் முரண்பாடு கொள்ளாநிற்கும். இங்கே கூறியவற்றானே ஒவ்வொருநாடும் தத்தமக்கு என்று இயல்பானே இயைந்த உணவுகளையுண்டு உரைமரபுகளையே பயின்றுவருதலே முறையாயவாறு கண்டுணர்க.

ஒருவன் புறமொழிகளிலே நூலியற்றல் இயல்புரிமைக்கு மாறுபட்டதாகும் என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மை. ஒருவர் எத்துணையாற்றல் எய்தியவரேனும் புறமொழிகளைக் கற்றுக்கொள்ளுவதான் மட்டும் அன்னவர் புறமொழிகளிலே காவிய முதலியன இயற்றுதற் குரியவராவர் என்று கோடல் அறியாமையின் பாலதாம்; யான் பதினெட்டு ஆண்டுகளாகவே யாழ்ப்பாணப்பகுதியில் வதிந்தும் அதனோடு ஒன்றுபட்டும் வாழ்ந்துவந்திருக்கிறேன் எனினும் இந்நாட்டு உணவுமுறை எனக்கு இனியதுவாக இயைந்திலது. உரைமரபும் யானும் இன்னும் தனித்தனியே இருந்துவராநின்றோம். எனக்கு மக்களோ இந்நாட்டு உணவுகளின் அமைப்போடும் உரைமரபோடும் முழுவதூஉம் ஒத்த நிலையினராயினர் என்று கிளந்து கூறுதல் மிகை.

மரபு மரபாக ஒரு நாட்டில் வதிந்துவரும் வழக்காறுடையார் தமக்கே கவித்திரு முதலாகிய பலவும் எய்தற்குரியனவாம். புறமொழியிலே நாமும் காவியம் புனையலாம். புனையினும் போதரும் பயன்றான் யாது? அங்கே காவியமும் மரபும் அன்னபிறவும் ஒன்றுடன் மற்றொன்று காதலித்திலவாய் எஞ்ஞான்றும் ஊடிப் பிணங்கி உழன்றுகொண்டேவரும் என்க. சில கருத்துக்கொண்டால் அவரும் அவராடையும் ஒன்றுபட்டு அணிதராநிற்கும். வேறுஞ்சிலர் உடுத்துக்கொள்ளின் "தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள்" என்றாங்குவருந் தனிமைபோலாது "தானும் வயிறுந் தனிவீழ்ந்தாள்" என்றாங்குவரும் தனிமைபோன்றுதான் விளங்கிவரும். இந்த விளக்கம்போலவே புறநாட்டு மொழியாலே இயற்றப்படும் காவியங்களும் பொலிந்துவரும் என்றுணர்ந்துகொள்க. தம் தமிழ்மொழியினும் கவித்திருவில்லாதோரானே இயற்றப்படுங் காவியமும் மேற்கூறிய காவியப்போக்கையொத்துப் பொலிவுபெறும் என்க.

தந்நாட்டு மொழியிலும் கருவிலே கவித்திருவில்லாதோரானும் இயற்றப்பெறுங் காவியமும் இருந்துவரும். பிறநாடுகளைவிடத் தமிழ்நாட்டிலேதான் பாட்டியற்றல் மலிந்துவிட்டது. ஆனால் தான் பாடும் பாட்டைத் தானேயாயினும் மறந்தும் திருப்பிப் பார்க்கும் வழக்காறுமட்டும் இங்கில்லை. அங்ஙனமேல் பிறர்க்கு இஃது எவ்வாறு பயன்படும் என்பது இயம்பாதே விளங்கும். தத்தமக்கு இயைந்தவாற்றலை உணர்ந்துகொண்டு அவ்வாற்றலுக் கேற்றதோர் பகுதியிலே இறங்கி முயன்றால் தமது நாடு ஏனைய நாடுகளுக்கு முன்னணியிலே நிலைபெற்றிலகும். அந்த வழக்கந்தான் இங்கு என்றும் இல்லாததொன்றாகும். ஒருவன் புகையிலைப் பயிரிட்டால் எல்லாரும் அப்பயிரையேயிடுவர். இங்ஙனமே ஏனையவற்றோடு மொட்டிக்கொள்க.

## நமது மொழியும் ஆங்கிலக் கல்லூரிகளும்

இலங்கையிலே தமிழ்மாணவர் பயின்றுவரும் ஆங்கிலக் கல்லூரிகளின் இயல்புகளைச் சற்றேறத்தாழப் பதினெட்டு வருஷங்களாகப் பயின்றுவந்த பயிற்சி எனக்குப் பெரிதுமுண்டு. பொருள் அளவிலே ஒப்புமை இல்லாதுபோனாலும் படிப்பிக்கும் நேரத்தளவிலேனும் ஒப்புமை உதவலாகாதா? ஆங்கிலத்திற்கு அளிக்கும் நேரத்திலும் தமிழுக்கு அளித்துவரும் நேரம் காற்பங்கேதான். புள்ளியிலும் அப்பங்கேதான் அதன் தலையில் எழுதப்பட்டுள்ளது. இச்சிறு நேரத்துக்குள்ளே பரீட்சையிலே சிறியதொரு புள்ளி பெறுவதற்காக இலக்கிய இலக்கணங்களையெல்லாம் அரைத்துக் கரைத்துக் 'குழம்பாக்கி' அல்லது 'மிளகு ரசமாக்கி' அல்லது 'சாம்பார்' ஆக்கி மாணவர் வாயிலே ஊற்றிவிடவேண்டுமாம்; நான்முகன் தானேவந்து தமிழாசிரியப் பணிகளைப் பலவடிவங்கொண் டினிப் பயிற்றிவருதல் வேண்டும். அங்ஙனம் ஒருகால் பயிற்றினும் மாணவர் பயின்று தேர்ச்சி பெறுவரோ என்பன ஐயத்தினும் மிகுந்ததோர் ஐயப்பாடு; ஊசியினால் மருந்தேற்றிக் காக்கைவலி முதலிய கொடுவலிகளை நீக்கலாம்; தமிழ்க்கல்வியில் மாணவரின் பராமுகப் போக்குவலிகளை எந்த மருத்துவராலும் ஊசியேற்றி மாற்றிவிட முடியாது. அம்மாணவர் தமிழ்ப்பாடத்தில் தேர்ச்சி பெறாது பெரியதோர் கோழிமுட்டை பெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் ஆங்கிலத்தில் அடுத்த வகுப்பிற்கு ஏற்றப் பட்டேவிடுவர். இதுவே இக்காலத்துக் கல்விக் கழகத்திற்குரிய விதிபோலும்! வகுப்பேற்றிய பின்னும் தமிழ்ப் பரீட்சை நடைபெறும் அங்ஙனம் நடத்துவதிலும் தமிழாசிரியரைத் தூக்கிலிட்டுக் கோறல் தனிப் பேரறமாக முடியுமல்லவா?

ஆங்கிலங் கற்போர் தமிழைக் கற்பின் தம் கல்லூரிகளிலே தமிழ்க்கலை நன்கு ஒளி வீசும் என்று ஒரு பெரியார் உபதேசஞ்செய்து வருகின்றார். இனி ஆங்கிலவாசிரியர் எல்லாரும் தமிழ் கற்கப்போகின்றார்கள்; ஆகலின் என்போன்றார்க்கு நல்லதோர் ஊதியம் கிடைக்குமென்று வாயூறிவந்தேன்; அவர் படிப்பு அவர்க்குரிய அனுபவப் படிப்பாகவே இருந்துவரும் என்பது அப்பெரியார் கூற்றுப்போக்காலே படுகின்றது; தமிழ்ப் பாடசாலைகளில் கல்வியின் நிலைமையைப்பற்றி எழுதப் புகின் ஒரு பாரதமாகிவிடும். பிள்ளையார் இடம் இரக்கவேண்டிவரும்; அவர்தானே இப்பாரதத்தையும் எழுத எண்ணி எமக்கு மிகுதியாகவிருக்கும் ஒன்றேயொரு கொம்பைத் தருதலும் செய்யார். தமிழ் மாணவர்க்குத் தமிழைக் கற்பித்துவரும் ஆசிரியர்க்குக்கூட ஆங்கிலக்கல்வி வேண்டுமாம்; அக்காலத்தில் நக்கீரர் கபிலர் முதலியோர் எங்ஙனம் புலமை நடாத்தினார்களோ வறியேம். ஆ! கடவுளே!! தமிழாசிரியர்க்கும் இந்தத் தொல்லை இதுபோது நேருகின்றது. இக்கொடுமைகளையெல்லாம் தமிழ்த்தாய் கண்டு வாளாவிராள். வாளாவிருப்பின் வரும் பழி அவள் முடிமேலதாகுக.

அன்பர்களே! என்றித்துணையும் கூறியவாற்றான் கல்லூரிகளின் நிலையும் தமிழ்த்தாயின் நிலையும் ஒருவாறு கூறப்பட்டன. இக்கூறியவெல்லாம் எமது நெஞ்சகமணிச் சுனையில் நின்றும் ஊற்றெடுத்த அருவிப் பெருக்காகும்; பலர்க்கு இன்பத்தைப் பயக்கும் பெற்றிமை சான்றன பல பகுதியுள; பலர்க்குத் துன்பத்திற்தோய்விக்கும் பகுதிகள் பலவுள; ஒருவரின் நயப்பும் மற்றொருவரின் நயப்பின்மையுமாகிய இருதிறன்பற்றியெழுதுவது புலவர்க்கடாது. உள்ளதை உள்ளவாறு உணர்ச்சிவாய்ப்பட்டு வெளிப்படுப்பதே புலவர் இயற்கை; நான் ஒருகால் தவற எண்ணினும் புலவர் இயல்பு என்னைத் தவறவிடாது நிலைப்படுத்துகின்றது. என்செய்வேன்!! படிக்குநர் இன்புறுவார்களாக.

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே.

வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழிய வே.

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
யிசைகொண்டு வாழிய வே.

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே.

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே.

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே.

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே.

—வரகவி, சி. சுப்பிரமணியபாரதியார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் ஆரிய மொழிகளும்

[நல்லூர், வண. சுவாமி ஞானப்பிரகாசர் O. M. I. அவர்கள்.]

தமிழ் மிகப்பழைய ஒரு பாஷை என்பதற்கு ஒரு சிறிதும் ஐயப்பாடு இல்லை. அது பண்டை நாளில் இந்தியா, இலங்கை, பர்மா, யாவா முதலிய நாடுகளில் எங்கும் வழங்கியது என்பதும் அறிஞர்கள் அங்கீகரித்துள்ள ஒரு உண்மை. சமஸ்கிருதம் என்று சொல்லப்படுகின்ற வடமொழியைப் பயின்றவர்களான "ஆரியர்" வடஇந்தியாவிற் தோன்றிய பின்னரே, தமிழானது சிறிது சிறிதாகத் தென்னிந்தியாவின் எல்லையுள் அடங்கிச் சுருங்குவதாயிற்று. கீழ்த்தேசத் தமிழ்ப் பேச்சுக்களும் காலகதியில் வேறுபட்டன. வடஇந்தியாவின் மாகதம், சௌராட்டிரம், பைசாசம், ஆதிய பழைய பேச்சுக்களையும் தென்னிலங்கையில் வழங்கும் சிங்களத்தையும் ஆரிய பாஷையின் பாகதங்கள் அல்லது கிளைப்பேச்சுக்களென்று பலர் இந்நாட்களிற் சொல்லுவர். ஆயின் இப்பேச்சுக்களும் பழைய தமிழின் பாகதங்களாய் ஒருகாலம் நின்று, பின்,



[சுவாமி ஞானப்பிரகாசர் O. M. I.]

படிப்படியாய் சமஸ்கிருதச்சொற்களை மிகவாய் எற்றுக் கொண்டதினல், அச்சமஸ்கிருதத்தின் பாகதங்கள்போற் தோற்றுகின்றன என்பது நுணுகிய ஆராய்ச்சியாற் பெறப்படும். இவை சொற்பொலிவளவில் ஆரியத்தை மிக மேற்கொண்டு விளங்கினும் வசனக்கட்டாகிய யாப்பு, பெயர்ச்சொற்களின் வேற்றுமை, வினைச்சொற்களின் ரூபகாரணம் என்பவைகளில் இன்றைக்கும் தமிழை ஒத்திருத்தல் நோக்கத்தக்கது. சொற்தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக்கொண்டு அன்று, யாப்பு ஆதிய இலக்கண விசேஷங்களைக்கொண்டே ஒரு பாஷை இன்னகுடும்பத்தைச் சேர்ந்தது என்று அறுதியிடுதல் மொழிநூலின் முறையாதலால், வட இந்திய பாகதங்களைத் தமிழின் கிளைமொழிகள் எனச் சொல்லி விடுதலே தகுதி போலும். இம்முடிபு ஐரோப்பிய மொழிநூலோருக்குச் சம்மதமன்று. எங்ஙனம் எனின், அன்னோர்,இதுவரையில் தமிழின் பண்டை நிலையை ஆராய்ந்து காணுமையால்,சமஸ்கிருதச் சொற்களை நிரப்பக்கொண்ட பாஷைகள் எவையெவையோ அவையெல்லாம் அச் சமஸ்கிருதத்தைச் சார்ந்த பாகதங்களே என முடித்துவிடுவர். பழந்தமிழ் ஆராய்ச்சியை அன்னோர் தலைப்படுவோராயின், தம் அபிப்பிராயத்தில் வேறுபடுவோராவர் எனச் சொல்லலாம்.

சரித்திர காலத்துக்கு முற்பட்ட நாட்களில் எவ்வாறு தமிழ் திருந்தியிருப்பினும், பிற்பட்ட காலங்களில் அது அடைந்த மாற்றமானது, கன்னடம், தெலுங்கு, துளு, கூயி, பிறுகூயி, மலையாளம் ஆதிய பேச்சுக்களிற் தெளிவாகக் காணப்படுகின்றது. இவைகள் தமிழின் பாகதங்கள் என்பது எல்லார்க்கும் ஒத்த முடிபு. ஐரோப்பிய மொழிநூலோர் இவற்றையும் தமிழையும் திராவிட குடும்பம் என வகுப்பர். திராவிட எனுஞ்சொல் தமிழ், திரமிழம், திராவிளம், திராவிடம், என மாறிவந்தது. வடமொழியையும் அதன் பாகதங்களெனத் தாம் வைத்துக்கொண்ட மாகதம் ஆதியவற்றையும், கிரேக்கம், லத்தீனியம், கொதிக்கம், சர்மானியம், ஆங்கிலம் ஆதிய பாஷைகளோடு அவற்றின் கிளைப்பேச்சுக்களையும் ஆரிய குடும்பம் என நிறுத்துவர். இவ்வாறே திராவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் இரு வேறு குடும்பங்களாமென மொழிநூலோர் பிரித்துக்கூறிவரினும், இவை இரு குடும்பங்களுக்கும் அடிப்படையாய் உள்ள ஆதிச்சொற்கள் ஒரு வகுப்பினவே என்பது எனது ஆராய்ச்சியாற்பெறப்பட்டமுடிபு. இம்முடிபு எவ்வாறு பொருத்தமுடைத்தாகும் என இங்கு சுருக்கமாக வெளிப்படுத்துவேன்.

### தமிழ் அடிச்சொற்களே ஆதிச்சொற்கள்

தமிழிலேயுள்ள தொடர் சொற்களை ஒதுக்கிவிட்டு, தனிச்சொற்களை மட்டில் எடுத்து ஆராயும்போது, அத் தனிச்சொற்கள் எல்லாம் உயிரைத் தலையிற்கொண்ட சொற்களும், மெய்யைத் தலையிற்கொண்ட சொற்களும் என இரு கூட்டங்களாகப் பிரியும். அடு, உலை, இழி, எழு என்பனபோன்றன உயிரைத் தலையிற்கொண்ட சொற்கள். படு, தொலை, கிழி, செழு, என்பன போன்றன மெய்யைத் தலையிற்கொண்ட சொற்கள். மெய் முதற் சொற்களை உயிர் முதற் சொற்களோடு வைத்து ஒப்பு நோக்குவோமாயின், அம் மெய்முதற் சொற்கள் இவ் உயிர்முதற் சொற்களில் நின்று பிறப்பனவாயின எனக் காண்போம். இவ்வாறே, சுழுக்குதல் உழுக்கு தலினின்றுவந்தது. புளு, உளு, (உழு உசு) வினின்று வந்தது. தாழும், ஆழத்தினின்று வந்தது. சால், ஆல் (அகல்) என்ற சொல்லின் திரிபு. முன்காட்டிய அடுத் தலை படுத்தலெனவும் உலைதலை தொலைதல் எனவும், இழிதலை கிழிதல் எனவும், எழுதலை செழுவுதல் எனவும் வந்ததையும் ஆராய்ந்தறிக. நுணுகி நோக்குவோமாயின், தமிழ் அகராதியிலுள்ள மெய் முதற் சொற்களெல்லாம் உயிர் முதற் சொற்களின் ஓரோர் வகையான திரிபே என்றது புலமாகும்.

மெய்யைத் தலையிற்கொண்டுள்ள தமிழ்ச் சொற்களெல்லாம், உயிரைத் தலையிற்கொண்ட சொற்களின் விகாரங்களே என வைத்துக்கொள்ளுமிடத்து, உயிர் முதற் சொற்கள் தாம் தமிழ் மொழியின் ஆதி உருவங்களாம் என முடியும். அப்பால், உயிரை முதலிற் கொண்ட இவ் உருவங்களைச் சீர்தூக்குவோமாயின், இவை, முறையே, அகரத்தையும், உகரத்தையும், இகரத்தையும், எகரத்தையும் தலையிற்கொண்ட நான்கு கூட்டங்களாய் நிற்பதைக் காண்போம்.

(1) அஃகு, அடு, அண்டு, அண்ணு, அத்து, அப்பு, அம்மு, அறு ஆதியன அகரத்தை முதலிற் கொண்டு அண்மையை நாடுதலையும், இதன் விகற்பங்களாகிய அழுத்துதல், குறுக்குதல் எனும் எண்ணங்களையும் காட்டுகின்ற சொற்களாம்.

(2) உக, உட்கு, உதி, உந்து, உப்பு, உய், உவ உள்ளு, உறு ஆதியன உகரத்தை முதலிற்கொண்டு, சேய்மையை, மறைவிடத்தை நாடுந் தன்மையைக் குறிக்கின்ற சொற்களாம்.

(3) இசழ், இசி, இடி, இணை, இயல், இரு, இழி, இற ஆதியன இகரத்தை முதலிற்கொண்டு ஆதியிலே கீழுறுதலைச் சுட்டிய சொற்களாம்.

(4) எஃகு, எடு, எத்து, எய், எழு, எறி ஆதியன எகரத்தை முதலிற்கொண்டு மேலுறுதலை விளக்குஞ் சொற்களாம்.

அகரந் தொடக்கமான இவ்வுயிர்கள் நான்கும் அண்மை முதலிய இடச்சம்பந்தங்களைச் சுட்டுகின்றமையால் மொழிநூலிலே சுட்டுக்கள் எனப்படும். இவற்றுள் அ. உ. இ. இவை மூன்றுமே ஆதிச்சுட்டுக்கள். எகரம் இகரத்தின் திரிபாகி, கீழிருத்தலுக்கு எதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிருத்தலைச் சுட்டுவதாயிற்று. மேலெடுத்துச் சுட்டுவதினாலேதான் எகரத்துக்கு வினாப்பொருள் பிற்பட வந்தது. இதனாலன்றோ தொல்காப்பியனார் எகரத்தை வினாவாகக் குறியாது போயினர். உரையாசிரியர் நச்சினார்க்கினியரும் " தன்னினமுடித்தல் என்பதனான் எகரம் வினாப்பொருள் உணர்த்தலுங் கொள்க " எனக்கூறி அதற்குச் சுட்டுப்பொருளே உரியது எனக் காட்டியதோடு அமையாது, "அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன், எப்பொருள் எனவரும் " என்று மூன்று சுட்டுக்களுக்கு அன்று நான்கு சுட்டுக்களுக்கும் உதாரணந் தந்துபோயினர். (தொ. எழுத். 31) உயிர்முதற் சொற்களெல்லாம் இந்நான்கு பிரிவினுள்ளேயும் மட்டில் அடங்குதலை அகராதியுங் கையுமாய் ஆராய்ந்து காண்க.

அகரம், உகரம், இகரம், எகரம் எனுஞ் சுட்டுக்களை முதல் அங்கமாகக்கொண்ட நான்கு சொற் கூட்டங்களிலுமே உயிர்முதற் சொல்லெல்லாம் அடங்கும் என்றோம். எவ்வாறெனில் : மற்றைஆகாரம் முதலான நெட்டுயிர்களும் இவற்றின் திரிபேயாகி, சொல்லை மேலும் வலியுறுத்துவதற்கு வழங்கும். ஒகரம் உகரத்தின் திரிபு. ஐகார ஔகாரங்கள் சந்தியக்கரங்கள்; புறம்பான வரிவடிவை வேண்டாத கூட்டுயிர்கள்.

இனி, தமிழின் ஆதி உருவங்களாகிய இந்நான்கு கூட்டச் சொற்களையும் மேலும் உற்றுநோக்கும்போது, (1) அண்மைகொள்ளுதலும், (2) சேய்மையாதலும், (3) கீழுறலும், (4) மேலுறலும் என்னும் பொதுவகையான எண்ணங்கள் அவ்வச் சுட்டின் முறையே அவ்வக் கூட்டத்தின் சொற்களுள் எல்லாம் செறிந்து நிற்க, சுட்டின்பின் வருகிற மெய்யெழுத்துக்களானவை அப்பொதுவகையான எண்ணத்தைச் சிறிது சிறிது திரித்துச் சிறப்புவகையான ஓரோர் எண்ணத்தின் குறியாக்குவதைக் காணலாம். இவ்வாறே அஃகு, அடு, அண்டு, அண்ணு, அத்து, அப்பு, அமை ஆதிய சொற்களெல்லாவற்றின் அடித்தளத்திலும் அண்மையை நாடுதல் என்னும் எண்ணம் பொதுவகையாகக் காணப்படுகின்றது. அ எனும் முதல் அங்கமே இப்பொழுது எண்ணத்தைச் சுட்டுகிறது என்பது வெளிப்படை. ஆயின், பிந்திய அங்கமாகிய மெய்தான் அ — ஃகுதல், அ — டுத்தல், அ — ண்டுதல், அ — த்துதல், அ — ப்புதல், அமைதல் ஆதியனவற்றின் சிறப்புக் கருத்தை வெவ்வேறாக்குகின்றது என்னல்வேண்டும். அஃகுதல், சுருங்கி அண்மையை நாடுதல்; அடுத்தல், சேர்ந்து அண்மையை நாடுதல்; அண்டுதல், கிட்டிச் சென்று அண்மையை நாடுதல்; அத்துதல், செறிய வைத்து அண்மையை நாட்டுதல்; அப்புதல் சேர வைத்து அண்மையைச் செய்வித்தல்; அமைதல், அண்மையுறல் என இவ்வாறே பின் அங்கமாகிய மெய்களின் சேர்க்கையால் கருத்துச் சிறிது சிறிதாய் வேறுபடுதலைக் காண்க. உகர, இகர, எகரச் சுட்டுக்கள் தலையாக வரும் ஆதிச் சொற்களையும் இவ்வாறே பிரித்துக் காண்க. ஆகவே, இவ் ஆதிச்சொற்களில் முந்திய அங்கமான சுட்டுக்கள் ஒவ்வோர் இடச்சம்பந்தத்தைப் பொதுவசையாகக் காட்டுகின்றன. பிந்திய அங்கமாகிய மெய்கள் அச்சம்பந்தத்தின் வெவ்வேறு படிகளை, நோக்குக்களைக் காட்டிச் சிறப்பு வகையாய் ஒவ்வோர் எண்ணத்தைத் தருகின்றன. இம்மெய்கள், சுட்டின் பொருளை வெவ்வேறு வகையாக விளக்குவதினால், வியஞ்சனம் எனப் பெயர் பெறும். வியஞ்சனம் = விளக்குவது. அங்கிலத்தில் முந்தியதை Deictic எனவும் பிந்தியதை Formative எனவும் குறிப்பிடுவர். முன் காட்டிய சொற்களில் சுட்டு வியஞ்சனம் எனும் இவை இரண்டு அங்கங்களையும் தவிர, ஈற்றுயிரும் ஒன்று வருகின்றது. அடு எனுஞ் சொல்லில் அட் எனும் உருவத்தோடு உகரமும் ஒன்று ஈற்றிற் சேர்ந்துள்ளது. இதற்குக் காரணம் யாது? அட் எனச் சொல்லுதல் வாய்க்கு எளிதாகாமையால், உகரமும் சேர்த்து அடு எனப்படும். உச்சரிப்பு இலாகவத்தை நோக்கி எழுந்த இவ்வாறான ஈற்றுயிர்கள் உச்சாரண உயிர் எனப்படும். ஆங்கிலத்தில் இதனை Enunciative என்பர். அடு எனுஞ் சொல்லில் அகரம் அண்மை கொள்ளுதலைக் குறித்த சுட்டு. டகரம் சொல்லை உருவாக்குகின்ற வியஞ்சனம். உகரம் உச்சாரண உயிர். ஏனைச் சொற்களிலும் இவ்வாறே பிரித்து உணர்ந்துகொள்க.

உச்சாரண உயிரை வேண்டாத ஆதிச்சொற்களும் உள. ஆதலால், உச்சாரண உயிர் இடையில் பெறப்பட்டதெனவும், ஆதிச்சொற்கள் எல்லாம் தம் மியல் பின்படி சுட்டும் வியஞ்சனமும் சேர்ந்து உண்டானவையே எனவுங் கொள்க. இதுகாறுங் கூறியவற்றால் தமிழ் ஆதிச்சொற்கள் எல்லாம் அண்மை ஆதிய இடச்சம்பந்தங்களை உணர்த்தும் ஒவ்வோர் சுட்டும், அவ்விடச் சம்பந்தங்களைச் சிறப்பு வகையாக்கி விகற்பிக்கின்ற ஒவ்வோர் வியஞ்சனமும் சேர்ந்தனவே என முடியும். இனி, அண்மை, சேய்மை, கீழுறல், மேலுறல் எனும் நான்கு எண்ணங்களும் அண்மை, சேய்மை எனும் முந்திய இரண்டிலும் அடங்குவதையும் நோக்குக. பேசுவோனது அடிக்கீழுள்ளது அண்மையன்றோ? மேலுள்ளது சேய்மையன்றோ? அப்பால், அண்மையையும், சேய்மையையும் நான், நானல்லாதது (Ego, non-ego) எனும் இருஎண்ணங்களோடும் ஒப்புமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்குதலும் பொருந்தும். இவை இரண்டு எண்ணங்களுமே மானுடனின் எல்லாச் சிந்தனைகளுக்கும் அடிப்படையானவை என்பதை நுனித்துக் காண்க. நான், நானல்லாதது = அண்மை, சேய்மை = கீழுள்ளது, மேலுள்ளது எனும் இவ்வெண்ணங்களுக்கு அப்பால் மானுட சிந்தனைகளுக்கு வேறு அடிப்படை தேடுதல் கூடாது. இவைதாம் எல்லா எண்ணங்களுக்குந் தோற்றுவாயான அடி எண்ணங்கள் ஆமாயின், இவற்றை விளக்கும் சொற்களே எல்லாச் சொற்களுக்கும் தோற்றுவாயான அடிச்சொற்கள் என்பதும் நன்கு போதரும் அன்றோ?

### ஆரியச்சொற்களுக்குத் தமிழ் அடி

அடியெண்ணங்களை விளக்குகின்றனவான தமிழ் அடிச்சொற்கள் இவ்வாறே துருவி ஆராய்ந்து காணப்பெற்றன. ஆதி அடிச்சொற்கள் தலையடிச்சொற்கள் எனப்படும். பின் அவற்றினின்று உண்டான அடிகள் வழியடிச்சொற்கள் எனப்படும். அப்பால் தலையடிகளிலும் வழியடிகளிலும் நின்று கிளைத்த சொற்கள் வியுற்பன்னங்கள் அல்லது கிளைச்சொற்கள் எனப்படும். தலையடிகள் வழியடிகளாயும், இவையிரண்டும் கிளைச்சொற்களாயும் வருதலுக்குரிய விதிகளை ஈண்டு எடுத்தோத இடமிராது. அவற்றை எனது "தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி" நூலினுள்ளும் "தமிழமைப்புற்ற வரலாறு" என்னும் நூலினுள்ளும் காண்க.

இனி, தமிழிற்குத் தோற்றுவாயான இவ் அடிச்சொற்கள்தாம் ஆரியமொழிகளுக்கும் தோற்றுவாயாகியிருத்தல் கூடுமா? உலகம் முழுதும் மானுடர் ஒரே விதமான சிற்சத்தியும் போக்கும் உள்ளவர்களன்றோ? ஆதலால், ஆரியருடைய மனதில் எழுகின்ற அடியெண்ணங்களும், நம் மனதில் எழுகின்ற அடியெண்ணங்களும் ஒரேவிதயானவைகள் அன்றோ? அன்னோரும் நம்மைப்போலவே நான், நானல்லாதது = அண்மை, சேய்மை = கீழுள்ளது, மேலுள்ளது என இடசம்பந்தங்களைப் பிரித்துணரும் முகத்தாலேதான் அறிவு தலைப்பட்டிருப்பர் என்று சந்தேகமின்றிச் சொல்லலாம். பிரித்துச் சுட்டுதலே அறிவு அன்றோ! இவ்வாறு அண்மை சேய்மை ஆதியனவற்றைப் பிரித்துச் சுட்டுங்கால் தமிழராகிய நாம் எடுத்தாண்ட அகரமாதிய சுட்டுக்களையே ஆரியரும் வழங்கியிருத்தல் பொருந்தாதா? பொருந்தும் என்றதற்குச் சில பிரபல நியாயங்கள் உள. ஆயின் இவ்விஷயத்தில் வெறும் ஊகத்தை நாம் எடுத்தாளவேண்டியதில்லை. ஆரிய பேச்சுக்களை நாம் செவ்வனே ஆராய்வதுண்டாயின், அம்மொழிகள்கூட எமது நால்வகைச் சுட்டுக்களையும் வேறு வேறு வியஞ்சனங்களையும் கொண்டே உற்பத்தியாயிருத்தலை மாத்திரமா, அவற்றின் அடிகளும் தமிழ் அடிகளும் ஒன்றே என்பதையும் காண்போம். இதில் மற்றொரு அற்புதம் யாதெனில், ஆரியச் சொற்கள் பெரும்பான்மை மிகவும் உருக்குலைந்துபோன கிளைச் சொற்களாகவே கிடப்ப, அச்சொற்களுக்கு அடியாயுள்ள ஆதிச்சொற்கள் எந்தமிழிலே விளங்குகின்றன. இதனால் திராவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் சொற்றொகுதியளவிலே அடித்தளத்தில் ஒற்றுமையுடையவை என்பதும், தனிமாட்சியுடையதெனப் பொருள்படும் தமிழ் ஒன்றே இரு குடும்பத்தினுக்கும் பொதுவான அடிச்சொற்களை உருக்குலையாது காத்து வருகின்றதென்பதும் தெற்றெனப் புலப்படும்.

தமிழ் அடிகளினின்று ஆரியச்சொற்கள் பிறந்துள்ளன என்றேன். இதற்குச் சான்று யாது? இச்சான்றை ஒரு சிறு வெளியீட்டில் ஐயந்திரிபறத் தருதல் கூடாது. அதற்குப் பெரியதோர் நூல் அவசியம். அந்நூல்தான் "தமிழ்ச் சொற் பிறப்பு ஒப்பியல் அகராதி" எனும் பெயரோடு இப்போது ஆயத்தமாகி வருகின்றது. இங்கு மாதிரிக்காக ஒரேயொரு சொல் ஆராய்ச்சியைத் தருவேன்.

காற்றைக் குறித்தற்கு சமஸ்கிருதத்தில் வாத, வாயு எனுஞ் சொற்கள் உண்டு. இவ்வாதச்சொல்லே லத்தீனில் உவெந்து-ஸ் (Ventus) எனவும், ஆங்கிலத்தில் உவிண்ட் (Wind) எனவும், லித்துவேனியத்தில் உவெஜ-ஸ் (Wejas) எனவும் நிற்கும் என்பர் ஐரோப்பிய மொழிநூலோர். இவ்வுருவங்களுக்கு அடி யாது எனத் தேடுங்கால் எமது தமிழ் ஊதையே என்று தோன்றும். ஊதை ஆதியில் ஊத என நின்றதென்பதற்கு மலையாளம் முதலிய பாகதங்களில் ஐகாரவீற்றுச் சொற்கள் அகரவீறாய் நிற்பது சான்று. இனி, உகரம், ஆதி லகரம் எனும் இரு ஒலிகளும் இதழ் குவித்து உயிர்ப்பு விடுவதினால் எழுகின்றமையால் ஒத்த பிறப்புடையன என்பது ஒலி நூல் முடிபு. தமிழில் உழல் (திரும்பு) எனும் சொல் (வள) வளை என வந்ததுபோல, எமது ஊதைச்சொல் வடமொழியில் உ-வாத என்றாகியபின் வாத என நின்றது. அப்பால், உவாத இடையில் அநுநாசிகம் வரப்பெற்று உவாந்த, உவெந்த, உவெந்து-ஸ் எனக் காற்றிற்கு லத்தீனியச்சொல்லாயிற்று. உவெந்த எனும் உருவந்தான் உவெஞ்ச, உவெஜ-ஸ் என லித்துவேனியமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழியாளர் வாத எனும் உருவத்தினின்று வா என ஒரு அடியைக் கற்பித்து, பின் அதினின்று வாயு எனும் வேறொரு சொல்லைப் பிறப்பிப்பர். ஆயின் வா என ஒரு தாது எழுந்ததற்கு நியாயஞ் சொல்ல அறியார். அது வா என்றிராமல் போ என்றிருத்தல் ஏலாதா? அல்லது கா, கூ என்றிராமற் போனது எவ்வாறு? வெறுங் கற்பனைகளை விட்டொழிந்து, வா எனும் வடமொழியாளரது தாது ஊது என்னும் தமிழ் அடியின் கடைக்குறையே என வைத்துக்கொடுங்கால் அது போ, கா, கூ என்னாமல் வா என வந்ததற்குப் போதிய நியாயம் வெளிப்படும். ஊது என்னும் உருவம் உதி உதை உந்து ஆதிய உருவங்களோடு ஒற்றுமைபூண்டு, முன்னாகத் தள்ளுவதை உணர்த்துவது. அதன் அடி உத் என்பது. உத் எனும் அடியே உச்சாரண உயிர்ப்பேதத்தால் உதி உதை எனும் வழியடிகளையும் அநுநாசிகச் சேர்க்கையால் உந்து எனும் வழியடியையும் தரும்.

இவ் உத் எனும் தலையடி உ எனும் சேய்மைச் சுட்டும் தகரவியஞ்சனமுஞ் சேர்ந்து உருவானது; சேய்மைபாக்குதல், முன்னாகத்தள்ளுதல் எனும் பொருள் உள்ளது. வடமொழியிலும் உத் (ud) எனும் உபசருக்கத்திற்கு, மேலே, சேய்மையில் எனும் பொருள் இருத்தலையுங் காண்க. இனி, உத் என்பது வலியுறுத்தலின்பொருட்டு ஊத் என நின்று உகர உச்சாரண உயிர்பெற்று ஊது என்றாயிற்று. ஊதுதல் வாயினாற் சுவாசத்தை முன்னாகத் தள்ளுதல். அப்பால் சுவாசத்தை வெளிப்படுத்தலின் ஒப்புமையினால் அடிக்குங்காற்று தமிழில் ஊதை எனப்பட்டது. ஊதுவது = ஊதை. இவ்வாறே, ஊதல் குளிர் காற்றிற்கும் பெயராயிற்று. காற்றுச் செறிவினால் வாதரோகம் வீக்கம் இவற்றையும் இச்சொல் குறிக்கும். இங்கு காட்டிய வடமொழி வாதமும் அது. ஊதை தான் ஓதை என நின்று காற்றையும் காற்றினால் உண்டாகும் சத்தத்தையும் குறித்தலும் ஒன்று. ஓதை கோதை எனவும் வரும். ஓசை என்பதும் ஓதையின் திரிபு. அப்பால், ஊத்து = ஊதுதல், ஊதுகுழல். ஊத்தம் = உடல்பொருமல் எனச் சிறிது சிறிதாய் சொல்லும் பொருளும் வேற்றுமைப்படல் காண்க. அதுமட்டோ, காற்றை உணர்த்திய ஊதை எனுஞ் சொல்லே கூதை எனக் ககரமெய் தலையிடத்திற்பெற்று அக்காற்றையே உணர்த்துதலையும் நோக்குக. மெய் முதற் சொல்லெல்லாம் உயிர் முதற் சொற்களினின்று பிறந்தமைச்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு. இம்முறைபற்றியே ஊதல் எனுஞ்சொல் கூதல் எனநின்று குளிரைக் குறிக்கும். இதுதான் கூதிர் என்றாகி காற்றை, பனிக்காற்றை, குளிரை, சரற்காலத்தை உணர்த்தும் விநோதத்தையும் காண்க

அதுமட்டோ! ஊதுதலே ஓதுதல் என்றாகி, சுவாசத்தை வாயினால் வெளிப்படுத்தும் முகத்தால் சொல்லுதலை, படித்தலைக் குறிக்கும். ஓதுதல் ஓத்து என வந்து உச்சரித்தல், சொல்லப்படுவது, புத்தகத்தின் பிரிவு, வேதம் எனும் பொருள்களைப் படிமுறையாகத் தரும். இதனால் ஓதி எனும் வேறொரு உருவம், சொல்லப்பட்டது (ஐங்குறு நூறு 319), கல்வி, (சீவகசிந். 951), பண்டிதன் எனும் பொருள்கள் கொள்ளும். ஓதுவோன், பலி செலுத்துவோன் எனும் பொருளுள்ள ஓதா (hota) எனும் வட சொல்லும் நமது ஓதுதலினின்று எழுந்தது போலும். அங்ஙனமாயின், ஓமம் (homa) எனும் சொல்லும் தமிழ் ஓதுதல் அடியாய்ப் பிறந்ததேயாகும். ஓது—தல்தான் வடமொழியில் உச் உக்தம் ஆதிய உருவங்களையும், முன்காட்டிய விதிகளால் வத் (vad) என நின்று வசனம் வாக்கியம் ஆதிய பல வியுற்பன்னங்களையும் தரும். இவ், வத் வச் எனும் உருவங்களோடு கிரேக்கத்தில் உதெயோ (hudeo) லத்தீனில் வொக்ஸ், வோக்கறெ (vox, vocare), பழஞ்சர்மனியத்தில் உவஹென் (wah-an) ஆதிய சொற்கள் இனங்கொண்டவை.

இதுகாறும் எடுத்தோதிய சொற் பிதிர்வழியைப் பின்வருமாறு கோட்டிக்காட்டலாம்.

**உத்**—ud, உதி, உதை, உந்து
|
ஊது, va, (vata)
|
ஊதை, vata, vayu, ventus, wind, wejas, கூதை, ஓதை, ஓசை, கோதை, ஊத்து, ஊத்தம், கூதல், கூதிர்
|
ஓது—தல், vad, vada, hudeo, uc, ukta, vac, vacana, vox, wahan, ஓத்து, ஓதி, hota.

ஈண்டுகாட்டிய ஒரு தமிழ் அடியினின்று ஆரியச் சொற்கள் பல கிளைத்து வருதல்போல பல தமிழ் அடிகளினின்றும் பல நூறு ஆரியச்சொற்கள் பிறந்தனவாகின்றன. ஆயின் தமிழிற் கிளைச்சொற்கள் பிறக்கும் விதிகளும் ஆரிய மொழிகளிற் கிளைச்சொற்கள் பிறக்கும் விதிகளும் வேறுவேறாயிருத்தலால், நுண்ணறிவாற் தேடும்போதன்றி இப்பிறப்பொற்றுமை வெளிப்படாது. இதற்கு உபகாரமாகவே "தமிழ்ச் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி" இயற்றப்பட்டுவருகிறது. தமிழகத்தாரது உதவி எனக்குக் கிடைக்குமாயின், இவ்வரிய நூல் விரைவில் பிரசுரமாகித் திராவிட மொழிகளுக்கும் ஆரிய மொழிகளுக்கும் தமிழடிகள் திறவுகோலாய் விளங்குந் தன்மையை உள்ளங்கையின் நெல்லிக்கனிபோலத் தெளிவிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி கவியாகிறான்

—'புகழேந்தி'

கம்பருடைய மகன் அம்பிகாபதி. கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடுமல்லவா? அம்பிகாபதியின் புலமையைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அம்பிகாபதியும் சோழ மகாராஜாவின் புத்திரியும் பரஸ்பரங் காதலுடையவர்களாயிருந்தார்கள். அதனை அரசன் ஒருவாறு அறிந்துவிட்டான். மந்திராலோசனைகூடச் செய்யவில்லை. அம்பிகாபதியைச் சிரச்சேதஞ் செய்யும்படி தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதனைக் கம்பர் அறிந்தார். அவருக்கு மனம் சகிக்கவில்லை. அரசனை எவ்வளவுக்குப் பணிந்து கேட்கக் கூடுமோ, அவ்வளவுக்கெல்லாம் பணிந்து கேட்டார். மன்னிப்புக் கிடைக்கவில்லை. கவித்துவ சக்தியத்தனையும் பிரயோகிக்கப்பட்டது. கம்பர் தாம் கவிச்சக்கரவர்த்தி என்பதனையும் மறந்துபோனார். புத்திரசோபம் யாரைத்தான் விட்டது.

அரசனுக்குக் கம்பருடைய முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. அவனுடைய மனம் ஒரு சிறிது நெகிழ்ந்தது. ஆயினும் சிந்திக்கத் தொடங்கினான். ஒருவாறு மனம் ஒரு முடிவுக்கு வந்தது. அம்பிகாபதி பெண்பால் கலவாமல் நூறு பாட்டுப் பாடக் கூடுமானால் அவனுடைய மரண தண்டனையை விலக்கிவிடுவதேயல்லாமல், தன்னுடைய புத்திரியைக் கல்யாணஞ்செய்தும் வைப்பதாகப் பெருமூச்சோடு சொன்னான்.

கம்பர் கவிச்சக்கரவர்த்தியாய்விட்டார். அவருடைய ஆநந்தக் கூத்துக்கு அளவில்லை. அம்பிகாபதிக்கு அதற்குமேலே. இந்தச் சம்பவங்களையெல்லாம் திரை மறைவிலே கேட்டுக்கொண்டிருந்த அரசிளங் குமரிக்கு ஆநந்தம் அணைகடந்து விட்டது.

அம்பிகாபதி பாடுகிறான். அவளுடையகாதல் திரையைப்பீறிப் பாய்கிறது. அவள் விரல்மடித்தெண்ணுகிறாள். அவன் மிகு வேகமாகப் பாடுகிறான். அவள் அதில் வேகமாக எண்ணுகிறாள். அந்தோ விதியே! ஒரு எண் தவறிவிட்டது. காதலுக்குக் கண்மாத்திரமா கணக்குமில்லை. அவள் அவனை முந்திவிட்டாள். அவன் தொண்ணூற்றொன்பது பாட்டுப் பாடி முடித்தான். அவள் நூறு என்று எண்ணி முடித்தாள். அவளுக்கு அப்பால் எண்ணுகிற வேலை இல்லை. அவளைக் காதல் விழுங்கிவிட்டது. அவள் தன்னை அறியாமலே எழுந்து சற்றே தலையை நிமிர்த்தி அவனை எட்டிப்பார்த்தாள்.

அவளுடைய முகம், கவிதாலோகத்தை ஊடுருவிச் செல்லுகின்ற அவனுடைய கெம்பீரமான பார்வைக்கெதிர்ப்பட்டது. நடந்த பழைய சம்பவங்களை எப்படி ஞாபகஞ்செய்ய முடியும்? அவனுடைய நிலை தன்னை மறந்த நிலை. யோகநிலை. கவிதாயோகம். அவளுடைய முகச் சாயல், அவனுடைய இருதயமாகிய தூய பளிங்கில் அப்படியே படிந்தது. அது, அவன் வாயினின்றும் 'சற்றே' என்று தொடங்கி, 'தலையலங்காரம் புறப்பட்டதே' என்று முடிந்த ஒரு பாட்டாகப் பிரதிவிம்பித்தது. இதுதான் நூறும்பாட்டு.

கத்திமுனையிலும், கம்பருடைய மகன் கம்பருடைய மகனாகவேயிருந்தான்.

ஒருநாள் நல்ல மத்தியானம் கும்பகோணத்திலே ஒரு சத்திரத்திலே காளமேகப்புலவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அவருக்கெதிரில், ஒரு முன் குடுமி வைத்த பிராமணன்—சோழதேசத்தவன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவன் சாப்பிட்டுக்கொண்டிருக்கவில்லை— சாதத்தோடு யுத்தஞ்செய்துகொண்டிருந்தான். பரிசாரகர்கள் சாதம் படைத்தபடியே நின்றார்கள். அவன் சாப்பிட்டபடியே இருந்தான். அந்த மகாயுத்தத்தில் அவனுடைய முன் குடுமி அவிழ்ந்து, சாதத்தில் வீழ்ந்து மூடிக்கொண்டது. அவன் இடது கையால் குலைந்த குடுமியை உதறினபடியே யுத்தத்தையும் நடாத்தினான். எதிரில் சாப்பிட்டுக்கொண்டிருந்த காளமேகப் புலவரின் சாதத்தில் எச்சிற் சாதந் தாராளமாகத் தெறித்தது.

காளமேகம் இருண்டது. புலவர் உருத்திரமூர்த்தியின் அவதாரம் எடுத்தார்.

"சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா—திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே யுனையொருத்தி
போட்டாளே ............"

என்ற பாசுரம் பாய்ந்தது.

கடும்பசி வேளையில், கடுங்கோபநேரத்திலுங் காளமேகம் காளமேகமாகவேயிருந்தது.

“கம்பர் கதை சொல்லுதல் முதலிய விஷயத்திற் குற்றமில்லை. பாதாதிகேச வர்ணனை, நாட்டுவர்ணனை, கோபுரவர்ணனை, மதில்வர்ணனை, இவைகளல்லவா காவியங்களைச் சிறப்பிப்பன. இந்த விஷயங்களில் எங்களுக்கும் கம்பருக்குமென்ன வித்தியாசம்” என்று சோழமகாராஜாவின் சமஸ்தானப் புலவர்கள் கம்பரில்லாத ஒரு சமயத்திற் பேசிக்கொண்டார்கள். இதனையறிந்த சோழமகாராஜா புலவர்களனைவரையும் தத்தங் காவியங்களுடன் சமஸ்தானத்துக்கு வருமாறு ஒருநாள் கட்டளையிட்டார். அக்கட்டளைப்படி புலவர்களெல்லாரும் தாந்தாம்பாடிய காவியங்களுடன் வந்து சேர்ந்தார்கள். கம்பரும் வந்து சேர்ந்தார்.

சோழமகாராஜா புலவர்களை விளித்து, உங்கள் காவியங்களில் சிறந்த பகுதிகளை—காவியங்களைக் காவியங்களாக வைத்திருப்பனவற்றை இவையென்று வரையறுத்துச் சொல்லவேண்டுமென்று ஒரு கேள்வி கேட்டார். புலவர்களுக்குத் தலை கால் தெரியவில்லை. அளவில்லாத சந்தோஷம். விடை முன்னமே ஆயத்தமான வினா வருமானால் எவர்கள் எந்தப் பரீட்சைதான் எடுக்கமாட்டார்கள். இறுதியிலிருந்த—ஒரு காலத்தும் எழுந்து பேசியறியாத ஒரு புலவர் திடீரென்றெழுந்து ‘பாதாதிகேசவர்ணனை, அகழிவர்ணனை..................’ என்று ஒரு பெரிய ஆவலியை மூச்சுவிடாமற் படித்தார். சோழமகாராஜா கையையமைத்து அவரை இருத்திவிட்டு ‘புலவரவர்கள் கூறிய வர்ணனைகளுள் முதலிலுள்ள பாதாதிகேச வர்ணனையை எடுத்துக்கொள்ளுவோம்; அதில் உங்களுக்குக் கைவந்த அவயவங்களைப் பற்றிய வர்ணனைகளை, உங்கள் காவியங்களில் எடுத்துக் காட்டி வியாக்கியானஞ் செய்யுங்கள்’ என்று கட்டளையிட்டார்.

சோழமகாராஜா வாய் மூடமுன் ஒட்டக்கூத்தர் எழுந்தார். இப்படியான சந்தர்ப்பங்களிலேதான் ஒட்டக்கூத்தர் மகாப்புலவர். ‘தாம் பிந்தியிருந்தால் தாங் கருதியிருந்த அவயவ வர்ணனையை மற்றவர்கள் ஆளவுங் கூடும்’ என்ற சள்ளக்கருத்து ஏற்ற காலத்தில் ஒட்டக்கூத்தருக் குதபமானது. அவர் தமது காவியத்தில் பெண்களின் அவயவம் ஒன்றுக்கு முந்நூறு உபமானங் காட்டி வருணித்த வர்ணனையொன்றைப் படித்துக் காட்டி வியாக்கியானஞ் செய்தார். அப்பால் மற்றொரு புலவர் பல்லுக்குப் பதினாறு உபமானங் காட்டினர். வேறொருவர் மூக்குக்கு முப்பத்திரண்டு உபமானஞ் சொன்னார். இப்படியே புலவர்களெல்லாரும் மனனப் பிரசங்கஞ்செய்து முடித்த பிள்ளைகள்போல, தத்தம் வர்ணனைகளைப் படித்து வியாக்கியானஞ் செய்து முடித்துவிட்டு அப்பால் ஒன்றும் பேசாமல் அமைதியாகவிருந்தார்கள். புலவர்களின் வர்ணனைகளைப்பற்றி—வியாக்கியானங்களைப்பற்றி விரித்துக்காட்ட “ஈழகேசரி”க்கு நேரம் போதாது. இது வாரமடலன்று. வருடமடல். இது நிற்க, இந்தச் சமாஜத்தைப்பற்றி ஔவையாருக்கும் புகழேந்திக்கும் ஒன்றுமே தெரியாது. அவர்கள் மிகவும் பிந்தித்தான் வந்தார்கள். அப்பொழுதுதான் கம்பர் எழுந்தார். அதற்கிடையில் ‘ஒரு வார்த்தை’ என்று சொல்லிக்கொண்டு ஒட்டக்கூத்தர் குறுக்கிட்டார் சபையிலே ஒரு பெரிய அமைதி உண்டானது.

‘பெண்களின் அவயவ வர்ணனைகளைப்பற்றிக் கேட்டுக் கேட்டுச் சபையிலுள்ளவர்கள் அலுத்துப்போனார்கள். பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பார்கள். கம்பர் கவிச்சக்கரவர்த்தியாயிருக்கின்றாரே. அவர் ஆண்பாலாரின் அவயவத்தை வர்ணித்திருந்தால் அதைப் படித்து வியாக்கியானஞ் செய்வதே நன்று. பெண்பாலாரின் அவயவ வர்ணனை—அவர்களுள்ளுஞ் சீதாபிராட்டியின் அவயவ வர்ணனை வேண்டவேவேண்டாம். அதுதான் எல்லாரு மறிந்தது. ஆண்பாலாருள்ளும் ஸ்ரீராமனுடைய முகம், கை, கால், தோள் இவற்றைப் பற்றிய வர்ணனையானால் வேணும், வேணும். அவற்றைப்பற்றிய வர்ணனைகளை ஆழ்வார்களின் பாசுரங்களிற் கேட்டுக் கேட்டுக் காதடைத்துவிட்டது. ஸ்ரீராமனுடைய மார்பு, முழந்தாட்பொருத்து, மூக்குத்துவாரம், இரைக்குழல், சிறுகுடல் இவற்றைப்பற்றிய வர்ணனையானாலாகட்டும் இனி வருங்காலத்துக் கேற்றது. சுகாதார சம்பந்தமானது’ என்று தமது சிற்றுரையை ஒருவாறு முடித்தார். சபையிற் பெருங் கூச்சல். ஆம்! ஆம்!! என்று கையுயர்த்தி அநுவதித்தார்கள் புலவர்கள். சோழமகாராஜா ‘கொண்ட கோலத்தை...........’ என்ற பழமொழியை மனசில் நினைத்துக்கொண்டு மௌனஞ் சாதித்தார்.

புலவர்களின் ஆரவார மடங்கின பின்பு கம்பர் புன்சிரிப்போடு சபையிலுள்ளவர்களை நோக்கி ‘ஒட்டக்கூத்தர் அவர்கள் கூறியது முற்றிலுஞ் சரியே. அவர்கள் எடுத்துக் காட்டிய விஷயங்களுள், முதலிலுள்ள ஸ்ரீராமனுடைய மார்பைப்பற்றிய வர்ணனையைப் படித்து வியாக்கியானஞ் செய்கின்றேன்’ என்று சொல்லி இராமாயணத்திலே உருக்காட்டு படலத்தில் சீதாபிராட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்கு அநுமான் கூறியதாயுள்ள ஸ்ரீராமனுடைய மார்பைப்பற்றிய வர்ணனைப் பாட்டைப் படிக்க வாரம்பித்தார்.

“பொருவரு மரகதப் பொலங்கொண் மால்வரை
வெருவுற விரிந்துயர் விலங்க லாகத்தைப்
பிரிவற கோற்றன ளென்னிற் பின்னையத்”

என்ற மூன்றடியையும் படித்துவிட்டார். நான்காமடி தொடங்குமுன், சபையிலே பெரிய கூக்குரல் உண்டாய்விட்டது. கம்பர் ஒருவித சலனமுமின்றி நிறைகுடம் போல அமைதியாக நின்றார்.

இதுதானே பழைய பல்லவி என்றார் ஒரு புலவர். ‘திருவுறை மார்பினைச் செப்பவேண்டுமோ’ என்று நான்கா மடியையும் முடித்துவிடுகிறதுதானே என்றார் மற்றொரு புலவர்.

“பாவமோர் கோடி புரியினு மொன்றும்
பரிவினிற் றருமமொன் றியற்றி
னேவரும் வியப்பக் கோடியாய் மல்கு
மின்னதோர் பெற்றியை நாடித்
தேவர்கண் முனிவர் தம்பதம் வெறுத்துச்
சிவனருச் சனைபுரிந் தங்கண்
மேவினர் தவஞ்செய் திருத்தலாற் காஞ்சி
வியனகர்ப் பெருமையார் விரிப்பார்.”

என்ற பாட்டைப் படித்து — இறுதியடியின் இறுதிப் பாகத்தை இரண்டாம் முறையும் படித்து இப்படித்தானே கந்தபுராணத்திற் கச்சியப்பரும் பாடியிருக்கிறார் என்றார் வேறொரு ஆராய்ச்சிப் புலவர். என்ன புதுக்காரியஞ் செய்துபோட்டார் — நாலுபத்து உபமானம் சொல்லியிருக்கிறாரா என்றார் உவமைப்புலவர். ஆடாமல் அசையாமல் நல்லபிள்ளைக்கிருந்தார் ஒட்டக்கூத்தப் புலவர்.

கம்பர், புலவர்க ளாரவாரஞ் செய்தபடியாலோ, வேறெக் காரணத்தினாலோ நான்காமடியையே படித்துக்காட்டாமல் முதன் மூன்றடிக்கும் வியாக்கியானந் தொடங்கினார். உரையாசிரியர் ஒருவரும் ஏதோ ஒரு விதமாக அந்தச் சபையில் நுழைந்துவிட்டார். அவர் “வேண்டாம்! உரை வேண்டாம்! வெளிப்படை! ‘ஒப்பில்லாத அழகிய பெரிய மரகதமலை யஞ்சும்படி யகன் றுயர்ந்ததும், மலைபோல அசைவில்லாததுமான ஸ்ரீராமனுடைய மார்பைப் பிரியாமல் எப்பொழுதும் வாழும்படி (இலக்குமி) தவஞ்செய்தாளேயானால்’ என்பதுதானே உரை; ‘பின்னையத்’ என்பதை அடுத்த அடியோடு சேர்த்துக்கொள்ளுவோம்” என்றார். சபையிலுள்ளவர்களும் ‘ஆம்! ஆம்! உரை வெளிப்படை; புதுமையொன்றுமில்லை. அடுத்த அடி வரட்டும்’ என்றார்கள்.

கம்பர் சிறிதுநேரம் மௌனமாக அவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றார். அவர்கள் தங்கள் கண்களாகிய பாணங்களை அவருடைய வாய்க்குட் செலுத்தினார்கள். அவர் மிக ஆறுதலாக, ‘திருவினிற் றிருவளார் யாவர் தெய்வமே’ என்ற நான்காமடியை வெளியிட்டார்.

சோழமகாராஜா சிங்காசனத்தினின்றும் குதித்துக் கம்பரைக் கட்டித்தழுவி முத்தமிட்டார். ஔவைக் கிழவி இருந்தவிருக்கையிற் குடுகுடுத்தாள். புகழேந்திப்புலவர் அந்த அடிக்குத் தாம் வியாக்கியானஞ்செய்வதாக எழுந்துநின்றார். ஒட்டக்கூத்தர் தலையைத் தூங்கப் போட்டுவிட்டார். மற்றைப் புலவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். அங்கேயிருந்த உரையாசிரியர் கண்டறியாததைக் கண்டு களிக்கூத்தாடினார். சோழமகாராஜாவின் வேண்டுகோளின்படி கம்பர் சிங்காசனத்தில் எழுந்தருளினார். எல்லாருங் கம்பரையும் புகழேந்தியையும் மாறிமாறிப் பார்த்தார்கள்.

“‘ஸ்ரீராமனுடைய மார்பைப் பிரியாமல் இருக்குமாறு இலக்குமி தவஞ்செய்தாளேயானால்’ என்ற பொருளைச் சாதாரண கவிகள் எடுத்துக்கொண்டால், இச்சபையிலுள்ள ஒரு புலவர் ‘திருவுறை மார்பினைச் செப்பவேண்டுமோ’ என்று நான்காமடியை முடித்துக் காட்டியவாறுபோல, ‘ஸ்ரீராமனுடைய மார்பின் பெருமையைச் சொல்லவும்வேண்டுமா’ என்றுதான் பின்னடியிற் பொருளை முடிப்பார்கள். கம்பர் சாதாரண கவிகளின் வருக்கத்தைச் சேராதவர். இப்படியான சந்தர்ப்பங்களிலேதான், கம்பரையும் சாதாரண கவிகளையும் பிரித்தறிகின்றோம்.

கம்பர் முதலில் எடுத்துக்கொண்ட பொருளை நோக்கினால், சாதாரணகவிகள் செல்லுகிற வழியிற் செல்லுவதாகவே தோன்றுகின்றது. ஆனால், இங்கே காட்டிய ‘பொருவரும்’ என்ற செய்யுளின் நான்காமடியின் பொருளை நோக்கினால், அவர் தம்மைப் பின்றொடர்ந்து வந்த கவிகளையெல்லாம் ஏமாற்றிவிட்டு, முன் ஒருகாலும் ஒருவரும் போயறியாத புதுவழியிற் றிரும்பி, ‘தாம் புலவர்’ என்ற பிறவிக்குணத்தைக் காட்டிச் செல்லுவது நன்கு தெரிகின்றது.

சாதாரண கவிகள் எல்லாம் ‘மார்பின் பெருமையைத்தான் நான்காமடியிற் சொல்லுவார் சொல்லுவார்’ என்று தொடர்ந்தார்கள். கம்பருக்கோ சொந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணம் உண்டாய்விட்டது. 'மகாலக்குமி ஸ்ரீராமனுடைய மார்பைப் பிரியாமலிருக்குமாறு தவஞ்செய்தால்' மகாலக்குமிக்குப் பெருமையா? ஸ்ரீராமனுடைய மார்புக்குப் பெருமையா? என்ற வினுக்கள் கம்பருடைய இருதயத்தில் எழுந்து போராடின.

ஸ்ரீராமனுடைய மார்புக்குப் பெருமையென்று சொல்லுவதுதான் அந்தப் பாழான பழம்வழி. கழுதை மயிரைப் பிடுங்கிக் காதிலே வைத்தவர்கள் சென்ற வழி.

'மகாலக்குமிக்குப் பெருமை' என்று சொல்வதுதான் கவிச்சக்கரவர்த்திகள் செல்லும் மார்க்கம். கம்பர் கண்ட நெறி.

மகாலக்குமி ஸ்ரீராமனுடைய 'ஆகத்தைப் பிரிவற நோற்றனள்' என்னில் 'அவள் மகா பாக்கியசாலிதான். அவளினும்பார்க்கப் பாக்கியசாலிகள் இருக்க முடியாது' என்ற பொருள்போதர 'அத்திருவினில் திருவுளார் யாவர்' என்று கூறப்பட்டது. மகாலக்குமிக்கு இதைவிட மகா பாக்கியம் முன் வந்ததுமில்லை, இனி வரப்போவதுமில்லையாதலின் 'பின்னை' என்ற அடை கொடுக்கப்பட்டது. 'தெய்வமே' என்பது விளிப்பெயர் அநுமான் சீதாபிராட்டியை விளித்தது.

எடுத்துக்கொண்ட பொருள் ஸ்ரீராமனுடைய மார்பின் பெருமை—முடித்துக்கொண்ட பொருள் மகாலக்குமியின் பெருமை. இங்ஙனமாக முன்னொடு பின் முரணிற்கும் பிறவெனின், அறியாது கடாயினுப்; எடுத்துக்கொண்ட பொருளில் முடிக்காது மற்றொரு பொருளில் முடித்தமையால், எடுத்துக்கொண்ட பொருளுக்கு வரக்கடவ பெருமைகளினும், அநந்தமடங்கு பெருமைகளுளவாமென்பது. என்னை? ஸ்ரீராமனுடைய மார்பை விரும்பியதனுல், மகாலக்குமிக்குப் பெருமை வருமாயின், அவனுடைய மார்பின் பெருமை அளவிடலாகாதென்பது'' என்று இங்ஙனம் வியாக்கியானஞ்செய்தார் புகழேந்திப் புலவர்

இறுதியில், ஒளவையார் எழுந்து, 'புகழேந்திப் புலவர் அவர்கள் நடுவுநிலை பிறழாதவர்கள்; அன்றி இச்சமாசத்திலுந் தொடர்பு வைத்திருக்கின்றார்கள். ஆதலால், அவர்கள் தாமே, இங்கே இப்பொழுது நடந்த சம்பவங்களையும் இவற்றோடொத்த சம்பவங்களிருந்தால் அவற்றையும் ஒருங்கு சேர்த்து எழுதி யாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற ''ஈழகேசரி''யின் புதுவருடயுவமடலில் வெளியிடவேண்டுமென்று, இம்மகாசமாசங் கேட்டுக்கொள்ளுகின்றது' என்று ஒரு பிரேரணை கொண்டுவந்தார். அது, சோழமகாராஜாவால் அநுவதிக்கப்பட்டது. அதனுல், சர்வாங்கீகாரமாயிற்று.

தம் புலமையைக் காட்டுதற்கேலாத—பழம் புலவர்களெல்லாம் எடுத்தாண்ட—பலரும் பலகாலும் பயின்ற—பழைய விஷயத்திலுங்கூடக் கம்பர் கம்பராகவேயிருந்தார்.

எந்த இடத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் கவிகள் கவிகளாகவே யிருக்கின்றார்கள்.

## ஈழநாடும் சோழநாடும்

சிந்து

பைப்ப ணிப்பகு வாய்ப்பட்ட திங்களிற்
　　பாயு மோதக் கடற்கரை தோறு
மிப்பி வாயிலின் முத்த மிலங்கிய
　　வீழ மண்டல நாடெங்க ளூடே.

மாரி மேகந் தவழ்மலைச் சாரலின்
　　மந்தி வைத்த மணிப்பத்ம ராகஞ்
சூரி யோதயம் போல விளங்கிய
　　சோழ மண்டல நாடெங்க ளூடே.

பாப்பு மேகலை மங்கையர் போகம்
　　பயில வேண்டி யிணங்கார் முகத்தை
யிரப்ப தேயன்றி வேறிரப் பில்லாத
　　வீழ மண்டல நாடெங்க ளூடே.

வாம மேகலைப் பாவையர் கோவை
　　வதனம் போல விளங்கிய விண்ணிற்
சோமன் மேலன்றி யோர்மறு வில்லாத
　　சோழ மண்டல நாடெங்க ளூடே.

—சின்னத்தம்பிப்புலவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம்.

தெல்லிப்பழை
திரு. வ. குமாரசுவாமிப்பிள்ளை, B. A. அவர்கள்

ஈழ நாட்டிலுள்ள சிவஸ்தலங்களுள் பாடல்பெற்றவை திரிகோணமலை, திருக்கேதீச்சரம் என்னும் இரண்டுமாம். இவை இரண்டுமே கதிரமலைப் பள்ளியும் மாவலிகங்கைப் பள்ளியால் இலங்கை நாட்டு விசேடமுள்ளனவாகக் காட்டப்பட்டன.

இராகுவுங் கேதுவும் நவங்கிரகங்களுள் வைத்து எண்ணப்படுவன. "மதியுணுமி ராகு நாமம் மற்றது தமங் கறுப்பாம் — அதிகமாங் கேதுச் செம்மை சிகி கதிர்ப் பகையுமாமே" எனச் சூடாமணி நிகண்டாசிரியர் கூறியபடி, சூரிய சந்திர கிரகணங்கள் நிகழ்தற்குக் காரணம் சூரியனைச் செம்பாம்பாகிய கேது விழுங்குவதும் சந்திரனைக் கரும்பாம்பாகிய இராகு விழுங்குவதுமேயாம் என்று புராண இதிகாசங்களில் வான சாஸ்திர கிரகண சம்பவ உண்மைகளைப் பாமரர்களும் எளிதில் விளங்குமாறு பாம்பின் தலையும் வாலுமெனப் பூமியின் சாயையை உருவகித்துக் கூறியவாறும்.

## (1) பாலாவி மண்டலம்

இனிக் கேதீச்சரம் இலங்கையிலுள்ள மிகப் புராதன நகர் என்பது கி. பி. முதலாம் நூற்றாண்டினரான தொலமி (Ptolemy), பிளினி (Pliny) என்னும் ரோம சாஸ்திர நிபுணர்கள் இந்நகரத்தைப் பாலாவி மண்டல நகரம் (Palavi Mundi Oppidum) எனக் கூறிப்போந்தவாற்றால் விளங்கும். "பாலாவியின் கரைமேல்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது பதிகச் செய்யுள் ஒவ்வொன்றிலும் கூறியிருத்தலானும், "மாதோட்டத்தத்தர் மன்னுபாலாவியின் கரையிற் கேதீச்சரம்" எனத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் தமது பதிகத்தில் ஓரிடத்திற் கூறியிருத்தலானும், ரோம நிபுணர் குறித்தது இக்கேதீச்சர நகரையே என்பது போதரும்.

பாலாசி மண்ட(லம்) (Palasi mundi) என்பதில் உள்ள "சி" (si) என்ற ஒரு அட்சரத்தை "வி" (v) என மாற்றிப் பாலாவிமண்டலம் எனச் சரியான இடத்தை யூகித்து அறியமாட்டாதவராய்ப் பச்சிம நாட்டு மேதாவிகள் "பாலிசீ மன்தா" என்னும் சம்ஸ்கிருத பதமாகக்கொண்டு "பாலிநூல்கள் சேகரித்து வைத்த நகரம்" என்றும், "பரசமுத்திர" என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு எனக்கொண்டு "ஆழங் குறைந்த சமுத்திரக்கரையில் உள்ள நகர்" எனப் பொருள்கொண்டும், தமிழ்நாட்டு மேதாவியர் சிலர் "பலாசிமண்டலம்" எனக் கொண்டு இத்தொடர் பழைய "சிஹல (சிங்கள) மண்டலம்" என்னும் தமிழ்ச் சொற்றொடரின் சிதைவாகும் எனக்கொண்டும் பலரும் பலபடக் கூறி இடர்ப்பட்டனர்.

இனி, "பாலாவியின் கரைமேல்" என்ற தொடரைப் பதிகச் செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிரயோகித்ததுபோல், "மாதோட்ட நன்னகர்" என்ற தொடரைச் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது பதிகச் செய்யுள்தோறும் பிரயோகித்திருப்பது காணலாம். மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரம் என்பதே தற்கால வழக்கமாகும்

## (2) காந்தக் கோட்டை

"மாந்தை" என்பது மாதோட்டத்தின் சுருங்கிய பெயர் என்பர். இம்மாதோட்டப் பிரதேசத்தில் விசுவகர்மாவாற் செய்யப்பட்ட காந்தக்கோட்டை அல்லது காந்தமலை என்னும் பெயருடைய இரும்பாலாகிய கோட்டையொன்று இருந்தது எனப் பழைய நூல்களால் தெரியவருகிறது. வியாபார நோக்கமாகவோ அன்றித் தேச இயற்கையறிவு சமய அறிவு விருத்தி நோக்கமாகவோ கடற்பிரயாணஞ் செய்த யாத்திரிகர்கள் சொல்லுகிறபடிக்கும், இந்தக் காந்தக்கோட்டையிலுள்ளார் அக்கோட்டையின் அருகாமையிற் செல்லும் கப்பல்களை ஏதோ ஒரு சூழ்ச்சியால் கரைக்குக் கிட்டுமானமாக வரச்செய்து கப்பலிலுள்ள பொருட்களைக் கொள்ளையடித்து யாத்திரிகரையும் தொந்தரவுசெய்து அனுப்புவது வழக்கமென்று அறியக்கிடக்கின்றது.

பஞ்ச கம்மாளராற் பெரிதும் போற்றப்படும் நூல்களில் ஒன்றாகி விளங்குவதும் யாழ்ப்பாணத்துப் புலவருள் ஒருவரான இராமசுந்தரம் என்பவரால் இயற்றப்பட்டதுமான **விசுவகர்ம நாடகத்தில்,**

> "செங்கமல மாலையணி தேவனே! மாநதை நகர்ப்
> புங்கவனே! **காந்தமலைப்** பூரணகெம்பீர மன்னு!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விசுவகர்மா துதிக்கப்படுதலாலும், "காந்தமலைக் கோட்டை மேவிய காவன் மன்னவன் புகழ் கூறவே" என ஷை நூலிற் பிறிதோரிடத்திற் சொல்லப்படுவதாலும், இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முன் பின்னாகச் சிதம்பரதாண்டவ மதுரகவிராயர் என்னும் தென்னிந்திய தமிழ்ப்புலவர் ஒருவராற் செய்யப்பட்ட "**மாந்தைப்பள்ளு**" என்ற நூலில், "காந்தமுறுந் தடமதிலும் கமழுமலர்ப் பொழிலுமுற்ற மாந்தை நகர்" என்று கூறப்படுதலாலும், இற்றைக்கு இருநூறு வருடங்கட்குமுன், தென்னிந்திய தமிழ்ப்புலவராகிய சிதம்பர கவிராயரால் இயற்றப்பட்ட "**விசுவ புராணம்**" என்னும் நூலில் "பஞ்சகிருத்திய காண்ட"த்தில்,

"உத்தர திக்கின்மிக்க ஊசிக்காந் தத்தினாலே
சுற்றிலு மகல நாலைந் தோசனை தூரமுள்ள
முத்திரை மிகுந்த கோட்டை சிருட்டித்தார் முத்தினத்தில்."

என்று கூறப்படுதலாலும், காந்தக்கோட்டை மாதோட்டம் அல்லது மாந்தைப் பிரதேசத்திலுள்ளது என்பதும், அது உண்டாயவாறும் பிறவும் கூறப்பட்டிருத்தல் காணலாகும்.

இனி, இக்காந்தக் கோட்டையிலுள்ளார் கப்பல்களையும் அவற்றிலுள்ள நிதியங்களையும் சரக்குகளையும் கேடு செய்து கொள்ளையடித்தலை,

"நன்னகர் **மாந்தை** முற்றத் தொன்னார்
பணிதிறை கொணர்ந்த பாடுசெய் நன்கலம்
..........................................
நிலந்தினத் துறந்த நிதியத் தன்ன."

என்னும் **மாமூலனார் அகப்பாட்டா**னும் அறியலாகும்.

**ஹியூயேன்ஸாங் (Hiuen Tsang)** என்னும் சீனதேசக் கலைவினோதர் காந்தக் கோட்டையிலுள்ள பெண்களே இவ்வாறு கப்பல்களைத் துறைமுகத்துக்கு வரச் செய்து மாலுமி முதலியோரை அழைத்துச் சென்று ஆடல் பாடல் விருந்துகளாற் பொழுதுபோக்க ஆடவர்களாகிய இராட்சதர்கள் கப்பலிற் போய்க் கொள்ளையடித்துக்கொள்வார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம் வர்த்தகரும் இவ்விஷயம் அறிந்தவர்களாதலாலே காந்தக்கோட்டை வைபவம் "அரேபிய இராத்திரி காலக்ஷேபம்" **(Arabian Night's Entertainment)** என்னும் அரபிப் பாஷை நூலிலும் சொல்லப்படுகிறது.

"**பேரிப்பிளஸ்**" என்னும் கி. பி. 1-ம் நூற்றாண்டுச் சரிதையாளன் காந்தக்கோட்டையைச் "சோப்பட்டம்" **(Sopatama)** என்பர். "சோப்பட்டினம்" என்பது மதில் அல்லது எயில் விசேஷம் பெற்று அரணாக்கப்பட்ட கோட்டையையுடைய பட்டினம் எனப் பொருள்பட்டுக் காந்த மதிலரண்களை யுடையதென இம்மாந்தை நகர்க்கோட்டையையே குறிப்பிடும். இது இலங்கையில் உள்ளதென்பது "சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த சேவகன்" என இராமாவதார விஷ்ணுவைச் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையிற் பாவுதலாலும் அறியலாம்.

## (3) திரிபுரங்கள்

இலங்கையில் வசித்த தானவர், அசுரர், இராக்கதர் முதலிய சாதியார் இவ்வித கோட்டைகளும் மதில் சூழ்ந்த அரண்களும் உடையராய் இருந்தார்களென்பது பண்டைப்புராண வரலாறுகளாலும் தமிழ்நூற் சரிதக் குறிப்புகளாலும் அறியலாம். திரிபுரம் எரியத் தேவர் வேண்டிய காலத்துச் சிவபிரான் அழற்கண்ணால் அவ்வெயில் மூன்றையும் ஒருங்கே அட்டு நீறாக்கினர். அதன்பின் அவ்விடத்து எழுந்த அரணைப்போலும் இராமபிரான் சீதாபிராட்டியாரைச் சிறைமீட்க இலங்கைக்குட் புகுந்த காலத்துத் தவிடுபொடியாக்கினர். அத்துடன் மாயம் இழைக்குங் காந்தக் கோட்டைகள் நின்றுபோகவில்லை. இதன் பின்னரும் பூர்விக காலச் சோழமன்னன் ஒருவன் இலங்கைக் கரையிலுள்ள தூங்கெயிலொன்றை அழித்ததனாலே "தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்" எனத் தமிழ்ச்சங்க இலக்கியங்களிலே புகழப்படுகிறான். **சிலப்பதிகாரம்** வாழ்த்துக் காதையில், "தூங்கெயில் **மூன்றெறிந்த** சோழன் காண் அம்மானை" எனக் கூறப்படுதலினாலே, இக்கோட்டைகள் பண்டைக்காலத்தில் அழிக்கப்பட்டனவே மீட்டும் மீட்டும் முன்போல மூன்றாக இயற்றப்பட்டுவந்தன என்பது தெரிகிறது.

இம்மூன்று கோட்டைகளும் மூன்று வேறுவேறான சாதியார்களின் கோட்டைகளாகவும் இருக்கலாம். விசுவகர்மாவையும் அவரிடத்தில் தோன்றியவர்களாகக் கருதப்படும் பஞ்ச கம்மாளரையும் புகழ்வதற்கு எழுந்த **மாந்தைப் பள்ளில்**,

(1) "சூரபன் மன்மனைவி பதுமகோ மளைதந்தை
சுரர்புனை வற்பணிந்து கூவாய்குயிலே."

எனப் பதுமகோமளையின் தந்தையாகிய தேவகம்மியனும்,

(2) "இருபது கையுடையான் றனக்குமண் டோதரியை
ஈந்தருள் மயனார் பண்ணைப் பள்ளியாண்டே."

என இராவணன் மனைவி மண்டோதரியின் பிதாவாகிய மயனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) "சித்திர ரேகையெனுந்தனதன் மகிழ்தேவியே
தெய்வகம்மி யன்பெண்ணென்றே கூவாய்குயிலே"

எனக் குபேரன் மனைவி சித்திரரேகையின் தந்தையும் ஆகிய மூவர் குறிக்கப்படுகின்றனர். இதனாலே நாகசாதியாராகக் கருதப்படும் கம்மாள வர்க்கத்தாருக்கும் அசுர இராக்கத இயக்க வகுப்பினர்க்கும் பெண்கொடுத்தல் கொள்ளலால் ஏற்பட்ட சம்பந்த உறவும் காந்தக்கோட்டை மாந்தை நகருரிமை அசுரர் இராக்கதர் இயக்கர் என்னும் மூவகையினர்க்கும் வந்தவாறும் தெரியவருகிறது. இலங்கை யாழ்ப்பாண இந்திய சரித்திரக்கடல்களில் ஆழ்ந்து நுண்பொருள் கொண்டு ஆராய்ச்சித் துறைபோகிய **திரு. C. இராசநாயக முதலியார்** இவ்விஷயத்தைத் தமது **"பூர்வீக யாழ்ப்பாணம்"** **(Ancient Jaffna)** என்னும் நூலில் நன்றாக ஆராய்ந்திருக்கிறார். அதிலிருந்தே மேற்கூறிய சில குறிப்புகள் இங்கு எடுத்தாளப்பட்டன. இனி விசுவகர்மாவின் தந்தையாகிய 'துவட்டா' என்பவன் பெயரால் திருக்கேதீச்சரப்பதி பண்டைக்காலத்தில் **துவட்டா நகரம்** என்னும் பெயர்பெற்று விளங்கியதெனத் தக்ஷிண கைலாய மான்மியம் முதலிய நூல்கள் கூறுவதும், மாதோட்டமே மாந்தை என்பதற்கும் இங்கே காந்தக் கோட்டைகள் இருந்தமைக்கும் போதிய சான்றாகும்.

### (4) மண்டோதரியுந் திருவாசகமும்

ஆனால் எனது ஆராய்ச்சி திருக்கேதீச்சரத்தின் பழமையையும் தேவாரப்பதிகம்பெற்ற சிறப்பையும், சைவசமயத்துக்கு இத்தலத்துடனுள்ள பண்டைத் தொடர்பையும் விளக்குவதற்கு எழுந்ததாதலாலே அவற்றை மாத்திரம் காட்டிமுடிப்பது தகுதியாகும். மேற்காட்டியபடி மாந்தை அல்லது மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்து நாகரோடு சம்பந்த உரிமை பூண்ட மூவகையினரும் சிவவழிபாடு உடையவராய்க் காணப்படுகிறார்கள். குபேரன் அரனது தோழனென அழைக்கப்படும் பெருவாழ்வு பெற்றவன். சூரபன்மனும் சிவனிடம் வரம்பெற்று ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்கள் ஆண்டு, ஈற்றில் சுப்பிரமணியப் பெருமானது ஊர்தியாகவும் கொடியாகவும் விளங்கும் பேறுபெற்றான். இராவணனும் அவன் மனைவி மண்டோதரியும் ஆகிய இருவரும் சிவன்மாட்டு ஆழ்ந்த பத்தியுடையவராய்ப் பஞ்சாட்சர செபஞ் செய்தவர்களாதலினாலே, திருஞான சம்பந்த சுவாமிகளும்,

"வண்டமரோதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி யுய்ந்தன"

என மனைவியாகிய மண்டோதரியின் இயல்பாகவே கசிந்துருகும் சிவபக்தியும், வழிபாடாற்றும் முறைகளும் அவள் பர்த்தாவாகிய இராவணன் இடர்வந்த காலத்துக் கடைப்பிடித்த பத்தி வழிபாட்டினுஞ் சிறந்தனவெனக் காட்டுவான் வேண்டி மண்டோதரியை முற்கூறி, அவள் நாயகனைப் பின்னர்க் கூறினார். அதுவுமன்றி இப்புராதன சிவஸ்தலமாகிய திருக்கேதீச்சரத்தில் மண்டோதரியின் பொருட்டு நிகழ்த்தப்பட்ட திருவிளையாடலொன்று இங்குக் குறிப்பிடத்தக்கது. இவள் தந்தையாகிய மயன் இருப்பிடம் மாந்தை அல்லது மாதோட்ட நகர் என்பது மேலே காட்டப்பட்டது. இவளையுங் கொண்டு இந்நகர்க்கு அணித்தான காட்டிற் செல்லும்போது மயன் இராவணனைச் சந்தித்து அவனை வரனாக்கி மாந்தை சென்று இராவணனுக்கும் மண்டோதரிக்கும் மணம் முடித்தமை உத்தர இராமாயணத்திற் கூறப்பட்டுள்ளது. மண்டோதரி கன்னிப் பிராயத்திற்றானே சிவபத்தி முதிர்ந்தவளாய்ச் சிவபிரானைத் தியானித்து நோற்றாளாக, சிவபிரான் பிரசன்னராய விடத்துத் தான் விரும்பியபோதெல்லாம் அவர் தன் முன் வந்து தனக்குக் காட்சி தரல் வேண்டும் என்ற வரத்தை இவள் பெற்றுக்கொண்டனள் என்பர். இவள் மணம் முடித்த பின் ஒரு நாள் தனது பள்ளியறையில் சயனத்தில் இருந்துகொண்டே சிவதரிசனம் பெற விரும்பி மனதில் தியானித்தாளாகக் கருணையங்கடலாகிய கடவுளும் மண்டோதரியின் பள்ளியறையில் தாமும் ஒரு பள்ளிக்குப்பாயம் அணிந்தவராய்க் காட்சிகொடுத்தனர். மண்டோதரி அவரைக் கண்டவுடன் அளவிறந்த ஆனந்த மேலீட்டினால் தான் இருக்குமிடம் தன் நாயகன் பள்ளியறையின் பாங்கரிலுள்ளது என்பதையும், காலம் சயனத்துக்குரிய இராக்காலம் என்பதையும் மறந்து, பிரசன்னமாய சிவமூர்த்தத்துடன் வார்த்தையாடவும் உரத்த சத்தத்துடன் ஸ்தோத்திரிக்கவும் தொடங்கிக்கொண்டனள். இதனால் பாங்கரிலுள்ள பள்ளியறையிற் சயனித்திருந்த இலங்கேசனது நித்திரைக்குப் பங்கம் விளைய அவனும் மனைவியினறையில் ஏதோ ஆரவாரமாயிருக்கிறதேயென அதிசயித்து, மனைவியைக் கூவியழைத்து, என்ன ஆரவாரமென்று வினவிக்கொண்டு இவளறைக்கு வருவானாயினன் சிவபிரானும் பள்ளிக் குப்பாயந் தரித்த ஆடவன் உருவம் நீத்துக் குழந்தை யுருக்கொண்டு அங்கு வதிந்தனன். இராவணனும் மண்டோதரியின் சயன அறையில் வந்து, "இங்கு இக்குழந்தை கிடக்குங் காரணமென்ன? இவ்வறையில் ஆரவாரத்துக்கு இக் குழந்தை தான் காரணமோ?" என வினவினன். மண்டோதரியும் தனது சேடியொருத்தி மறுநாட் காலையில் வருவதாகச் சொல்லி இக்குழந்தையைத் தன்னிடம் அடைக்கலமாக விட்டுச் சென்றதாகக் கூற, இலங்கேசன் தன் பள்ளியறைக்கு மீண்டான். உடனே குழந்தையும் மாயமாக மறைந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகப்பிரான் தமது திருவாசகத்தில் மண்டோதரி கன்னியாயிருந்து நோற்று வரம்பெற்ற வரலாற்றை,

"ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரானை"

எனக் குயிற்பத்திலும், மண்டோதரி மனதிற் றியானித்த மாத்திரையில் சிவபிரான் அவளுக்குக் காட்சி கொடுத்ததை,

"...............பெருந்துறை யாதிஅந்நாள்
உந்துதிரைக் கடலைக் கடந்தன் றோங்குமதில் இலங்கையதனில்
பந்தணை மெல்விரலாட்கருளும் பரிசறிவார் எம்பிரானாவாரே"

எனத் திருவார்த்தையிலும், பள்ளிக் குப்பாயம்தரித்த ஆட்வனாகக் காட்சி கொடுத்தமையை,

"வெள்ளைக் கலிங்கத்தார் வெண்டிருமுண்டத்தார்
பள்ளிக் குப்பாயத்தர் அன்னே யென்னும்
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரிமேற் கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே யென்னும்"

என அன்னைப் பத்திலும், பிள்ளையாய்க் கிடந்தமையை,

"உங்கையிற் பிள்ளை உனக்கே யடைக்கலமென்றங்
கப்பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்."

எனத் திருவெம்பாவையிலும் குறிப்பிட்டுள்ளார் என்பர்.

மேலே காட்டிய திருவாக்கியங்களில் "ஆர்கலிசூழ் தென்னிலங்கை", "உந்து திரைக்கடலைக் கடந்து" என்னுந் தொடர்களாலும், மண்டோதரி, பதுமகோமளை, சித்திரரேகை ஆகிய மூவரது தந்தையரின் இருப்பிடம் மாந்தையிலுள்ள காந்தக்கோட்டை எனக் காட்டியவாற்றாலும், அசுரர் இராக்கதர் இயக்கர் இலங்கையில் அரசாண்ட காலந்தொட்டு "வங்கமலி கடல் மாதோட்ட நன்னகர்" எனச் சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிகத்தில் ஓதிய காலம் வரை, திருக்கேதீச்சரம் ஒரு பிரபல்ய துறைமுகப் பட்டினமாயும் சிவஸ்தலமாகவும் விளங்கியதென்பது தெளிவாகின்றது.

இனித் தலப்பெயர் "திருக்கேதீச்சரம்" எனக் கேது என்னும் நாகராசன் பெயரால் வழங்கி வருதலாலும், மயன் விசுவகர்மா முதலியோர் நாகசாதியார் என்று சொல்லப்படுதலாலும், திருக்கேதீச்சரம் பண்டைக்காலந் தொட்டு நாகசாதியாரின் வணக்கத்துக்குரிய தலமாக இருந்ததென்பது போதரும்.

## (5) கேது பூசித்து வரம்பெற்ற வரலாறு

இத்தலத்தின் பூர்வீக வரலாற்றை நவக்கிரகங்களுள் ஒன்றாகிய கேதுவின்மேலேற்றிப் புராணங்கள் கூறும். அது வருமாறு:—

"தேவர்கள் அமிர்தம் வேண்டித் திருப்பாற்கடல் கடைந்த காலத்து அமிர்தத்தை எடுத்துக்கொண்டு அசுரர்களை விலக்கி அமிர்தம் பருகும்படி தேவர்கள் ஓரிடத்துப் புகுந்தார்களாக அவுண னொருவனும் மாறுவேஷம் பூண்டு அவ்விடத்திற் புகுந்துகொண்டான். மோகினி வடிவங்கொண்ட திருமால் அமிர்தத்தைப் பகிர்ந்து கொண்டு வரும்போது சூரிய சந்திரர்க்கு இடையிற் கரந்து நின்ற அவுணனும் தன் கரங்களை நீட்டி, அமிர்தம் பெற்றுப் பருகியவளவிலே, பக்கத்திருந்த சந்திர சூரியர்கள் இவன் அவுணனென்பதை அயிர்த்து, திருமாலுக்குக் காட்டினார்களாக, அவரும் தன் கையிலிருந்த சட்டுவத்தால் அவன் தலை வேறு உடல் வேறும்படி வெட்டினார். அவனும் அமிர்தம் பருகியதாலே சாவா மூவாத் திறத்தனாய்த் தலைவேறு உடல் வேறாகியும், சிரத்துண்டம் பாம்பின் உடலும் அவுணத் தலையும் உடைய ஒருருவாகவும், உடற்றுண்டம் பாம்பின் தலையும் அவுண உடலும் உடைய மற்றோருருவாகவும் ஈருரு உடையனாய் விளங்கினான். இவ்விரண்டு உருவங்களே இராகுவும் கேதுவுமாம். இவர்களிருவரும் கேதீச்சரத்தை யடைந்து கடுந்தவஞ்செய்து தங்களைக் காட்டிக் கொடுத்த சூரிய சந்திரரை இடையிடையே விழுங்கி யுருத்தும் வரம்பெற்றனர்" என்பதாம்.

மேற்குறித்த கதிரைமலைப் பள்ளுச் செய்யுளிலும், "அங்கம் மொழியன்னார்" என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்திலும், மேற்காட்டிய புராணவரலாறே குறிக்கப்பட்டுள்ளது. அடங்கன்முறைப் பதிப்பாளரும் ஸ்தலமுறைப் பதிப்பாளரும் கொண்ட பாடத்தில் ஒரு சிறு திருத்தம் செய்துகொண்டால் பள்ளுச் செய்யுளின் கருத்தும் மேற்படி தேவாரத்தின் கருத்தும் ஒரே தன்மைத்தாய் அமைந்திருத்தல் காணலாம். திருத்தமான பாடம் வருமாறு:—

"அங்கம் ஒழி அந்நாள் அரவமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ் செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண் ணரவசைத்தான் திருக் கேதீச்சரத்தானே"

"அங்கம் ஒழி அந்நாள்—திருமாலால் புடைக்கப்பட்டு உடம்பு இருகூறாகிய அந்நாளில், அரவமரர் தொழுதேத்த — உடல் இருகூறுபட்டும் சாவாமருந்துண்டதனால் பாம்பின் உடலும் மனிதத் தலையும் ஒருகூறும் பாம்பின் தலையும் மனிதவுடலும் ஒரு கூறுமாகிச் சாவா மருந்து புசித்தலினாலே அரவங்களாகவும் அமரர்களாகவும் விளங்கிய இராகு கேதுக்கள் தவஞ்செய்து தொழுதுநிற்க" என்பது ஷை திருப்பாசுரம் முதலடியின்பொருள். [அரவமரர் — அரவு + அமரர் — அரவின் வடிவுதாங்கி அமரராய் நின்ற அவுணன்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேவாரத் தொடரைத் தழுவியே கதிரைமலைப் பள்ளு ஆசிரியரும்,

"செய்ய கேது தலையற்ற அந்நாள்
திருந்தும் பூசைகள் செய்து முடிப்போன்"

என்னுந் தொடரை அமைத்திருத்தல் ஈண்டுநோக்கத் தக்கது.

## (6) பண்டைப்பெருமையும் அழிவும்

இத்திருக்கேதீச்சரத் தலம் கடற்பெருக்கினாலோ அன்றி வேறு எக் காரணத்தாலோ பறங்கியர் இலங்கைக்கு வருமுன்னர்த்தானே, (அதாவது 15-ம் நூற்றாண்டின் முன்னரே) அழிந்து திட்டாயிற்று. அங்கு அழிந்து கிடக்கும் மாளிகைகளும், காலத்துக்குக்காலம் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் முதலியனவும், இது தற்காலத்தில் கொழும்புநகர்போல பண்டைக்காலத்தில் இலங்கைத்தீவின் இராசதானியாயும் வியாபார ஏற்றுமதி இறக்குமதி வசதிகள் மிகுதியுமுடைய துறைமுகப் பட்டினமாயும் கீழ்நாட்டு மேல்நாட்டு நாவாய்கட்கும் வர்த்தகர்க்கும் ஓர் சந்திப்பு ஸ்தானமாயும் விளங்கியது என்பதைக் காட்டுகின்றன.

வடநாட்டு வைதிகப் பிராமண நைஷ்டிகர் ஒருவர் இங்குத் தரிசனைக்கு வந்த காலத்தில், தாம் தமது வைதிகக் கிரியைகளைச் செய்யுங்கால், தமது வழக்கம் போலச் சூரியபகவானுக்கு வேள்வி ஆகுதி செய்து, அவரை அழைக்கச் சூரியபகவான் அங்குப் பிரசன்னமாகி "இந்நாட்டிற்கு அடாதகிரியைகளைச்செய்து என்னை இங்கு அழைத்தலினாலே நீயும் நீசனாகக்கடவை. இத் தலமும் அழிந்துபோகக்கடவது" எனச் சபித்ததனாலே திருக்கேதீச்சரம் அழிந்ததென ஒரு ஐதிகம் கூறுவர். ஆனால் இவ்வைதிகத்துக்கு நூலாதாரம் கிடைத்திலது.

கிலமாய்க்கிடந்த இத்தலத்தைக் குறித்துப் பறங்கியர் கால இலங்கைச் சரித்திர ஆசிரியர் "டி கோற்றோ" (De Cauto) என்பவர் பின்வருமாறு கூறியுள்ளார் :—

"And in addition to all these proofs, we find today in Ceilao vestiges of Roman buildings which show that they formerly had communication with that island. And we may even say more that in it were found the same coins that the freedman (Annius Plocamus) took, when Joao de Mello de sao Payo was in Manar in Ceilao in the year of our Lord 1574 or 1575 (mistake for 1585) in excavating some buildings that stand on the other side in the territories they call *Mantota were even today there appear here and there very large ruins of Roman masonry work;* and whilst some workmen were engaged in taking out stones they come upon lowest part of a piece of foundation and on touring it over, they found an iron chain of such strange fashion that there was not in the whole of India a craftsman who would undertake to make another like it." T. C. B. R. A. S. Vol. 20 P. 83.

"இந்த அத்தாட்சிகளோடு இலங்கையில் முற்காலத்தில் உரோமரால் நிருமிக்கப்பட்ட கட்டிடங்கள் இருந்த அடையாளங்கள் இன்றுங் காணப்படுதல் முற்காலத்தில் உரோமர்கள் இலங்கைத் தீவுடன் போக்குவரத்து முதலிய தொடர்புகள் உடையவர்களாக இருந்தனர் என்பதற்கு இன்னும் ஒரு அத்தாட்சியாகும். மேலும் கி. பி. 1585 என்பது பிழையாக 1575 என எழுதப்பட்டது. ஜோவா டெ மெல்லோ டெ சாபாயோ இலங்கையில் மன்னார்ப் பிரதேசத்தில் தளபதியாக இருந்த காலத்தில், தன் அடிமைத்தனத்தை நீக்கிக்கொண்ட அன்னியஸ் பிளாக்காமஸ் என்பவன் கண்டெடுத்த நாணயங்கள் மாந்தோட்டம் என்னும் பிரதேசத்தில் சில கட்டிடங்களை வெட்டிப் பரிசோதித்தபோது அங்குக் கிடைத்தவையேயாம். அந்தப் பிரதேசத்தில் இன்றும் இங்குமங்கும் உரோமர்கள் செய்த சுண்ணும்புக் கட்டிடங்கள் அழிந்துகிடப்பதைக் காணலாம். சில சிப்பந்திகள் கற்களை நிலத்திலிருந்து தோண்டியெடுத்துக்கொண்டிருக்கையில், ஒரு கட்டிடத்தின் அடியத்திபாரப் பாகம் ஒன்று தட்டுப்பட்டது. அதைப் புரட்டியபோது விசித்திரமாகச் செய்யப்பட்ட இரும்புச் சங்கிலி ஒன்று அகப்பட்டது. இந்த இரும்புச் சங்கிலிபோன்ற இன்னொன்று செய்துதருவதாக ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு தொழில் நிபுணனுவது இந்தியா முழுவதும் தேடியும் அகப்படவில்லை."

## (7) கோயில் புதுப்பிக்கப்பட்டமை

அழிந்து கிலமாயிருந்த திருக்கேதீச்சர சிவாலயத்தை மீட்டும் பண்டை ஸ்தானத்தில் அமைக்கக் கருதி நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களும் பிறரும் பெருந்தொகையான பணஞ் செலவிட்டுக் கோயில் எடுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்து நித்திய நைமித்திய பூசை முதலியவற்றிற்கும் ஏற்பாடு செய்துள்ளனர். சென்ற பதினைந்து இருபது வருடங்களாகத் திருக்கேதீச்சரக் கோயிற் கிரமங்கள் முட்டின்றி நடைபெற்றுவருவது சிவதொண்டர் மனங்களிக்கச் செய்வதொன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் கண்ட பூங்கோயில்

கோழும்பு
முதலியார், திரு. சே. இராசநாயகம் அவர்கள்.

பெரிய புராணமாவது தொடர்நிலைச் செய்யுளாய், ஒரு பழஞ் சரிதத்தைச் சொல்வதாய், ஒரு பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக் காட்டுவதாயுள்ள ஒரு பெருங் காவியமேயாகும். திருவாரூரிலே தியாகேசப் பெருமானுர் "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்குமடியேன்" என்று அடியெடுத்துக்கொடுக்கச் சுந்தரமூர்த்திகளால் அருளப்பெற்றது திருத்தொண்டத்தொகை. நாயன்மார்கள் தலங்கள்தோறுஞ் சென்று தரிசித்துப் பதிகம் பாடிப் பல அற்புதங்களை நிகழ்த்தினமையாலே மாதவஞ்செய்த தென்றிசை வாழ்வடைந்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொண்டதும், அவராற் பல அற்புதங்களைச் செய்வித்து மெய்யன்பராயினோர் எவ்வித போக சுகங்களை யனுபவித்தாலும் தாமரையிலையில் நீர் போலப் பற்றின்றி எல்லாம் இறைவன் செயலாகக் கண்டு கழித்து வீட்டுநெறி தலைக்கூடிநிற்ப ரென்பதையும் உலகினர்க்குச் சுந்தரமூர்த்திகள் வாயிலாகக் காட்டுவித்தும், வேண்டுவார் வேண்டுவதை அன்பராயினோர்பொருட்டு இறைவன் அடியார்க்கடியனுகின்றுன் என்பதைப் பரவையார் வாயிலாகத் தெரிவித்தும், சாயுச்சிய முத்திநிலை கற்பூரம் போலத் தூலவுடம்பு இப்பூமியில் விழாமல் ஆன்மா முத்தியடையுந் தத்துவ நிலையை,

" மேலொரு வடிவை யெடுத்ததே யாகின்
மேவுமிவ்வுட லிங்கே வீழும்
மேலொரு வடிவை யெடுத்திதின் ருகின்
மேவுமிவ்வுட லிங்கே வீழா
மேலொரு சிவத்தைச் சீவன்சென் றடையு
மேவுமிவ்வுட லிங்கு தானே
மேலொரு சிவத்தின் வடிவதா மருளாய்
வெளியதா யுலகு கண்டிடவே."

எனக் குமாரதேவர் சுத்த சாதகத்தில் சொல்லியவாறு புலப்படுத்தியும் முடிந்த இவைகட்கேற்ற வரலாறுகளை விரித்துக் கூறுகின்ற வகையினுலே, திருத்தொண்டத் தொகையிலே சுந்தர மூர்த்திகளால் துதிக்கப் பெற்ற அடியார்கள் வரலாறும் உப அங்கங்களாக ஆங்காங்கே வந்து பொருந்தப்பெற்றன.

திருமலைச்சருக்கத்திலே தொடங்கப்பெற்றுக் கைலையிலிருந்து பூவுலகிற் போந்த சுந்தரமூர்த்திகள் சரிதம் வெள்ளையானைச் சருக்கத்திலே மீண்டும் கைலைக்கு வெள்ளையானையின்மீது எழுந்தருளும் வரலாறேடு நிறைவேறுகின்றது. சுந்தர மூர்த்திகளே இப்பெருங் காப்பியத்துக்கு நாயகராவர். அவரே பாட்டுடைத் தலைவர். பரவையாருஞ் சங்கிலியாருந் தலைவியர்கள். திருத்தொண்டத்தொகை பிறந்ததும் பரவையார் காதல் மணம் நிகழ்ந்ததுமாகிய சோழநாடுந் திருவாரூரும் இப்பெருங் காப்பியத்திற்கு நாடும் நகருமாகும். சிவபக்தி, அடியார் பக்தி என்ற இருபகுதியினதான அன்பே இக் காவியத்தின் உள்ளுறையாகிய கற்பனை. நிகழ்ச்சிக் களன் திருக்கைலாய மலைச்சாரல். இக்காவியத்திற்கு முதநூல் முதல்வன் அருள்வழி நின்று சுந்தரமூர்த்திகள் அருளிய திருத்தொண்டத் தொகையே யாகும். திருநாரையூர் பொல்லாப்பிள்ளையார் திருவருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய கலித்துறை அந்தாதியே வழிநூலாகும். திருத்தொண்டத் தொகைக்கு அந்தாதி வகைநூலாகும். இவற்றிற்கு விரிநூல் பெரியபுராணமாகும்.

" தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கிஞற் சொல்ல வல்லபிரான்"

என்பது மாதவச் சிவஞான சுவாமிகள் திருவாக்காகும். இவ்வித விரிநூலாகிய இவ்வரு நூல் சைவ சமயத்தவர்க்கு எய்ப்பினில் வைப்பாய் நின்று நிலவுமாறு பனுவலாட்டியாகிய பரமேஸ்வரி,

"பூவை மறந்தனள் வெண்டா மரைமயில்
புகல்தகு சங்கப் புலவோர்சொற்
பாவை மறந்தனள் தேசசு பாடித
பயனை மறந்தனள் பதுமத்தோ
ஞவை மறந்தனள் பொதிய மலைத்தலை
நண்ணிய புண்ணிய முனிவனெனுங்
கோவை மறந்தனள் சேவையர் காவல
ஞர்திரு நாவிற் குடிகொண்டாள்"

கொண்டுநின்ற பெருமையால் சேக்கிளார் அன்புவெள்ளம் விரிந்து அற்புதச்சுவைததும்பி நவரசபுஞ்சமாய்ப் பரிம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிக்கும் பெரிய புராணமென்னும் அருட்பூங் கோயிலைக் கட்டிப் பாயிரமாகிய திருக்கோபுர வாயிலை யமைத்து முதல்வனா லடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பாவினைத் திருமுன்னிறைத்து, அதிற் கூறியவற்றிற்கு வினாவிடை போலப் பயனீதென உலகினர்க்கு அடுத்த செய்யுளில் எடுத்துக் கூறிமுடித்துத், தெய்வ வணக்கமுஞ் செயப்படுபொருளு மெய்த வுரைப்பான் புகுந்து, சைவ மரபிற்கேற்ப விநாயகர் வணக்கமாக,

> "எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
> நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
> தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
> கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்."

என்னுஞ் செய்யுளைக் கூறி வணங்கி, அதனை அவ்வாயிற் கதவாக வமைத்தருளினார். அப்பொற் கதவிற்கு "எடுக்கும்" என்னுஞ் சூத்திரத்தாழை முக்காலத்தினும் நிகழ்வதான இறைவன் திருவருள் தோய்ந்த "மாக்கதை" யாகலின் நிகழ்காலத்திற் கொண்டும், அக்கதையை மெய்யன்போடு ஓதி யுணர்ந்து சிவச்செயலற்றுச் சிவச் செயலாய் எவற்றினையுங் கொண்டு பக்தி பூண்டொழுகும் மெய்யன்பர்களைப் பிறவித் துன்பத்தினின்றும் எடுக்கும் என்பதுபற்றி 'எடுக்கும்' என்றும், அன்புடனோதிப் பூசித்து வருவோர்க்கு இட்ட சித்திகளை யளித்துப் பலவகை இன்னல்களையும் துடைத்துத் திருவருட்கரையில் எடுத்து வைக்கும் அருளுடைமையால், 'எடுக்கும்' என்றும், பெய ரொற்றுமையால் காவிய கதா நிகழ்ச்சிக்கியைய "ஏற்ற தொண்டனார் அண்டர் வெள்ளானையி னெதிர்வலங் கொண்டேற்ற" எடுக்கும் கடக்களிறு எனக் கதாநாயகரின் பெறுபேறும் ஒருவாறு தொனிக்க அமைத்துளார். முதல் விளக்கணியாய் நின்று சொற்சிறுறு மிசைந்து பெரும் பொருளளிக்கும் ஆற்றலும் அதனிடத் துளதெனக் கூறுவர். இனி "யானியற்றத் தொடங்கும்" என்பதும் அமையும்.

அடிகள் தாமியற்றிய நூலுக்குத் திருத்தொண்டர் புராணமெனத் திருப்பெய ரிட்டதாகத் தாமே கூறிவிட்டார். இது தவிர வேறெவ்விடமேனும் பெரிய புராணமென நூற்குப் பெயர் கூறியதாக இல்லை. நாவலர் அவர்கள் தாம் எழுதிய அந்நூலின் உபோற்காதத்தில் "இப்புராணம் தன்னை ஓதல், வேட்டல் செய்வார்க்குச் சிவனடியார்களது அத்தியற்புத பத்தித் திறத்தையும் அவர்கட்கு எளிவந்த சிவனது அத்தியற்புதப் பிரகாசத்தையும் உணர்த்தி அவர் நெஞ்சை அழலிடைப் பட்ட மெழுகுபோலக் கசிந்துருகச் செய்தலிற் றனக்கு உயர்வொப்பின்றி விளங்கும் பெருமையுடைமைபற்றி பெரியபுராணம் எனவும் பெயர்பெற்றது" என அதனது தன்மையை விளக்கி முடித்தார். திராவிடப்பிரகாசிகையார் "இது பெரியபுராண மெனவும் திருத்தொண்டர்புராண மெனவும் வழங்கப்படும். இவ்விரு திருநாமங்களும் இதற்கு ஆசிரியரே இட்டனரென்பது 'எடுக்குமாக்கதை' யெனவும், 'இங்கிதனுமங் கூறின்— செங்கதிரவன்போல் நீக்குந் திருத்தொண்டர்புராண மென்பாம்" எனவும் போந்த பாயிரத்தாலறிக" எனக் கூறிப் "பெரியபுராணம்—பெருமையை யறிவுறுக்கும் புராணம்" எனக் கூறிமுடித்தார். இதனை மறுத்து ஞானசாகரம் முதற்பதுமத்தில் திரு. அ. குமாரசவாமிப் புலவர் வேறு முடிபு கூறியுள்ளார். வருமாறு:—"தொண்டர்கள் மற்று யாவரினும் மிக்காராதலின் அதுபற்றி யவரைப் பெரியர் என வழங்குதல் பொருந்துவதால், பெரியர்+புராணம் என்பது 'சில விகாரமா முயர்திணை' யென்னும் நன்னூல் விதிப்படி பெரியபுராணம் எனப் புணர்ந்து ஆக்கியோரிட்ட நாமமாகிய திருத்தொண்டர்புராண மென்பதை விளக்கிநின்றது. ஆசிரியரே இருபெயரும் இட்டனர் என்பது பொருந்தாது. ஒரு நூலுக்கு ஒரு பெயரன்றி இருபெயரிடுவது ஆசிரியர்க்கு வழக்கின்று. 'மாக்கதை' யென்பது பெரிய புராண மெனப் பொருள்படின், சேதுபுராணத்தில் 'திகழுமாக்கதை செய்திடுஞ் செய்யுள்' என்றும், பாரதத்தில் 'அங்கண் மானிலத் தரசர் பல்கோடி யவ்வரசர்— தங்கண் மாக்கதை' யெனவும் வருவனவற்றிற்கும் பெரியபுராணமென வழங்கப்படுமா". பின்னர் இந்நூலுக்கு ஓர் ஆராய்ச்சியெனப் பெயரிட்டு ஒரு நூல் எழுதிய ஓர் அறிஞர் பெரியபுராணமெனக் கூறுவதற்கு அந்நூலுள் அகச்சான்று உண்டெனக் கூறி, அதற்கு எடுத்துக் காட்டாக 'மாக்கதை' யெனினும் 'பெரிய புராணம்' எனினும் ஒக்கும். "அறுமுக முடையவோ ரமலன் மாக்கதை", "இராமவதாரப் போர்த்தொடை நிரம்பிய தோமறு மாக்கதை" என முறையே கச்சியப்பருங் கம்பரும், "பிறிதினியைபு நீக்கிய விசேடணங்களோடு கூறச் சேக்கிழார் அத்தகைய விசேடண மொன்றுமின்றி" "எடுக்குமாக்கதை" எனக் கூறியிருப்பதா லறியலாம் என்றனர். சமீபத்தில் "ஈழகேசரி"யில் சங்கப்புலவர் ஒருவரால் அவ்விநாயக வணக்கச் செய்யுளுக்கு விரிவான உரையொன்று கூறப்பட்டுள்ளது. அதில் 'மாக்கதை' யென்பதற்கு மேற்போந்த அறிஞர் கொள்கைகளைத் தழுவியும் கலமாக 'மாக்கதை' யென்பதைப் பிரித்தும் கூறிய நுட்ப வுரைகள் சாலவும் வியக்கற்பாலதொன்றும். இனி, எக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் எவரால் பெரியபுராணமெனப் பெயரிட்டு வழங்கப்பட்டதெனக் கூறவியலாது.

பெரிய புராணம் – பெரிய கதையென நேரே பொருள்படும். இவ்வாறு படும்போது பதினெட்டு வருணனைகளிலும் தற்குறிப்பு, அதிசயம், உருவகம் முதலிய கவிவினோதங்கள் அமைந்து உலகவின்பத்தையும் ஊட்டிக் களிக்கச்செய்யும் சிறிய கதைபோலாது, புத்தகத்தைத் திறந்து எச்செய்யுளை நோக்கினும் பக்திச் சுவையும், அருட்டன்மையும், சிவமணமுமே விளங்கித் தோன்றுந் திறத்தால் புராணங்கள் யாவற்றினும் பெரிய புராண மெனினுமாம்.

ஆனால், ஔவையாரால் பாடப்பட்டதாகக் கூறப்படும் "பெரியது கேட்கின் நெடியவெவ் வேலோய்," என்னுஞ் செய்யுளில் முடித்துக் காட்டியபடி தொண்டர்கள் யாவரினும் பெரியர் என அம்மூதாட்டியின் சாட்சி உறுதிப்படின், பெரிய புராணம் என்பதற்குப் பொருள்தேடி யலைவது நீங்கிவிடும். அன்றியும் சேக்கிழார் அடிகள் தமது காவியத்திற்கு முதனூலாகிய திருத்தொண்டத் தொகையின் பெயரைத் தழுவியே பெயரிட்டுள்ளாரெனத் தெரிகிறது. முன்னதின் பிரதிபிம்பமே பின்னது.

இனி "சென்னி அபயன் குலோத்துங்க சோழன்" எனத்துவங்கும் பாசுரத்தினின்று, சேக்கிழாரினால் பலவிடத்தினும் புகழப்பட்ட அபயன் எனுஞ் சோழன் முதலாங் குலோத்துங்க சோழன் எனவும், அவ்வரசன் காலமாகிய பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியே சேக்கிழாருடைய காலமெனவும் நெடுநாளாக விருந்த கொள்கை. சென்னையரசாட்சிக் கல்வெட்டு ஆராய்ச்சியாளரின் தெளிந்த ஆராய்ச்சியினால் அது நீங்கி, இரண்டாங் குலோத்துங்கன் (கி.பி. 1123. 1148.) காலத்தவரென்றும், பன்னிரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புகழேந்தி, ஒட்டக்கூத்தராகிய இரு பெரும் புலவர் காலத்தவரென்றும் முடிவுகட்டப் பெற்றிருக்கின்றது.

## தமிழ்மொழி பேணல்.

திரு. மு. வைத்தியலிங்கம்,
வேள்ளவத்தை.

செந்தமிழ்த் தாயின் செல்வச் சிறாரே!
திருமகள் உறையுந் தமிழ்நாட் டாரே!
பந்தமில் லிறைவன் பாதம் பணிந்து
பகருமோர் வார்த்தை பணிவுடன் கேண்மின்!
எங்களைப் பெற்று இன்பமாய் வளர்த்து
அந்தமில் கலைகள் அறிவதற் கிடமாய்
அமைந்தநல் லன்னையை அருந்தமிழ்த் தாயை
சந்தனப் பொதியச் சுந்தர மலைதனில்
செந்தமிழ் முனிக்கு வந்தினி தருளிய
சங்கர னன்றிச் சரவண பவனும்
சங்கப் புலவரும் தண்குடை வேந்தரும்
கம்பர் கபிலரும் கவிகாள மேகமும்
கச்சியப்ப ரொடு அப்பர் சம்பந்தரும்
முட்பா னூலெனுந் தமிழ்மறை முதல்வனும்
பிற்சிறப் பெய்திய பெரும்பா வலராம்
நாவலர் முதலாம் நற்சிகா மணிகளும்
காவலர் போலக் கருணையாய் வளர்த்த
தேன்மொழி யன்னையைத் தீந்தமிழ்த் தாயை
சீர்கெட விட்டுச் செகத்துளோர் நகைக்கத்
திரிதல் நன்றோ! திரிதல் நன்றோ!!
ஆர்கலி யுலக மக்கட் கெல்லாம்
அன்னையிற் சிறந்த தெய்வமு மிலையெனும்
ஔவையார் வாக்கை அறியா ராகி
அவனியீ திருந்து அலமரு கின்றார்
செந்தமிழ்ச் செல்வர் சிலர்சேர்ந் திடினே
அந்தமி லின்பத் தழிவில் வீடதை
அடையும் ஆற்றை அன்பர்க் கருளிய
அரனின் பாஷையாம் அருந்தமிழ் மொழியை
ஆவலொடு பேசி அகமகி ழாது
ஆங்கிலம் பேசியும் அதிற்சில கலந்தும்
தாங்களு மாங்கிலர் தமரென நினைந்தும்
தவிக்கிறார்! அந்தோ! தாரணி மீதினில்
உங்களொடு கூடி யொருமித் துழைக்கும்
சிங்கள ரிந்தியர் சீனரைப் பார்மின்!
சுதேச பாஷையைச் சுத்தமாய்ப் பேசிச்
சந்தோஷ மாகக் காலங் கழிக்கிறார்
செந்தமிழ் தானே தனித்தியங் கும்மென
முன்றமிழ் நூலோர் முறையிட முறையிட
எங்களி லனேகர் இரண்டுசொல் லாயினும்
பங்கமில் லாது பகரவே யறியார்
அந்தோ! நம்கதி அதோகதி யாய்விடும்
அருந்தமிழ் மொழியும் அருகிடு மவனியில்
ஆதலா லின்றே அன்பீ ரெழுமின்!
அடியேன் வார்த்தை அமிழ்தெனக் கொள்மின்!
கற்றோர் எழுமின்! கவிகள் வரைமின்!
கலைகள் வளர்மின்! அவைகள் நிறுவுமின்!
தமிழைப் போற்றுமின்! தமிழைப் பேசுமின்!
தமிழினு மினியதாந் தனித்தமிழ் பேசுமின்!
கலப்புத் தமிழைக் கடிந்து நீக்குமின்!
காப்பியத் தமிழைக் களிப்பொடு கொள்ளுமின்!
தமிழ்த்தாய் வாழ்க! கலைமகள் வாழ்க!!
தமிழ்மக்கள் வாழ்க! தமிழ்நாடு வாழ்கவே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டமிழகத்துப் பண்டைய பெருமை

(சிவங். கருணாலயபாண்டியப் புலவர்.)

"முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாய்ப், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றியனா"யினனது திருவாய்மொழியாய் முன்னைப்பழமொழிக்கு முன்னைப் பழமொழியாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றித்தாய செந்தமிழ்மொழியைச் செப்புநர் மகிழும் "நல்லுலகத்து"த் தொல்லியல் பெருமை துறந்தார் பெருமைபோற் சிறந்த தொன்றென்பது, இற்றைஞான்றைச் சொற்பெற்றி நனிப் போர்க்கும் ஒப்பமுடிந்த செப்பமுடைத்து. காலக்கடலின தாழத்தடியினும் நீலக்கடலது நெட்டாழத்தினும் குளித்துயிர்ப்படக்கி யொழித்துவாழ் தமிழகம் ஞாலக்கடல்களின் ஆழத்துக் கிடக்கும் பொருளாய் யார்க்கும் இருளாயிருக்கும். உலகின் பொதுமொழி அரசின் றனிமொழி நிலவுந் தமிழ்மொழி குலவுந் தமிழகத்தினுடைய பெருமை, கல்வெட்டும் செப்பேடும் செய்யுளும் வழக்கும் என்றிவற்றின் உய்த்துணரும் வரலாற்றாராய்ச்சிக் கண்ணுக்கும் எய்தாத சேய்மைக்கண்ணே தோன்றுகின்றது. இனி, நஞ் செந்தமிழ் நாட்டினிலைமை முத்திறப்படும். அவை, தனிநிலைமை, கலவைநிலைமை, சேர்வை நிலைமையென்பன. அவற்றுள் தனிநிலைமையாவது, ஏனை நாட்டாருடைய சொற்பொருள்களோடு புணராது நின்ற நிலைமை. கலவை நிலைமையாவது, வடசொற் பொருள்களோடு விராய் வேற்றுமை தோன்றாது நின்றநிலைமை. சேர்வை நிலைமையாவது, வடசொற் பொருள்களோடுந் திசைச் சொற் பொருள்களோடுந் தழுவி வேற்றுமை தோன்ற நின்ற நிலைமை. இனி, இந்நிலைக்காலங்கள், நிரனிரையே திணைநிலைக்காலம் எனவும், வைதிககாலம் எனவும், சமயகாலம் எனவும் சொல்லப்படும். இந்நிலைமைகள் தமிழகமாகிய மகனுக்கு முறையே நனாவும் கனாவும் துயிலுமாய்ப் பெயர்த்தும் பெயர்த்தும் சென்று சென்று மீளற்பாலவாம். இவற்றுள், நனாக்காலமாகிய முதலூழியிலே இதன்பெருமை உயர்ந்ததாகவும், கனாநிலையாகிய இடையூழியிலே ஒத்ததாகவும், துயினிலையாகிய கடையூழியிலே குறைந்ததாகவும் திரிவதாயிற்று. முதலூழிச் செய்யுளும் நூலும் இற்றைப்பொழுது காணப்படாதொழிந்தன. இடையூழிச் செய்யுளும் அவ்வாறேயாம். நூலுள்ளும் தொல்காப்பிய மொன்றுமே காணக் கிடைக்கின்றது. அஃதும் உரையாசிரியன்மாராலும், எழுத்தாளர்களாலும், உய்த்துணர்ச்சியாலும், வடநூலுணர்ச்சிப் பற்றுள்ளத்தாலும் தமக்குப்புலப்படாதவற்றைத் திரித்தும், ஏடுகளிலே குறைந்தவற்றை நிறைத்தும், மரபியலுட் சில நூற்பாக்கள் போல இல்லாதவற்றைச் செய்து சேர்த்தும், அதிகாரமென்றாற் போலத் தகுதிபற்றி யமைத்தும் திருத்தப்பட்டதாகக் காணப்படுகின்றது. ஏனையவெல்லாம் இறக்க இத் தொல்காப்பியமொன்றே நிலைபெறுதற்கு இத்திருத்தமே காரணம் என்னவேண்டும். கடையூழிப் பனுவலுள்ளும், கழகமிருந்த நக்கீரர், கபிலர், பரணர் முதலாயவர் பயின்றுவந்த பனுவலொன்றும் இதுகாறுங் காணக் கிடைக்கவில்லை. இக்காலத்துக் கிடைத்த பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பதினெண்கீழ்க் கணக்கு என்றிம் முத்தொகை நிலைச் செய்யுளும், சிலப்பதிகார முதலாய தொடர்நிலைச் செய்யுளும், வேறு தனிநிலைச்செய்யுளும் அவர்களது கல்விப் பயனாக அவர்மாட்டு விளைந்தனவன்றி அவர்களுடைய கல்விக்கு வாயிலாயின வல்ல. அச்செய்யுளும் நூலும் வழக்குமெல்லாம், இங்ஙனம் ஒருங்குவிரைந்து கேடெய்தற்குக் காரணம், வந்தேறிகளாகிய ஆரியர் முதலிய பிறரது சூழ்ச்சித்திறனும், தமிழகத்தாரது வாய்மைத் திறனுமாம். இதனுக்குத் துணையாய்நின்றது கடல்கோளும் என்ப. இஃதிக்காலத்து யப்பானுக்கு நிலநடுக்கம்போல அக்காலம் தமிழ்நாட்டுக்கு மீண்டும் மீண்டும் வந்தெய்துவதாயிற்று. தமிழகத்தாரெல்லாரும் முதலூழிக் காலத்தே வாய்மையும் அறமும் கல்லாமலே உடையராயிருந்தனர். இது, "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணமென்ப" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தாற் குறிப்பிக்கப்பட்டிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. எனவே தமிழகத்தாருடைய பொய்யும் வழுவும் பிறரிடத்துக் கற்றுக்கொள்ளப்பட்டன வன்றித் தமக்கு இயல்பாக உள்ளனவல்ல என்பது பெறுதும். எனவே அக்காலத்து வழக்குஞ் செய்யுளு மல்லது, நால்வேண்டாதாயினமையின் இல்லையாயிற்று. செய்யுள் தானும் வரி வடிவின்றி ஒலி வடிவாயே யிருந்தது. பின்னர்ப் பிறழ்ச்சிநேர்ந்த காலந்தொடக்கத்தே வரிவடிவும் நூலும் முதல்வனும் அவனருள்வழி வந்தோரும் கண்டனர். முதல்வனங்ஙனங்கண்ட காலத்து, அவனை இறையனார் எனத் தமிழகத்தார் வழங்கினர். முதல்வன் கடையூழிக் கழகத்து மதுரைப் பேராலவாயா ரென்னுந் திருப்பெயரோடு வீற்றிருந்தான். ஒருவனென்பதுபற்றி மதுரைப்பேராலவாயாரையும் இறையனாரென வழங்கினர். இடையூழிக் கழகத்து வீற்றிருந் தக்காற்பெற்ற பெயர் புலப்படவில்லை. கழகம் என ஒன்றாகற்பாற்றெனினும் கடல்கோள்களான் வேறு வேறிடத்து நிறுவப்பட்டமையான் வேறு வேறு பெயர்த்தாயிற்று. இங்ஙனம் கழகம் நிறீஇயினார் பாண்டியர்கள். கழகமிரீஇய பாண்டியர்களும் கழகமிருந்த முதல்வன் முதலிய நல்லிசைப் புலவர்களும் வேறெங்காட்டு மில்லாத தமிழகப் பெருமைக்குக் காரணமாவர் அக்காலத்துத் தமிழகம் கல்விச்செல்வம், பொருட்செல்வம், செவிச்செல்வம், அருட்செல்வம், விழுச்செல்வம் என்றிவ்வகைச் செல்வங்களானும் நிரம்பி மும்மையின்பமும் இம்மையொன்றினே பயப்பதொன் றென்பது நூற்கண்ணினார்க்குப் பாற்படத்தோன்றும்.

அப்பழங்காலத்தே வான்மீகியார் மார்க்கண்டேயனார் முதலிய வடவாரிய முனிவரும் முரஞ்சியூர் முடிநாகர் முதலிய கீழைநாட்டு நாகவரசர்போல்வாரும் தமிழகத்துக் கழகத்து வந்து தமிழ்ப்பயின்று வல்லுநராய்க் கழகப்புலவராய் வீற்றிருந்து, தமிழிலே ஒழுகிய வோசையும் விழுமிய பொருளுஞ் செறியச் செய்யுள் செய்வாராயினர். அன்னார் செய்யுட்கள் புறநானூற்றுட் டொகுக்கப்பட்டுள்ளன. அவருள் வான்மீகியார், தமிழ்நாட்டு நன்குபயின்று தந்நாடு சென்று தாம் செய்த ஆதிகாவியமாகிய இராமாயணத்திலே ஆங்காங்கு நயம்பெற ஆரியவரசர் நிகழ்ச்சிகளுக்கும் பிறவற்றிற்கும், தமிழகவரசர் நிகழ்ச்சிகளும் பிறவும் உவமையாகக் கூறுமாற்றான், மாறுபாடில்லாத பெருமைக்கு ஊறுபாடெய்தாதது தமிழகம் என்பது தெரியவரும். அவரே, மார்க்கண்டேயனார் வரலாறு தமிழ்நாட்டின்கண் நிகழ்ந்தது என்பர். ஆரியர்களுடைய கோட்பாட்டான் ஏனையநாட்டு நிகழ்ச்சிகளையெல்லாம் தம் சொல்லானே படைத்து மொழிதல் அவர்க்கு வழக்காதலான் தமிழகத்து ஊர்ப்பெயர் முதலாயவற்றைக் கபாடபுரம் தக்ஷிணமதுரை என்றாற்போலத் தஞ்சொல்லான் மொழிபெயர்த்தும், மணற்புரமென்றாற்போலத் தஞ்சொல்லொடு விராய்க்கூறியும் வழங்குவர். அன்றியும் இதனானே ஆரியர் போல்வாரும் தமிழை மொழிபெயர்க்கும் அத்துணைத் தமிழ்ப் பயிற்சியுடையாரென்பதும் பெறப்படும். இதனையாராயாது கபாடபுரம் தக்கிணமதுரையென்பனவே தமிழ்க் கழகத்து வழங்கிய பெயரென்பர். இனி, முன்னொருகால் இராவணன் சாவக முதலிய கீழைநாட்டினின்றும் வந்து தமிழகத்தை யாண்டான் என்பர். அக்காலம் ஏழெழு தமிழ்நாட்டைக் கடல்கொண்ட பின்னர்க்காலம். இவன் கடற்கட் கீழ்பாலுள்ள சிறு சிறு பொழில்கள் பலவும் ஒருங்குசேர ஆண்டானொருவன். இவனும் இவன் இனத்தாரும் தமிழ்திரிந்த மொழி வழங்கும் வேட்டுவர்பாற்படுங் கூட்டத்தினர்போலும். இவனைத் தமிழ்நாட்டிலே இயங்காமை ஆண்டுநின்றும் விலக்கினார் அகத்தியனாரென்ப. இவ்வகத்தியனார் தாம் ஆரியருள் முதன்முதற் றமிழகத்திற் புக்க முனிவர் தலைவன் என்பர். அகத்தியன் என்னுஞ் சொற்கு மலைக்கொடுமுடியிலிருப்பவன் என்பது பொருள் என்பர் வடநூலார். அகத்தியன் பொதியின் மலையிலுள்ளானெனப்படுதலின் அப்பொருள் தகுதியுடைத்தாயிற்றென்ப. இவர்தாம் இராமன் இராவணனை வெற்றிகோடற்குப் பல்லாற்றானும் துணைபுரிந்த பெரியார். வடநூலுள் அகத்தியனார் சரிதம் கேட்கப்படுதல் காரணத்தான் வடமராலும் மிகத்தெரிந்து நன்கு மதிக்கப்பட்டவர் என்று கொள்ளுதல் பொருந்துமன்றி, இவர் வடமரென்பது பொருந்தாது. வடநூலாருள் ஒருசாரார் பிறநாட்டுச் சிறந்த சான்றோரையும் தம்மோடியைபுபடுத்து வரலாற்றுரையாக்கி, ஏனைநாட்டார் சிறப்புக்கும் தம்மோடியைபே காரணமென்பது பயிற்சியானுய ஒழுக்கமாயிற்று. அதனான் அவர்கூற்று உண்மை வரலாற்றாராய்ச்சிக்கண் மேற்கோளாகாது என விடுக்க. அவர் இந்நெறியானே திருவள்ளுவர் கம்பர் முதலிய பெரியாரையும் அங்ஙனங் கதைகூறுமாறு பலருமறிந்தது. சேரன், சோழன், பாண்டியன் என்ற சொற்கள் போல இப்பொழுதைக்கு முற்றக் காரணங் கண்டுகொள்ளவியலாத தமிழ்ச்சொல் என்றே அகத்தியன் என்பது கொள்ளற்பாற்றன்றிப் பிறமொழியுணர்ச்சியான் ஒலியொப்புமையும் பொருட்டகுதியுங் கண்டுழியெல்லாம் பிறமொழியெனவும் அதுவே பொருளெனவுங் கோடல் நடுநிலைக்கண் நின்று பரந்து செல்லாத திரிபுணர்ச்சியேயாம். இவ்வுணர்ச்சியானே தொல்காப்பியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பெயரையும் "வருத்த காவ்ய" என்பதன் வடமொழியெனவும் பழைய கவி குடியிற் பிறந்தோன் எனவுங் கூறுப." எனவே, அகத்தியனார் தமிழ்முனிவரே யாம். இவரும் முதற்கழகத்தும் இடைக்கழகத்தும் புலவராய் வீற்றிருந்தார். இவர் தமிழுக்கு நூல்செய்தார். அது செந்தமிழியற்கை விளக்குவது. அது வழக்கு வீழ்ந்தமைக்குக்காரணம் கடல்கோளாற்றமிழ்நாடும் தமிழரும் தமிழ் வழக்கும் அருகுதலானும் வடமரும் வட வழக்கும் பிறவும் பெருகுதலானுமாம். அதனானே தொல்காப்பியனார் வழக்குஞ் செய்யுளுங் கண்டு முந்து நூலுங்கண்டு ஒருவாற்றாற்றொகுத்து வடசொற்பொருள் வழக்குக்களுஞ் சேர்த்து ஒருநூல் செய்வாராயினர். பின்னர் அதுவே வழங்குவதாயிற்று. இஃதுணராத நச்சினார்க்கினியர் அகத்தியனாரொடு முரணி நூல்செய்தார் என்பர். அக்காரணம் பாயிரத்துப் பெறப்படாமையானும், முரணுதல் உண்மைகூறவொட்டாதாதலின் உலகங் கொள்ளாமையானும் பொருந்தாமை காண்க. அகத்தியனாரொடு தொல்காப்பியனார்க்கு முரணுதல் கூடினுங் கூடுக. அது நூல்செய்தற்குக் காரணமன்றென்பது மட்டும் துணியப்படும். பிறமொழிகளில் இலக்கண நூல்களமைத்தற்கு முன்னரேயே தமிழகம் இலக்கண நூல்களை உரித்தாக உடைத்து. அவ் விலக்கணநூற் செப்பமன்றே, இன்றுந் தமிழ்ப் புலவர்களைப் பிறமொழிப் ,லவரிற் சிறிதுந் தாழாதவாறு ஒப்பநிற்பச்செய்வது. அவ் விலக்கணநூலின் பொருட்பால் பிறரெல்லாம் மாக்கட்டன்மையராயிருந்த காலத்துத் தமிழர் மக்கட்டன்மையராயிருந்தாரென்பதற்குச் சான்று கூறும். இதனைக் கண்டு வியப்பெய்தாதாரு முளரோ? இன்னும் தமிழகத்தாருடைய அகப்பொருளாராய்ச்சியைக் கூர்ந்து நோக்கின் இக்காலத்து உண்ணூலும் (Psychology) வானூலும் (Astronomy) பார்நூலும் (Geology) என்றிவற்றின் ஆராய்ச்சித்தொகுதியும், இசையும், கூத்தும், ஓவமும் முதலாய கலைத்தொகுதியும் ஒருங்கமைந்ததொன்றென்பது காணப்படும். அகத்திணைப் பொருள் இங்ஙனம் அடங்க ஆராய்ந்ததிறனும் பொருட்கூறுபாடும் தொகைப்பட ஆராயுந் திறனில்லாத இப்பொழுதையார் பிறர்க்குந் தெரியாதனவாம். இனித் தமிழகத்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என இலக்கணத்தைப் பெயர்முறை தொகைப்பட அமைத்துக் கூறிய முறை மிகவும் வியக்கற்பாற்று. இனி அணி தமிழுக்கு இன்றெனக் கூறுப. அது பொருந்தாது. என்னை? யாப்பென ஓரதிகாரம் கூறிற்றிலராயினும் பொருட்பாற்படுத்துச் செய்யுளியலெனக் கூறினாற்போல அணியையும் உவமவியலென ஒருநிமித்தம்பற்றி நுதலிய பொருளாற் பெயர்கொடுத்து பொருட்பாற்படுத்து ஆசிரியர் தொல்காப்பியனார் அணி கூறினர் எனவே கொள்க. மெய்ப்பாட்டியல் பொருளியல்களில் வேறணிகளும் கூறினர். வேறணிகளையும் வேறு பெயர்களான் வேறிடங்களிற் கூறியுள்ளார். அதனான் அணியினும் குறையுடைத்தன்று தமிழ். இனி வடநூலுள் வேறுகூறப்படும் நியாய வைசேடிகமாய தருக்கக்கொள்கையைத் தமிழகத்தார் எண்ணின் வேறாகக் கொண்டிலரன்றிக் கொள்ளாதாரல்லர். அதனானன்றே நூலுரையுரைக்கும் உரையாசிரியரெல்லாரும் தருக்கித்துரைப்பாராயினர். அதற்கெல்லாம் மேற்கோளில்லையாயின் அவ்வுரை எங்ஙனம் மேற்கொள்ளப்பட்டு வழங்கும். இக்கருத்துக் களவியலுரை முதலியன பயின்றார்க்குத் தெற்றெனப் புலப்படும். அல்லதூஉம் மணிமேகலையுட்போந்த தருக்க நுட்பங்கட்கெல்லாம் வடநூலுள் யாண்டும் மேற்கோளில்லாமையுமுணர்க. எனவே தமிழ்க்கொள்கையே அக்காலத்துத் தருக்கத்திலே பயின்ற வட சொற்களாற் கூறினர். அதனையே தமிழ்ப் பௌத்தரும் மேற் கொண்டமை கூறிற்று அக்காதை. இனித் தமிழகத்தார் தருக்கத்தை எண்ணின் பாற்படுத்துக் கூறிய தென்னையெனின், பொருள் வரையறைபெறுதல் எண்ணியலாதலின் எண்ணியல்கூறும் வழிப்பொருள் வரையறையும் இதனை முடித்தற்கு அவ்வெண்ணப்பட்ட பொருளினும் அதனை முடித்தற்குத் தடைவிடையுங் கூறவேண்டுதலின் இதனானே எண்ணின் வேறன்று தருக்கம் எனவுங் கொள்க. இதுபற்றியன்றே தார்க்கிகரை எண்ணர் எனத் திருச்சிற்றம்பலக்கோவைச் சிறப்புப்பாயிரங் கூறிற்று.

"எண்ணு மெழுத்துங் கண்ணிவை யாப்பத்திந்
நூற்பயனைக் கண்ணு காண்பார் நற்கதி
காண்டலனு மானங் கதையருத்தா பத்தியிவை
யீண்டிசைத்த வெண்ணெனவே யெண்."

என வரும் பரமததிமிரபானுச் செய்யுளானுங் கண்டு கொள்க. எனவே எண் தருக்கமன்று; எண்ணின் ஓர் கூறென்வே கொள்க. இதுபற்றியன்றே பரிமேலழகர் எண்ணென்ப என்னுங் குறளின் எண்ணென்பது தருக்கம் என எழுதாராயினர். இதனை யுணராது அவ்வுரை மறுத்துரைத்தார் ஒரு சிலர். ஒரு மொழியுட் தனித்துக் கூறப்பட்டது மற்றொரு மொழியுட் சேர்த்துக் கூறப்பட்டிருக்கும். சேர்த்துக் கூறப்பட்டது தனித்துக் கூறப்பட்டிருக்கும். இது கருதாது ஒன்றன்கட் கூறியது வேறொன்றன்கட் கூறப்படவில்லையெனத் துணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல முடியாது. இக்கருத்தாற் திருவள்ளுவரை நாற்பாலை முப்பாலிற் கூறினரென்பர்.

இனிப் பண்டைத் தமிழகத்து அற முதலாய பொருட் கூறுபாட்டின் பெயர்க்கு வேறாக அகம் புறம் என வழங்கினாற்போல் பார்ப்பார் முதலாய மக்கட் கூறுபாட்டிற்குப் பேறாகத் தலைவரும் புலவரும் பிறருமென மக்கட் கூறுபாடு வழங்கப்பட்டது. இவருட் பிறரெனப் படுவார் மக்களும் மாக்களும் என இருதிறப்படுவர். ஏனைய இருவரும் மக்களேயாவர் வகைப்படுதலின்று. சேரசோழபாண்டியர் இவருட் டலைவரெனப்படுவர். இப்பொருள்பற்றியே வேந்தர், புரவலர், அண்ணல், ஏந்தல், குரிசில், வள்ளல் முதலிய பல சொற்களும் வழங்கப்படுவவாயின. இவர்க ளெல்லாரும் திணைமக்களெனப்பட்டார். இப்பெயர் சிறப்புப்பற்றித் தலைவரையும் பிறரையும் குறிக்கும். ஏனைப் புலவரையும் மாக்களையும் பெரும்பான்மையுங் குறித்தலின்று. திணைமக்கள் எனினும் நிலமக்கள் எனினும் ஒக்கும். இவர்கள் இடையூழிக் காலத்தே களவியல் கந்தருவவழக்கம் என ஒப்புமைப்படுத்தினாற்போல ஆரியவகுப்பினராகிய பார்ப்பார் முதலியாரோடு ஒப்புமைப்படுத்தப்பட்டனர்.

அக்காலத்துப் புலவராயினார் சிலரைப் பார்ப்பார்ப்படுத்து வேறு நீக்கியும் சேரசோழ பாண்டியர்களை வேந்தர் எனப்படுவாராய் வேறுபடுவர் என்று அமைத்தும் விளைபொருள்கொண்டு விற்றுத் திரிவாரை விலைஞர் எனத் தொடர்பறுத்தும் ஏனைய நிலைமக்களாகிய நிலமக்களை வேளாளர் என ஓரினப்படுத்தும் தொழில்பற்றி வேறுவேறாக்கப்பட்டு உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமையின்றி எல்லாரும் தம்முள் ஒப்ப ஒழுகினார்கள். அக்காலத்து இந்நால்வருக்கும் வேதவிதிச் சடங்கு ஒன்றாய் நிகழ்ந்தது என்பர் நச்சினார்க்கினியர். எனவே அக்காலத்துச் சாதி ஏற்றத்தாழ்வின்றி நின்றமை பெறப்படுதல் காண்க. பிற்காலத்தே ஏற்றத்தாழ்வு புகுந்தமையால் அழுக்காறு பொறாமை தற்புகழ்ச்சி பிறரையிகழ்தல் முதலியனவெல்லாம் ஊழொன்றுண்டென்பதனையும் கருதாமல் புகுந்து பரந்தன. பண்டெல்லாம் ஐந்திணை மக்களும் அடியரும் வினைவலருமேயுள்ளனர். தமிழ்மக்க ளெல்லாரும் ஐந்திணை மக்கள் எனப்படுவர். அடியரும் வினைவலரும் வேற்றுநாட்டிருந்து குடிபுக்க மக்கட்பாற்படுவர். வேளாளரினின்றும் சேரசோழ பாண்டியர்களைப் பிரித்தமையாற்றான் ஏனைய வேளாளர்க்கும் மூவர்க்கும் தொடர்பு தேய்ந்து மூவாது ஆட்சி பொன்றக் கெடுவதாயிற்று. அவர்கள் கேடு பிறநாட்டார்க்கு ஆக்கத்திற்கு ஏதுவாயிற்று. பண்டைத் தமிழகத்தில் நிலம்பற்றி வேறு வேறு பெயர் கூறப்பட்டாரன்றித் தொழில் மத முதலியவற்றால் வேறு வேறு கூறப்பட்டாரில்லை. நிலம்பற்றிக் கூறப்பட்டக்காலும் மண முதலியன விரவி நிகழ்ந்தமை வழுவாகக் கொள்ளப்படவில்லை. வழுவெனக் கொண்டது பிறமதமேற் கொண்டவாறு. ஐந்திணை மக்கள் எனப்படுவார் குறவரும் மறவரும் இடையரும் உழவரும் உமணரும் என்றிவரே. இவர்கள் எல்லாரும் வேளாளர் எனப்படுவர். ஈண்டு குறவரெனப்படுவார் இஞ்ஞான்றைக் குறிபார்க்கும் ஒருசார் இழிந்தாரல்லர். இவர் ஆரிய மரபினர். வேள் என்றால் நிலம் என்று பொருள். நிலமுடையார் வேளாளர். குறிஞ்சிநிலத்துக்குக் குறவரும் பாலைக்கு மறவரும் முல்லைக்கு இடையரும் மருதத்துக்கு உழவரும் நெய்தற்கு உமணரும் உரியராதலின் அவரெல்லாம் அவ்வந்நில வேளாளர் என்றற்குரியர். தொல்காப்பியத்தும் பார்ப்பார் அரசர் வணிகர் ஒழிந்தாரை வேளாளர் என்றலானும் ஒழிந்தார் திணைமக்களேயாதலானும் ஐந்தாவது வருணம் சொல்லப்படாமையானும் திணைமக்கள் எல்லாரும் வேளாளராவர். இவர்கள் தம்முள் விரவி மணஞ்செய்துகொண்டமை அகத்திணைத் துறைபற்றிவரும் பழஞ்செய்யுட்களானு முணர்க. எல்லாம் மரபுவழு, வழாநிலை, வழுவமைதியாயினும் திணைமுதலியனபற்றிக் கூறப்பட்டன. ஒழிந்தனவற்றை மரபு எனக் கூறியாங்கு எல்லாரும் வேளாளராயினும் வேறு பெயர் பெறுதாரை வேளாளர் என வழங்குக.

தீண்டாமையென்பது பழந்தமிழகக் கோளன்று. "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும், கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவன் அவன்கட் படுமே" யென்றதூஉம் மிகப் பழஞ் செய்யுளன்று. அதன் கண்ணும் நாற்பால் என்றதும் கீழ்ப்பால் மேற்பால் என்றதும் பிறன்கோட் கூறலாகவும் கற்பின் மேற்பாலொருவனு மவன்கட்படுமேயென்றது தன்கோட்கூறலாகவும், கொள்ளக்கூறியமை யுணர்க. "பாணனும் பறையனும் துடியனும் கடம்பனும் தீண்டப் படாதார்க ளல்லர்." இவரும் முதலூழியினரல்லர். ஆண்பாலாரும் பெண்பாலாரும் ஒப்பக்கல்வியும் செல்வமும் உடையராயிருந்தார். ஒப்பக் கொள்ளாமை ஒருசாரார் பிறமதமேற் கொண்டது. இதனைப்பற்றி உயர் திரு ரா. ராகவையங்கார் அவர்களாற் கண்டுரைக்கப்பட்ட "நல்லிசைப் புலமை மெல்லியலார்" என்னும் உரைச்செய்யுள் நன்கு விரித்து விளக்கக்கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, அஞ்ஞான்று சைவம் வைணவம் என்றாற் போலும் வடமொழிப் பெயரால் மதப்பிரிவின்றி கடவுட் கொள்கையை யாராயும் புலமையாளர் எல்லாரும் குழாம் குழாமாகப் பிரிந்து கலாம்விளையாது தாம் தாம் அறிந்தவாறே யொழுகினர். ஆயினும் உண்மைபிழைத்தின்று. அன்பென்பது அவர்களுடைய எல்லைக் குறி. இக்கருத்து "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கின்;" "அன்பினைந் திணைக்களவெனப்படுவது" என்பன முதலிய ஒத்துக்களாற் றெற்றெனப் புலப்படும். இன்னும் தமிழருடைய நற்பண்பு பலவும் மெய்ப்பாட்டியல் முதலியவற்றான் விளங்க உணரலாகும். இத்துணைச் சிறப்பெல்லாம் எய்தியது கீழைநாடுகளாய்ப் பிரிந்தவை நாகராட்சிப்பட்ட இற்றைக்கு ஏறக்குறைய ௩௫ ஆண்டுகட்கு முன்னர்ப் பன்னெடுங்காலம் ஆண்ட அரக்கராட்சிக்கும் முன்னர்த் தோன்றிய இயக்கராட்சியும் தோன்றுதற்பொழுதே தமிழ் மூவராட்சிப்பட்டுக், கடல்கோளால் சிறு சிறு பொழில்களாக ஈழம் சாவகம் என்றாற்போல வேறு வேறு சிதறுண் டொழியாது ஒன்றாயிருந்த காலத்தாமாயின் தமிழகத்தாரை கடவுளர் வழிமரபினர் என்றற்கு மையமுளதேயோ."

இயல் இசை கூத்து எனப் பிறநாட்டுக்கில்லாத அரும்பெருங் கல்வி வரையறைக்குத் துறைப்பொருளாயமைந்த பண்டைத் தமிழகத்தாருடைய பல்வேறு பெருமைகளைத்தும் நுணுகி நுணுகி யாராய்வான்புகின் மூவூழிக்காலமும் ஒரு கணப்பொழுதாக வுடையோனொருவனாலும் கூறவியலாதாயின், யாமா கூறவல்லம்.

இனி, நந்தமிழகம் துயில்நிலை நீங்கி நனிநிலையடையுங் குறி ஆங்காக்குக் காணப்படுகின்றமையின் விரைவின் அத்தமிழகத்தை மகிழ்ந்து வரவேற்ப அமைந்திருக்கின்றனம்.



# மற்றவர்கள்.

சங். Dr. ஐசக் தம்பையா அவர்கள்

இலக்கண நூல்களின் பிரமாணங்களிலும் பிற நடைகளிலும் ஞானவறிவின் விதிகளைக் காணக் கருத்துள்ளவர்களாய் இருப்பவர் அநேகரல்ல. திருவள்ளுவ நாயனார் திருக்குறள் தொடக்கத்திலே இலக்கண உதாரணமொன்றை யெடுத்து ஞானவிதி யொன்றை விளங்கச் செய்திருக்கிறதைக் காண்கிறோம்.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி ஓரிலக்கணப் பிரமாணத்தையெடுத் திப்பத்திரிகை மூலமாய் சில குறிப்புகள் சொல்ல முயலுகின்றேன்.

இலக்கணத்திலே இடம் என்னவென்று தமிழ் மாணவர்கள் அறிவார்கள். இடம் தன்மை, முன்னிலை, படர்க்கையென மூவகைப்படும். தன்மை யிடம் முதலிடம், தன்னைத்தானே குறித்தது. தமிழ்ப் பாஷையில் மாத்திரம் நான் என்ற சொல்லு முதலிடமுடையதாயிருக்கவில்லை. ஆங்கில, பாளி, சமஸ்கிருத, லத்தின், கிரேக்க முதலிய அநேக பாஷைகளும் இவ்விதமே நான் என்ற வார்த்தைக்குத் தன்மையிடம் முதலிடம் கொடுத்து வைத்திருக்கின்றன.

பல பாஷைகளிலும் இவ்விதமாயிருப்பதினால் நான் என்ற சொல்லை முதலிடத்தில் வைக்கிற மானிடர் நான் என்னும் தன்மையைத் தரித்திருக்கிறார்கள். சித்தாந்த நூல்களில் ஆணவம், அகங்காரம், மமகாரம் என்னும் குணங்கள் தமிழ் இலக்கணத்தில் நான் என்ற பதத்துக்கு முதலிடத்தைக் கொடுக்கிற பிரமாணத்தைத் தழுவி நிற்கின்றன. தாயுமானவர் சொல்லியது பெருஞ் சத்தியம்.

ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த
ஆணவத் தினும்வ லிதுகாண்
அறிவினை மயக்கிடும் நடுவறிய வொட்டாது
யாதொன்று தொடினும் அதுவாய்த்
தாங்காது மொழிபேசும் அரிகரப் பிரமாதி
தம்மொடு சமானமென் னும்
தடையற்ற தேரிலஞ் சுருவாணி போலவே
தன்னிலசை யாது நிற்கும்
ஈங்கா ரெனக்குநிகர் என்னப்ர தாபித்
திராவணா கார மாகி
இதயவெளி யெங்கணுந் தன்னரசு நாடுசெய்
திருக்கும்இத னுடெங் கோரமும்
வாங்காவி லாஅடிமை போராட முடியுமோ
மௌனோப தேச குருவே
மந்தரகுரு வேயோக தந்தரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

இது இப்படியிருக்க, நான் கற்றறிந்த பாஷைகளில் ஓரேயொரு பாஷையில் மாத்திரம் **நான் என்ற பதம் படர்க்கையாகிய கடைசியிடத்திலும்** அவர் (அவள்) என்ற பதம் தன்மையாகிய முதலிடத்திலும், வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பாஷை யூதர்களாகிய சனங்கள் பாவிக்கும் எபிரேய பாஷை. நான் அல்ல முதல் அவர் என்ற இலக்கண விதி எபிரேய பாஷையின் மகா அலங்காரங்களில் முக்கியமானது. அவர், அவர், அவர் ..........அதன் பின்தான் நான்! அவ்விலக்கண விதியில் சொயஒறுப்பும் மற்றவர்களைப்பற்றிச் சிந்திக்கும் ஞான முறையு மடங்கியிருக்கின்றன. அதில் நின்று வருஞ் செய்கையானது என்ன? ஊழியம், பணிவிடை மற்றவர்களைப்பற்றி உணருதல், அவர்களுக்காக வனுதாபப்படுதல், அவர்களுக்கு நன்மை செய்தல். ஈஸ்பரன் இச்சாசக்தி நிறைந்து மானிடசாதி ஈடேற மானிட சாயலணிந்து அடிபார்க்கெளியவனா யிவ்வுலகி லுதித்தாரென்று சைவ சாத்திரங்களிலும் கிறிஸ்தவ சாத்திரங்களிலுங் கூறப்பட்டிருக்கின்றது.

அவர், அவர், அவர்..........இது தன்மையாகிய முதலிடச்சொல், இந்த விலக்கணத்தையுடைய யூதர் தங்களுடைய வேதத்தின் முதலாம் புத்தகத்தின், முதலா மதிகாரத்தின், முதலாம் வசனத்தை ஆதியிலே ஈஸ்பரன் என்று தொடங்கியிருக்கிறார்கள். ஆதியில் ஈஸ்பரன்..........புதுவருட ஆரம்பத்திலே ஈஸ்பரன் ..........அவர், ஈஸ்பரன் தன்மையாகிய முதலிடத்தையுடையவர்..........இது இலக்கணவிதி..........

அவர், அவர், அவர்..........இது தன்மையாகிய முதலிடச்சொல்..........அவர், அவர், அவர்..........மற்றவர்கள், ஆகையால் அவர்களுக்கே முதலிடம்.

நான், நான், நான்..........எனக்குப் படர்க்கையாகிய கடைசியிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னகம், ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள்



ஸ்ரீமத். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்




சுன்னகம், Dr. வேதவனம்–வைத்தியலிங்கம் அவர்கள்
L.M.S. (Ceylon) L.C.P.& S (Edin) L. R. F. P & S (Lond)



பிரபல நியாய வாதியும்
சைவ சித்தாந்த உணர்ச்சி மிக்கவரும்
தமிழ்ப் பேரறிஞருமான
தெல்லிப்பழை, திரு. க. தம்பையா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நவாலி, திரு. க. சோமசுந்தரப்புலவர் அவர்கள்



சேர். பொன். இராமநாதன் அவர்கள்



தெல்லிப்பழை மகாஜன ஆங்கிலவித்தியாசாலை ஸ்தாபகர்
திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள்



சேர். பொன். அருணாசலம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணவாசிகளின் தேகாரோக்கியம்

(திரு. க. பாலசிங்கம் அவர்கள்)

ஒரு தேசம் விருத்தியெய்தி மேனிலையை அடைவதற்கு அத்தேசத்தவர்களின் தேகாரோக்கியம் மிகவும் பிரதானமாகும். இவ்விஷயத்தை ஆதாரமாகக்கொண்டு நோக்கின், யாழ்ப்பாணநாடு சிறிதும் விருத்தியடையவில்லையென்றே கூறவேண்டும். ஒல்லாந்தர் அரசியற்காலத்தும், பிறிட்டிஷார் அரசியலை நடத்த ஆரம்பித்தகாலத்தும் யாழ்ப்பாணமானது இலங்கையின் எப்பாகத்திலும் ஆரோக்கியத்துக்கு மிகப் பிரசித்தி பெற்றநாடாக யாவராலும் மதிக்கப்பட்டிருந்தது. இலங்கைப் பிரதம பதிவு உத்தியோகஸ்தரின் (Registrar General) அறிக்கைப்படி யாழ்ப்பாணத்தில் பின் காட்டப்படும் வருடங்களில் 1000 பேருக்கு எத்தனைபேர் இறந்தனரென்பதை இலகுவில் அறியலாகும்.



[க. பாலசிங்கம் அவர்கள்]

| வருடம் | | 1000 பேருள் இறந்தோர் தொகை |
|---|---|---|
| 1882 | .... | 13.6 |
| 1884 | .... | 18.0 |
| 1892 | ... | 22.6 |
| 1894 | .... | 23.1 |
| 1902 | .... | 25.7 |
| 1904 | .... | 35.9 |
| 1914 | .... | 33.3 |

1916-ம் வருடம் தொடக்கமாக 1926-ம் வருடம்வரையில், அதாவது, பத்து வருடங்களில் யாழ்ப்பாணத்திலே இறந்தோர் தொகை ஆயிரத்துக்கு 29.2 பேராகும். சிங்களநாடுகளிற்போல் யாழ்ப்பாணத்தில் சனத்தொகைஅதிகரித்துவரக்காணோம். இவ்வாறு இறப்போர் தொகை கூடிக்கொண்டு வருவதற்கும் சனத்தொகை அதிகரியாதிருப்பதற்கும் காரணம் யாழ்ப்பாணத்தவர் உட்கொள்ளும் சீரணசக்தி குறைந்த உணவே. இதைப்பற்றி நான் முன்னர்ப் பன்முறையெடுத்து விளக்கியுள்ளேன். இன்னோர்குறை யாதெனில், குழந்தைகள் அருந்துவதற்குப் பால் போதியளவுஇல்லாமையே.

இப்போது புறநாடுகளிலிருந்து பெறப்படும் பாலாகாரங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கேற்றனவன்று. சிற்சிலபோது பெருங் கெடுதியையும் உண்டுபண்ணுகின்றன. யாழ்ப்பாணத்தில் பால்மாடுகளைக் காப்பாற்றுவதும் இலகுவான வேலையன்று. அவைகட்கு உணவும் புறநாடுகளிலிருந்தே பெறப்படவேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள பசுக்கள் போதியபாலைக் கொடுக்கக்கூடியனவல்ல. நல்ல போதிய உணவுகளை அம்மாடுகட்கு ஊட்டினும் அவைகள் சிந்து, ஐரோப்பா என்னுமிடங்களிலிருந்து வரும் பசுக்கள்போல் அதிகம் பாலைக் கொடா. ஆகையால் பொதுவாக யாழ்ப்பாணத்தில் எல்லாப் பசுமாடுகட்கும் எள்ளுப் பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை என்பனவற்றை உணவாகக்கொடுப்பது புத்தியான காரியமன்று. ஆகையால், இந்தியாவிலிருந்து அதிகம் பால் கொடுக்கக்கூடிய பால்மாடுகளைத் தருவித்து அவைகட்கு, பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை, தவிடு என்பனவற்றை ஏராளமாக உணவாகக் கொடுப்பது முறையாகும். மேலும் யாழ்ப்பாணத்தில் பசுக்கள் மேய்வதற்குப் போதிய புற்றரைகள் கிடையா. புற்றரைகள் தானிருப்பினும் வேறு உணவு (பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை முதலியன) கொடாமல் அதிகம் பாலினை யாழ்ப்பாணப் பசுக்களிலிருந்து பெறவியலாதாகும். மழை அதிகம்குறைந்தவிடமாகும் யாழ்ப்பாணத்தில் அதிகம் செலவின்றிப் பாலாடுகள் வளர்க்கலாம். கிராமங்களில் மாத்திரமன்று பட்டினங்களிலும் ஒவ்வொரு வீட்டிலும் சிறிது செலவுடன் பாலாடுகளை நன்கு காப்பாற்றக்கூடியதாக விருக்கின்றது. இரண்டு மூன்று போத்தல் பால் கொடுக்கும் ஆடுகளும் இருக்கின்றன. சில ஆடுகள் மாடுகளிலும் பார்க்க அதிக பாலைக் கொடுக்கின்றன.

இவ்வாறு நாம் பால் போதியளவு பெறுதற்கு உபாயங்களைக் கைக்கொள்ளாவிடின் இப்போது நடந்து வருவதுபோல் அதிக குழந்தைகள் யாழ்ப்பாணத்தில் இறந்துகொண்டே வரும். குழந்தைகள் மாத்திரமன்று மற்றையோரும் ஆரோக்கியமாக வாழவேண்டுமாயின், பாலினை அதிகமாக உபயோகிக்கவேண்டும். தாவர உணவிலிருக்கும் உயிர்ச் சத்துகள் (Vitmins) மாத்திரம் எமது ஆரோக்கியத்தைப் பழுதடையாது காப்பதற்குப் போதியனவாகா. இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இறப்போர் தொகை யதிகரித்து வருவதைத் தடுக்கவேண்டுமாயின் நாம் ஆடுகளை வளர்த்து அதன் பாலினை நன்கு உபயோகிக்க முற்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விபயின்ற வாலிபரும் வேலையில்லாத் திண்டாட்டமும்

(இலங்கையரசினர் ஈட்டுவேங்கி அதிபர், திரு ஜெ. தியாகராஜா, M. A., L.L. B. (Cantab) அவர்கள்)

'ஈழகேசரி' ஆசிரியரின் கேள்விப்படி, கல்விகற்று உத்தியோகம்பெருது வாளாவிருக்கும் வாலிபரின் நிலைமையைக்குறித்துச் சில கூறவேண்டியிருக்கிறது. இக் கட்டுரை யாவர்க்கும் புதிய விருந்தாகுமென்பது எனது கருத்து. இவ் வேலையில்லாத் திண்டாட்டம் இலங்கையிலுள்ள கல்விபயின்ற வாலிபரைமாத்திரம் வருத்துவதன்று. இக்கஷ்ட முலக மெங்கும் பரம்பிப் பெரிய துன்பத்தை விளைப்பது எவருமறிந்த விஷயம். விசேடமாகக் கைத்தொழில், நாகரிகம் என்பவற்றில் அதிகம் முன்னேற்ற மடைந்து செல்வம் நிறைந்த ஐரோப்பிய நாடுகளிலும் இந்நோய் பெரிதும் காணப்படுகின்றது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளில் அதி தீவிர விவேகம் படைத்த பேரறிஞர்கள் தங்கள் தங்கள் கடமைகளையும் முயற்சிகளையும் செய்வதற்கு இவ் வேலையில்லாத் திண்டாட்டம் பெருந் தடையாயிருக்கின்றது. எந் நாடுகளிலும் பார்க்க இலங்கையிலும் இந்தியாவிலும் இக்கொடிய நோய்பரம்பி அதிக சங்கடத்தை விளைத்துநிற்கின்றது. இவ்விரு நாடுகளின் நிலைகள் ஒன்றற்கொன்று பலவிதத்திலும் ஒத்திருக்கின்றன.



[ஜெ. தியாகராஜா அவர்கள்]

சீவனோபாயத்திற் குழைப்பதற்கு நம்மவர் புதுப் புதுத் துறைகளை அனுட்டிப்பதற்குப் பெருந்தடையாயிருப்பன, நமது பரம்பரையும், வாழ்க்கை நோக்கும், சுபாவமுமே. இக் காரணங்களாற்றான் வேலையில்லாத் திண்டாட்டம் இலங்கையிலும் இந்தியாவிலும் மிகப் பயங்கரமான வடிவத்தைக் கொண்டுளது. வைத்தியம், சட்டம்,। அரசாங்க உத்தியோகம் என்ற மூன்றுமே நமது வாலிபர் வணங்குந் தெய்வங்களாகும். இவைகளைப் பெருமை படைத்த விசேட பொருள்களென நம்மவர் மூடத்தனமாக விளங்கிக் கொள்ளுகிருர்கள். பெறுதற்கரியதென எண்ணப்படும் மேற்படி உத்தியோகங்களை அடைதற்கு வாலிபர் தங்கள் அரியகாலத்தையும் தமது பெற்ருேரது பாடுபட்டுத் தேடிய பணத்தையும் செலவுசெய்த பின்னரே தமது எண்ணங்கள் நிறைவேருதிருப்பதையும், பொருள்வருவாய் இல்லாதிருப்பதையும் உணர்கின்றனர். தமது பெற்ருர் பயின்று பெருமையடைந்தனர்; தாமும் அதனைப் பழகிப் பெருமையைப் பெறலாம் என்ற நோக்கத்துடனேயே நமதுவாலிபர் வைத்தியத்தையும் சட்டத்தையும் (Law) கற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றனர். ஆனுல் இவ்விரு உத்தியோகங்களைக் கையேற்ருேர் தொகை மிகவதிகமென்பதையும் அவைகளைத் துணைக்கொண்டு சிறிதாவது பெருமையடைதல் இலகுவன்றென்பதையும் இவர்களுணர்வதில்லை. இதனுற்ருன் வாலிபர்களது வாழ்க்கை சித்தியில்லாததாயும் உபயோகமற்றதாயுமாகிவிடுகிறது.

மேலைத்தேசத்தவர்களிலிருந்து எத்தனையோ தீய பழக்கங்களையும் வழக்கங்களையும் நாம் பெற்றதுண்டு. உத்தியோகம் பெற்று வாழ்ந்தாற்ருன் பெருமையுண்டென்பதையும் அவர்களிட மிருந்தே கற்றுக்கொண்டோம். மேலைத் தேசத்தவரும் உத்தியோக வாழ்க்கையே பெருமையுடையதென்பதனைப் பழைய கிரேக்க சாதியாரிடம் கற்றுக்கொண்டனர். பிளேற்ருே (Plato) அரிஸ்ருேற்றில் (Aristotle) முதலிய கிரேக்க சலைக் ஞானிகள் கல்விகற்றுப் பேரறிஞராய்த் தமது அரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகத்தை உபயோகிக்கக் கூடிய உத்தியோகங்களே பெருமை பொருந்தியனவென்றும், உடம்பிற்கு ஆயாசத்தைக் கொடுக்கும் வேலைகள் அடிமைகளின் தொழிலென்றுங் கருதினர். கிரேக்க சமூக வாழ்க்கையும் இந்த விதமாகவே அமைக்கப்பட்டிருந்ததெனலாம். பொருள் வருவாயை உடையவர்கள் கல்வியைக்கற்றுப் பேரறிஞராயினர். இவர்களுட் சிலர் வைத்தியத்தையும் சிலர் சட்டத்தையும் கற்று அது அதற்குரிய தொழில்களை நடத்தினர். சிலர் கலை பயிற்றுவதில் காலத்தைக் கழித்தனர். ஆனால் பெரும் பான்மையோர் அடிமைகளாகவிருந்து மற்றையோர் வேலைகளைச் செய்து வந்தனர். அவையாவன: வியாபாரம், கைத்தொழில் என்பவைகளே. அக்காலத்துக் கிரேக்க தேச நகரங்களின் அரசியலமைப்பும் பொருளாதாரநிலைமையும் இவ்வித ஒழுங்குகட்கெல்லாம் ஏற்றதாக விருந்தன. பொருளாதாரநிலைமை பெரிதும் சீர்குலைந்து பின்னமடைந்த பெரிய அரசாங்கங்களில் கிரேக்கரின் கொள்கைகளை அனுட்டானத்துக்குக் கொண்டுவருவது இலகுவன்று. இப்படியாயினும் அக்கொள்கைகள் அடியோடற்றுப்போகாது சிற்சில விடங்களில் நிலைபெற்றுப் பெருந் தீமைகளை விளைவித்து வந்துள்ளன. ஆனால் இவ்விதக் கொள்கைகள் சாதிப்பைத்தியம் மிகத் தடிப்பெய்திய கீழைத்தேசங்களில் வருவித்த தீமைகட்கு அளவின்று. அங்கே ஒவ்வொரு சமுதாயத்தவரும் எத்தனையோ வகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். கீழைத்தேசத்தவரின் சால சுவாத்தியமும், சமயக் கோட்பாடுகளும் அவர்களைச் சோம்பர்களாகவும் ஆழ்ந்தசிந்தை யுடையவராகவும் செய்தனவே யன்றி முயற்சியுடையராகவும், திடமுடையவராகவும் செய்தில. சில உத்தியோகங்களைப் பெருமை யுடையன வென எண்ணும் மூடத்தனத்தை முற்றாக நீக்கிக்கொள்ளவேண்டும். வியாபாரம் முதலிய மற்றைய தொழில்களை நன்கு நடாத்தி ஊதியம் பெறும் ஆற்றலை நம்மவர் பெறவேண்டும்.

அதிதீவிர விவேகம் படைத்தோர் பணவங்கிகளை ஸ்தாபித்துப் பணநிர்வாகத்தை நாட்டில் ஸ்திரப்படுத்தும் தொழிலை நடத்தலாம். அரசினரின் உதவியைக் கொண்டு நடத்தப்படும் ஒரு வங்கி இலங்கையில் ஸ்தாபிக்கப்படப்போகின்றது. அதனை நடத்தக்கூடிய உயர்ந்த அனுபவம் பெற்ற உத்தியோகத்தர் இலங்கையில் கிடைக்கப்பெறுமையால் பிறநாடுகளிலிருந்து அவர்கள் அழைக்கப்படவேண்டியிருக்கின்றனர். இவ்வங்கியை நடாத்தும் அதிகாரசபையினராக (Directors) உத்தியோகம் வகிப்பதற்கும் பல்வேறு தொழில் முறைகளிலும் அனுபவம் வாய்ந்தவர்கள் இலங்கையில் இல்லாமையால் அவர்களையும் பெற அந்நிய நாடுகளையே எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. எல்லா உத்தியோகத்தரும் பிறநாடுகளில் இருந்துவர, இதென்ன? பார்க்க வயிறெரிகின்றதே! அரசாங்கசபையினர் முயற்சியால் தோன்றிய இவ்விஷயம் என்ன அதிசயத்தை உண்டுபண்ணுகின்றது. விவேகம் படைத்த நூற்றுக்கணக்கான வாலிபர் இலங்கையிலிருந்தும் உபயோகமில்லாதவராகின்றனரே. வங்கித்தொழில் இவர்க்குப் பயிற்சிவரப்பெறுமையால் அந்நிய நாடுகளிலிருந்து உத்தியோகத்தர் வரவழைக்கப்பட வேண்டியவராகின்றனர். வரவழைக்கப்பட்டு இங்கே வரும் உத்தியோகத்தரை நாம்குறைகூறியென்ன பயன்? எங்களையே நாங்கள் குறை கூறிக்கொள்வது உத்தமம். இப்போது இத்தொழிலை நடாத்த நமது வாலிபர் அருகராகாவிடினும் விரைவில் அத்தொழிலை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இது ஒருபுறமாக, மின்சாரப் பகுதியிலும் நமது வாலிபர்க்கு அனுபவம் மிகக் குறைவாகவே யிருக்கிறது. மின்சாரத்தொழிலில் அதிக அனுபவம் படைத்த நிபுணர்கள் இலங்கையில் இல்லாமையால் அவர்களும் பிறநாடுகளிலிருந்தே கொண்டுவரப்படவேண்டி யிருக்கிறது. இவ்விலங்கையிலோ வைத்தியர்கள், நியாயதுரந்தரர்கள், அரசியல்வாதிகள் என்போர் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. ஆனால் இலங்கைத் தீவின் பொருளாதாரநிலைமையைச் சீர்ப்படுத்தி அதனைச் செல்வம் நிறைந்த நாடாகச் செய்வதற்கு உதவியாகக் கூடியவர் வியாபாரிகளும், தொழிலறிஞருமே. இவர்கள் இங்கே யில்லாதிருப்பது பெருங்குறையே. மிகப் பரிதாபமான விஷயம் யாதெனில், நியாயதுரந்தரர்கள், அரசியல்வாதிகள், வைத்தியர்கள் என்போரின் தொகை இடைவிடாது அதிகரித்துக்கொண்டுவர, தேசவிருத்திக்கு உழைக்கக்கூடிய தொழிலாளர், பணநிர்வாகிகள், வியாபாரிகள் என்போரின் தொகை அருகிக்கொண்டு வருவதே. அரசாங்க உத்தியோகத்தை மாத்திரம் நாடிநின்று, காலமும் வயதியும் வாய்த்தபோதெல்லாம் வாய்ப்பேச்சளவில் சுதந்திரமுழக்கஞ் செய்து நிற்பின் நமது நாடு விரைவில் செல்வங் குன்றிக் கீழ்நிலையை அடையுமென்பதை இப்பிரதான தேசமாகும் இலங்கையில் வசிப்போர் நினைப்பின் அதுவே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முதற்செய்த முயற்சியாக மதிக்கப்படலாம்.

இலங்கையின் கல்விமுறை பெரிதும் திருத்தியமைக்கப்படவேண்டும். வித்தியாசாலைகளில் கற்றுக்கொடுக்கப்படுங் கல்வி வருங்காலத்து உபயோகத்தை நாடியதாயிருப்பது அவசியம். இலக்கியம் அதாவது, பாஷையைக் கற்பதிலேயே இப்போது விசேஷ கவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெடுக்கப்படுகின்றது. அனுட்டானத்தில் உபயோக மளிக்குங் கல்வியைக் கவனிப்பவர் மிகச் சிலரே. பாஷையில் பாண்டித்தியமடையும் நோக்கமாகக் கற்கப்படுங் கல்வியை நான் முற்றாக ஒதுக்கவில்லை. பின் நான் கூறுவது யாதெனில், அரசியல் விஷயமாகவும், நகரபரிபாலன விஷயமாகவும் நம்மவர் அதிகம் ஆதிக்க முடையராய் வாழ்வதற்கு ஏற்ற கல்வியைக் கற்க வேண்டுமென்பதே. இவ்வித கல்வி கற்றற்குத் தகுந்தவர்க்கே இக்கல்வி கற்பிக்கப்படவேண்டும். மற்றைய வாலிபர்க்குச் சாதாரணமான பொதுக்கல்வி கற்பிக்கப்படவேண்டும். ஓரளவுக்குக் கற்றவுடன் ஓர் தொழிலைக் குறித்த கல்வி கற்பிக்கப்படவேண்டும். இவர்கட்கு அதிக இலக்கியக்கல்வி வேண்டியதில்லை. ஒவ்வொரு மாணவனையும் நன்கு பரீட்சித்துப்பார்த்து இன்ன இன்ன உத்தியோகத்தை அல்லது தொழிலை நடத்த அம்மாணவன் தகுந்தவன் என்பதை முடிவுசெய்வதற்கு ஓர் ஆசிரியர் ஒவ்வொரு வித்தியாசாலையிலும் ஏற்படுத்தப்படவேண்டும். பெற்றோரும் மாணவரும் இவ்வாசிரியரின் உதவியைக்கொண்டு ஏற்ற தொழிலைத் தெரிந்துகொள்ளவும் பின் அத்தொழிலுக்கியையக் கல்விகற்று வேலையைப்பழகி உத்தியோகம் பெறவும் கூடியதாகவேண்டும். வித்தியாசாலையை விட்டவுடன் உத்தியோகத்தை நாடும் மாணவரையே இவ்வாசிரியர் வழிகாட்டிநிற்பர். அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகத்தை அல்லது வைத்தியத்தை அல்லது சட்டத்தைக்குறித்துக் கற்கவிரும்பும் மாணவரின் நோக்கத்துக்கு இவர்ஒருபோதும் முட்டுக்கட்டையாகக் கூடாது. இவ்வித ஒழுங்குகள் ஏற்படின் எத்தனையோ வாலிபர் வீணேயலைந்து கெட்டுப்போகாது நல்வழியில் சென்று உபயோகமுள்ளவர்களாய் வரக்கூடியவராவர்.

மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவேண்டுமாயின் பின்வரும் மூன்று விஷயங்களும் பெரிதும் கவனிக்கப்படவேண்டும்.

(1) சில தொழில்கள்பெருமையுடையன, சில தொழில்கள் இழிந்தனவென மூடத்தனமாக எண்ணுது ஒவ்வொரு தொழிலையும் அதன் நிலைமைக்கியைய நோக்குதல் அவசியம்.

(2) நமது நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்தவேண்டில் ஒரு திட்டத்தை வகுத்து எல்லோரும் ஒற்றுமையாய் அதைப் பூர்த்திசெய்ய முயலவேண்டும்.

(3) தற்காலத்துக்கியைய நமது கல்வி முறை பெரிதும் திருத்தியமைக்கப்படவேண்டும்.

---

ஒருவர் தமது சிநேகிதியின் திருமணத்துக்கு ஓர் ஆசீர்வாதத் தந்தியனுப்ப நேர்ந்தது. "ஜோனின் முதலாங் கற்பனையில் பதினெட்டாம்பாட்டை வாசிக்கவும்" என்றதே இவர் அனுப்பிய ஆசீர்வாதம். கற்பனையிலுள்ள வாசகம் "காதலுக்கஞ்சவேண்டாம். ஏனெனில் காதல் அச்சத்தைத் துரத்திவிடும்" என்பதே. இச்செய்தியைத் தந்திக் கந்தோரில் எழுதியனுப்பியவர் கவலையீனமாக "முதலாங் கற்பனை" என்றதை எழுதாது "ஜோனின் பதினெட்டாம் பாட்டை வாசிக்கவும்" என்று எழுதியனுப்பினர். மணப்பெண் பதினெட்டாம்பாட்டை வாசித்துப்பார்த்போது "நீ ஐந்து புருஷரை வைத்திருந்துவிட்டாய். இப்போ இருக்கிறவரும் உனது புருஷரல்லர்" என்று எழுதப்பட்டிருந்தது.

* * * *

மணியகாரன்: நீ வெள்ளைக்காரனா? ஆங்கிலத்தில் பேசவேண்டாம்!

முறைப்பாடுகாரன்: ஆங்கிலந்தெரியாத கறுத்தவனே! ஏன் இந்தப்பதவியை உன்மேல் சுமத்தினுப்?

வித்தியாகர்த்தர் ஓர் மாணவனின் தகப்பனுக்குப் பின்வரும் கடிதத்தை எழுதினர். "ஐயா, தங்கள் கடிதங் கிடைத்தது. அதைப்பற்றிக் கவனிக்கப்படும். .......இங்ஙனம் தங்கள் ஊழியன்.......வித்தியாகர்த்தர்." இதற்கு மாணவனின் தகப்பன் எழுதிய மறுமொழி: "எனது ஊழியன் அறியவேண்டியது: எனது விஷயத்தில் கவனமாக இருக்கவேண்டும்...........இங்ஙனம் உனது ஐயா...........

* * * *

கள்ளநாணய நோட்டொன்று கண்டுபிடித்திருப்பதாகச் சட்டத்தலைவருக்கு ஒருவர் தெரிவித்தார். அந்த நோட்டைத் தனக்கனுப்பும்படி சட்டத்தலைவர் தெரிவித்தார். அதற்குச் சட்டத்தலைவருக்குக் கிடைத்த மறுமொழி: "ஐயா! தங்கள் கடிதங்கிடைத்தது....... அந்த நோட்டை 'மணியோடர்' மூலமாகத் தங்களுக்கு அனுப்பிவைத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாபு சுபாஸ் சந்திரபோஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கத்துச்சிங்கம் ஸ்ரீஜத் சுபாஸ் சந்திரபோஸ்

# "இந்திய போராட்டம்"

"சே. சி."

[வங்காளத்துத் தேசபக்தர் திலகமாகிய பாபு சுபாஷ் சந்திரபோஸ் சமீபத்தில் தாம் எழுதி வெளியிட்டுள்ள "இந்தியபோராட்டம்" என்ற நூலின் கடைசி அத்தியாயத்தில் பின்வரும் கட்டுரை எழுதுகிறார்.

இந்நூலானது புரட்சிக்கொள்கை யுடையதாயிருக்கிறதென்று இந்திய அரசாங்கம் இந்நூலை இந்தியாவில் பரவ விடாமல் தடைசெய்துவிட்டது.

பாபுசுபாஷுக்கு இன்னும் 40 வயதாகவில்லை, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கல்வி பயின்றபின் இவர் இந்திய சிவில் சர்விஸ் பரீட்சையிற் சித்தியடைந்தார். இச்சமயத்தில் இந்தியாவிலே சுதந்தர இயக்கம் வெகு மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. தேச பக்தி கொழுந்துவிட்டெரியும் இவருடைய மனதில் இந்தியத் தாயின் சுதந்திரத்தாகம் தணியாது மேற்பட்டது. உடனே தமது பதவியைத் திரண மாத்திரையாக உதறி எறிந்துவிட்டு மேல்நாட்டிலிருந்து தாயகம்நோக்கி வந்தார். அப்பொழுது வங்கத்துச்சிங்கம் தேசபந்து சித்தரஞ்சனதாஸ் தேசிய இயக்கத்து முன்னிலையில் நின்று அருந் தொண்டாற்றுவதைக் கண்டு அவருடைய தலைமையின்கீழ் தொண்டாற்ற முற்பட்டார்.

சங்கங்களையும் நிர்வாக ஸ்தாபனங்களை அமைத்து நிர்வகிக்கும் திறமையும், சுதந்திரப்பேற்றை முன்னிட்டு உலகத்திலுள்ள பல தேசத்தவர்களும் என்னமுறையில் போராடினார்கள் என்பதை சர்வதேச சரித்திரவாயிலாக அறிந்திருக்கும் சரித்திர அறிவும், உள்ளத்தில் என்றும் தணியாது அழன்றுகொண்டிருக்கும் தேசிய உணர்ச்சியும் இவரை வங்கத்துச் சத்தியாக்கிரகத் தொண்டர்களின் முன்னணியில் நிற்கச்செய்தன. அன்றுதொட்டு இவரை இந்திய அரசாங்கம் அடுத்தடுத்து 9 முறை சிறையிலடைத்து விட்டது. அரச வாழ்க்கை வாழும் சுபாஷ் சந்திரருக்கு இந்திய சிறை வாழ்க்கை பொருந்துமா? உடம்பிலே நோயுண்டாகி அவரை வருத்திற்று. இந்திய வைத்திய நிபுணர்களெல்லாரும், தன்னாட்டிற்காகச் சுகத்தையிழந்து நோய்வாய்ப்பட்ட இப்பக்தர்திலகத்தைச் சோதனைசெய்தும் உற்றநோயைக் கண்டுகொள்ள முடியாதிருந்தனர். தான் அருமையாக உயிரினும் பெரிதாய் நேசித்த தாய்நாட்டை விட்டு மத்திய ஐரோப்பிய வைத்தியசாலைகளை நாடினார்.

"வீரசுதந்திரம் வேண்டிநின்றார்" இவராதலின் தாமதமும் ஆறுதலும் இவரிடத்து எங்ஙனம் எதிர்பார்க்கலாம். மகாத்மாகாந்தியுடைய தலைமையில் இவர் அதிருப்தி கொண்டதை இரகசியமாக வைத்துக்கொள்ளாமல் பகிரங்கமாகக் கூறிவருகிறார். பிரத்தியட்சமான அரசியல்பிரச்சினைகளை நேர்நேரே கண்டறிந்து தீர்த்துவைக்கவேண்டுமென்ற கொள்கையுடையார். மகாத்மா காந்தி சத்தியாக்கிரகமென்ற புதிய ஒரு கொள்கைக்குத் தலைவராகவும் இந்திய தேசிய இயர்கத்தின் தலைவராகவும் இருப்பது பொருந்தாது. இம்மாதிரியான இரண்டுவிதப்பட்ட தலைமைக்கும் ஒருவர் தலைவராயிப்பது ஒன்றையொன்று பலவீனப்படுத்துவதாகு மென்றும் அதனால் இந்திய சுதந்திர இயக்கம் வலியிழந்து விடுமென்றும் இவர் நம்பித் தமது நம்பிக்கையைப் பிரசித்தப்படுத்தி வருகிறார்.

இவ்வாசிரியரின் கொள்கைகளை எல்லாரும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இவர் இன்னாட்டிற்காகச் செய்த அரும் பெருந் தியாகங்களைப்பற்றி நினைவு கூருவாரெவரும் இப்பெரியார்மாட்டு அதிசயமும் பக்தியும் கொள்ளாதிருப்பாரா? இவருடைய தியாகமன்றோ தியாகம். இலங்கையிலுள்ள தேசியக்கொள்கையுடையார்க்கு இவர் ஒரு மலைவிளக்குப்போலல்லவா இருக்கிறார்.

"ஈழகேசரி" இவருடைய நூலின் ஒரு அத்தியாயத்தை ஈண்டு மிகமகிழ்ச்சியுடன் மொழிபெயர்த்துத் தரக்கூடியதா யிருக்கிறது. தொழிற்கட்சியின் பத்திரிகையாயுள்ள "டெய்லிஹெரல்"ட்டின் வெளிநாட்டு விஷய ஆசிரியரால் "இந்தியாவைப்பற்றி இதுகாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துள்ள நூல்களுள் தலைசிறந்தது இந்நூலே" என்று விதந்தோதப்படும் இந்நூலை, ஆங்கிலங்கற்ற நமது வாசகர்கள் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களென நம்புகிறோம்.]

### இந்திய போராட்டம்

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் தற்போதைய ஆயுட்காலம் 1936-ம் வருடத்துடன் முடிவடைந்து விடுமாதலால், இந்திய அரசியல் சீர்திருத்த மசோதா இதற்கிடையில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுவிடும். இந்திய அரசியல் திட்டத்தை ஆதரிப்போருக்கும் அதனை எதிர்க்கும் சர்ச்சில் கோஷ்டியினருக்குமிடையில் பலத்த விவாதம் தற்போது நடைபெறுகிறது. ஆனால் இதைபிட்டு இந்தியா எவ்வித அக்கறையுங் கொள்ளமாட்டாது. ஏனெனில், புதிய இவ்வரசியல் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் வெகு சொற்பமே. எனவே இதை மேலும் குறைத்தாலென்ன தலைமுழுகச் செய்தாலென்ன இந்தியர் அதையிட்டுத் துக்கமுறார். ஆனால் சுதந்திரப் போராட்டத்திலீடுபட்டு நீண்டகாலம் கஷ்டப்பட்ட இந்தியர், இனிமேல் ஆறுதலாக அமர்ந்து நாட்டின் முற்போக்குக்கான ஆக்கவேலைகளைச் செய்வதற்கு, புதிய இவ்வரசியல் திட்டம் சந்தர்ப்பங் கொடுக்கவில்லை என்பதே இந்தியரால் பெரிதுங் கருதப்பட்டு வருகிறது. அரசாங்கங்கூட இந்நிலைமையைச் செவ்வனே அறியாது பிரித்தாளும் தனது கொள்கையைப் புகுத்தி நிற்பது, எதிர்ப்புக்கட்சியின் பலத்தைக் கூட்டுவதற்கே ஏதுவாகும். சிறுபான்மையினரான முஸ்லிம்கள், தாழ்த்தப்பட்டோர் இந்திய கிறிஸ்தவர் ஆங்கிலோ இந்தியர் ஆகியோரின் துணையைக்கொண்டு தேசீயக் கட்சியின் எதிர்ப்பை மூடிமறைத்து விடலாமென அரசாங்கம் எண்ணுகிறது. தேசீயவாதிகளின் செல்வாக்கென்பது நாட்டிலே கருதத்தக்கவொன்றல்லவென அரசாங்கம் செய்யும் இம்முயற்சி சித்திபெறுமா? சொற்ப காலத்துக்கு இச்சிறுபான்மையினர் அதிகாரிகளுடைய சொல்லுக்கு அமைந்து நடக்கக்கூடும். வகுப்புத் தீர்ப்பினால் (Communal Award) அதிகாரிகள் சிறுபான்மையினர்க்குச்செய்த நன்றியை நினைத்து அவர்கள் இவ்வாறு நன்றியறிதல் காட்டவேண்டியது சகசமே. ஆனால் இந்நிலைமை எத்தனைநாளைக்கு நிலைத்திருக்கும்? கொஞ்சநாளைக்குத்தான். ஏன்? வகுப்புத் தீர்ப்பின்படி சிறுபான்மையினர் சட்ட சபைகளில் அதிகப்படியான விசேஷ ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறார்களேயன்றி உண்மையான பொறுப்பை அவர்களாவது பெரும்பான்மையினராவது பெறவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் ஸ்தானங்களைத் தந்ததேயல்லாமல் உண்மையான பொறுப்பைத் தரவில்லை என்பதை, சட்டசபைப் பிரதிநிதிகள் அறிந்துகொள்வதற்கு அதிகநேரஞ்செல்லாது. இனி சட்டசபையிலுள்ள பிரதிநிதிகளும் பொதுசனநன்மைக்கான விஷயங்களைச் செய்தாலன்றி அவர்களின் விசுவாசத்தைப் பெறமாட்டார்கள். உரிமை தம்வசமில்லாதிருக்கும் பட்சத்தில் மகாசனங்களின் தேவையைப் பூர்த்திசெய்வதெப்படி? இவ்வாறு நாட்டிலுள்ள சிறுபான்மைக் கட்சியினரும் பெரும்பான்மைக் கட்சியினரும் தமது செயலற்ற தன்மையை அறிந்தவுடன் சட்டசபைகளில் அதிக அக்கறைகொள்ள மாட்டார்கள். நாளடைவில் அரசியல் திட்டத்தின்மீது பொதுசன அதிருப்தி உண்டாகும். இந்தியாவின் பொருளாதார நெருக்கடி மேலும் இந்த அதிருப்தியை அதிகப்படுத்தும். பிரிட்டனிலாவது வேறு எத்தேசங்களிலாவது ஏற்படக்கூடிய பொருளாதார சம்பந்தமான மாற்றம் இந்தியாவின் நிலைமையை மாற்றமாட்டாது.

இந்திய சிறுபான்மை வகுப்பினரின் உதவி பிரிட்டனுக்கு அவ்வளவு துணைசெய்யமாட்டாதென்பதற்கு வேறு பல காரணங்களுமுண்டு. முதலாவதாக ஹிந்துக்களுள் தேசீயவாதிகளிருப்பதுபோலவே முஸ்லிம்களுள்ளும் செல்வாக்குள்ள பல தேசீயவாதிகளிருக்கின்றனர். இவர்களுடைய செல்வாக்கு நாளுக்குநாள் கூடுமேயன்றிக் குறையமாட்டாது. இரண்டாவதாக தாழ்த்தப்பட்ட வகுப்பினருள் பெரும்பான்மையோர் இன்னும் காங்கிரஸ்வாதிகளாகவே இருக்கின்றனர். மேலும் தீண்டாமையை நீக்குவதற்குக் காங்கிரஸ் செய்யும் முயற்சியினால் தாழ்த்தப்பட்டோர் இன்னும் மேலதிகமாக அந்தஸ்தாபனத்தைச் சேருவார்கள். மூன்றாவதாக இந்திய கிறிஸ்தவர்கள் சர்க்கார் தாசர்களாகவே இப்பொழுதும் இருக்கிறார்களென்பது சொல்லமுடியாது. ஏனெனில் இவர்கள் தங்களுடைய வருடாந்த மகா நாடுகளிலெல்லாம் தனித்தொகுதியைக் கண்டித்துக் கலப்புத் தொகுதியையே அடிக்கடி ஆதரித்திருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக இந்தியகிறிஸ்தவயுவர்களிடையே ஒருபுத்துணர்ச்சியுண்டாகியிருக்கிறது ஐரோப்பிய கிறிஸ்தவர்களின் ஆதிக்கத்தில் தமது தேவாலயங்களிருக்கக்கூடாதென்றும் தேசிய முறையில் தேவாலயம் அமைக்கவேண்டுமென்றும் அவர்கள் எண்ணத் தலைப்பட்டு விட்டார்கள். அரசியல் முறையிலும் அவர்கள் காங்கிரசையே நாடி நிற்கின்றனர். அலிப்பூர் சிறையில் நானிருந்தபொழுது சில இந்திய கிறிஸ்தவ யுவர்களைக்கண்டேன். இந்தப் புதிய கிளர்ச்சி அவர்களிடத்துக் காணப்பட்டது. நான்காவதாக ஆங்கிலோ இந்தியரிடத்தும் விசேஷமான ஒரு மாற்றம் காணப்படுகிறது. இதுகாறும் ஆங்கிலோ இந்தியர் இங்கிலாந்தே தமது தாய்நாடென்றும் தமது நிறத்

தைவிட மற்றெல்லாவற்றிலும் தாம் ஆங்கிலேயர்தானென்றும் கருதிவந்தார்கள். பிரிட்டிஷ் அரசாங்கமும் அவர்களுக்கு இந்தியர்க்கில்லாத சலுகையெல்லாவற்றையும் காட்டிவந்தது ஆனால் இந்நிலைமை தற்போது மாறிவருகிறது. சட்டப்பிரகாரம் இவர்கள் இந்தியரென்றே ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டனர். இவர்களுடைய தலைவரான சர். எச். கிட்னி என்பவர் தமது சாகியத்தவர்களுக்கு விண்ணப்பஞ் செய்யும்போது சமீபத்தில் "இந்தியாவே உங்கள் தாயகம்; இந்தியாவையிட்டு நீங்கள் பெருமைகொள்ள வேண்டுமென்று" கூறியிருக்கிறார். பிரிட்டிஷாருடன் சாருவதை விட்டுவிட்டு இந்திய மக்களுடன் தாமும் ஒருவராகச் சேர்ந்துகொள்ளவேண்டுமென்ற உணர்ச்சி கூடிவருகிறது. உத்தியோகத்திலில்லாத பிரிட்டிஷ் மக்கள் இந்திய தேசியக் கிளர்ச்சியை நசுக்க ஒன்றுஞ்செய்ய முடியாது. நாளேற ஏற இவர்களுடைய செல்வாக்கு அருகிவிடுமென்றே கூறலாம். பம்பாயில் வர்த்தகம் பெரும்பாலும் இந்தியர் கைக்குவந்துவிட்டது. 1932-ம் ஆண்டு பம்பாயிலுள்ள பிரிட்டிஷ் வர்த்தக ஸ்தாபனங்கள் தமது சாமான்களைத் தேசியவாதிகள் பகிஷ்கரித்து விடுவார்களென்று பயந்து தேசிய இயக்கத்துடன் அனுதாபங்காட்டி ஒரு பிரேரணை பிரேரித்திருக்கிறார்கள். சுதந்தர இயக்கம் அலைபோலக் கிளம்பிவருகிறது. எத்தனை நாளைக்கென்று அதைத் தடுக்கலாம்.?

எனவே சிறுபான்மை வகுப்பினரைத் திருப்திப்படுத்தித் தேசிய இயக்கத்தை நிரந்தரமாகப் பலவீனப்படுத்தலாமென்று அரசாங்கம் எண்ணுவது வீண். புதிய அரசியல்திட்டம் அங்குரார்ப்பணஞ் செய்யப்படும்வரை தேசத்தில் புரட்சி ஏற்படாமலிருக்கும். ஆனால் அதன்பின் இரண்டு மூன்று வருடத்துள் மற்றொரு பெரிய புரட்சி உண்டாகும். இந்தப்புரட்சி என்ன கோலத்துடன் வருமென்பதைத் தற்போது சொல்ல முடியாது.

அடுத்த சில வருடங்கட்கு காங்கிரஸின் போக்கு நிலைதளம்பிக்கொண்டேயிருக்கும். அதாவது காங்கிரஸிலுள்ள எந்தக் கட்சியாவது பலம்பெறமாட்டாது. பொதுவுடைமைக்கட்சி (Socialist) தற்போதிருக்கும் அவ்வளவுதூரம் விருத்தியடைய முடியாது. ஏனெனில் இக்கட்சியின் அமைப்பு ஒற்றுமைப்பட்டதாயில்லாதிருப்பதுடன் சில கொள்கைகள் பழைய— தற்காலப் போக்குக்கு ஏலாத — கொள்கைகளாயிருக்கின்றன. இருந்தும் இக்கட்சி நாளடைவில் பலமுள்ள ஒரு கட்சியாய் ஒரு தெளிவான குறிக்கோளுடனும் வேலைத்திட்டத்துடனும் கிளம்புமென்பதில் ஐயமில்லை. தற்போதைய நிலைமையில் இக்கட்சியின் வேலைத்திட்டம் எவ்வாறிருக்குமென்று விபரமாய்க் கூற முடியாவிட்டாலும் ஓரளவுக்கு அதன் கொள்கைகளை வருணிக்கலாம்.

நிலம்படைத்த நிலச்சுவான்தார்களதும் பணம் படைத்த முதலாளிகளதும் நலவுரிமைகளைப் பாதுகாக்க இக்கட்சி விரும்பாது. மகாசனங்களின் சமவுரிமைக்காகவே உழைக்கும். இந்தியருக்குப் பூரணமான அரசியற் சுதந்திரமும் பொருளாதார விடுதலையும் பெற முயலும். சமஷ்டி ஆட்சியே தமது லட்சியமாக வைத்திருந்தாலும், இந்தியாவை எழுப்பிவிடுவதற்காகச் சர்வாதிகாரத்துவமுள்ள பலமான ஒரு மத்திய அரசாங்கத்தை ஒரு கால எல்லைவரை ஸ்தாபிக்கும். விவசாயமும் நாட்டின் கைத்தொழிலும் அபிவிருத்தியடைவதற்காக அரசாங்கமே நல்ல ஒரு அபிவிருத்தித் திட்டத்தை ஏற்படுத்தவேண்டுமென விரும்பும். கிராமப் பஞ்சாயத் என்ற ஸ்தல ஆட்சிமுறையைப் புனருத்தாரணஞ் செய்வதினால் ஒரு புதிய சமூக முறையை ஏற்படுத்துவதுடன் சாதிபேதம்போன்ற சமூக முட்டுக்கட்டைகளைத் தீர்க்க வழிபார்க்கும். தற்காலத்தில் உலகத்தில் அனுசரிக்கப்படும் பணலேவாதேவி முறைகளை அனுசரித்துப் புதிய ஒரு நாணயச்செலாவணியையும் பணத்திட்டத்தையும் ஏற்படுத்தும். நிலச்சுவான்தார்களின் ஆதிக்கத்தை இல்லாமற்செய்து இந்தியா முழுவதற்கும் பொதுவான சமமான ஒரு நிலத்திட்டத்தை ஏற்படுத்தும். பலமான ஒரு கட்சி தனது சேனாபலத்துடன் சனநாயக ஆட்சி நடத்துவதையே இக்கட்சி விரும்பும். இந்தியாவின் சுதந்தரத்தைக்குறித்து மற்றைய தேசங்களிலும் விளம்பரஞ்செய்து உலக அபிப்பிராயத்தை ஸ்திரப்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறும். நாட்டிலுள்ள தீவிர கட்சிகளெல்லாவற்றையும் ஒரே நிர்வாகசபையில் சேர்த்துக் கொள்ள முயலும். இதனால் நாட்டில் ஒரு கிளர்ச்சி நடைபெற்றால் அதற்கு ஆதாரமாக எல்லாக் கட்சிகளையும் தூண்டிவிட முடியும்.

"அபேதவாதம் (Communism) இந்தியாவில் வருங்காலத்தில் என்ன நிலைமையிலிருக்கும்" என்பதே ஐரோப்பாவில் எங்கே போனாலும் கேட்கப்படுகிறது. இச் சந்தர்ப்பத்தில் மகாத்மா காந்திக்கு, அடுத்தாப்போல் இந்தியாவில் செல்வாக்குப் பெற்றிருக்கும் பண்டித ஜவஹர்லால்நேருவின் அபிப்பிராயத்தைக்கூறலாம். 1933-ம் ஆண்டு டிசெம்பர் மீ 18-ந் தேதி பத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்கு விடுத்த ஒரு செய்தியில் ஜவஹர்லால்நேரு பின்வருமாறு கூறியிருக்கிறார்:—"இன்றையஉலகம் பாஸிஸ்ட் கொள்கையையோ அபேதவாதமென்ற "கமியூனிஸ்ட்" கொள்கையையோ இரண்டிலொன்றை நாடி நிற்கிறது. எமது மனதுக்குவந்தது அபேதவாதக் கொள்கையே. என்னபாடுபட்டும் தமது சுய நலங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று பணம்படைத்த முதலாளிமார் சங்கற்பித்துக்கொண்ட மதமே பாஸிஸ்ட்மதம் எனலாம். இவ்விரு கொள்கைகளுக்கும் பொதுவான நடுமார்க்கம் கிடையாது. அபேதவாதக் குறிக்கோளை அடைவதற்கு நாம் யோசனைசெய்திருக்கும் வழிவகைகள் தீவிர அபேதவாதிகளின் சம்பிரதாயத்துக்கு ஏற்றதா யிருக்கமாட்டாது. காலதேச வர்த்தமானங்களை யொட்டி இவ் வழிவகைகள் வேறுபடும். ஆனால் அதன் மூலாதாரமான கொள்கையும் சரித்திர வரலாற்றைப் பற்றி அம்மதம் கூறும் விளக்கவுரையும் செம்மையானவை யென்றே கூறுவோம்."

ஆனால் ஜவஹரின் இக்கொள்கை முற்றும் பிழையென நாம் கொள்ளுகிறோம். உலகம் கூர்தல் அல்லது உள்ளது கிளத்தல் (Evolution) என்ற நியதியை உடையதா யிருக்கிறபடியால் உலக க்ஷேமத்திற் குரிய வழிகள் இவ்விரண்டுதானென்று அறுதியிட்டுக் கூற முடியாது. இவ்விரண்டு மதங்களின் போக்கையும் ஆராயுமிடத்து அடுத்தபடியாக உலகத்தில் நிலவக்கூடிய கொள்கை இவ்விரண்டையு மிணைத்ததா யிருக்குமெனக் கூறலாம். இப்புதிய மதத்திற்கு உற்பத்தி ஸ்தானம் இந்தியாவாகவே இருந்தாலென்ன? உலக முன்னேற்றத்தோடு இந்தியாவும் முன்னேறியே வருகிறது. எனவே புதிய ஒரு அரசியல் மதம் இந்தியாவில் ஏற்படுவதைப் பற்றி எவரும் ஆச்சரியமுறார். ஏன்? காந்தியம் உலகெங்கும் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கவில்லையா?

இவ்விரு மதங்களும் ஒன்றற்கொன்று மாறுபாடுடையனவாயிருந்தாலும் இரண்டுக்கும் பொதுவான சில மூலாதாரமான தன்மைகளிருக்கின்றன. அரசாங்கமே எல்லாருக்கும் மேலானதென்று கூறுவதுடன் இரு மதங்களும் சனநாயகக்கொள்கையை எதிர்க்கின்றன. கட்சி ஆட்சியே இருவருக்கும் ஒப்பமுடிந்தது. ஆதிக்கம்பெற்ற கட்சி மற்றக்கட்சிகளை நசுக்கிச் சர்வாதிகாரஞ்செய்வதுடன் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான புனருத்தாரணத்திட்டத்தில் இரு கட்சியும் நம்புகிறது. மூலாதாரமான இக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டே புதிய அரசியல் மதமொன்று கிளம்பும். இம்மதத்திற்கு "சம்யவாதம்" என்ற பெயரிடலாம். 'கூட்டுமுறை' அல்லது 'சமத்துவமுறை' என்பதே இப்பதத்தின் அர்த்தம். இக்கூட்டுமுறையை அமைத்துக்கொள்வதே இந்தியாவின் கடமையாயிருக்கிறது.

அபேதவாதக்கொள்கை (Communism) இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதற்குப் பல காரணங்களுண்டு. முதலாவதாக அபேதவாதம் தேசிய இயக்கத்தை ஆதரிக்கமாட்டாது. இந்தியர் இயக்கம் தேசிய இயக்கமாயிருக்கிறது. இரண்டாவதாக ரூஷியா இந்தக் கொள்கையை ஆதரித்து ஊக்கப்படுத்தமுடியாத நிலைமையி லிருக்கிறது. சர்வதேச அபேதவாத ஸ்தாபனம் வெளித்தோற்றமளவில் உதவிசெய்வதாகக் காட்டலாமன்றி உண்மையாக உதவிபுரியமாட்டாது. சர்வதேசங்களுடனும் ரூஷியா பலவிதமான ஒப்பந்தங்களைச் சமீபத்தில் செய்திருப்பதாலும் சர்வதேச சங்கத்தில் மறுபடியும் அது சேர்ந்திருப்பதாலும் ரூஷியா ஒருபுரட்சித்தேசமென்ற நிலைமை மாறிவிட்டது. மேலும் ரூஷியாவுக்குத் தனது சொந்தப் பிரச்சினைகளையே கவனிக்க நேரமில்லாதபோது இந்தியாவில் தனது கொள்கையை ஊக்கப்படுத்துவதற்குச் சாவகாசமெங்கே? மதத்துக்கும் அரசாங்கத்துக்கும் ரூஷியாவிலிருந்தது போன்ற சம்பந்தம் இந்தியாவிலே இல்லை. அன்றியும் அபேதவாதிகளின் உலோகாயதக்கொள்கை இந்தியாவில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் அபேதவாதம் பொருளாதாரத்துறையிலுள்ள சில பிரச்சினைகளுக்குப் பரிகாரம் விதித்ததேயல்லாமல் நாணய விஷயமான பல பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை.

இந்தியாவானது ஸோவியத் ரூஷியாவைப்போல அபேதவாதக் கொள்கையுடைய நாடாக வரமாட்டாதெனச் சுலபமாய்க் கூறிவிடலாம். ஆனால் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நடைபெறும் சமூக அரசியல் முற்போக்குகள் இந்தியாவையும் பாதிக்குமென்பதில் ஐயமில்லை. சிலகாலமாக மற்றநாடுகளின் போக்கில் இந்தியா கண்ணோட்டம் செலுத்தியே வருகிறது.

மகாத்மா காந்திக்கும் பண்டித மோகன மாளவியாவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள தகராறு ஒரு சிறிய விஷயம். காங்கிரஸிலுள்ள தேசியக் கட்சியும், சட்டசபைக் கட்சியும் தெளிவான லட்சியத்தையும் வேலைத்திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. காந்தியம் இந்தியாவில் என்ன நிலையை அடையுமென்பதை ஆராயவேண்டியிருக்கிறது. காந்தியம் தவறினால் அபேதவாதந்தான் இந்தியாவில் தலைதூக்குமெனக் கூறப்படுகிறது. இது பிழையான எண்ணம். இந்தியாவுக்கும் உலகுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபரும் உண்மைத்தொண்டும்

பிறக்றர், திரு. K. குமாரசுவாமி அவர்கள், கண்டி

உயரிய நோக்கத்துடன் நாம் இளமைப்பருவத்தில் எத்தனை விஷயங்களைக் கற்பிக்கப்படுகின்றோம். அவ்வப்போது நாம் அவைகளை நன்குவிளங்குவதில்லை. நாங்கள் கற்றன யவை? அவைகள் மிகப்பழையகோட்பாடுகளே. "அடிபட்டு விழுந்தவனை மேலும் அடியாதே" "நேர்மையாகத் தொண்டாற்றிச்செல்லுதி" "உனது பெருமைக்கும் நிலைக்கும் உரியகடமைகளைச் சரிவரச் செய்வாயாக." "வித்தியாசாலை வாழ்க்கையிற்போல் ஒற்றுமையைக் கைக்கொள்." தீவிரசிந்தையானது இந்தஉல்லாச மொழிகளை கிரகித்துக்கொள்ளுகின்றது. இம்மொழி சட்கினயய வாழ்ச்சையை நடத்தி உயர்ந்த பதவியை அடையநாம்முயன்றுசென்றுள்ளோம். இவைகள் யாவற்றையுமுடைய முயன்றும் மேலேகூறிய வாக்கியங்களின் பொருளையும் நோக்கத்தையு மறிய நமக்குச் சந்தர்ப்பம் அளிச்சப்பட்டிலது. இவைகளின் மறைபொருள்கள் யாவையென எவராவது அறிய விரும்புகிறாரா? இல்லவேயில்லை. தாம் சற்றனவற்றைப்பேசும் யந்திரம்போல் புதப்புது பாஷாலங்காரத்துடன், சொல்வதைஉணர்ந்து நோக்சியறியாது வாயாற் பொழிந்து தாமே மகிழ்கின்றனர் அனேகர்.

இக்கூற்றுகள் யாவையும் சிறிது நுணுகிஆராய்ந்து இவைகளின் நோக்கம் யாதென்பதை அறிவாம்.

"நேர்மைக்குப் பங்கமின்றி விளையாடு" (Play the Game) என்கின்றனர். விளையாட்டை விளையாடுவதா? சீவியத்தை விளையாட்டுடன் தொடுத்துக் கூறுவதன் நோக்கமென்ன? சீவியத்துக்கு இலக்காக வேண்டிய பெருங் கொள்கைகளை விளையாட்டுத்தலங்களை இணைக்காது கூறப்படக்கூடாதா? ஈட்டன் போன்ற பெரிய வித்தியாசாலைகளின் விளையாட்டு ஸ்தலங்களே "வாட்டலூ" என்னுமிடத்தில் நடந்த மகா யுத்தங்களை வெல்லுதற்குப் பெருந்துணையாயின.

எப்படியாயினும் மற்றையோர் மெச்சுதற்காக வன் ஒருவர் தன் கடமையெனத் தொண்டாற்றவேண்டும்.? சீவியமென்பது இடைவிடாவிளையாட்டா? ஒருவர் இன்னொருவரைக் கடமையை ஆற்றும்படி கேட்டும் அவர் ஆற்றும்கடமை கேட்டவரின் விருப்பத்துக்கு ஏற்றதாகாதிருக்கக்கூடும். பின்செய்வது யாது? ஒருவர் செய்ய வேண்டிய கடமை பின் எதுவாகும்.?

---

மகாத்மா அளித்த புதுமதம் சத்தியாக்கிரகம். இது அபேதவாதம்போல சமூகப்புனருத்தாரணஞ் செய்ய வல்லதல்ல. தற்காலத்து நவீன நாகரிகத்தை மகாத்மா கண்டித்து இயற்கையோடியைந்த எளியவாழ்க்கையைப் புகழுகின்றார். யந்திரங்களின் பெருக்கத்தை அவர் விரும்பாது மக்கள் தேவை அதிகமின்றி குடிசைத் தொழில்களுடன் வாழும் வாழ்வை மெச்சுகிறார். இது அவருடைய சொந்த நம்பிக்கை என்றே கூறுவோம். முதலாளித்துவத்தின் ஆதிக்கத்தை சிதைக்க இவர் விரும்பவில்லை. மகாத்மா ஒரு சீர்திருத்தக்காரனன்றி புரட்சிக்காரனல்ல. தனது மனதுக்கு நீதியீனமாகத் தெரியும் அநியாயங்களை நீக்கிவிடுவதுடன் மகாத்மா திருப்தியடைந்து விடுவார். போவதற்கு வேறு வழியில்லாமையினால் மகாத்மா கூறும் வழியை லட்சக்கணக்கானோர் ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் அவருடைய புனருத்தாரணத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் மனதில் கருதியிருக்கும் இந்தியா வேறு பலமிருந்தால் தாம் நினைத்தபடி இந்தியாவை அமைத்துக் கொள்வார்கள். நாம் முன் குறிப்பிட்டிருப்பது போல் தெளிவான ஒரு லட்சியத்தையும் வேலைத் திட்டத்தையுமுள்ள ஒரு கட்சியே வருங்கால இந்தியாவை ஈடேற்ற வல்லது சுதந்திரத்துக்குப் போராடிப் பெற்றுக்கொள்வதை மாத்திரம் இக்கட்சி பெரிதென மதியாமல் மகா யுத்தத்தின்பின் உலகில் நடைபெற்ற புனருத்தாரண வேலைகளை இந்தியாவில் செய்து இந்தியாவின் கேட்டிற்குக் காரணமாயிருந்த தனிநிலையை நீக்கி, மற்றத் தேசங்களுடன் இந்தியாவும் ஒரு தேசமாக எண்ணக்கூடியதாய் வைக்கவேண்டும். உலகத்தின்கதி இந்தியாவின் கதியில் தங்கியிருக்கிறதென்ற எண்ணம் இக்கட்சியின் நம்பிக்கையா யிருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் அடிபட்டு விழுந்தபின் அவரை அடிக்காதிருக்கும்படி ஒரு கட்டளை ஏற்படுகின்றது. ஆனல் ஏன்? ஒருவருடன் ஒருவர் வாது செய்து யுத்தம் நடத்தின் தோற்றவன் பின்னெருபோதும் யுத்தத்திற்கு வராதிருக்கச் செய்வது வென்றவன் கடனே. அடித்து விழுத்தப்பட்டவனும் அதை விரும்புவான். யுத்தத்தில் தோற்று பின் சண்டையை நடத்தி நின்று மற்றோரால் பழிக்கப்படுதலினும் தான் முற்றுக மடிந்து போவதைத் தோற்றவன் விரும்புவான். ஒருவனை யொருவன் அடித்து விழுத்தாது விடுதல் நல்லது. இப்படியாயின் சரீர வன்மையால் உண்மையானது முதன்மையடைய வேண்டுமென்பது முடிவாகும்.

ஒவ்வொருவரும் தமது பெரிய நிலைமைக்குரிய கடமைகளை இயற்ற வேண்டுமென்று சொல்லுகின்றனர். இவ்விதமாக அவசரமின்றிக் குறுகிய நோக்குடன் தனது கடமையை நாடி நிற்பது எதற்கு? ஏன் ஒருவர் கோபமுடையராய் தாமும் தமது வகுப்பினரும் பரிசுத்தமும் பெருமையும் உடையரென எண்ணுகின்றனர். ஒரு வகுப்பினர் தமது அரிய மரியாதையையும் உரிமைகளையும் காக்க வேண்டுமென்கின்றனர். இது விரிந்த நோக்கின்மையால் சுயநலக் கோட்பாடு தலைவிரித்தாடும் குணமெனவே கருதப்பட வேண்டும்.

இங்கிலாந்திலுள்ள அரிய, பெரிய வித்தியாசாலைக் கோட்பாடுகளை ஆராய்வாம். சீவியத்தில் சித்தியடைவதையன்றி வேறெதனை அது கருதுகின்றது? ஒற்றுமையுடன் சேர்ந்துள்ள வாழ்க்கையென்பதும், ஐக்கிய முறையென்பதும் இதுவே. வித்தியாசாலை முறைக்குரிய ஐக்கியத்தைப் பயிலாதவர் புறத்தே விடப்பட வேண்டியவரே. இவைகளின் முடிவு யாது? வித்தியாசாலை முறையின்படி, "எங்கிருப்பினும், காட்டிலாயினென், நாட்டிலாயினென் நான் கைக்கொள்வதே சரியானது; நானே வெற்றி கொள்ளவேண்டும்; இதைவிட சரியானது வேறொன்று கிடையாது." இம்முறையைக் கைக்கொண்டோர் மற்றோர் குணங்களையும் அறியார்; தமது குற்றங்களையும் அறியார். இவ்வித நூதன தோற்றங்களால் மயக்கமடைந்து ஒருவர் கஷ்டமடைய வேண்டியதில்லை. அடிமைகளாகும் நாம் குறுகிய நோக்கத்துடன் இவ்வித உதாரண நோக்கங்களைக் கண்டு மயங்கி அலைய, ஏகாதிபத்திய இரட்சகர்கள் அதை மிக விருத்தி செய்து நிற்கின்றனர்.

சென்ற நூற்றுண்டு முழுவதும் இவ்விஷயங்கள் நமக்கு ஊட்டப்பட்டன. நாங்களும் இக் கொள்கைகளை ஏற்று நமது சந்ததியார்க்கும் இந்த போலி வாழ்வை ஆஸ்தியாக வைத்துள்ளோம். இப்போது நமது நிலைமையாது? சமய விஷயத்திலென்றாலென்ன, அரிய மனோதத்துவ விஷயங்களிலென்ன நாம் மிகப் பரிதாப நிலையையடைந்துள்ளோம்.

வித்தியாசாலையிலிருக்கும்போது கற்றனயாவும் எம்மைத் தாழ்ந்தநிலைக்குக் கொணர்ந்து பழைய பரம்பரையையும் இருந்தவிடந் தெரியாது ஓடச்செய்துவிட்டது. தற்கால வித்தியாசாலைக்கல்வி நமது அறியாமையைக் கூட்டி எமது சிந்தையை இருளடையச் செய்துள்ளது. மேலும் இக்கல்வி இளம்பராயத்தில் இயற்கையாக அமைந்துகிடக்கும் உயரிய நோக்கங்களையும் தகர்த்துவிட்டதாகும்.

மேலைத்தேச வாழ்க்கையின் நோக்கங்களின் பலாபலனே இப்போது உலகத்தைப் பெருந் தீய நிலையில் கொண்டுவந்துவிட்டதாகும். நமது மனதில் உதித்த நச்சுமரத்தில் பழுத்த பழந்தான் யாது? அரசினர் கட்டளையைக் கிரமமாகக் கைக்கொண்டு குறுகிய நோக்கமுடையராய், தன்னிஷ்டவாழ்வு, சுயாதீனம், தம்மைப் பாதுகாக்கும் ஆற்றல் என்பன அற்று நிற்கும் நிலைமையே இப்போது நாம் அருந்தும் பழம்.

தற்போது இலங்கையிலுள்ள வாலிப வகுப்பினர் சிறிது முயற்சியுடையராய்க் காணப்படுகின்றனர். இதற்கடையாளம் இவர்கள் தமது நிலையைக் குறித்துப் பரிதாபமடைகின்றமையே. பெருமை வாய்ந்த பழமை அற்றுப்போய்விட்டது. இனிவருங் காலமோ அதைரியத்தை விளைப்பதாகின்றது. இப்போது இடைக்கிடை முயற்சிசெய்யும் வாலிபர் காணும் காட்சிகளும் வயோதிபர் காணும் கனவுகளும் இதற்குப் போதிய சாட்சிகளாகும்.

இலங்கை உயர்நிலையையடையவேண்டின், இளைஞர்களாகும் பெண்களும் ஆண்களும் பெருந்தொண்டாற்ற முன்வரவேண்டும். வயோதிபர் செய்யக்கூடியது யாது? தாம் வாலிபராயிருக்கும்போது கற்ற உபயோகமற்ற கொள்கைகளை ஒருபோது விருத்திசெய்ய எண்ணுவர். அல்லது அரசியற் சபைகளை அலங்காரமாகச் சென்று சிறப்பிப்பர். நமது மத்தியில்வாழும் வயோதிபர் காலத்துக்கேற்க விழிப்படையாதிருக்கக் காண்கிறோம். இவர்கள் புதிய நோக்கங்கட்கியைய வாழ்க்கையை ஒழுங்கு செய்வரென எண்ணவியலாதிருக்கின்றது.

உண்மையான கடவுட்டன்மை பொருந்திய இயக்கம் ஏற்படாதிருக்கின்றமையால் எமது இலங்காதுவீபமும் உலகின் மற்றைய நாடுகளுடன் பெருந்துன்பத்துட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்தழுந்தி நிற்கின்றது. இற்றைக்கு ஒருவருடத்துக்கு முன் மிக்க முயற்சிகாட்டி உண்மையைநாடித் தொண்டாற்றிய யாழ்ப்பாணத்து இளைஞராகும் பெண்களும் ஆண்களும் இப்போது என் முயற்சிகெட்டு, சக்தியற்று மௌனமாகவிருக்கின்றனர். இந்தத் தூக்கமான நிலைக்கு காரணமறியவேண்டின் இளைஞரின் மனநிலையை ஆராய்ந்துபார்க்கவேண்டும்.

இளைஞர்கள் தாம் பெரிதென மதித்துள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதிலேயே கண்ணுங்கருத்தும் உள்ளார். சீவியத்தின்பேற்றிலும் அதனுற்பத்தியையும் நாடார். தற்போது அநுசரணையிலுள்ள கல்விமுறையின்பயனாக, நமது மத்தியிலுள்ள வாலிபர் தாமே புதிதாக விஷயங்களைக் கண்டறியும் ஆற்றல் இல்லாதவராயிருக்கின்றனர்.

இலங்கைத் தேசமானது மேல்நிலையை அடையவேண்டுமாயின் அது வாலிபர் மூலமாகவே ஆகவேண்டியது வாலிபராயுள்ளோருக்கு புதிதாக விஷயங்களைக் கண்டறியும் சக்தியின்றேல் எந்தப் பெரிய உண்மையும் தோன்றுதாகும். அப்படியாயின் மனிதன் மேல்நிலையடைவதும் இல்லையாய்விடும்.

முன்னர் இளமையில் கற்ற போலிக் கோட்பாடுகளை வாலிபர் முற்றாகக் கைவிடவேண்டும். போலி வடிவத்தைக் கண்டு மயங்காதிருப்பாராக. உலகத்தவரால் மதிப்புப்பெற வேண்டுமென எண்ணுதிருப்பாராக. பெறுபேறென்னவாகுமெனக் கணக்கிடாதிருப்பாராக. சித்தியெவ்வளவென மட்டிட்டு நில்லாதிருப்பாராக.

தோல்வியே பின் சித்திபடைதற்குப் பெருந்துணையாகின்றதெனச் சொல்லப்படுகின்றது. ஆனால் இதுவரையும் எந்த வெற்றியைப் பெற வேண்டுமென விரும்புகின்றனமோ, கற்றனமோ, எமது அரிய பிறப்புரிமை வழங்கி முயற்சி செய்தோமே, உயிர்விட எண்ணினோமோ அவைகளெல்லாம் வீணாயின. இவை யாவும் தோல்வியை வருவித்தற்குக் காரணங்களாயின.

நாங்கள் உண்மைக் கடவுட் பக்தியுடையராய் நேர்மையை நாடி நில்லாவிடின், உண்மையானதும் நிலையானதுமான வெற்றி ஒருபோதுங் கைகூடாதெனத் துணிபாகக் கூறுவாம். தனது ஆருயிரை இழந்து உலகத்தில் பெரும் நன்மையைக் கைகூடச்செய்வதால் பெறும் பயன் யாதென்னும் புத்தி கூர்மையான கேள்வி கேட்கப்படுகிறது. உண்மையைக் கைக் கொண்டு நின்று ஆன்மா மேனிலையடைவதிலும் உலக இன்பங்களை நன்கு அனுபவித்து நிற்பது மேலானதெனச் சிலர் எண்ணி வந்தனர். ஆனால், தாம் உலகத்தில் உயர்நிலையையடைந்து நிற்குங்கால் தாம் வாழும் இல்லங்களும் மற்றையனவும் பிறர்கையிற் படுகின்றன என்பதை இவர் அறியார்.

இலங்கைத்தேசத்தில்உதித்த வாலிபர் இவைகளைத் தமது இருதயத்தில் நன்குஉணரவேண்டும். விஷயங்களை முன்பின் ஊன்றி ஆராய்ந்தறிய வேண்டும். இருதயத்தைச் சுத்தமாக்கிக் கொண்டாற்றான் அவர் முயற்சியாற்றும் வழி ஆன்மாவின் களங்கமற்ற சோதியாகும் விளக்கால் வெளிச்சமுடையதாக்கப்படும்.

ஆகையால், வாலிபர் தாம் செய்வனவற்றின் பெறுபேறுகளை நன்குணரவேண்டும். ஒவ்வொருவரும் செய்யும் ஒவ்வொரு செய்கைக்கும் பிரதிபலன் உண்டென்பதை அறிவாராக. உண்மைவழிநின்று தொண்டாற்றுவதே ஒவ்வொருவரும் நிறைவேற்றவேண்டிய நோக்கமாகவேண்டும். வெற்றி மாத்திரத்தில் எல்லாம் முடியவில்லை. எவ்வளவுக் கொருவன் சமாதானமும், பொறுமையும் சந்தோஷமும் உடையவனாகின்றானோ அதுவே யடையவேண்டிய உண்மையும் வெற்றியுமாகும். இவ்விஷயங்களை நன்கறிந்த எத்தனையோ இளைஞர்கள் உளர். அவர் அவ்வளவுடன் நில்லாது வெளியே வந்து தமது கோட்பாடுகளை அனுட்டானத்தில் காட்டி வைப்பாராக.

பின்வரும் சந்ததியாரால் தேசத்தை மீட்டு மேல் நிலைக்குக் கொண்டுவந்தவரெனக் கொண்டாடப்படவேண்டின், வாலிபர்தளது ஆத்மா விழிப்படைய வேண்டும். அப்போதுதான் உண்மை நிலைநாட்டப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நாட்டவர்க்கோர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம் மலையாளப்புகையிலை வியாபாரச் சங்க அக்கிராசனர்
திரு. T. C. இராசரத்தினம் அவர்கள்)

தற்போதைய உலகியல் வாழ்க்கையானது பல்வேறு விதமாக மாற்றமடைந்து செல்கின்றமையால் நாமும் காலத்துக்குக் காலம் வேண்டிய வேண்டியபடி விஷயங்களை நோக்குந் தன்மையை மாற்ற வேண்டியது அவசியமாகின்றது. பொருளாதார நிலைமையே பெருங்கஷ்டத்தையுண்டுபண்ணி நம்முடன் போராடுகின்றது. இப்போரினை நன்கு நடத்திச் சித்திபெய்த வேண்டின் விஷயங்களைச் சரிவர ஆய்ந்தறியக்கூடியவரும், எக்கஷ்டங்கள்வரினும் சற்றிதாவது அசையாதுநின்றுகடமையை ஆற்றக் கூடியவருமான வீரர்கள் முன்வருதல் அவசியம் தேவையாகின்றது. கட்சி பேதங்களும் கொள்கைகளும் ஒன்றோடொன்று முரணடையுங்கால், பொருளாதாரநிலை நசிக்கப் படுவதைப் பார்த்துக்கொண்டு வாய்பேசாத பொம்மைகள் போல் நிற்காது தமது கடமையைக் குறைவற ஆற்றும் தீரரே இப்போ யாவராலும் விரும்பி நாடப்படுபவர். எல்லாத் தொழில்களும் பொதுவாக யாவர் மனதையும் கவர்ந்து நிற்பன. வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்கி நாம் விகாரமடையாதிருக்க வேண்டியது அவசியம். எது எது உண்மையானது என்றறிந்து அதையதை ஊன்றி நோக்கிப் பின் கைக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு விஷயத்தினதும் உண்மை நிலையைமதித்தறியும் ஆற்றலே சீவியத்தில் கற்கவேண்டிய பெரிய கல்வியாகும். நிலத்திலிருந்து எப்போதும் நாம் குறைவறப் பெறக் கூடியதாகச் செல்வம் இருக்கின்றது. அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்று அதன் வழியாக அடையும் செல்வத்திலும் பன்மடங்கு செல்வத்தை, சாஸ்திர முறைப்படி கமஞ்செய்தும் கபப்பொருட்களை விற்றும், வேறு கைத்தொழில்களை நடத்தியும் பெறலாம். பொதுசனங்கள் விழித்தெழுந்து தமது ஆற்றலை உணரவேண்டும். உணர்ந்தபின் கல்வி கற்றுத்தேறிய எத்தனையோ வாலிபர்கட்கு வேலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். எத்தனையோ வேலைகளை நாம் செய்யக்கூடியதற்கு வயதிகள் போதியளவிருந்தும் நம்மவர் "எமக்கு வேண்டிய வயதிகள் அளிக்கப்படுவதில்லை" என்னும் வாக்கியத்தைப் பன்முறையுங்கூறிக் கொண்டு வாளாவிருக்கக் காண்கின்றோம். நாம் மிக ஊக்கமுடையராய் நாடின் எமக்கு வேண்டிய ஆற்றல் போதியளவு இருக்கக் காணலாம். சென்ற இருபது வருடங்கட்கிடையில் இலங்கையில் ஐக்கியசங்கங்கள் நல்ல வேலைசெய்து விருத்தியடைந்துள்ளன. இப்போது நூற்றுக்கணக்காக ஐக்கிய சங்கங்கள் இலங்கையின் பலபாகங்களிலும் அமைக்கப்பட்டிருக்கக் காணலாம். இச்சங்கங் காரணமாக சனங்கட்கிடையில் பரஸ்பர நம்பிக்கை ஏற்படுவதாயிற்று. மேலும் சங்கங்களால் உண்டான நன்மைகளோ பலவிதப்படும். சனங்கள் இச்சங்கத்தைத் துணைக்கொண்டு தாமே தமது சீவியத்துக்கு வழிதேடுதல், தமது ஆற்றலில் நம்பிக்கை, அவசரமின்றிச் செலவு செய்யாமை என்னும் வாழ்க்கைக் குறுதியாகும் விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாயினர். எமது கமக்காரரும் மற்றைய பொதுசனங்களும் வறுமையால் பீடிக்கப்பட்டுக் கடனுலிடருற்றுத் துயரடையும்வரையும் உண்மையான முன்னேற்றத்தை அரசியற்றுறையில் அல்லது பொருளாதார நிலையில் எப்படிநம்மவர் அடையக்கூடியவராவர்? யாழ்ப்பாணத்துக் கமக்காரரின் பரிதாபநிலையை நாம் அவசரம் நோக்கவேண்டும். சென்றசில வாண்டுகளாக யாழ்ப்பாணப் புகையிலை மலையாளத்தில் அதிகம் விலைப்படுவது கஷ்டமாய்விட்டது. இதற்குப் பல காரணங்கள்கூறப்படுகின்றன. இதுவரையும் அதிக வட்டிபெறும் செட்டிகள் உபாயத்தில் பேர்பெற்றதரகர்என்போரால் பெரிதும் வருத்தப்பட்டு அதிகம் நட்டமடைந்த புகையிலைக்கமக்காரரின் நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்காகவே "யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை வியாபாரசங்கம்" புதிதாக ஏற்படுத்தப்பட்டதாகும். ஆகையால்புகையிலைசெய்யும் கமக்காரர் இத்தருணத்தை இழக்காது இச்சங்கத்துக்குத்தமதுபுகையிலையை விற்று விரும்பிய நன்மையைப் பெறுவரென்பதே எனது நம்பிக்கை. புகையிலை வியாபாரஞ்செய்யும் எச்சங்கத்திலும் பார்க்க இச்சங்கமானது பெரியதாகும். இதன்மூலதனம் மூன்றரை லட்சம்ரூபாவாகும். இச்சங்கம் மிகத் திறமைவாய்ந்த உத்தியோகத்தரால் நடத்தப்படுகின்றது. அன்றியும் இச்சங்கத்தினர் அனுப்பும் புகையிலையைப் பெற்று விற்றுக் கொடுப்பதற்கும் மிகப் பொறுப்புவாய்ந்த பிரமுகர்கள் திருவாங்கூரில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இதுவரையும் பெரியபரிதாபநிலையிலிருந்தகமக்காரரை மேனிலைக்குக்கொண்டுவருதற்குவேண்டியதொண்டினைத் தேசாபிமானிகள் செய்வதற்கு ஏற்றவயதி இப்போது ஏற்பட்டிருக்கின்றது. இவ்வியாபாரசங்கத்தைக் கமக்காரர் யாவரும் ஆதரிக்கச்செய்வது எல்லோருடைய கடனுமாகும். இப்போது நான் எனதுநாட்டவரைவிசேஷமாகக்கேட்டுக்கொள்வது யாதெனில்: எல்லோரும் ஒற்றுமையுடையராய் நன்னோக்கத்துடன் கமக்காரரின் நிலைமைசீரடையும்படி இயன்றளவு தொண்டாற்றுவதற்கு முன்வருவீராக என்பதே. எவ்விஷயத்திலாயினும் நாம் சித்தியடையவேண்டின் வயதி கிடைத்தபோதெல்லாம் ஆயத்தமாகவிருந்து வேண்டியதைச் செய்வது பிரதானம்.





T. C. இராசரத்தினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஸ்வகவி, தாகூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலினி

நவாலியூர்,
சத்தியநாதன்

[வங்கத்துதித்த வரகவி தாகூர் எழுதிய "மாலினி" என்னும் நாடகத்தின் மொழிபெயர்ப்பு]

**இடம்:**—அரசகோட்டத்து மாடவீதி.

**மாலினி:**—ஆ! எனது காலம் அணுகிவிட்டது. எனது உயிரானது தாமரைத் தலத்துப் பனித்துளி போல, இப்பெருங்காலத்தின் மத்தியில்நின்று தத்தளிக்கிறது. கண்ணை மூடிக்கொண்டு நிம்மதியாயிருக்கும் போது வானத்துள்ள கோள்களின் அதிர்ச்சி என்செவிகளில் கேட்பது போலிருக்கின்றது உள்ளத்தில் ஒரு ஆவல் உண்டாகிறது. என்ன என்று அறிகிலேன்!

[கோப்பெருந் தேவி வருதல்]

**கோ. தேவி:**—குழந்தாய் இதென்ன இது, உன் அழகென்ன? உன் இளமையென்ன? செவ்விமலர்ந்தநின் கோமளமேனியில் பட்டாடை புனைகின்றுயில்லை. திவ்வியமான அணிகளை வெறுத்தனை? நங்காய் உன் கோலமென்ன? விலைமதிப்பறியா நின் மாணிக்கமணிபூஷணங்களெங்கே? காலையின் அழகிய உதயம்போல்வாய்! என் கண்மணி! உன் செவ்விய மேனியில் பொன்னணிகள் பெருமை பெறுதிருப்பதுமாமோ?

**மாலினி:**—தாயே! அரசர் கோட்டத்தில்கூட வறியோர் பிறப்பதுண்டு. நல்தூரவிற் செல்வத்தைக் காண்பதே ஒருவர் தலைவிதியானுல் ஐஸ்வரியம் அவரை அணுகாதன்றோ?

**கோ. தேவி:**—மதலை மொழியன்றி வேறொன்றும் பேச அறியாத குதலை மொழியாய்! என் செல்வமே! நீ எங்ஙனம் இவ்வாறு அறமொழி புகல வந்தனை? —உன் சொற்களைக் கேட்க என்உள்ளம் அச்சத்தினுல் நடுங்குகின்றது. நம் பண்டைய தர்ம சாஸ்திரங்கட் கெல்லாம் மாறுன இப்புதுமதத்தை யாண்டுக் கற்றனை? என் குழந்தாய்! நீ அறங்கேட்கும் அந்தப் புத்த அறவோர், மந்திரத்தில் வல்லுனராம் மக்களுடைய மனதை மயக்கும் பேதவாதப் பிணக்கராம். சமயமென்பது தேடிக்காணும் பொருளா? என்றும் ஒளிசெய்யும் செங்கதிர்ப் பிரபை போலத் தேடாதே. கிடைத்ததன்றே மதம்! கற்றோர் அறிந்த அறிவு எனக்கில்லை. நான் விகற்பமறியாத பேதை. மதங்களையும் அவற்றின் வேறுபட்ட கொள்கைகளையும் நான் அறியேன். எனக்குத்தெரிந்த உண்மை ஒன்றே ஒன்றுதான். மங்கையர் தேடி அடையும் தெய்வம், அடிப்பாரும் கொடுப்பாருமின்றி அவரிடத்து வந்தடையும் கொழுநனும் செல்வக் குழந்தைகளுமே.

[அரசன் வருகிறன்]

**அரசன்:**—என்மகளே! எமது அரசகோட்டத்தைச் சுற்றிப் பெரும்புயலொன்று சீறப்போகின்றது. நீ செல்லப்போகும் வழியோ இன்னல் நிறைந்தது. ஆதலின் பொறு! சிறிதுநேரமாவது பொறு!!

**கோ. தேவி:**—இதென்ன இருள் மலிந்த உரை சொன்னீர்?

**அரசன்:**—என் செல்வப்பேதாய்! பழமையேயான இந்நாட்டில் நீயுன் புதுமதம் புகுத்தவிரும்பினுல் சாவதானமாயிரு. புதுமை வெள்ளம் பாவவேண்டுமானுல், கரைமீதிருப்போர்க்கு அச்சத்தை விளைக்கும்படி திடீரெனக் கரைபுரள விடவேண்டாம். நீகண்டபுதுமையை உன்னுள்ளே வைத்துக்கொள். மகா சனங்கள் தூற்றவும் நகைக்கவும் அதை வெளிவிடாதே.

**கோ. தேவி:**—அரசதந்திரத்தின் திருக்கு முறுக்குகளை என் குழந்தைக்கும் போதிக்காதீர். அவள்மீது கவலைதீர். எனது மங்கை இவள், தான் அறிந்த குரவரைத் தேடித் தான் கண்ட நெறியில் போக விரும்பினுல் அவளை யாரும் குறைசொல்ல அமையாதே.

**அரசன்:**—தேவி! எனது குடிகள் என்குழந்தையின் கொள்கையைக் கண்டு சினந்துவிட்டார்கள். அவளை நாட்டைவிட்டுக் கலைத்துவிடுமாறு கிளம்பிவிட்டனர்.

**கோ. தேவி:**—கலைக்கவா? உமது நாட்டைவிட்டு, உம் செல்வப்புதல்வியைக் கலைக்கவா?

**அரசன்:**—அந்தணர், என்மகளது மதநிந்தையைக் கேட்டு, சினந்து ஒன்றுசேர்ந்து........

**கோ. தேவி:**—மதநிந்தையா? நன்று நன்று. உலகத்து உண்மையெல்லாம் இப்பிராமணருடைய பழைய

o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடுகளில்லா திருக்கின்றனவோ? செல்லரித்த இக்கட்டுப்பாடுகளையெல்லாம் தூரத்து வீசிவிட்டு இக்குழந்தையின் பாதத்தமர்ந்து அவர்கள் உபதேசம் பெறக்கடவர். வேந்தே! மற்றமங்கையர் போன்றாளல்லள் இவள். செந்தமிழின் தூய சுடரனையாள். இவளிடத்து ஏதோ ஒரு தெய்வத உணர்வு குடிகொண்டிருக்கிறது. ஆதலின் இவளை வெறிதே இகழாதீர். இகழ்ந்தால் இவளைக்காணுது நீர் என்றுவது தலையை அறைந்து கண்ணீர் பெருக்க நேரிடும்.

**மாலினி:**—எந்தாய் உமது நாட்டின் குடிகளது கருத்தை முற்றுவிக்க வேண்டுகிறேன். எனது வாழ்வின் மகத்தானகாலம் வந்துவிட்டது. அப்பா என்னை நாட்டை விட்டுத் தூரத்தி விடுங்கள்.

**அரசன்:**—என்ன! குழந்தாய். உன் தந்தையின் அரண்மனையில் உனக்கிருக்கும் குறையென்ன?

**மாலினி:**—அப்பா கேளுங்கள் இந்த நாட்டிலிருந்து என்னைத் தூரத்திவிட வேண்டுமென்று கருதுவோர் எனக்காகவே கதறுகின்றனர். அன்னய்! என் மனக்கிடக்கையை உரையினுல் கூற ஆற்றேன். மரமானது தான்மலர்ந்தபூவை வியாகுலமின்றி இம்மண்மீது சொரிவதுபோல என்னையும் வியாகுலப்படாது விட்டுவிடுங்கள். உங்கட்கே சொந்தமாயிருந்த நான் இனி இவ்வுலகுக்கே சொந்தமுடையவளாகப் போகின்றேன். அரசன் கையிலிருந்து என்னை இவ்வுலகம் கவரவேண்டி நிற்கிறது.

**அரசன்:**—குழந்தாய்! நீ கூறுவதென்ன?

**மாலினி:**—மன்னவனும் நீயன்றோ? அப்பா தைரியமாய் உமது தொண்டை ஆற்றுமின்.

**கோ. தேவி:**—குழந்தாய்! நீ பிறந்த இம்மாளிகையில் தங்கியிருப்பதற்கு ஒருமூலை இல்லையா? இவ்வுலகத்தில் தனியே செல்லவேண்டிய பொறுப்பை நீயே ஏற்றுக்கொள்ள வேண்டுமோ?

**மாலினி:**—நனவில் கனவுகாண்கிறேன்; மாருதம் சீறி வீசுகின்றது. நீர்நிலைகளெல்லாம் கொந்தளிக்கின்றன. இரவானது அஞ்சனம்போலக் கறுத்துவிட்டது. தோணியும் துறையிலிருந்துகிளம்பிவிட்டது. ஏ!மாலுமி எங்கே! இவ் வழிப்போக்கரை வீடு சேர்ப்பது யார்? நானே! போம்வழி எனக்கு நன்கு தெரியும் போலிருக்கிறது! ஓடத்தைத் தொட்டதும் காற்றென அது உயிர்ப்புடன் பாய்ந்துவிடும்.

**கோ. தேவி:**—தேவ! கேட்டனையோ, இது யாருடைய மொழிகள். இச் சிறுமியின் வார்த்தைகளா? இவள் உமது புதல்வியா? யான்தான் இவளைப்பெற்றேனு?

**அரசன்:**—ஆம் நீயே பெற்றனை, வைகறை இருளிடத்திருந்து வந்தது. அதுபோல் இவளும் நின்னிடத்துதித்தாள்.

**கோ. தேவி:**—ஒளியுருவான இப்பதுமையை இக்கோட்டத்தில் கட்டிவைப்பதற்கொரு வழியுமில்லையா? அரசே! ..........கண்மணி கோதை அவிழ்ந்து தோள்மிசை வடிகின்றது வாராய் கொண்டை முடித்து விடுகிறேன். .......பிராமணர் இவளைத் தூரத்தவா கூறுகின்றனர்? மன்ன! இதுவே அவருடைய மதமானுல் நம் மங்கையின் புதுமதம் வெல்க. சத்தியம் யாதென அவ் வேதியர் குழாத்துக்கு நாமே அறிவு கொளுத்துவோம்.

**அரசன்:**—தேவி! பாராய் பெரும் சனத்திரள்கூடி வருகின்றது. நம் செல்வியை இம்மாடத்தைவிட்டு அப்புறம் அகற்றுவோம் **(எல்லாரும் போகின்றனர்)**

**[ மாடவீதியில் வேதியர் கூட்டமொன்று திரண்டு சந்தமிட்டு வருகின்றது ]**

வேதியர்:—மன்னவன்மகளைத் தூரத்துமின்! கலைத்துவிடுமின்!

**கேமன்கர்:**—நண்பீர்! உறுதியை விட்டுவிடாதீர்! மாற்றான் என இம்மங்கையை எதிர்மின். பேதை இவளோடு நியாயவாதம்செய்வதெங்ஙனம்? நமது சைனியம் இவளைக்கண்டு நாணுமே. கேவலம் ஒரு பெண்ணின் நிர்ப்பலத்தைக்கண்டு ஆண் மகனுடைய மனம் நெகிழாதா? பனமிளகினுல் எமது மனமெனுங் கோட்டையிலேயே அவள் சரண்புகுந்துவிடுவாள்.

**முதலாம்வேதி:**—நஞ்சைஉமிழும் அஞ்சுகமொன்று படமெடுத்து நமது வேதநெறியைத் தீண்டிவிட்டதென்று நாம் அரசனை அவைக்களத்துக் கண்டு கூறுவோம்.

**சுப்பிரய:**—வேதநெறியா? என்ன எனக்கு ஒன்றுமாய்த் தெரியவில்லையே. புத்தி மந்தமாய்விட்டது. வஞ்சகமறியாத இப்படவாளை உம் சமயத்திற்காகவா தூரத்துகின்றீர்கள்?

**1-ம் வேதி:**—சுப்பிரிய! முடத்துக்குச் சனியன் போலாயினை. நமது நற்சருமங்களெல்லாவற்றுக்கும் சகுனியாயிருப்பவன் நீதான்.

**2-ம் வேதி:**—தருமம் குலையப்போகும் தறுவாயில் நாமெல்லாம் ஒன்றுகூடி நிற்க, ஒன்றுகூடி நிற்கும் கற்றாணிலுள்ள ஒருபிளவுபோலவும், இழித்துரை கூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோர் வாயில் பிறக்கும் புன்முறுவல் போலவும் நீ குறுக்கே நின்றனை.

சுப்பிரிய:—ஆகா! சனத் தொகையைக்கொண்டு உண்மையைக் கணிக்கலாமென்று நினைத்தீர்போலும். எல்லாருங்கூடிக் கொக்கரிப்பதனால் நியாயம் அழிந்து போமா?

1-ம் வேதி:—சுப்பிரிய! முட்டாள்நியாயம் கூறினை.

சுப்பிரிய:—தங்கள் குறுகிய காட்சிக்கு ஏற்றமாதிரி தர்மநீதிகளைத் தரிசித்துச் செம்மைப்படுத்துவோர் கூறுவதே முட்டாள்நியாயம். எம்மிடத்து அது கிடையாது.

2-ம் வேதி:—இவனை வெளியே துரத்திவிடுங்கள். இவன் நம்மவனல்ல.

1-ம் வேதி:—மன்னன் மகளைத் துரத்திவிடவேண்டுமென்று நாமெல்லாம் முடிவு செய்துவிட்டோம். இம் முடிபுக்கு மாறாக எண்ணுவோர் இவ்வரங்கத்தில் நிற்க வேண்டாம்.

சுப்பிரிய:—வேதியர்காள்! என்ன பாதகஞ்செய்தீர். நான் உங்களது சாயலாயிருப்பேன், நீவிர் கூறுவதை எல்லாம் எதிரொலித்துக் கூறுவேன் என்று எண்ணியா என்னை உங்களுள் ஒருவராய்த் தெரிந்தீர்கள். 'உரக்கச் சத்தமிடுவோரிடத்தது உண்மை' என்று நான் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை. பலாத்காரத்தால் உறுத்தும் ஒரு கொள்கையை நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டேன். (கேமன்கரிடம்) அரிய நண்ப நான்போகின்றேன்.

கேமன்கர்:—காலமோ கொடியது. நண்ப அமைதி! நீ போகவேண்டாம். எமது முடிபே உனக்கும் முடிபென்பதை நான் அறிவேன். ஆனால், தர்க்கத்தில் மாத்திரம் வேறுபாடு காட்டினை.

சுப்பிரிய:—நண்ப! நான் எதையும் பொறுப்பேன். ஆனால், மடைமையால் ஒருவன் கொடிறுபோலக் கொண்டது விடாதுநிற்கும் குருட்டுத்தனத்தை ஒருபோதும் பொறுக்கமாட்டேன். சமயத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு பெண்ணை வீட்டைவிட்டுக் கலைப்பது என்ன வேலை. அம்மங்கை செய்த குற்றமென்ன? சத்தியமும், அன்புமே சமயத்துக்கு உடலும் உயிரும் போன்றதென்பதை அவள் மறுத்தனளா? உலகத்து மதங்கட்கெல்லாம் கருவூலம் அவையன்றோ!

கேமன்கர்:—சமயமானது உருவத்தில் வேறுபட்டாலும் மூலாதாரமான தன்மையில் ஒன்றே. யாற்றின் ஒழுக்கு ஒன்றே. ஆனால், அதை யணையிட்டுப் பயன்படுத்துவோர் பலர். உனது உள்ளத்தில் வற்றாத நீர் ஊற்று ஒன்று சதா ஊறிக்கொண்டிருக்கட்டும். ஆனால், உனது அயல்மதத்தவரைப் புறங்கூறுதே! ஏன்? அவர்க்கே உரிமையான பழமை என்னும் வற்றாத நீர்க்குட்டை யிருக்கின்றதல்லவா? காலத்தினால் தேய்ந்து மிருதுவான பசும் படிநிலைகளும், கரை மருங்கே சனாதனமான கனிகளைப் பழுக்கும் புராதனமான பாரிய மரங்களும் உண்டு. வேட்கையுற்ற அயலவர் ஆண்டுச் சென்று தம் மனதுக்குவந்த நீர் மொண்டு தாகந் தீர்ப்பார்களாக.

சுப்பிரிய:—பிரிய நண்ப! என் வாழ்க்கையில் நான் உன்னை ஒருபோதும் மறுத்தறியேன். அதுபோல இப்பொழுதும் உன் சொற்படியே ஒழுகுகின்றேன்.

[மூன்றுவது வேதியன் வருதல்]

3-ம் வேதி:—நல்ல புதினம்! எமது விருப்பப்படியே மன்னவனுடைய சேனை எம்பக்கல் வந்துவிட்டது.

2-ம் வேதி:—சேனையா? நான் அதை விரும்பவில்லை.

1-ம்வேதி:—எமக்கும் இது உடன்பாடல்ல. இராச்சியத்துக் கெதிரான புரட்சியா இது?

2-ம்வேதி:—கேமன்கர் இம்மாதிரியான தீவிர முயற்சியை நான் விரும்பவில்லை.

1-ம்வேதி:—எமது நம்பிக்கையே எமக்கு ஜெயம் அளிக்கும். நாம் தபஸ் செய்வோம். வேதாத்தியயனஞ் செய்வோம். எமது குலதெய்வங்களை வழிபடுவோமாக.

2-ம்வேதி:—தேவி! வருக. மீண்டு மனத்தவர் நம்பிக்கையில்லாதோரின் அகந்தையையும் இருளையும் நசித்து எம்மை வெற்றிபெறச் செய்வாயாக. ஹே, தீனதயாளு! உலோக நாயகி! எல்லாரும். வாழ்க எம் மன்னை. பிரமாண்ட நாயகி! உன் தெய்வஉலகத்தை விட்டு இம் மண்ணவர் வாழ வந்தருளுதி.

[மாலினி வருகின்றாள்]

மாலினி:—இதோ வந்தேன். (எல்லாரும் வணங்குகிறார்கள். கேமன்கரும் சுப்பிரியரும் ஒருபுறத்து ஒதுங்கிநின்று பார்க்கிறார்கள்.)

2-ம் வேதி:—பரதேவதா! எம் வழிபாட்டிற்கிணங்கி வந்தனை. கண்டால் அச்சத்தைத் தரும் நினது கோர உருவத்தை மாற்றி அழகிய ஓர் மண்மகள் போலக் காட்சி தந்தனை. அன்னாய்! நீ யாண்டுற்றனை? உன் சித்தமென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாலினி :**— என்னை நாட்டிலிருந்து கலைத்துவிட எண்ணினீர். அதற்காக வந்தேன்.

**2-ம் வேதி :**—அம்மே! தங்களையா? விண்ணவர் வருந்த நீ இம் மண்ணவர்க்கு வாழ்வுகொடுக்க வந்தனையோ?

**1-ம் வேதி :**—அன்னய்! அபயம். உலகத்திற்கு நாசகாலம் கிட்டிவிட்டது. உம்மையே சரணுகக் கூவினோம்.

**மாலினி :**—உங்களை நான் கனவிலும் கைவிடேன். நீங்கள் என்னை என்றும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தீர்கள். என்னை நாட்டைவிட்டுத் துரத்தவேண்டுமெனக் கூவினீர். பொன்னும் மணியும் யோகமுந் துறந்து நம் அரசன்மாளிகையை வெறுத்து இதோவந்தேன்.

**கேமன்கர்:**—மங்கைஇவள் நம்அரசன்மகளன்றோ?

**எல்லாரும்** மன்னவன் மகளே!

**மாலினி:**—உங்களில்லங்களையேஎனதாக்கநினைத்து என்னுடைய இல்லத்தைக் கைவிட்டேன். சொல்லுமின் என்னை நீரெல்லாம் உண்மையில் விரும்பினீர்களா? சிறுமியாக நான் தனியே இருந்தபொழுது நீவிரெல்லாம் வெளியேநின்று சத்தமிட்டீர்களா? அல்லது நான் கனவு கண்டேனு?

**1-ம் வேதி :**—கோகிலமனையாய்! நின் தீங்குரல் எம் உள்ளத்தை உருக்கின. கண்களில் நீர் ததும்புகின்றது.

**மாலினி :**—முகில்களிடையேயிருந்து சந்திரன் உதயமாகிறுன். பெரு விசும்பில் பேரமைதி உண்டாயிருக்கிறது. வெண்ணிலாப்பரப்பில் தன்கரங்களை நீட்டி இம் மகாசாந்தி உலகை எல்லாம் தன்னிடத்து அதனைக் கொண்டது அதோ சாயலிட்டுநிற்கும் பெரிய மரங்களின்ஊடே ஒரு வீதி செல்கின்றது. இல்லங்கள் தோன்றுகின்றன. அப்பால் அந்தத் தேவகோட்டம் தெரிகிறது. தூரத்தே அந்த நதிக்கரையானது தனிமையாய் இருண்டு கிடக்கின்றது. கனவென்னும் மேகங்கள் பொழிந்த புதுப்பெயல்போல இவ்வீதியின் மருங்கே இம் மண்ணுலகில் தோற்றிவிட்டேன்.

**1-ம் வேதி :**—உலகமாதா நீயே.

**2-ம் வேதி :**—தேவி! உன்னைத் தேசப்பிரஷ்டஞ் செய்யுமாறு நாம் கூக்குரலிட்டபொழுது எமது நாவானது என் வெந்துபோகவில்லை.

**1ம் வேதி :**—வாருங்கள் வேதியர்காள்! எமது அன்னையை அவளுடைய இல்லஞ்சேர்ப்போம்.

( வாழ்த்துகின்றனர் )

அன்னய் வாழி வாழி ஜயம்பெறவாழி!

[ வேதியர்சூழமாலினி செல்கின்றள் ]

**கேமன்கர் :**—இம்மாயை அகலுக. சொப்பனத்தில் நடப்பவன்போல எங்கே செல்கின்றுய் சுப்பிரிய.

**சுப்பிரிய :**—விடுக. நான் போகின்றேன்.

**கேமன்கர் :**—அடங்குதி நண்ப! விட்டில்போல் நீயும் அவ்வேதியர் மான விளக்கில் விழுந்து மாயப்போகின்றனையா.

**சுப்பிரிய:**—கேமன்கர். இஃதென்ன கனவா, நனவா.

**கேமன்கர் :**—இது கனவுதான். கண்ணைவிழித்துப் பார். எழுந்திரு.

**சுப்பிரிய :**—நீ எண்ணியிருந்த சுவர்க்கமென்றதெல்லாம் பொய். சாஸ்திரமென்ற கானகமெங்கும் நான் வீணே அலைந்துபோனேன். சாந்தியை இன்னும் பெற்றிலேன். பாமரர்பராவும் கடவுள் வேறு. நூல்கள்கூறும் கடவுள் வேறு. இவையொன்றும் என்னைத் திருப்திப்படுத்தவில்லை. எனது உள்ளத்திலுள்ள தாகத்தைத் தீர்த்து ஆறுதல் அளிக்க இக்கடவுளரால் முடியவில்லை. மனிதர் வாழும் இந்தப் பிரத்தியட்ச உலகில் தான் எனது மனதுக்கிசைந்த பரமபதியைக் கண்டேன். அவருடைய உயிர்ப்பே இவ்வுலகத்து நடமாட்டம்.

**கேமன்கர் :**—அந்தோ! நண்ப, மனமானது ஒருவனை வஞ்சிக்குமானுல் அத்தருணம் மிகவும் பயங்கரமான தருணமென்று அறிவாயாக. யோகமே அவனுக்குச் சாஸ்திரப் பிரமாணமாகிவிடுகிறது. மனோவியாச்சியம் கடவுளரின் படிநிலைகளைக் கைப்பற்றிவிடுகின்றது. அதோ பார். மிருதுவான வெண்முகிற் கூட்டங்களிடையே துயிலும் சந்திரன்தான் உலகத்துள்ள சனதனதத்துவத்தின் அடையாளமென்று கூறுவையா? நாளை வைகறையில் இரவு விடிந்துவிடும். மறுபடியும் இவ்வுலகம் உலக வியாச்சியங்களில் சுழலத் தொடங்கிவிடும். அப்பொழுது இந்த நிலாமலிந்த இரவை யாராவது கருதுவார்களா? மயக்கமும், கனவும், சாயலும் என்ற இத்திறத்த மாயாவினோதங்களாகவே இதை மனிதர் கருதுவார்கள். உள்ளத்தை மயக்கும் மாதரின் பொய் மாயங்களும் இத்துணைத்து. ஆதலால் அம்மயக்குகளை உலகத்தில் மேலான சத்தியமென்று கொள்ளலாமா? மனோராச்சியத்தில் நூதனமாக உதயமாகும் கொள்கைகளும் மதங்களும் சாஸ்வதமான நிலையுடையனவாய்க் காந்திவிட்டெரியும் பகலில் இருளுக்கு இடமேது.

**சுப்பிரிய:**—அந்தோ! நான் அறியேன்.

**கோமன்கர்:**—ஆதலால் உன் மயக்கத்தை விட்டு எழுந்திரு. கனுக்காணுது கண்விழித்துப் பார். கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்னும் தாதியரால் வளர்த்துவரப்பட்ட நமது புராதன இல்லத்தில் தீப்பற்றிக்கொண்டது. ஓ! அழியும் கூட்டைச் சுற்றி அலறும் பறவைகள்போல நமது பழைய சம்பிரதாயங்கள் அழிந்து கெடப்போவதை அறிந்து நம் மூதாதையருடைய ஆவிகள் அவற்றைச் சுற்றிப் புரளுகின்றன. மனதை அலைய விட்டுக்கொண்டிருப்பதற்கு இது தருணமல்ல. இரவோ இருட்டிவிட்டது. பகைவர்கள் வாசலில் நிற்கிறார்கள். மாந்தரெல்லாம் தூக்கம்போய்விட்டனர் மயக்கமென்னும் மதுவில் மாந்தி மனிதர் மனிதரை எதிர்க்கின்றனர்.

**சுப்பிரிய:**—மனந்தளராது நான் உன்பக்கல் நிற்பேன்.

**கேமன்கர்:**—நான் இவ்விடத்தைவிட்டுஓடவேண்டும்.

**சுப்பிரிய:**—எங்கே? எதற்காக?

**கேமன்கர்:**—அந்நிய நாட்டிற்குப் போய்அங்கிருந்து சேனையைக் கொணரவேண்டும். ஓ! இப்புரட்சி இரத்தப்பலியை வேண்டிநிற்கிறது. இல்லையேல் இந்தத் தாகந் தீரமாட்டாது

**சுப்பிரிய:**—ஆனால்எமதுசேனை தயாராயிருக்கிறதே.

**கேமன்கர்:**—அவர்களை எதிர்பார்ப்பது வீண். விட்டில்போல அவர்கள் விளக்கில் பாய்கின்றார்கள். கேட்டனையா? மூடர்போல அவர்கள் கூச்சலிடுகின்றனர். இந்நகரமாந்தரெல்லாம் உன்மத்தராய் விட்டனர். தமது பரிசுத்தமான தர்மநெறிக்கே ஈமக்கிரியை செய்ய முற்பட்டு விட்டனர். விளக்குகள் கொளுத்தப்பட்டன.

**சுப்பிரிய:**—தாங்கள் போவதானால் என்னையும் அழைத்துச் செல்லுக.

**கேமன்கர்:**—இல்லை. நீ இங்கேநின்று சமாச்சாரங்களை அறிவிக்குதி. ஆனால் நண்ப, சாவதானம் இப்புதுமையின் மயக்கினால் உனது நெஞ்சுரத்தை நெகிழவிடாதே.

**சுப்பிரிய:**—பொய் புதுமையுடையது. ஆயின் எம் நட்போ பழையது. குழந்தைப்பருவம் முதல் நாமிருவரும் ஒன்றாய் வளர்ந்து வந்திருக்கிறோம். பிரிவு என்பது இன்றுதான் வந்தது. இதுவே முதன்முறை.

**கேமன்கர்:**—இதுவே கடைசிமுறையுமாகட்டும். தீவினை புறத்துங்காலம் வந்தால் அன்பின் தளையெல்லாம் அறுபடும். ஒரே உதரத்துப் பிறந்த சகோதரர் பிணங்குவர். இந்த இருளில் நான் உன்னைப்பிரிகின்றேன். இருளிலேதான் நான் மறுபடியும் இந்நகரத்து வாசலை அடைவேன். அப்பொழுது என்பிரிய நண்ப கையில் விளக்கேந்தியபடி என்னை எதிர்நோக்கி நிற்பாயென்று நான் நம்பலாமா? அந்த நம்பிக்கையுடன் தான் உன்னைப் பிரிகின்றேன். (போகின்றனர்.)

[அரசனும்—குமரனும் மாளிகையின் மாடத்தில் வருகின்றனர் ]

**அரசன்:**—என்மங்கையைத் தேசப்பிரஷ்டம் செய்யவேண்டியிருக்கிறதே.

**குமரன்:**—ஆம். தந்தாய் தாமதியேல். தாமதித்தால் துன்பம் நேரிடும்.

P

**அரசன்:**—அவசரப்படாதே! மகனே! அவசரப்படாதே! அவளை நாட்டைவிட்டுஓட்டிவிடவேண்டியதே. அதில் சந்தேகமில்லை.

**கோ. தேவி:**—(வருதல்) மன்னவ! எனது குழந்தை எங்கே? கூறுதி! என்னிடத்திருந்துமா அவளை ஒழித்தனை•

**அரசன்:**—யாரை ஒழித்தேன்?

**கோ. தேவி:**—எனதுமங்கை மாலினியை!

**அரசன்:**—என்ன அவள் தனது கோட்டத்தில் இல்லையா?

**கோ. தேவி:**—இல்லை. தேடியுங்காணேன்! உனது சைனியங்களுடன் சென்று இந்நகரத்து இல்லங்களையெல்லாந் தேடுதி. இந்நகர மக்களே அவளைக் கவர்ந்து கொண்டனர். அவர்களெல்லாரையும் நாட்டைவிட்டு ஓட்டிவிடு. நம் மகளைத் தரும்வரை இந்நகரில் ஒருவரும் இருக்கக்கூடாது.

**அரசன்:**—இதோ என் மகளை மீட்டுவருகிறேன். என் ராச்சியம் அழியினும் அழிக.

[பந்தங்கள் பிரகாசிக்க வேதியரும், யுத்தவீரர்களும் மாலினியை அழைத்து வருகின்றனர்.]

**கோ. தேவி:**—ஓ! என் கண்மணி! என்னை வருத்திய கொடியமகளே! விழித்தபோதெல்லாம் உன்னையே பார்த்திருக்கும் என்னைவிட்டு எங்கே சென்றனை.

**2–ம் வேதியன்:**—தேவி! மங்கைமீது அழலாதே! எங்களையெல்லாம் வாழ்த்தவேண்டி அவள் எம்மில்லங்கட்கு வந்தாள்.

**1–ம் வேதி:**—இம்மங்கை உமக்கே சொந்தமானவளோ? எமக்கும் உரிமையுடையாளல்லளோ?

**2–ம் வேதி:**—எமக்குவாய்த்த அன்னையே எம்மை ஒருபோதும் மறவாதே வாழ்க்கையென்னும் கடலில் வழியறியாது அலைவோர்க்கு வழிகாட்டும் தாரகை போல்வாய் எம்மை நல்வழிப்படுத்துதி.

**மாலினி:**—கதவுகள் திறக்கப்பட்டன. இச்சுவர்கள் எம்மை இனிஒருபோதும் மறிக்கமாட்டா.

**வேதியர்:**—எம்நாடும் உய்ந்தது. நாமும்உய்ந்தோம்.

**மாலினி:**—அன்னாய் வெளியுலகத்தை உன்முற்றத்துக்கு அழைத்துவந்தேன். எனது தேகபந்தங்களெல்லாம் கழன்றுவிட்டன. இவ்வுலகமும் நானும் ஒன்றென உணர்ந்துவிட்டேன்.

**கோ. தேவி:**—நன்று! குழந்தாய். இனிமேல் நீ வெளியே போகவேண்டியதில்லை. உலகம் இனிமேல் உன்னிடத்தும் என்னிடத்தும் வரட்டும். இதோ இரண்டாம் சாமமாகிவிட்டது. இப்படி இரு. மனதை அமைதியாக்கு. உன்னுள்ளத்தே எரியும் உயிர்க்கொழுந்து உன்தூக்கத்தையெல்லாம் எரித்து விட்டது.

**மாலினி:**—அம்மா! களைத்துப்போனேன். உடம்பெல்லாம் நடுங்குகின்றது. இவ்வுலகமோ பெரிது. அன்னாய் என்னைத்தாலாட்டு கண்வளரப்போகின்றேன். கண்களில் நீர்ததும்புகின்றன. உள்ளத்தில் என்னை அறியாமலே ஒரு துக்கம் உண்டாகிறது.

(முதலாம் அங்கம் முற்றிற்று.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உலகோர் உய்ய அவதாரம் செய்த உத்தமத் திரு நபி"

## சமத்துவத்தை நிலைநாட்டிய சர்வாதிகாரி

(ஜனாப், M. S. M. புகாரி)

[இவ்வுலகத்திலுள்ள ஜனத் தொகையில் 5-ல் ஒரு பகுதியினர்களாகிய சுமார் 50 கோடி மக்களால் பின்பற்றப்படும் தூய இஸ்லாத்தைத் தோற்றுவித்த எமது முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மானிட கோடிகளுக்கு எத்தகைய நன்மைகளைச் செய்திருக்கிறார்கள்? எவ்வாறான சீர்திருத்தத்தைச் செய்து முடித்தார்கள்? எப்படிப்பட்ட வெற்றியை அடைந்தார்கள்? என்பதை எமது ஹிந்து சகோதரர்களும் அறிந்து முஸ்லிம்கள்மாட்டு பரஸ்பர அன்பு கொண்டொழுக வேணுமென்ற உயரிய நோக்கம் பற்றியே, ஹிந்து நண்டர்களின் பேராதரவைப் பெற்று வெளிவரும் நமது கேசரியில் இச்சிறு கட்டுரையை வெளியிடத் துணிந்தனம். ஆனதுபற்றி இவற்றைப் பொறுமையோடு படித்து உண்மையை உணர்வீர்களாக.]

எனதன்பார்ந்த சகோதரர்களே!

நீங்கள் எமது பரிசுத்த முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகத்துக்குச்செய்த மகத்தான சேவைகளைப் பற்றி அறிந்துகொள்ள உண்மையிலேயே நீங்கள் அவாவுறும் பக்ஷத்தில் அந்த முஹம்மத் நபி (ஸல்) அவதாரம்செய்த காலமாகிய கி. பி. 6-வது நூற்றாண்டின் சரித்திரத்தையும் நீங்கள் படித்தறிய வேண்டியது அத்தியாவசியமாகும். அந்த ஆறாவது நூற்றாண்டில் இவ்வுலகம் இருந்த நிலைமையையும் எமது நபியவர்கள் அவதாரம் செய்த தேசம் இருந்த நிலைமையையும் அறிந்துகொண்டால்தான் எமது திரு நபி (ஸல்) அவர்களின் சீர்திருத்தத்தின் மாண்பு செவ்வனே புலனாகும்.

அந்த ஆறாவது நூற்றாண்டில் இவ்வுலகத்தின் எத்திசையை நோக்கினும் ஆங்காங்கெல்லாம் பரிதாபத்திற்குரிய அறிகுறிகளும் பயங்கரத்துக்குரிய சின்னங்களுமே பெரிதும் காணப்பட்டுவந்தன. இவ்வாறாக, இவ்வுலக முழுவதுமே வாயால் வர்ணித்துக் கூறமுடியாத அத்துணை காரிருள் கம்மிய ஆழிய அந்தகாரத்தில் அழுந்திக் கிடந்தபோதிலும் எமது பரிசுத்த முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அவதாரம்செய்த அரேபியா தேசம் இருந்த அத்துணைப் பரிதாபநிலைமைக்கு வேறெந்தத் தேசமும் இலக்காகிவிடவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனென்றால், அரேபியாவில் அதுகாலை வசித்தவர்கள் ஆறறிவுபடைத்த மாந்தர்கள் தாமா? அல்லது கானகத்தில் வசித்துவந்த விலங்கினங்கள்தான் மனிதவுருவெடுத்து ஆங்கு வாசஞ்செய்து வந்தனவா என்றுகூடச் சந்தேகிக்கவேண்டியதாயிருந்தது. ஏனென்றால் அவ்வராபிகள் தன்தாரமென்றும் பிறர்தாரமென்றும் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோரையும் சோரம்புரிந்துகொண்டும், பெண்மணிகளைப் பொறுக்கமுடியாத பங்கமும், அளக்கமுடியாத அவமானமும் செய்துகொண்டிருந்தார்கள். சிசுஹத்தியும், ஸ்திரிஹத்தியும், சர்வசாதாரணமாய் நடைபெற்றுவந்தன. பெண் குழந்தைகளை உயிருடன் மண்ணில் புதைத்து வந்தார்கள். கொலை, களவு, பொய், சூது முதலிய பஞ்சமாபாதகங்கள் அவர்களிடம் தலைவிரித்துத் தாண்டவமாடின. மதுபானமோ எல்லை மீறியதாய் பிரயோகிக்கப்பட்டு வந்தது. இப்படிப்பட்ட மதுவெறியானது பயங்கரமான சண்டைகளுக்கும் பாபமான அநீதிகளுக்கும் காரணபூதமாய்க் காணப்பட்டுவந்தது. அக்காலத்தில் நிகழ்ந்த அநீதிகளையும் அட்டூழியங்களையும் நினைக்கும்பொழுதே நெஞ்சம் திடுக்கிடுகின்றது.

இன்னும் அவர்கள் கல்லாலும் கட்டையாலும் செய்த அநேக ஆயிரம் விக்கிரஹங்களைத் தெய்வங்களென்று பூஜித்துவந்தார்கள். அரபுநாடு முழுவதிலும் விக்கிரஹ ஆராதனையானது ஆணிவேர்கொண்டு அநேகநூற்றாண்டுகளாய் ஆழ்ந்திருந்ததினால் அவ் விக்கிரஹ ஆராதனை ஒருவராலும் நீக்கமுடியாத அவ்வளவு பலமாக ஊன்றிக்கிடந்தது. கி. பி. 6-வது நூற்றாண்டில் அரேபியாதேசம் இருந்துவந்த நிலைமையைப்பற்றி ஆங்கிலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் ஸர் வில்லியம் மூயர் கூறியிருப்பதைக் கவனியுங்கள். "முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய காலத்திற்கு முன் அரபுநாடிருந்த நிலைமையைப்பற்றிக் கவனிக்கும்பக்ஷத்தில் அந்நாட்டில் ராஜாங்க சீர்திருத்தமாவது, ஆசாரசீர்திருத்தமாவது, மதசீர்திருத்தமாவது செய்வது சற்றும் முடியாததாகவே இருந்து வந்தது. அவர்களுடைய விக்கிரஹ ஆராதனையும் அநேக நூற்றாண்டுகளாக வேரூன்றிக்கிடந்தது. எகிப்துதேசத்திலிருந்தும் ஸிரியா நாட்டிலிருந்தும் வந்த கிறிஸ்தவப்பாதிரிமார்கள் எவ்வளவோ முயன்றும் அரபுநாட்டிலுள்ள விக்கிரஹ ஆராதனையைக்கூட அகற்றமுடியாமற் போய்விட்டது" என்பதேயாகும்.

இத்தகைய மனப்பான்மையுடைய மௌட்டீக மாக்களை நம்பிக்கைக்குப் பொருத்தமில்லாத அவ்வளவு குறுகிய கால அளவாகிய ஏறக்குறைய 23 ஆண்டுகளுக்கிடையில் இவ்வுலகமே கண்டு வியப்புறும்வண்ணம் அவர்களை எல்லாம் நாகரீகமுடையவர்களாகவும், பதிபத்தினி விரதம் பூண்டவர்களாகவும், மதுவருந்தலையும் மாதராடலையும் விட்டு அறவே நீங்கினவர்களாகவும், ஏகதெய்வத்தையே பூசிப்பவர்களாகவும், ஏக சகோதரத்துவமுடையவர்களாகவும் ஆக்கியதுடன், மதவிஷயத்திலும், ராசீய, தேசீய விஷயத்திலும், லௌகிக, வைதிக விஷயத்திலும் தனக்கு ஒப்பானவரேனும், தனக்கு மிக்கானவரேனும் இல்லையென்று இன்றைக்கும் இவ்வுலகத்தார் புகழும்படி ஆக்கிவிட்ட எம்பெருமானின் அரிய சேவையை நீங்கள் என்னவென்று கருதுகின்றீர்கள்? எம்பெருமானின் இனிய போதனைகள் அரபுநாட்டை மட்டுந்தான் சீர்திருத்தினவென்று கருதி விடற்க. எம்பெருமானின் இனிய போதனைகள் ஏறக்குறைய கால்நூற்றாண்டுக்கிடையில் இவ்வுலகம் முழுவதையுமே கண்விழிக்கச் செய்துவிட்டன. இத்தகைய நிகழ்ச்சியைப்பற்றிக் கல்கத்தாவிலுள்ள பேராசிரியர் டக்டர் பி. ஸி. ரே அவர்கள் கூறியிருப்பதைக் கவனியுங்கள் "பண்டைக்கால ஐரோப்பிய உலகம் காட்டுமிராண்டிகளின் படையெழுச்சியினால் வாயால் வர்ணித்துக் கூறமுடியாத அஞ்ஞானக் காரிருள் கம்மிய ஆழிய அந்தகாரத்துள் மூழ்கிக்கிடந்த போது இஸ்லாம் அவ்வெடிப்புக்களில் தலையிட்டுப் பேரிலக்கிய ஞானத்தின் அடிமுனைகளை உற்சாகமிக்க கவலையுடன் போஷித்து அவற்றினைச் சத்தியத்தாலும், சுதந்திரத்தாலும் உண்டுபண்ணப்பட்ட பரமாணு மண்டலத்தில் பூத்துப் பழுத்துப் பலன் தருமாறு வளர்த்திராதிருப்பின் நவீன நாகரீகமென்பது என்னவாயிருக்குமென்று யான் வினவுகின்றேன்" என்பதேயாம்.

இவ்வாறு எமது முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய கொள்கையும் அவர்கள் அடைந்த வெற்றியும் ஓர் சாமானியமானதென்று ஒருவரும் கருதிவிட வேண்டாம். இவ்வுலகந் தோன்றியநாள் முதல் இற்றைநாள் வரை இவ்வுலகில் அவதாரஞ் செய்த எந்தத் தீர்க்கதரிசிகளாலும், அவதார புருடர்களாலும், மஹாத்மாக்களாலும், மகரிஷிகளாலும் சாதித்துச் செல்லமுடியாத ஓர் தனிப்பெரும் வெற்றியேயாகும். இதைப்பற்றித்தான் கீர்த்திவாய்ந்த மேனாட்டுச் சரித்திராசிரியரான கிப்பன்துரை அவர்கள், "இவ்வுலகத்தில் தோன்றிய சகல தீர்க்கதரிசிகளுள்ளும், மதாசாரியர்களுள்ளும், முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அடைந்த வெற்றியைப் போன்று வேறெந்தத் தீர்க்கதரிசியும் அடையவில்லையென்று மண்டல மஹா கிரந்தமாகிய "என்சைக்கிளோபீடியா பிரித்தானிக்கா" என்ற கிரந்தத்தில் வெகு தெளிவாக வரைந்து வைத்திருக்கின்றார்.

இன்னமும் நீங்கள் எமது முகம்மது நபி (ஸல்) அவர்களின் சீர்திருத்தத்தின் உயர்வை நல்ல முறையில் தெரிந்துகொள்ள விரும்பினால் இதுகாலை நம் கண்முன் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இரண்டு விஷயங்களைப்பற்றிமட்டும் கூறினால் போதுமென்று கருதி அவற்றைக் குறிப்பிடுகின்றேம்.

முதலாவதாக, இந்தியாவில் இதுகாலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் தீண்டாமையொழித்தல் என்னும் விஷயத்தைக் கவனியுங்கள். புராதனமான ஹிந்து சமயத்திற்குத் தீரா வசையை ஈட்டிக்கொண்டிருக்கும் தீண்டாமை என்னும் பேயை அச்சமூகத்திலின்றும் ஒழித்துவிடவேணுமென்று எத்தனையோ வருடங்களாக இந்தியாவிலுள்ள மாப்பெருந் தலைவர்களெல்லாம் அரும்பாடுபட்டும், எத்தனையோ சங்கங்களும் சமாஜங்களும் நிறுவி அதில்நின்றும் பிரசாரங்கள் புரிந்தும், உலகம்போற்றும் மகாத்மா காந்தியடிகள் போன்ற பெரியார்கள் அநேக தடவைகள் உபவாசமிருந்தும், தன்னுடைய விலையேறப்பெற்ற உயிரையே அதின்பொருட்டு தியாகம்செய்துவிடுவேனென்று பிரகடனப்படுத்தியும் தீண்டாமை என்னும் கொடிய நோயை இந்து சமூகத்திலிருந்தும் நீக்கமுடியாமல் போய்விட்டது.

இரண்டாவதாக, இவ்வுலகத்திலுள்ள வல்லரசுகளில் மகாகீர்த்திபெற்று விளங்கிவருவதும், நவீனநாகரீகத்தில் தலைசிறந்த தேசமாய்க் காணப்பட்டுவருவதுமாகிய அமரிக்காவில் மதுபானத்தை அத்தேசத்திலின்றும் ஒழித்துவிடவேண்டுமென்று எத்தனையோ தலைவர்களெல்லாம் அரும்பாடுபட்டும், அரசாங்க சார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக எவ்வளவோ கொடுஞ் சட்டங்கள் இயற்றியும் அவர்களின் முயற்சியில் ஓர் சிறிதும் வெற்றியை அடைந்தனரில்லை.

ஆனால் கி. பி. ஆறாவது நூற்றாண்டில் அரேபியாவில் இருந்துவந்த தீண்டாமை இந்தியாவில் இதுகாலை இருந்துவரும் தீண்டாமையைவிட ஆயிரமடங்கு அதிகமான தீண்டாமையும் சாதித்திமிரும் சமயக்கட்டுப்பாடுமாக இருந்துவந்தது. மனிதர்களைக் கடைப்பண்டங்கள்போல் விலைக்கு விற்றும் வாங்கியும் வந்தார்கள். இவ்வாறு விற்கும் அல்லது வாங்கும் மனிதனை ஓர் மனிதனென்று நினைத்து நடத்துவதில்லை. அவர்களை மிருகத்திலும் கேவலமாகவே மதித்துவந்தார்கள். இத்தகைய மனப்பான்மைகொண்ட அராபியர்கள், எம்பெருமானின் அரிய போதனையால் இத்தகைய கேவலமாய் மதித்துவந்த அடிமைகளைச் சேனைத்தலைவர்களாகவும் தேசாதிபதிகளாகவும் ஏற்றுக்கொள்ளப் பெரிதும் ஆர்வம்கொண்டு நின்றார்களென்றால் எம்பெருமானின் போதனையின் மகத்துவத்தை என்னவென்று கருதுகிறீர்கள்?

இவ்வாறே மதுபானஞ்செய்வதும் அவ்வராபிகளின் பண்டைச் சரித்திரத்தில் ஓர் குறிப்பிடத்தக்க விஷயமாய் இருந்துவந்தது. அவ்வராபிகள் நாள் ஒன்றுக்கு மூன்று வேளை ஆகாரமும் ஐந்து வேளை மதுபானமும் செய்துவருவது வழக்கம். பெரியமனிதர்கள் மட்டுமின்றி சிறு பிள்ளைகளுங்கூட சாராயங்குடித்தல் சர்வசாதாரணமாயிருந்துவந்தது. சாராயப்பீப்பாய்கள் நிறைந்திராத ஓர் அராபியின் இல்லமேனும் அக்காலத்தில் இருந்ததில்லை. இத்தகைய குடியர்களின் மத்தியில் "மதுவருந்தலை அனைவரும் இன்றே விட்டுவிடவேண்டுமென்று இறைவனின் கட்டளை பிறந்திருக்கின்றது" என்று எமது திரு நபியவர்கள் கூறிய மாத்திரத்தில் மக்காநகரின் வீதிகளெல்லாம் சாராயம் ஆறுகள்போன்று ஓடத் தொடங்கிவிட்டதென்றும், அன்று தூரத்தப்பட்ட சாராயச்சாமியார் இதுகாலை 1350 ஆண்டுகளாகியும், எத்தனையோ மாறுபட்ட நிகழ்ச்சிகள் நடந்தேறியும் அவ்வெல்லையை அணுகாமல் இருந்துவருவதும் சரித்திரம் கண்ட சான்றாகும்.

இவ்வாறே அவர்களிடை குடிகொண்டிருந்த சகல அனாசாரப் பழக்கவழக்கங்களையும் அடியோடு களைந்து அவர்களையெல்லாம் ஞானவான்களாகவும், கல்விக்களஞ்சியமாகவும், சாந்தமும் சமாதானமும் நிறைந்த சற்குணசீலராகவும், அன்பிற்கே அணிகலனாகவும், மன்னுயிரையும் தன்னுயிர்போல் கருதி நடக்கும் ஆற்றல் உடையவர்களாகவும் ஆக்கிவிட்டார்கள்.


"தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற சான்றோர் மொழிக்கேற்ப அவர்கள் அடைந்த ஞானத்தை அவ்வராபியாவில் மட்டும் வைத்துக்கொண்டனரில்லை. அவர்கள் அடைந்த ஞானத்தை உலகம் முழுதும் பரப்பப் பகீரதப்பிரயத்தனம் எடுத்துக்கொண்டார்கள். ஸ்பெயின்தேசத்தில் குடியேறிய முஸ்லிம்கள் கல்வியையும், கலைஞானத்தையும் இவ்வுலகம் முழுதும் பரப்ப எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டத்தக்க விஷயமாகும். இன்று நாகரீகத்தில் தலைசிறந்து விளங்கும் மேனாட்டார் தங்களுடைய கலைஞானத்தைப் பற்றி எவ்வளவு மதிப்பை அடைந்துவருகிறார்களோ அவையெல்லாம் பண்டைய ஸ்பெயின் மக்களுக்கே பெருமையை அளிப்பதாகும். ஏனென்றால், அவர்கள் அடைந்த பரிபக்குவமனைத்தும் ஸ்பெயின் மக்களால் பயிற்றுவிக்கப்பட்டனவேயாகும். இதன் உண்மைச்சரித்திரம் அறிந்த சான்றோர்கட்குத் தெற்றெனப் புலனாகும். இத்தகைய பிறழ்ச்சியை எல்லாம் ஏறக்குறைய 23 வருடங்களில் சாதித்துச் சென்ற ஓர் பெரியாரைப்பற்றி அனைவரும் தெரிந்திருக்கவேண்டியது அத்தியாவசியமன்றோ?

இன்னமும் எமது திருநபி (ஸல்) அவர்களின் உயிர்வாழ்க்கையை உற்றுநோக்குமிடத்து மானிடர்களுக்குரிய சகல துறைகளிலும் அவர்கள் ஓர் முன்மாதிரியாய்த் திகழ்ந்துவந்திருக்கிறார்கள். கிறிஸ்துபெருமானின் போதனையில் பொறுமை, மன்னிப்பு, சாந்தம், சமாதானம் முதலாய தத்துவங்கள் நிறைந்து காணப்படலாம். அவ்வாறே புத்தபிரானின் போதனையால் அஹிம்சையும், ஜீவகாருண்யமும் அதிகம் காணப்படலாம். ஆனால் ஒரு மனிதன் இராசிய, தேசிய விஷயத்தில் எவ்வாறு ஈடுபடல்வேண்டும்? அதின் முறைகளென்ன? அந்நியதேசத்தாருடன் நடந்துகொள்ளவேண்டிய முறைகளென்ன? விவாகமென்றாலென்ன? அதின் தாமங்களெவை? என்பனபோன்ற மனித சமூகத்திற்கு அத்தியாவசியமான விஷயங்களை அதில் நின்றும் தெரிந்துகொள்ள முடியாது. ஆனால் எம்பெருமான் (ஸல்) அவர்களின் போதனையிலென்றாலோ, ஒரு மனிதன் எவ்வாறு உண்ணவேண்டும்; எவ்வாறு உறங்கவேண்டும் என்பன போன்ற சிறு விஷயங்கள்கூட விடாமல் கூறிச்சென்றிருப்பதை நீங்கள் நிதர்சனமாய்க் கண்டுகொள்ளலாம். எம்பெருமானின் இனிய போதனைகளனைத்தும் புத்திக்கும் யுக்திக்கும் பொருத்தமுடையதாகவும், எத்தேசத்தினரும் எச்சாதியினரும் பின்பற்றியொழுகத்தக்க இலேசான கொள்கைகளைக் கொண்டதாகவும், எக்காலத்திற்கும் பொருத்தமுடையதாகவும் இருந்துவருகின்றன.


ஆனதுபற்றியேதான் எம்பெருமானால் தோற்றுவிக்கப்பெற்ற பரிசுத்த தீனுலிஸ்லாமாகின்றது. எவ்வித பிரசாரமுமின்றி இவ்வுலகம் முழுவதிலும் பரவிவருவதோடு மாப்பெருங் கல்விமான்களை எல்லாம் இஸ்லாத்தின் வட்டத்துக்குள் சேர்த்துக்கொண்டிருக்கிறது. இத்தகைய தத்துவத்தை இவ்வுலகத்தில் நிலைநாட்டிச் சென்ற பெரியாரை முஸ்லிம்கள்மட்டுமன்றி புறசமயத்தினர்களும் பாராட்டவேண்டியது அத்தியாவசியமன்றோ? வஸ்ஸலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில்.  (யாழ்ப்பாணத்தின் புராதன ஆலயங்களிலொன்று.)




நல்லூர்க் கந்தசுவாமி கோயில். (யாழ்ப்பாணத்தில் பாடல்பெற்ற தலங்களிலொன்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தசுவாமிகோயில் தேர்.




யாழ்ப்பாணம்-மண்டைதீவுச் சாமியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம்-பெரியகடை வீதி.





யாழ்ப்பாணம்-பறங்கித்தெரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத்தின் மிகப் பிரதான கைத்தொழிலாகிய சுருட்டுத்தொழில்.




யாழ்ப்பாணம் – கரையூர்ப் பெண்கள் கயிறு திரிக்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணக்கோட்டையின் உட்பாகமும், அகழிகளும்.





யாழ்ப்பாணக் கோட்டையின் வெளித்தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளிருக்கும் கோயிலும், அரண்மனையும், உத்தியோகஸ்தரின் இருப்பிடங்களும்.




யாழ்ப்பாணம் " றிச்சுவே " மண்டபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் நீதிஸ்தலங்கள்.





யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள கிணறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம்-முற்றவெளி மணிக்கூட்டுக் கோபுரம்.




புல்லு விற்றுப் பிழைக்கும் ஏழைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய், கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை.




கள்ளுத் தவறணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்பாடி.





பழையகால யாழ்ப்பாணத் தமிழ்ப்பெண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அலுப்பாந்தித் துறையும், ரேகு வீடும்.





வல்லுவெட்டித்துறையில் செய்யப்பட்ட ஒருஅழகிய உருவின் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெண்கள் நெல்லுக்குத்துங் காட்சி.




மரவள்ளித் தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுக் கட்டுரை

# இலங்கையின் அரசியல் நிலை

(துன்னாலை, திரு. க. ஜெகக்கொடி அவர்கள்)

நீர்வள நிலவளங்களாலும் மாதர் தம் வெண்முகமெனப் பங்கயம் பொலிந்திடும் தடாகங்களாலுமன்றிப் பல்இரத்தினம், வைரம், முத்து ஆதியாம் திரவியங்களாலும், புராதன சித்திரவிசித்திரங்களாலு முயர்ந்தோங்குவதும், உலகத்தில் மிகவும் அழகான தீவென ஐரோப்பியரால் புகழப்படுவதுமாய ஈழநாட்டின் சரித்திரமோ மிகவும் விசேஷமானது. இத்தீவை வெவ்வேறு இராச்சியங்கள் வெவ்வேறு காலங்களில் ஆண்டன. ஆதியிலே இத்தீவில் இராட்சதர் குடியேறியிருந்தனரென்றும் அவர்களை இராவணனென்பான் ஆண்டானென்றும் இராமாயண வாயிலாய் அறியக்கிடக்கிறது. பூர்வீகத்தில் இயக்கர் நாகரென இருசாதியார் இலங்கையில் இருந்தார்களென்று சிங்கள நூல்கள் கூறுகின்றன. இயக்கர் என்பது இராட்சதரை என்றும், இவர்களின் தலைநகரம் இலங்காபுரி என்றும், அது தற்போது கடலில் அமிழ்ந்துபோ யிருக்கிறதென்றும் ஒருசாரார் கூறுவர். இவற்றி னுண்மை எவ்வாறாயினும் ஆகுக.

சிங்களர் அரசாண்ட காலத்தை மகாவம்சம், சுளுவம்சம் என இருபிரிவுகளாக வகுத்திருக்கின்றனர். விஜயன் தொடக்கம் மகாசேனன் பரியந்தமுள்ள காலம் மகாவம்சகால மெனப்படும். மேகவர்ணன் தொடக்கம் விக்கிரமராசசிங்கன் பரியந்தமுள்ள காலம் சுளுவம்சம் எனப்படும். சீவவதைகளும் படையெழுச்சிகளும் மலிந்து இலங்கையின் சீர்சிறப்புத் தேய்ந்துபோனமையால் இதற்குச் சுளுவம்ச காலமெனக் கூறுவர். சிங்களரின் அரசியலைப்பற்றி ஆராயுங்கால் அநேக சிங்கள அரசர்கள் கொடுங்கோன்மன்னராய் இருந்தார்கள் என்று தோன்றுகிறது. அரசரின் எண்ணப்படியே நாடுகள் ஆளப்பட்டன. தேசபரிபாலனம் தலைமைக்காரர்மூலமாகவே நடாத்தப்பட்டது. அரசன் சிற்றரசர்களையும் அவர்கள் பிரதானிகளையும் அவர்கள் தலைமைக்காரரையும் நியமிப்பார்கள். வரி வசூலிப்பதும் பகிரங்கவேலைகளைச் செய்விப்பதும் தலைமைக்காரன் கடமையாயிருந்தது. மனிதரின் தொழில்கள் அவர்களின் பிறப்பு நோக்கி வகுக்கப்பட்டன. அப்போதிருந்த சாதிக் கட்டுப்பாடு தென்னிந்திய திராவிடரின் கட்டுப்பாட்டுக்கொத்திருந்தது. கலகங்களை விசாரிப்பதற்கு "கன்சபா" என்றோர் சபையிருந்தது. தலைமைக்காரர் சிறுகுற்றங்களை விசாரணைசெய்து தக்க தண்டனை விதிப்பார்கள். சிங்களர் காலத்தில் முதன்முதல் தேசபிரமாணங்கள் யாவையும் ஒருங்கு திரட்டி ஓர் தருமநூ லாக்குவித்ததும், நீதிமன்றங்களில் செய்யப்படும் தீர்மானங்களைப் பதிவு செய்வித்ததும், மூன்றாந் தப்புளு அரசாண்ட காலத்திலேயேயாம். கி. பி. 1037-ல் தமிழரின் ஆறும் படையெழுச்சியின் காரணமாக அரசன் சிறைப்படுத்தப்பட்ட பின் விஜயபாகு சிம்மாசனம் ஏறும் வரையிலுள்ள காலம் பேரரசின்றியிருந்தது. இவன் காலத்தில் கொடுங்கோன்மையொழிய செங்கோன்மை தலையெடுக்க, அநியாய வரிகளும் அழிந்தொழிந்தன. பந்துவாசன் காலத்தில் ஈழம் மூன்று பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது. ஒன்று பிகிற்றி அல்லது இராசரட்டை எனப்படும், ஒன்று மாயாரட்டை எனப்படும், மற்றது உறுகுணை எனப்படும். சிங்கள அரசர் காலத்துக்குக் காலம் வெவ்வேறிடங்களை இராசதானியாக்கிக்கொண்டனர். நானூற்றைம்பது வருடகாலமாகத் தலைநகராயிருந்த பொல்லநறுவையின் கீர்த்தி புவனேகவாகுவுடன் முடிந்தது.

இனிப் போர்த்துக்கீச அரசரைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்:—கோவையிலிருந்த வைசரோயின் (Viceroy) கீழே இலங்கை யாளப்பட்டது. உள்நாட்டு விஷயங்களனைத்தும் சுதேசிகளால் கவனிக்கப்பட்டன. ஒவ்வோர் திசவனியும் பல கோறளைகளாகவும், ஒவ்வோர் கோறளையையும் பல சிறு கிராமங்களாகவும் பகுத்தனர். இலங்கையிற் போர்த்துக்கீசத் தலைவன் பழைய வழக்கங்களுக்கேற்ப அரசுசெய்வதாக வாக்குப் பண்ணியிருந்தும் பழைய சட்டங்களைத் திட்டப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்கொண்டிலன். ஆகையால் இவர் தர்மபாலாவின் காலத்திருந்த சட்டங்களையே அனுசரணைக்குக் கொண்டுவந்தார். இதுவரை சுதேசிகளே நாட்டைப் பரிபாலித்துவந்தனர். இப்போது அன்னியரால் பழைய பிரமாணங்கள் கையாளப்பட்டமையால் பல பிழைகள் ஏற்படலாயின. எல்லா நிலங்களும் அரசனுக்கே உரியனவாக்கப்பட்டன. அடிமைகள் நிலங்களைச் செய்து அதிகாரிகளுக்கு வரி கொடுத்துவந்தனர். இவ்வாறாக நூற்றைம்பத்துமூன்று வருஷகாலம் இலங்கையின்கரைநாடுகள் ஆளப்பட்டுவந்தன. போர்த்துக்கீசர் தாமனுசரித்துவந்த றோமன் கத்தோலிக்க சமயத்தை நாட்டிவைத்துப் போயினர். தங்கள் சமயம் வளரவேண்டுமென்பதே அவர்களின் முக்கிய நோக்கம். போர்த்துக்கீசர் பலர் பொருளவாவினால் பெரும் அநியாயங்களைச் செய்தனரென்று அறியக்கிடக்கின்றது. அவர்கள் தமது பாஷையையும் சுதேசிகளிடையே பரப்பிவிட்டனர்.

போர்த்துக்கீசரின் பின் இலங்கையைக் கைப்பற்றியோர் ஒல்லாந்தராவர். ஒல்லாந்தர் இலங்கையை மூன்று பிரிவுகளாகப் பிரித்தனர். ஒன்று கொழும்புப் பகுதி, ஒன்று யாழ்ப்பாணப்பகுதி. இது மன்னார், திரிகோணமலை, வன்னி முதலியவற்றையும் அடக்கியிருந்தது. வன்னி ஓர் சிற்றரசுநாடு. அது பல பிரிவுகளாக வகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வோர் வன்னிமையால் அல்லது வன்னிச்சியால் ஆளப்பட்டுவந்தது. இவர்கள் மலையாளத்தரசர்க்குத் திறை கொடுத்துவந்தாரெனச் சொல்லப்படுகின்றது. ஒல்லாந்தர் இவர்களை அடக்கப் பல முறை முயன்றும் சித்தி பெற்றிலர். தேசாதிபதியே இலங்கையின் சர்வாதிகாரி. ஒல்லாந்தநாட்டுச் சட்டங்கள் பல இலங்கைக்கேற்பத் திருத்தப்பட்டு இலங்கையில் அனுசரணையிற் கொண்டுவரப்பட்டன. புரட்டெஸ்டன்டு மதத்தை இங்கே நாட்டிவைக்கப் பலவாறு முயற்சிசெய்தனர். தம் சமயப் பிரவேசஞ்செய்ய மனமொப்பாத எந்தச் சுதேசிக்கும் உத்தியோகம் கொடுப்பதில்லையெனப் பிரமாணம் விதித்ததுமன்றிப் பல இடையூறும் செய்தனர். இந்துக்களைத் தங்கள் ஆலயங் கட்குப் போகவிடாது தடுத்தனரென்றும் கூறப்படுகிறது. உண்மை எவ்வாறாயினும் சமயப்பிரவேசஞ் செய்யாதவர்களுக்குப் பல இடையூறு செய்தனரென்பது வெள்ளிடை. அவர்கள் தங்கள் சமயத்தை மாத்திரமன்றி தோம்பு, பட்டோலை, தேசவழமை, றோமன் "டச்லோ" எனப்படும் கட்டளைச்சட்டம், முதலியவற்றையும் இலங்கையில் நாட்டிவைத்துப் போயினர். இவர்களும் போர்த்துக்கீசரைப்போல் குடிகளை நெருக்கி வரிகளை விதித்துப் பொருளீட்டினர். தம் பணவருவாயை நோக்கினரேயன்றிச் சுதேசிகளின் தேசவளர்ச்சியையும் அவர்கள் நயத்தையும் கருதினாரல்லர். இவர்களிடமிருந்து இராச்சியத்தை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

இஃதிவ்வாறாக, இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணம் இற்றைக்கு இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருடங்களுக்கு முன் நாகர்களுக்கு ஓர் பிரதான வாசஸ்தானமாக இருந்தது. நாகர் பல நூற்றாண்டுகளாக அரசு புரிந்து வந்தனர். அதன்பின்னர் சிங்கள அரசர்களாலும் காலிங்கவம்சத்து தமிழரசர்களாலும் ஆரியச்சக்கரவர்த்தி வம்சத்தரசர்களாலும் ஆளப்பட்டு வந்தது. சங்கிலியனிடமிருந்து போர்த்துக்கீசர் கைப்பற்றி நாற்பதுவருடமாண்டபின் ஒல்லாந்தரும், அவர்களின் பின் ஆங்கிலேயருமாய் ஆண்டு வருகின்றனர்.

கிழக்கிந்திய ஆங்கிலேய வர்த்தக சங்கத்தார் இலங்கையின் கரை நாடுகளை ஆண்டபோது இலங்கையின் விருத்தியை நாடாது சங்கத்தின் வருவாயையே நாடினர். ஒல்லாந்தரால் உண்டாக்கப்பட்ட பிரமாணங்களின்படியே இவர்களாண்டார்களாயினும் ஆங்கிலேயர், கொள்கைக்கு முற்றும் மாறான சில வழக்கங்களை நீக்கிவிட்டனர். சமயச்சார்பாகக் கொலைசெய்தல் மிகவும் பிற்போக்கான முறையென அவ்வழக்கத்தை நீக்கினர். வர்த்தக சங்கத்தாரின் ஆளுகை மிகவுந் திருப்தியாயில்லாமை கண்டு இலங்கையை ஆங்கில அரசரின் கீழ்ப்படுத்தி, விரெடிறிக்நோர்த் என்பவர் தேசாதிபதியாக அனுப்பப்பட்டார். அவர் சுதேசிகளின் பூர்வமுறைகளைத் தழுவிக்கொண்டு திறை திரட்டும் முறையைச் சீர்ப்படுத்தி, எம்மதத்தினர்க்கும் எவ்வருணத்தினர்க்கும் இசைய அரசு நடாத்தினார். ஆங்கிலேயர் இலங்கையின் நிலையைக் கூர்ந்து ஆலோசியாது முற்போக்கான முறையை அனுசரணையிற் கொண்டுவந்தனர். குடியேற்றநாட்டு அந்தஸ்து வழங்கப்பட்டது. தேசாதிபதி பழைய முறைகளைத் தழுவிப் பிறதேச மந்திரியின் கீழ் அரசுசெய்து வந்தார். இலங்கையின் ஒழுக்கவழக்கங்களை அறியாத ஆங்கிலேயர் ஒருவரால் நாட்டிற்கேற்ப பரிபாலனஞ் செய்ய முடியாதாகையால் ஓர் சபை (Council) நியமிக்கப்பட்டது. தேசாதிபதி சபையுடன் கலந்து ஆலோசிப்பதேயன்றி அதன் தீர்மானங்களின்படி நடக்கவேண்டிய அவசியமில்லை. இலங்கையரின் விஷயங்களை ஆராய்வதற்கு முதன்முதல் அச்சபைக்கு நியமிக்கப்பட்டவர்கள் தேசாதிபதியைப்போலவே உள்நாட்டு விடயங்களைப்பற்றிய அறிவில்லாத ஆங்கிலேயராவர். அது மாத்திரமன்றிச் சபையின் நடபடிக்கைகள் முழுவதும் ஆங்கிலத்திலேயே நடத்தப்பட்டனவாகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் ஆங்கில மறியாதோர்க்கு இச்சபை ஓர் பயனையும் அளித்திலது. எனினும் இரண்டு முக்கிய காரணங்களால் பரிபாலன முறை மாற்றவேண்டிய சந்தர்ப்பம் வாய்த்தது.

முதலாவதாக ஆயிரத்தெண்ணூற்றுப் பதினைந்தில் கண்டிநகர் ஆங்கிலேயருக்குள்ளானதும், பிரமாணங்களும் சமய ஒழுக்கங்களும் இருந்தபடியே இருக்கப் பழைய முறைகளைத் தழுவி அரசாட்சி செய்யவேண்டி இருந்தது. ஆகையால் கண்டிநாட்டின் அரசியல் முறையும் கரைநாட்டு அரசியல் முறையும் வேறுபாடுள்ளனவாயிருந்தன. கண்டி நாட்டின் அரசியற் கருமங்கள் ஓர் சங்கத்தாரால் விசாரணைசெய்யப்பட்டு வந்தன.

இரண்டாவதாக, ஐரோப்பிய நாட்டார் இலங்கையில் குடியேறவேண்டிய அவசியம் நேர்ந்தது. பல ஐரோப்பியர் தம் வருவாயை நோக்கி இலங்கையில் தேயிலை முதலியன பயிரிடும் நோக்கமாக இலங்கையில் குடியேறவேண்டியிருந்தது. முன்னிருந்த அரசியல் திட்டத்தின்படி இவர்கள் குடியேற இயலாது. ஆகையால் அவர்களே அரசியல் முறையில் மாற்றஞ் செய்வித்தற்குக் கிளர்ச்சிகள் செய்தனர்.

இவற்றின் பயனாக ஆயிரத்தெண்ணூற்று முப்பத்துமூன்றில் புதிய அரசியல் திட்டம் நிர்வகிக்கப்பட்டது. இதன்படி ஓர் சட்டநிரூபண சபையும் சட்ட நிறைவேற்றுச் சபையும் ஏற்படலாயின. சட்டநிரூபண சபைக்கு ஆறு அங்கத்தினர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். நிறைவேற்றுச் சபைக்கு உத்தியோகத்தினரே நியமிக்கப்பட்டனர்.

இந்த நிர்வாகம் எண்பதுவருடம் வரையில் அதிக மாற்றமடையாது நிர்வகிக்கப்பட்டது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. இப்புதுமுறை விசேடமாக ஆங்கிலேயரின் கிளர்ச்சியினாலேயே கையாளப்பட்டது. இதன்படி அவர்களுக்குப் போதிய சௌகரியங்களிருந்தன. சட்டநிரூபண சபையில் மூன்று அங்கத்தவர்களும் ஐரோப்பியரின் சார்பாகவே நியமிக்கப்பட்டனர். இவ்விரு சபைகளின் தீர்மானங்கட்கும், மாறாக எதுவும் செய்யக்கூடிய அதிகாரம் தேசாதிபதிக்குண்டு. ஜனங்களின் சார்பாகப் பேசுதற்கு ஜனப் பிரதிநிதிகளில்லாமையால் அச்சபைகள் ஜனப் பிரதிநிதிகளையும் கொண்டதாயிருக்கவேண்டுமென்று பலர் வற்புறுத்தியும், ஆங்கில பாராளுமன்றம் உடன்பட்டிலது. எனினும் ஆயிரத்தெண்ணூற்று முப்பத்தொன்பதில் பண விடயத்தில் ஓர் வகையான அதிகாரம் சட்டநிரூபண சபைக்கு ஏற்படலாயிற்று. பணம் செலவுசெய்யும் அதிகாரம் தேசாதிபதிக்கிருந்தாலும் செலவுசெய்யும் வகையைக் கண்டிக்கச் சட்டநிரூபண சபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆயினும் தேசாதிபதியோ தன் எண்ணப்படியே எல்லாம் செய்துவந்தார். குடியேற்ற நாட்டு மந்திரியும் சபையின் அங்கீகாரம் பெறாது போர் வீரரின் பராமரிப்புக்குப் பணம் பெற்று வந்தார். மேற்படி சபையார் தங்களுக்குள்ள அதிகாரம் அசட்டை செய்யப்படுவதை உணர்ந்து இராணுவச் செலவிற்கு மிகவும் சிறு தொகையையே அங்கீகரித்தனர். ஆங்கிலப் பாராளுமன்றத்தினர் முழுத்தொகையையும் இவர்களே கொடுக்கவேண்டுமென்று பிடிவாதமாய் நின்றனர். இது சட்டசபை அங்கத்தினர்க்குப் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. ஆகையால் ஆயிரத்தெண்ணூற்று அறுபத்தினில் சபை கூடியபோது அரசாங்கத்தில் நம்பிக்கையில்லையென்ற சாரப்பட ஓர் தீர்மானத்தை நிறைவேற்றினர். அறுவர் சார்பாகவும் ஐவர் எதிராகவும் வாக்களித்தனர். பின்பும் பிறதேச காரிய மந்திரியார் சற்று மிளகாமை கண்டு இவர்கள் அச்சபையினின்றும் விலகினர். மோகன் என்பவரின் தந்திரத்தினால் ஓர் பயனையும் பெறுமுன் இவர்கள் மீண்டும் சபையின் அங்கத்தவர்களாகவேண்டி வந்தது.

காலத்துக்குக்காலம் சுதேசிகள் பல சர்வகலாசாலைகளிலும் சென்று கல்வி கற்று வந்தனர். அவர்கட்கு ஆங்கிலேயரின் இராசதந்திரம் விளங்கிற்று. பல அரசியல் முறைகளையும் கற்றுக்கொண்டனர். ஆகவே பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கடைக்கூறில் சுதேசிகளே அரசியல் சீர்திருத்தத்திற்காகப் பலமாக வாதாடினர். இலங்கையின் கூடிய தொகையினர் பிரதிநிதிகளால் ஆளப்படும் ஆட்சி (Representative Government)யைப்பற்றி நன்றாய் அறியமாட்டார்களென்று பிரித்தானியர் வாதாடினர். எனினும் ஆயிரத்தெண்ணூற்றெண்பத்தொன்பதில் கண்டிநாட்டார்க் கொருவரும், மகமதியர்க் கொருவருமாக இருபிரதிநிதிகளைச் சட்டநிரூபண சபைக்கு நியோகித்தார்கள். சபையினுயுள் மூன்று வருடத்திலிருந்து ஐந்து வருடத்திற்கு நீடிக்கப்பட்டது. போர்வீரரின் செலவும் குறைக்கப்பட்டது. தேசாதிபதி செலவிடும் பணத்திற்குச் சபையின் உத்தரவாதமும் வேண்டப்பட்டது.

இவ்வளவுடன் திருப்திப்படாது ஆயிரத்துத் தொளாயிரத்தொன்பதில் அரசியல் திருத்தஞ் செய்யும்படி மனுக்கள் அனுப்பப்பட்டன. ஆயிரத்துத்தொளாயிரத்துப் பதினொன்றில், பிறதேச மந்திரியால் அனுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பட்ட விசாரணைச்சங்கத்தின் பேருக சட்டநிரூபண சபை திருத்தஞ் செய்யப்பட்டது. இத்திருத்தத்தின் படி உத்தியோகத்தரல்லாத பிரதிநிதிகள் நால்வர் ஜனங்களால் தெரிவுசெய்யப்படுவர். இவர்களில் இருவர் ஐரோப்பியர்க்கும் ஒருவர் பேர்க்கருக்கும் ஒருவர் கல்வியிற் றேர்ந்த சுதேச சாகியத்தாருக்கும் பிரதிநிதிகளாவர். எஞ்சிய அறுவரில் ஒருவர் கண்டிநாட்டுச் சிங்களர்க்கும் ஒருவர் மகமதியர்க்கும் இருவர் கரைநாட்டுச் சிங்களவர்க்கும் இருவர் தமிழர்க்கும் பிரதிநிதிகளாகத் தேசாதிபதியால் நியமிக்கப்படுவர்.

ஆயிரத்துத்தொளாயிரத்துப் பதினைந்தில் ஐரோப்பிய மகாயுத்தம் வெகுமும்மரமாய் நடக்கையில் சோனகர்க்கும், சிங்களர்க்குமிடையில் கலகம் விளைந்தது. தேசாதிபதி "மறநெறி ஆஞ்ஞை"யை (Martial Law) விளம்பரஞ் செய்தார். இது சம்பந்தமாக சேர். பொன். இராமநாதர் அவர்கள் இங்கிலாந்து சென்றதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் விடுதலைக்காக பெரு முயற்சிகள் செய்யப்பட்டன. மகாத்மாகாந்தியின் சத்தியாக்கிரகம் சுதேசிகளிடையே நன்ருய்வேரூன்றியது. இலங்கையரும் இந்திய சுயராச்சியப் போராட்டத்தினுல் தூண்டப்பட்டவராய் தம் நாட்டு இராச்சியமுறை சீர்திருத்தப்படல் வேண்டுமென்று ஓர் கோஷ்டியினை (deputation) பிறதேச மந்திராலோசனைச் சபைக்கனுப்பினர். இவர்களபிப்பிராயத்தையறிந்த மந்திரியார் தேசாதிபதியை இங்கிலாந்துக்கு அழைத்து அதுவரை நடைபெற்று வந்த இராச்சியமுறையைத் திருத்தப்பாடுசெய்தனர். இதன்படி சட்டநிரூபணசபைப் பிரதிநிதிகளை ஒவ்வோர் மாகாணத்தாரும் ஒவ்வோர் முக்கிய சாகியத்தாரும் தாமாகத் தெரிந்து கொள்ளும் சலாக்கியம் அடைந்தனர். இது நடந்தது ஆயிரத்துத் தொளாயிரத் திருபத்தொன்றில் மனிங்பிரபு தேசாதிபதியாயிருந்தகாலத்திலென்க. பின் ஆயிரத்துத் தொளாயிரத் திருபத்தைந்தில் சேர். கியூ கிளிவோட் இலங்கை அரசைக் கையேற்றூர். சுதேசிகள் அரசியல் முறையில் திருத்தஞ்செய்ய வேண்டுமென்று மனுப்பண்ணியமையாலும் தேசாதிபதியும் அவ்வித அபிப்பிராய முடையவராய்க் காணப்பட்டமையாலும் இலங்கையின் குறைமுறைகளை விசாரணை செய்து அவற்றிற்காந் திருத்தங்களைச் செய்யுமாறு ஓர் றேயல் கொம்மிஷனர் சபை நியமிக்கப்பட்டது. இச்சபை டொனமூர்ப் பிரபுவைத் தலைமையாகக் கொண்டமையால், "டொனமூர்க் கொம்மிஷன்" என வழங்கப்பட்டது. இவர்கள் ஆயிரத்துத் தொளாயிரத் திருபத்தேழாமாண்டு இலங்கையை அடைந்து சில பாகங்களுக்கு மாத்திரஞ்சென்று சிலரின் அபிப்பிராயங்களை யறிந்துகொண்டு அறிக்கை ஆயத்தஞ்செய்யத் திரும்பிவிட்டனர். அடுத்த வருடம் டொனமூர் அறிக்கைப்பத்திரம் நூற்றுஎண்பத்தெட்டுப் பக்கங்களையும் ஒன்பது லட்சத்து நாற்பத் தோராயிரம் சொற்களையுமுடையதாய் வெளியிடப்படலாயிற்று. இதன்படி பழைய சபைகள் நீக்கப்படலாயின. தேசாதிபதியவர்களுக்கு உதவியாய் மூன்று அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தவிர ஐம்பது சனப்பிரதிநிதிகளும் தேசாதிபதியால் நியமிக்கப்படும் வேறு எட்டுப் பிரதிநிதிகளும் இப்புதிய அரசியற்சபை அங்கத்தினராவர். இவ்வங்கத்தவர்களுள் சபை அக்கிராசனம் வகிக்குமாறு ஒருவர் தெரியப்படுவர். அவர் "ஸ்பீக்க" ரென்று அழைக்கப்படுவர். ஏனையோர் பரிபாலன விஷயமாய் ஏழு நிர்வாக சபைகளாகப் பிரிக்கப்படுவர். ஒவ்வொரு சபைக்கும் தலைவராகத் தெரியப்படுபவர் மந்திரியாக நியமிக்கப்படுவர். ஆகவே, கல்விமந்திரி, சுகாதாரமந்திரி, விவசாய மந்திரி, தொழில் வர்த்தக மந்திரி, போக்குவரவு மந்திரி, பரிபாலன மந்திரி, உள்நாட்டு விஷயமந்திரி (Home Affairs) என ஏழு மந்திரிகள் உண்டு. அரசாங்கசபையால் நிறைவேற்றப்படும், ஒவ்வொரு சட்டங்களும் தேசாதிபதி யவர்களின் முழு அங்கீகாரத்தின் பின்பே அனுசரணைக்குக் கொண்டுவரப்படும். தேசாதிபதியவர்கள் அத்தியாவசியகவிஷயம் (Reserve Powers) என்னும் நியாயம்பற்றி மேலதிகார வல்லமையை உபயோகிக்க அவருக்கு முழு உரித்துமுண்டு. பரிபாலனத்தின் விசேட பொறுப்புக்கள் அரசாங்க சபையினின்று நீக்கப்பட்டன. மந்திரிமார் தாம்செய்கிற சகலகருமங்களுக்கும் உத்திரவாதிகளாவர். இவ்வரசாங்க சபையின் நீடிய காலம் நான்கு வருஷமே. அதன்பின் அது குலைக்கப்பட்டு புதிய பிரதிநிதிகளைக்கொண்ட வேருெரு சபை நிறுவப்படும்.

இஃதிவ்வாருக டொனமூர் அறிக்கையில் குடியாசு நாட்டு மந்திரியார் சில திருத்தங்களைச் செய்தனுப்பி வைத்தார். 1929-ல் புதிய அரசியல் முறை சட்டநிரூபண சபையினரால் அங்கீகரிக்கப்பட்டது. தமிழ்ப் பிரதிநிதிகளிற் பலர் இப் புது முறையை எதிர்த்தனர். சில சிங்கள அங்கத்தினரும் தமிழருடன் ஒத்துநின்றனர். ஆயின் பெரும்பாலரர் இத்திட்டத்தைப் பரீட்சித்துப் பார்த்தே ஆவன செய்யவேண்டுமென்று கட்டித் தழுவிக்கொண்டனர். யாழ்ப்பாணப் பகுதியார் மாத்திரம், இத்திட்டம் மிகப் பிற்போக்கானதென்றும் அதை வெறுத்து ஒதுக்கவேண்டுமென்றும் இந்தியர் சைமன் கொம்மிஷனர்க்குச் செய்ததுபோல் இலங்கைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுக் கட்டுரை

# இலங்கையரின் ஒற்றுமை

"காங்கேசன்"—கரவெட்டி.

1. இலங்கைவாசிகளி னொற்றுமை இன்றிமையா தென ஆராய்தன் முன் இலங்கையின் புராதன சரிதையை ஈண்டு ஆராய்தற்பாலது. இலங்கையின் பூர்வீக சரிதையை இலங்கைவாசிக ளெல்லோரு மறிந்திருந்த போதிலும் மீண்டும் பயன் நோக்கி ஈண்டு சுருக்கிக் கூறப்படுகின்றது.

2. ஏனைய நாடுகளின் சரித்திரங்களைப்போல் சந்தேக விபரீதமறத் தொடக்கத்திலிருந்து இச்சரித்திரம் எழுதப்பெறவில்லை. ஆதியில் இத்தீவில் இயக்கர், நாகர் என இருசாதியார் இருந்தார்களென்றும் அவர்கள் பைசாச, சர்ப்ப வழிபாடுடையா ரென்பதுபற்றி அவர்களுக் கன்னாமங்கள் காரணப்பெயராக வந்தன என்றும் (யக்கோ என்னும் சிங்களச்சொல் இராக்ஷதரைக் குறிப்பதை நோக்குக.) இவர்களிருந்த இடம் மட்டக்களப்புக்குத் தெற்கே திருக்கோயிலுக் கெதிரே இருந்ததென்றும், அது இப்போது கடலாற் கொள்ளப்பட்டதென்றும் கூறுவர்.

3 இந்தியாவில் லாலாநாட்டில் அரசியற்றிய சிங்கத்தின் புத்திரனான சிங்கவாகுவென்னு மரசனுக்குப் பிறந்த பதினாறு இரட்டைப் பிள்ளைகளுக்குச் சிரேட்டனான விஜயன் துஷ்டனாக இருந்து சனங்களை வருத்தினமை கண்டு இவன் தந்தை 700 பேரோடு இரு படகிலேற்றி ஆழியில் அலையவிட, விதிவசத்தால் புத்தளத்துக் கணித்தாயுள்ள செம்மண் திடரில் இறங்கிய காலமாகிய கி. மு. 543-ம் ஆண்டு தொடக்கம் கி. பி. 304-ம் ஆண்டு வரையுமுள்ள காலம் மகாவம்சகால மெனவும், கி. பி. 304-ம் ஆண்டு தொடக்கம் கி. பி. 1815-ம் ஆண்டு வரையுமுள்ள காலம் சுலுவம்சகால மெனவும் சிங்கள சரித்திரங்கள் கூறும்.

4. விஜயன் காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கை அனேகமாக, தமிழர்களால் குடியேற்றப்பட்டது. யாழ்ப்பாணம் வீரராகவன் என்னும் அந்தகனால் குடியேற்றப்பட்டது. அக்காலந் தொட்டு தந்தை அரசு, மகற்கென இருந்தபோதிலும் பொறாமை, வெகுளி காரணமாக காலத்துக்குக் காலம் நிலைகுலைந்தும் நிலையற்றும் அரசியல்நடைபெற்றது. கி. மு. 205-ம் ஆண்டு தமிழரின் படையெழுச்சி சிங்கள அரசுக்கெதிராக நடைபெற்றது. இக்காலந் தொட்டு இன்று வரை சிங்கள தமிழொற்றுமை இல்லாததற்குக்காரணம், சிங்களரினரசியலுக்கு, காலத்துக்குக் காலம் தமிழர் விளைத்த கலகங்களே பிரதானமென்க. சுலு வம்சகாலத்தில் சீவவதைகளும் படையெழுச்சிகளுமே மலிந்து, அரசியல் சீர்கெட்டுப்போயின.

---

ரும் டொனமூர்க் கொம்மிஷனுக்குச் செய்திருக்க வேண்டுமென்றும் வாதாடி அரசியல் சபைக்குப் பிரதிநிதிகளை அனுப்பாதுவிட்டனர். இலங்கையின் ஏனைய பகுதிகளிலுமுள்ள அரசியல் நிபுணர்கள் யாழ்ப்பாணத்தாரை மெச்சினர். ஆயின் சுயநலப் புலிகள் சிலரின் வேண்டுகோளினால் மூன்றுவருடங்களின் பின் இன்னோர் பிரேரணைநாள் ஏற்பட அவர்களில் நால்வர் சபையினுள் புகுந்துகொண்டனர். இவ்வறிக்கை எழுதப்பட்ட கடுதாசியின் பெறுமதிதானும் இதற்கு மதிக்க முடியாதெனச் சில அரசியல் நிபுணர்கள் கூறியதுண்டு இத்திட்டம் கையாளப்பட்டபோது பல முரண்பாடுகள் காணப்பட்டும், தேசாதிபதி தம் விசேஷ அதிகாரத்தைப் பல முறை உபயோகித்தும் மந்திரிமார் சபையை விட்டுவிலக ஒருப்பட்டிலர். மந்திரிமார் திருத்தஞ் செய்யவேண்டுமென மனுப்பண்ணியும் ஓர் பயனும் பெற்றிலர். திரு. E. W. பெரோரா மறுமுறையும் திருத்தப் பிரேரணைகள் கொண்டுவந்திருக்கிறார். இலங்கையின் அரசியல் நிலை முன்னேறிவரினும் போதிய முன்னேற்றம் ஒரு சிறிதும் காணப்படவில்லையென்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இலங்கை முன்னிருந்த நிலையும் இப்போதிருக்கும் நிலையும் தெளிவாயிற்று. இலங்கையின் பெறுபேறு மிதுவேயாம்.

R



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தற்போது இலங்கையே தமது சொந்த ஊரெனச் சிங்களர், தமிழர், சோனகர், பறங்கியர், மலாயர், ஐரோப்பியர், இந்தியரெனப் பல்வேறு சாதி மதத்தவர்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தம்மை இலங்கைமாதாவின் புத்திரரென வாய்ப்பேச்சில் பெருமை பாராட்டிக்கொண்டபோதிலும் உண்மையில் இஃதெவ்வளவு தூரம் வாய்மையென, தற்போதைய அரசியல் நிலையால் ஓர்ந்து உணரலாம். கிழைத் தேசங்களென இருக்கும் எல்லாத் தேசங்களிலும், சாதி மதக் கட்டுப்பாடுகளும், அபிப்பிராய பேதங்களும், விபரீத விளக்கங்களும் கொண்ட பல்வேறு சாதியார் இருக்கின்றமையா லொற்றுமையென்பது மருந்துக்கும் கிடையாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனியென்க. ஒவ்வொருவரும் தன்னயத்திற்காகவே ஒவ்வொரு தொழிலிலீடுபட்டு, அதற்குப் பொதுஜன சேவையெனப் பேர் வைத்து, தமக்கு வேண்டியவற்றைப்பெற அபேட்சிக்க, இன்னொரு சாதிமதத்தவர் இச்சேவை தம் சாதிமதக் கோட்பாடுகளுக்கு முரணானதென ஆக்ஷேபிக்க, இன்னொருசாரார் இவருக்குப் பக்கபலமாய் வர, இடையிலுள்ளோர் தமக்கென இனி யென்செய்வதென வாளாவிருப்ப, இலங்காதேவியி னொற்றுமை எவ்வாறு சமரசப்படும்.

6. ஓர் தேசத்தை ஒற்றுமைப்படுத்த முயலுமுன் அத்தேசத்தின் பாகமாகிய நாட்டுப்புறங்களிலுள்ள ஒவ்வோர் குடிசைகளிலும் ஒற்றுமை இருக்கிறதாவென்பதைக் கவனிப்போமாயின் இனிது விளங்கும். இலங்கையின் ஒவ்வோர் கிராமங்களையும் சுற்றி வருவோமாயின், நோய், வறுமை, அறியாமை, பகை, பொறாமை, கொலை முதலியன குடியிருக்கக்காணலாம். இத்தகைய நிலையில் தற்போதைய இலங்கை இருந்து வருகிறதென்பது எல்லோருமறிந்த விஷயம். இலங்கையரி னொற்றுமை இலங்கையரி னபிவிருத்திக்கு இன்றியமையாததெனினும் எவ்வாறு வடக்கும், தெற்கும், குடக்கும், குணக்கும் ஒத்து வாராதோ அவ்வாறே இலங்கையில் வதியும் தமிழ், சிங்கள, சோனக, பறங்கிய, மலாய, ஐரோப்பிய, இந்திய ஒற்றுமையென்க இச்சாதிமதப் பிரிவினை, விஜயன்காலந் தொட்டு இன்றுவரை கி. மு. 543—கி. பி. 1935 ஏறக்குறைய 2478 ஆண்டுகளாகச் சரிவந்ததல்ல; வரப்போவதுமல்ல. ஆனால் தாய்நாட்டின் க்ஷேமமே தமதென மதிக்கும் விரசுதந்திர தியாக புருஷர்கள் மேற்காட்டிய ஒவ்வோர் சாதிமதங்களிலும் அவதாரஞ் செய்து இப் பணியை மேற்கொண்டு தத்தம் சாகியத்தவர்களால் நன்மதிப்புப் பெற்று அரசாட்சியாரின் ஆதரவையும் பெற்றால் ஒருவாறு இலங்கையினொற்றுமை என்னு மரும்பெரு மணியைக் கண்ணிற் கண்டு காதாற் கேட்கலாம்.

7. ஒற்றுமை, ஒற்றுமையீனம், கலவரம், துன்பம் என்பவை ஒவ்வொருவர் வாழ்விலும் நிகழ்வன இயல்பேயாக, அரசியலும் இவ்வித நிலைக் குட்படுகின்றது. இவ்வித கலவரப்பட்ட அரசியல் இலங்கைக்கு மாத்திரமன்றி இவ்வுலகத்து வல்லரசுகள் எல்லாவற்றிலும் தங்கியிருக்கின்றது. காரணம், மனிதகுணம் அல்லது மானிடத்தன்மை எங்கும் ஒரேதன்மைத்தாதலின் என்க. ஒரு சனசமூகத்தை முன்னேற்றமடையச் செய்தலும் ஓர் தேசத்தை முன்னணியிலிருக்கச் செய்வதும் சிறந்த அறிவாளரின் செயல். இது மேல், கீழ் நாட்டுச் சரித்திரங்களாலும், சுய சரிதைகளினாலும் தெரியப்படும். வீரசுதந்திர தாகம் ஒவ்வொரு தேசத்து மக்களால் அவ்வத்தேசத் தறிவாளிகள், மதிவிற்பன்னர், மதிமந்திரிகள், இராசதந்திரிகள், தறுகண் வீரர், வித்தியாவிநோதர் முதலியோர் சரிதையைத் தத்தம் தாய்மொழியில் அறியப்பெற்று இருப்பதால் ஏற்படும் பெறுபேறு. இத்தாகமே ஓர் தேசத்து எல்லா மக்களி னொற்றுமைக்கும், ஒத்துழைப்புக்கும், சுயநலத்தியாகத்துக்கும், தேச முன்னேற்றத்துக்கும் இன்றியமையாதெனக் கருதப்படுமாதலின் தற்போதைய இலங்கை வாசிகளி னொற்றுமைக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் பிற்காட்டப்படுபவைகளை அகற்றிவிட்டால், ஒவ்வொருவர்க் கிடையும் உண்மையான பரஸ்பர அன்பு தானே தோன்றி முழுத் தேசத்தையும் பிரமிக்கச் செய்யுமென்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

1. சாதிமதக்கட்டுப்பாடு.
2. தீண்டாமை.
3. கல்விச்சீர்திருத்தம்.
4. கலப்புமணம்.
5. அரசியல் ஞானசூனியம் ஆகியவற்றின் இன்மையே சமரச உணர்விற்கும், ஒத்துழைப்பிற்கும், ஒற்றுமை நயத்திற்கும் பங்கஞ்செய்பவையாம். இவற்றுள் ஒவ்வொன்றையும் ஈண்டு ஆராய்ந்து கொள்ளப்படும்.

## சாதிமதக் கட்டுப்பாடு

மேற்காட்டிய தமிழர் முதலாய் இந்தியரீறுயுள்ள எழுவகைச் சாதியாருள் ஆராய்ச்சிக்காக முதலாவதாகத் தமிழரை எடுத்துக் கொள்ளுவாம். பெரும்பாலும் தமிழரெனப் பிறசாதியாரால் வழங்கப் படுபவர்கள் இலங்கைத் தேயிலைத் தோட்டங்கள் முதலியவற்றில் கூலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைசெய்யும் தென்னிந்திய கூலித் தமிழர்களையே குறிப்பிடுவது பெரும் விசனத்துக்கேற்ற காரியம். இலங்கைத் தமிழரென மேலைத்தேசத்துப் பத்திரிகைகளில் குறிப்பிடுவதும், வசன காவியங்கட்குப் படங்கள் திட்டப்பெற்றிருப்பதும் கூலித் தமிழரையே யன்றி இலங்கைவாசிகளாகும் இலங்கைத் தமிழ்மக்களை அல்ல என்பது உணர்ந்தார்க்குப் புலனாகும். இலங்கைத் தமிழர்கள் வட கிழ் மாகாணங்களில் வசிப்பவரேயாவர். இவர்கள் வழித்தோன்றலாய் வந்த சிறு பான்மையோர், ஏனைய மாகாணங்களில் தத்தம் வசதிக்கேற்பக் கலந்து வசித்து வருகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் இலங்கைத் தமிழரென அழைக்கப்படுகின்றனர். இவர்களுள் யாழ்ப்பாணத்துத் தமிழர் ஒரு பிரிவாகவும், ஏனையோர் இன்னோர்பிரிவாகவும், கருதப்படுகின்றனர். இரு பிரிவாரும் தத்தம் சாதிமதக்கட்டுப்பாடுகளுக்கடங்கிஇருக்கும் வரைதான் குலமகிமைக் குரியோரென்றும், அதனின்றும் தவறினவரை அதற் குருகரல்லரெனவும், கலப்பு மணத்தால் அல்லது கலப்பு மதத்தால் தம் சாதி உரிமையை இழத்தற்குரியர். இவ்வித கோட்பாடு தமிழ்ச் சாதியார் மாத்திரமல்ல ஏனைய சாதியார்களும் இதனை இன்றுவரை கவனித்து வருகிறார்கள். பிரதானமாக யாழ்ப்பாணத்தில் சாதிமதக் கட்டுப்பாட்டுச் சங்கடம் சூரிய சந்திரருள்ள வரை நீங்கு மென்பது வெறும் பொய்த்தோற்றமே. காரணம் இதை வாசிக்கு மன்பர்கள் எல்லோருமறிவர். இவ்விதநிலையில் தமிழராகிய எங்களுக்குள் வேண்டப்பட்ட ஒற்றுமை இல்லாதிருக்கப் பிறரிடத்தில் எங்களுக்கல்லது அவர்களுக்கு ஒற்றுமை ஏற்படுமென்பதுமுயற்கொம்பாம். இவ்விதஒற்றுமையை நிலைநிறுத்த, ஒவ்வோர் தவப்பெரியார் உருவெடுத்து உழைத்தபோதிலும், இரண்டு,மூன்று யுகம் சென்றாலும் வேண்டிய பெறுபேற்றை யடைவது சுலபமல்ல. இளமைதொட்டு முதுமைவரை ஒவ்வொரு சாதியாரும் தத்தம் குலமதா சாரங்கட் கேற்ற பழக்க வழக்கங்களில் பயின்று வருதலால், காலங்கடந்த வழக்கங்களை, கெதியில் மாற்றுவதென்றால் யாருக்குத்தான் இயலும். ஒத்துழையாமையென்னும் சத்தியாக்கிரகப்போரைப் பாத கண்டத்தில் சென்ற இரண்டு மூன்று வருடங்கட்குமுன் நடாத்திய மகாத்மாகாந்தியே இச்சாதிமதக் கட்டுப்பாட்டின் வன்மைக்குத் தோற்றுவிட்டாரென்றால் வேறு எந்த மகான் இனிமேல் வந்து ஜெயிக்கப் போகிறார்.?

இப்பழக்கவழக்கம் இளமைதொட்டு வந்ததாதலின் அவற்றின் நிவாரண மார்க்கங்களையும் அவ்வாறே இளமைதொட்டு இனிவரும் சிறார்க்குப் பயிற்றி, சமரச வாழ்வில் ஈடுபட்டால் நன்மையுண்டாம். பிரதானமாக யாழ்ப்பாண நாட்டில் வசிப்போர் யாவரும் தமிழரே யாயினும்; மத வேறுபாடு இவர்கள் மனப்பான்மையைப் பெரிதும் வேறுபடுத்தித் தூய்மையான வாழ்க்கைக்கு நீங்காத இடைஞ்சலைக் கொடுக்கிறது. சைவசமயிகள் கிறீஸ்தவர்களையும், கிறீஸ்தவர்கள் சைவசமயிகளையும் மதத்துவேஷத்தால் சண்டையிடுவதும், கோட்டு வியாச்சியங்களில் பணச் செலவிடுவதும் தலைமுறை தலைமுறையாக இவ்வித நீங்காப்பழி இருமதத்தாருக்கிடையிலும் தத்தம் மதத்தின்பேரால் இருந்து வருவது எல்லோருமறிந்த விஷயம். ஆயினும் இதுவரை ஒருவராவது இருபகுதியார்க் கிடையிலும் ஓர் சமரச உணர்வை உண்டுபண்ணவில்லை. உண்டுபண்ணப் போவதுமில்லை.

மதக்கோட்பாடு என்னும்கோட்டையைத் தகர்த்தெறிய இனிமேல் வரும் சீரசுதந்திர வீரசிங்கங்களாகிய இளைஞர்க்கும், பெரியோர்க்கும் ஒருவாறு இயலுமாயின், ஏனைய கட்டுப்பாடுகளை இலகுவில் தகர்த்தெறிந்து சந்தோஷக் கோட்டையைக் கைப்பற்றலாம். இவ்வாறே இலங்கை வாசிகளாகிய ஏனைய சாதியார்க் கிடையில் தத்தம் சாதிமதக் குலாசாரங்களைக் கைப்பற்றி நடப்பதால் அவர்கட்கிடையிலும் எமது பிரிவினையைப்போலப் பல்வேறு பிரிவினையும் அவற்றின் பெறுபேறு துக்கவிருத்தியும் ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. விரிக்கிற் பெருகுமாதலின் உய்த்துணர்க.

### தீண்டாமை

இக்கொடிய வியாதி பிரதானமாக இந்தியா இலங்கையென்னு மிருதேசங்களிலும் செழித்தோங்கி வளருகின்றது. ஆங்கில அரசியல் நிர்வாகத்தில் இதனை விலக்கியிருந்த போதிலும் தேசமக்களிடை இது ஒழிந்தபாடில்லை. ஒருவன் குடிப்பிறப்பால் தீண்டாமை யெனும் கொடியவியாதியை அடைகிறானேயன்றி ஒழுக்கத்தினாலல்ல. ஒழுக்கமே உயர்குலத்துக்கு விசேடமாயிருக்க, குடிப் பிறப்பைக்கொண்டு எல்லைவகுத்தல் பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை கற்றறி மக்கள் கருத்தாக இருந்து வருகிறது. இதனை ஒருவாறு விலக்குவான் இலங்கை அரசினர், பாடசாலைகளில் தீண்டா மக்களோடு சமாசன, சமபோசனக்கொள்கைகள் விதித்ததின் பெறுபேற்றை எல்லோருமறிவர். பாடசாலைகள் தீக்கிரையாகினதும், தீண்டாமக்கள்தவிர ஏனைய பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதை நிறுத்தியதும், இதனால் ஆங்காங்கு ஊர்களில் சச்சரவும் கைச்சண்டையும், வியாச்சியங்களும், பணச்செலவும் நிகழ்ந்தமையும் ஒவ்வொருவர் மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் கல்லெழுத்தாக இருக்கிறது. உலகமக்கள் ஒரே கடவுளின் புத்திரர்களாயிருக்க, தேவகோட்டங்கள் எல்லோர்க்கும் பொதுவாயிருக்க அவற்றின் சன்னிதானத்திற்கு மேற்சாதியாரன்றிக் கீழ்ச்சாதியார் பிரவேசிக்கப்படாதென்ற கொள்கை இன்றுவரை இருந்து வருவது மிக விசனத்துக்கிடம். சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம், சாதியின்மை, மதச்சமரசம் ஆகியவற்றுக்குத் தமது உடல் பொருள் ஆவியை அர்ப்பணஞ்செய்த மகாத்மாகாந்தி அடிகளின் மகா மேருவை ஒத்த மன வலிமை தீண்டாமைக்கு வலிகுன்றித் தோற்றுவிட்டதென்றால் வேறு யாரால் இச் சிறந்த பணியை மேற்கொண்டு அகற்றமுடியும்? இக் கொடியநோய் ஓர்நாட்டில் அல்லது தேசத்திலிருக்கும்வரை அத்தேச மக்கள் சமரசப்படுதலும் ஒத்துழைப்பதும் ஒருபோதும் இயலாதகாரியம். ஓர் பொருள் ஆக்க அல்லது அழிக்கவேண்டின் அதற்கு மூலகாரணத்தை அறிந்து உசிதப்படிசெய்தல் இயல்பேயாக, ஒற்றுமையென்னும் இன்பத்துக்குத் தீண்டாமையாகிய காரணத்துன்பத்தை நீக்கவேண்டும். இத் தீண்டாமையினாலன்றோ பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னணிக்குவர எவ்வளவு பிரயத்தனப்பட்டும் ஏனைய மக்களின் முட்டுக்கட்டைகளினால் இடருற்றுச் சதா அடிமை வாழ்வில் வாழ்கின்றார்கள். அடிமைவாழ்விலிருக்கும்வரை மனோசுதந்திரமற்றுவிடும். விட, உற்றயாக்கைக்குறுபொருளாய வீடுபேற்றின்பமும் அதற்குச் சாதனமாகிய அறம், பொருள், இன்பமும் கெட்டொழிந்து அவலக் கவலையும், ஆறறிவடைந்தும் அழிந்து போய்ச் சதா துன்பக்கடலே கதியென வீழ்வோர் நிலை தீண்டு மக்கள், ஒவ்வொருவரும் உய்த்துணர்ந்தால், எவ்வித கல்நெஞ்சையும் உருக்காமல் விடாதென்பதற்குச் சிறிதேனும் ஐயமின்று. கடவுளோ உலக மக்கள் எல்லோர்க்கும் ஒருவர். சாதிமதபேதங் கடந்த, கருணைக் களஞ்சியமாய், அகண்டாதீதராய், வியாபகமாய், மறைந்தும், வெளிவந்தும் இருப்பவர். தன்னை நினைத்து வருந்தும் மக்கட்குத் தாய்போல வேண்டிய கருணைபுரிபவராயிருக்க, தீண்டாச் சகோதரர்களை அவர் சன்னிதானத்திற்குச் சென்று வேண்டியவற்றைப் பெறத் தீண்டுமக்கள் தடுப்பது எவ்வளவு கொடுமை!! எவ்வளவு பேதமை!!! 'ஈவது விலக்கேல்' என்னும் மூதுரையைத் தீண்டு மக்கள் கற்றும் கல்லாமேதைகளாக இவ்விஷயத்தில் காட்டிவருதல் நியாயமல்லவே! அன்றித் தருமநீதியுமல்ல. பகைவனென்றும், சினேகனென்றும், உற்றாரென்றும், அற்றாரென்றும், காடென்றும், நாடென்றும், கடலென்றும், கழனியென்றும், கருதாது எல்லாவிடத்திலும் பட்சபாதமின்றிப் பிரகாசிக்கும் சூரியசந்திரரின் தன்மையைக் கண்டுதானும் இக்கற்றறி மேதைகள் கற்றாரில்லையே. மேலும்,

சேற்றிற் பிறந்த செங்கழுநீர் போலப்
பிரமற்குச் சூத்தி வயிற்றிற்
பிறந்த வசிட்டரும்
வசிட்டர்க்குச் சண்டாளி
வயிற்றிற் பிறந்த சத்தியரும்
சத்தியர்க்குப் புலைச்சி தோள்
சேர்ந்து பிறந்த பராசரும்
பராசருக்கு மீன் வாணிச்சி
வயிற்றிற் பிறந்த வியாசரும்
வேதங்களை ஓதி மேன்மைப் பட்டு
மாதவ ராகி வழங்கின ரன்றோ.
ஆதலால் மாரிதான் சிலரைவரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மாநிலஞ் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ
வாழ்நான்கு சாதிக்கு உணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக்கு உணவு காட்டிலுமோ
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறில்லை தரணி யோர்க்கே
குலமு மொன்றே குடியு மொன்றே
இறப்பு மொன்றே பிறப்பு மொன்றே
வழிபடு தெய்வம் ஒன்றே யாதலால்
முன்னோ ருரைத்த மொழிதவ றாமல்
என்னரீ னாயினும் இரப்பவர்க் கிட்டு
புலையும் கொலையும் களவுந் தவிர்ந்து
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது
சிறப்பும் சீலமு மல்லது
பிறப்புநலந் தருமோ பேதை யீரே.

எனச் சாதிக் கட்டுப்பாட்டை உண்டாக்கிவைத்த பிராமணரைக் கடிந்து கபிலர் அகவல்கூறும் பொன்மொழிகள், காண்க. இதனால் பிராமணரே ஆதியில் தம்நலத்துக்காகச் சாதிக் கட்டுப்பாடுகளை உண்டாக்கி வைத்தவர்களென்றும், அவர்களில்லா நாடுகளாகிய பிறதேசங்களில், தீண்டாமையென்ற பேச்சே கிடையாதெனவும், அவர்களிருக்கும்வரை தீண்டாமை ஒழியாதெனவும் தெற்றெனப் புலப்படுகிறதன்றோ! ஒரு சாதியாரின் நலத்துக்காக ஒரு தேசமுழுவதையும் அடிமைவாழ்க்கையில் சதாகாலமும் விட்டிருத்தல் எவ்வளவு மதியீனம்!

## கல்விச் சீர்திருத்தம்

தற்காலத்தில் இலங்கைக் கல்விக் கழகங்களில் பயின்றுவரும் சிறாஅர் பிற்காலத்து நுண்மாணுழை புல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லாராய் வருதல் முயற்கொம்பாகிவிட்டது. என்னை யெனில், கல்விகற்கும்முறை, கற்பிக்கும்முறை பெரிதும் பேதப்பட்டுக் கற்போர் சுயாதீனமே கற்பிப்போர் முறையாகிவிட்டது. சுயதேச பாஷாஞானம், சுயதேச சரித்திரம் முதலியவற்றில் சிரமமெடுப்பதே கிடையாது. ஒவ்வொரு பிள்ளையும் தாய்ப்பாஷையில் சிந்திக்கவும், சிந்தித்ததைச் சந்தேகவிபரீதமறத் தெரிவிக்கவும் செய்யப் போதிய பாஷாஞானமும் வேறு பாஷைகளும் செவ்விதில் ஒருங்கே கற்பிக்கப்பட்டு இளமையில் பாண்டித்தியம் எய்தப்பெற்றவராய்க் கலையாக்கத்தில் ஈடுபட்டிருக்கவேண்டும். இலங்கையில் தற்போது தமிழ், சிங்களம், மலாய், ஆங்கிலம் ஆகிய நாலு பாஷைகள் பேசப்படுகின்றன. இவற்றுள் மலாய் ஒரு சிறுபகுதியாரால் பேசப்படுகிறது. ஏனைய இலங்கைவாசிகளுக்கு மற்ற மூன்று பாஷைகளே பிரதானமானவை. இலங்கையி லெப்பாகத்திலும் கவலையின்றி ஊடாட, சமரச உணர்வை ஏற்படுத்த இம்மூன்று பாஷைகளும் இன்றியமையாததாதலின் அவற்றை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயபாடமாகப் பிள்ளைகட்கு இளம்பராயந் தொட்டுக் கற்பித்து வரவேண்டும். இம்மூன்றிலும் போதிய பாண்டித்தியம் பெற்றவரையே உபாத்திமைத் தொழிலில் அமர்த்தவேண்டும். தமிழ்நாட்டிலுள்ளோர் சிங்களநாட்டிற்குப் போனால் அல்லது சிங்களநாட்டார் தமிழ்நாட்டிற்கு வந்தால் ஒருவரோடு ஒருவர் சம்பாஷிக்கச் சிரமப்படும் கஷ்டம் சொற்பமல்ல. இவ்வித கஷ்டங்களெல்லாம் முப்பாஷைகளையும் ஒருங்கே அறிந்திருந்தால் வாரா. ஒவ்வொரு பிள்ளையும் தத்தம் சுயபாஷையிலே 8-ம் வகுப்பு (J. S. C.) வரை வாசிப்பது அத்தியாவசியம். ஒவ்வொரு கிராமத்திலும் இலவச வாசிகசாலைகள் நிறுவப்படல்வேண்டும். இதனால் அடையும் பலன் அவ்வூர் மக்கட்கும் ஏனையோர்க்கும் தத்தம் சீவியத்தை ஒழுங்குபட வகுத்து ஒற்றுமை விஷயத்தில் வழுவறநின்று கடைத்தேற ஏதுவாகும். "கல்வி கரையில—கற்பவர் நாட்சில" எனும் மூதுரைக்கிணங்கப் பாடசாலைக் கல்வியே கலையந்தமென நினைத்துக் கல்வியை மேலும் மேலும் கற்காது வீணே காலங்கழிப்பவர் எங்கும் மலிந்திருப்பது பெருவழக்காய்விட்டபடியால், கலையாக்கத்தின் உண்மைப்பொருளை அல்லது கலாஞானத்தை இலங்கையிலடைந்தவர் மிகச் சிலரே. தற்காலத்தில் பொருள்வருவாய்க்கேற்ற கல்வியையே கைக்கொண்டு பொருளுக்கே அடிமைபூண்டு வீணே காலங்கழிப்பவர் பலர். ஆதலின், இவர்தம் வாழ்க்கையில் எள்ளளவேனும் மன ஒற்றுமை அல்லது தேசிய ஒற்றுமை இருக்குமென்பது ஆரோபமாம்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

எனும் பொய்யாமொழிக்கிணங்கக் கலாசாலைகளில் கற்றுத்தேறிய பெருமக்கள் எத்தனைபேர் இன்று இத்தேசத்தில் பெரும்பேறு எய்தியிருக்கிறார்கள். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என அலைபவர் எத்தனைபேர் இவர்கள் சற்றேனும் தமது ஆத்மசுயாதீனத்தையாவது, அல்லது நாட்டின் நன்மையையாவது தம் வாழ்க்கையில் ஒருநாளைக்காவது சிந்திப்பார்களானால் இத்துணை ஏழ்மைவரா. ஒவ்வோர் குடும்பத்திலும் தகப்பன், மகன், தாய், மகள், முதலியோர்க்கிடையில் நாள்வீதம் நடைபெறும் வாக்குவாதங்களும், சச்சரவுகளும், தலைமுறை தலைமுறையாக நடந்துவருவதை நமதனுபவத்தில் மலியக்காணலாம். இவற்றிக்குப் பிரதான காரியம் கலையாக்கம் கருதிய கல்வி, கலாசாலைகளில் கற்பிக்கப்படுகிறதில்லை என்பதே அன்றி வேறொன்றுமல்ல.

தொடக்கத்தில் ஒருவருக்குச் சிறந்த கல்வியும் மேன்மை பொருந்திய பழக்க வழக்கங்களும் அறிவிற் சிறந்த பெரியோரால் கற்பிக்கப்பட்டால் அவரும் அவரது சந்ததியாரும் பரிசுத்தமான ஒற்றுமையுள்ள தூய வாழ்வைக் கடைப்பிடித்து அதன் பெறுபேறாய் நல்வழியை அடைந்து தம் நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மையளிப்ப ரென்பதை ஈண்டு சொல்லவும் வேண்டுமோ? ஆதலால், உண்மையான பரிசுத்தமுள்ள ஒற்றுமையை ஓர் தேசமடையவேண்டுமாயின் அத்தேசத்து ஆண், பெண் பாலாராகிய இருவகையினருக்கும் உரிய காலங்களில் கலையாக்கங் கருதிய, சிறந்த கல்வியை ஊட்டிச் சாதிமத பேதமின்றிச் சந்தோஷமாக வாழவிடவேண்டியதே மேலான திருப்பணியென்க. இதனால் எல்லா மக்கட்கும் அவசிய சீர்திருத்தக் கல்வி ஈண்டு உணரற்பாற்று.

## கலப்புமணம்

சாதிமதங் கடந்து, தீண்டாமை அகற்றி, சிறந்த பாண்டித்தியமடைந்தபோதிலும் ஓர் சாதியார் இன்னோர் சாதியாருக்காக உணரவும், உறுதுயரடையவும் தர்க்கரீதிக்குக் கூடுமென்று வாதிப்பினும் தன்னலங் கடந்த தியாகம் மனப்பூர்வமாக இருக்குமென்று அனுபவத்தாற்சொல்ல இடமில்லை.இதற்குக் கலப்பு விவாகம் இன்றியமையாதது. ஏனெனில் தேகசம்பந்தம், தேகமுள்ளளவும் உணர்ச்சி ததும்பக்கூடிய வழிகளில் செலுத்துமாதலின் என்க. இவ்வித கொள்கைக்குப் பெரும்பாலும் முட்டுக்கட்டைகள் அனேகந் தோன்றிய போதிலும் இலங்கைவாசிகளின் ஏகதேச ஒற்றுமைக்கு இதுவோர் வச்சிரத்தூணாக மிளிருமென்பது இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கு மன்பர்கள் உற்று நோக்கின் உணர்வார்கள். ஒத்த நண்பும், பண்பும், குலனும், குணமும், ஆண்டும் அறிவும், ஒருங்கே யமையப்பெற்ற இருதம்பதிகள் இத்தன்மைத்தென எடுத்துக் காட்டப்படாததாய்ப் பிறர்க்கு வரையறுத்துக் கூறப்படாததாய்த் தத்தம் நீர்மையே தம்முள் உறவாடி அமையப் பெறும் வாழ்க்கை மிக மேலானதென எல்லாத் தேசத் தாராய்ச்சியாளர்களும் ஏகமனதாய்ப் பறை கூவாநிற்க, சாதிமதத்தோடு மணக் கட்டுப்பாட்டையும் இணைத்துவைத்த எம் தேசத்து முறை எல்லோராலும் எள்ளி நகையாடற்பாலதே. இதனாலன்றோ நமது தேசம் என்றென்றைக்கும் அடிமை வாழ்க்கையை நீங்கா நிழல்போல் கைக்கொண்டிருக்கிறது. இவ்வித புதிய சீர்திருத்தங்களை முதன்முதல் சொல்பவரை அல்லது திருத்த முயல்பவரைப் பித்தரென்றும், பேதையரென்றும் உலகம் தூற்றுநிற்கும். ஆபினும் இதனுண்மைப் பெறுபேறு இலங்கையில் எல்லாச் சாகியத்தாரையும் ஒருங்கே பிணைத்து இன்பக்கடலில் ஆழ்க்கிவிடுமென்பதை அனுபவவாயிலால் கண்டறிக. நாம் ஒருவருக்காக முபன்றால் அல்லது நம்மைத் தியாகஞ் செய்துகொண்டால் அல்லது உணரப்பட்டவர், அல்லது தியாகஞ் செய்யப்பட்டவர் நமக்காக ஒருபோதும் ஒன்றுஞ் செய்யப்போவதில்லையென்பது கண்கூடு. "நாய் வாழ்க்கென் நரி சிங்காசனமேறியென்" என வாளாவிருப்பர்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

என்ற அறிவிற் சிறந்த பாரதியார் வாக்கு, தேசிய மக்கள் ஒவ்வொருவருள்ளத்தையும் ஒற்றுமை விஷயத்தில் உருக்குமென்பது சொல்லவும்வேண்டுமோ? உண்மைத் தேசாபிமானியும், இலங்காதேவியின் புத்திரனுமெனக் கருதும் ஒவ்வொரு ஆண் ஏறுகளும் இவ்விஷயத்தில் தீவிர முயற்சியெடுத்து ஒவ்வொருவரையும் தன் சகோதரன், சகோதரியென மதித்து அன்னியோன்னிய ஒற்றுமையி லீடுபட்டிருப்பின் மேல்வரும் பெறுபேற்றின்பம் மிக விசேடமானதென்றே கருதப்படும்.

### அரசியல் ஞான சூனியம்

மேற்கூறிய திருத்தங்களெல்லாம் ஒருங்கே கைகூடப் பெற்று வரினும் ஒவ்வொருவருக்கும் போதிய தேசிய ஞானக் கல்வியின்றேல் எல்லாம் அனர்த்தம் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் கல்வியின் நோக்கம் எம்மைத் திருத்துவதற்கும் எம்மால் பிறர்க்குதவி செய்தற்கும் பிறரும் நாமும் ஒருங்கே கூடி ஒற்றுமையாகச் சீவிப்பதற்கும் எங்கள் எல்லோரையும் கூட்டுறவு முறையில் சேர்த்து எங்கள் விருப்பத்தோடு சில பல கட்டுப்பாடுகள் அமைப்பதற்கும் அமைத்த கட்டுப்பாடுகளுக்கு நாம் அடங்கி நடக்கவும் நடவாதாரை ஒறுக்கும் வழி ஒறுக்கவும், பிறதேசங்களில் உண்டாகும் புதியனவற்றைப் புகுத்தவும், பழையனவற்றைக் கழிக்கவும், தேச, ஆத்ம சுயாதீனத்தைத் தேடவும் உபயோகமாகும்வண்ணம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒருவர் தம் வீட்டில் நடத்தும் வாழ்க்கையில் எவ்விதந்தான் பற்பல அம்சங்களில் கலந்துகொண்டு எல்லாக் கைங்கரியங்களையும் தமது கண்காணிப்பில் செய்வித்து வருகிறாரோ, அதுபோல ஓர் தேசத்து நடபடிக்கைகளைத் தேசிய ஞானமென வழங்குவர். இதில் ஒவ்வொருவரும் தமதென எல்லா விஷயங்களிலும் கலந்து நடப்பவற்றையும், நடக்கப்போவதையும் உணர்ந்து சம்மதத்துக்கேற்ற செயல்களை அங்கீகரித்தும் அல்லவற்றைப் பொதுஜனக்கூட்ட வாயிலாக அல்லது தனியாக நிராகரித்தும் அரசுடையோர்க்கு அறிவித்துக் கோரியதைப் பெறுவது ஒவ்வொரு மக்கள் மேலும் பொறுத்தகடனாயிருக்க, தற்போதைய வசதிக்குறைவினாலும், அரச பாஷாஞானமின்மையாலும், அனேகர் நமக்கென்னவென்று வீணே காலங் கழிக்கிறார்கள். இது முப்போதும் விசனத்துக்கிடமான காரியமே. உண்மையான புத்திரன் எவ்வாறு தன் பெற்றோரின் சுகதுக்கத்தை அறிந்து உழைக்கிறானோ அவனே புத்திரனென்னும் பட்டத்திற்குரியவன் என்றாற்போல, தேசமக்களாக இருந்தும் தேசபக்தியில்லாதவர் இறந்தவராக எண்ணப்படுவர். ஆதலால் அரசியல் ஞானம் ஒவ்வொருவராலும் கௌரவப்படுத்தப்பட்டு அதில் சிறந்த தேர்ச்சியடைந்து ஈடுபட்டிருப்பதே தாய்நாட்டிற்காகச் செய்யும் சிறந்த தொண்டெனக.

ஆதலால், அன்பர்களே! இலங்காதுவீபத்தைப் பவளத் தீவெனவும், கீழ்கடலிற் றோன்றியிருக்கும் மாணிக்கமெனவும், உன்னத மலைவளஞ்செறிந்ததாய்ப் பிறதேசங்களில் காணமுடியாத அரும்பெரும் காட்சிகளை அளிக்கக்கூடிய மலைச்சிகரச் சமதரைகளையும், பள்ளத்தாக்குகளையும், யாற்றோட்டஞ்செறிந்த நீர்வளங்களையும், தேகசுகத்திற்கும், மனோரம்மியத்திற்கும் இன்பந்தரக்கூடிய தென்றல் தவழும் சோலைகள் அடர்ந்த நகரங்களும், நன்செய், புன்செய் மலிந்து விளங்கும் நிலவளங்களும், நான்மருங்குமுளாவிய கடல்வளங்களும், என்றும் இன்னோரன்ன பல விசித்திர விநோதங்களைத் தன்னகத்தடக்கிப் பிறதேசத்து மக்களைத் தமதாரெனச் சொல்லுவிக்கும் பாக்கியம் ஈழத்தே தங்கிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தல் கவனிக்கத்தக்கது. 'தாயாகிய உலகங்களை நிலை வேறு செய்தலைவன்' எனவும், 'அம்மையே அப்பா' எனவும், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' எனவும்,

" பைங்கொடி யாளும் பரம னிருந்திடத்
திண்கொடி யாகத் திகழ்தரு சோதியாம்
விண்கொடி யாகி விளங்கி வருதலால்
பெண்கொடி யாக நடந்த துலகே."

எனவும் பெண்ணை முன் கூறியிருந்தல் காண்க. நம் வாழ்வுக்கு வேண்டும் பொருட்களையும், பெண்மையை முன்னிலைப்படுத்தி வழிபாடுசெய்து பெறுகின்றோம் அல்லமோ! கல்வி, செல்வம் என்பவற்றைப் பெறுதற்காய்க் கலைமகளையும், நாமகளையும் வழிபடுகின்றேம். 'ஆயகலைக ளறுபத்து நான்கினையும் ஏயவுணர்விக்கும் என்னம்மை' என்பது காண்க. உயிர்ப்பொருளுக்கு இன்றியமையாத நீரைக் 'கங்காதேவி'யென அழைக்கின்றேம். நாட்டைப் பல வழியிலும் ஓம்பும் காட்டை 'வனதேவதை' என்கிறோம். நாம் வாழும் நிலத்தைத்தானும் 'பூமிதேவி'யென அழைக்கின்றேம். அசுரர்கள் பகைவர்களுடன் யுத்தத்துக்குப் போகுங்கால் கான்தேவியை வழிபட்டுச்சென்று வெற்றிபெற்று மீளுதலைச் சரித்திரவாயிலாய் அறிகின்றேம். இவ்வாறு நம் செயல்களும், நமக்கு வேண்டப்படுவனவும் பெண்மையிலடங்கியிருத்தலைக் காணலாம்.

மக்கள் வாழ்வில் சில பெருங்குணங்கள் காணப்படுகின்றன. அன்பு, அருள், பொறுமை, அடக்கம், விருந்தோம்பல் என்பன அவைகளிற் சிறந்தன. இவை யாவும் பெண்மையிற் சிறந்து விளங்கலை நாம் நன்றாய்க் காண்கிறோம். ஒரு மைந்தன் எத்தனை தீமைகள் புரிந்தபோதும் அன்புடன் பொறுப்பவள் தாயல்லவோ! நம் மனைக்குப் புதியவர் வந்தவிடத்து, அவர்களை விருந்தோம்பி அனுப்பியவள் பெண்ணல்லவோ! பெண்ணில்லா வீடு காடாகவும் வனையது அறமனையாகவும் விளங்குதலை நாம் தினமும் காண்கிறோமல்லமோ! 'இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை' என்பது காண்க. மகனொருவன் ஐம்புலன்களால் உலக இன்பங்களைப் பெறுகின்றான். அவ்வின்பம் யாண்டுளது? பெண்மையிடத்தென்று சொல்லவும் வேண்மோ? மெய்த்த திருவள்ளுவனார் 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள' என்று ஓதுகிறார். மக்கள் அழகை விரும்புகிறார். அது யாண்டுளது. பெண்மையில் என்று எழுதவும் வேண்டுமோ! ஆண்மக்கள் பெறவேண்டிய பொருட்களில் சிறந்தது பெண் என்று கூறுதல் இழுக்காகாது. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள....' என்றார் வள்ளுவர். பெண்ணில்லாத ஒரு ஆண்மகனை எவ்வித சுப கருமங்களுக்கும் சேர்க்காதிருத்தலை நாமின்றுங் காண்கின்றேம். உலகமும், உலகத்துப் பொருட்களும், ஆண் பெண் வடிவாயிலங்கினும் பெண்மை முதன்மையாகவும், முன் அமைந்திருப்பதாகவும் இருத்தலை அறிவுடையோர் தெற்றென அறிவர்.

பழையகாலத்து நம் தமிழ்நாட்டில் பெண்கள் தம் நாட்டு முன்னேற்றத்துக்கு எத்துணை உதவிபுரிந்தார்களென்பது நாம் சிறிது சிந்திக்கற்பாலது. பாண்டிய மன்னர்கள் தமிழ்ச்சங்க நிறீஇத் தமிழோம்பிய காலத்துப் பல மெல்லியலார் புலமை சான்று விளங்கினர். காக்கை பாடினியார், நச்செள்ளையார், பாரிமகளிர் போன்றார் தமிழ்ப்புலவர்களே. ஔவையார் பெயரை அறியாத தமிழ்மகன் நம் நாட்டில் இருக்கவேமாட்டான். எவர் நாவினும் ஔவையார் நீதிகள் வழங்குகின்றன எனின் அந்நாளைய பெண்மணிகளின் கல்விநிலை யாதாயிருக்குமென்பதை யன்பர்களே அறிக. நாமெல்லாம் நமது வாழ்வுக்கு இன்றியமையாத ஆத்திசூடி, நல்வழி முதலாம் நீதிமொழிகளைப் படிக்கின்றேம். அவையெல்லாம் பெண்பாற்புலவர் ஆக்கித் தந்தவைகளல்லவோ! எனவே இக்காலத்துக்கும் வருங்காலத்துக்கும் கல்வி நிலையில் பெண்மையின் உதவி பண்டைநாளிலிருந்தே கிடைத்திருக்கிறது.

யுத்தத்துக்குச் சென்ற தன் மகன் வாராமையின் புறங்கடைவாயிற் பார்த்துநின்ற பெண்மணிக்குக் குறும்புடைச் சிறுஆர் உன் மகன் முதுகு காட்டி இறந்தான் என்றனர். அப்பெண்ணினல்லாள் என் மகன் அவ்வாறு இறப்பானுயின் அவனுக்குப் பாலூட்டிய முலை களைவேன் எனச் சபதஞ்செய்து சென்றனள். பிணக் குவியல்களுக்கிடையில் தன் மகன் மார்பகத்து அம்பேறுண்டு இறந்துகிடத்தல் கண்டு இறும்பூதெய்தினள். இவளல்லவோ வீரத்தாய்,

" நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தனன் ஆயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினை இக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னே! தமிழ்மகளிர் மாண்பு. அம்மம்ம! வீரக்குழவிகளை ஈன்றனர்! முலைப்பாலொடு தமிழமுதத்தைப் புகுத்தினர்! வீரத்தைப் புகட்டினர்! இவரல்லவோ தமிழ்மகளிர் மற்றொரு வீரமகள்!

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித் துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந் து பெயர்தல் காளைக்குக் கடனே."

என்று மைந்தன் முதலியோர்க்குரிய கடமைகள் இவையெனக் கூறுதல் அறிவுடையோராற் சிந்திக்கற்பாலன.

கொழுநன் போர்க்களத்தில் மறப்போர் செய்து உயிர்துறந்தானாகவும், கணவன் இறந்துவிட்டானே எனப் பொருட்படுத்தாது தன் னொரு மகனைப் போர்க்களஞ் சென்று வருக என மகிழ்ச்சியோடு அனுப்பினவள் நம் தமிழ்ப் பெண்ணணங் கல்லவோ?

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேனா ளுற்றசெரு விற்கிவ டன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்றசெரு விற்கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுபட் டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்லதில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

இவ்வாறு தம் வீரமக்களை யுத்தகளத்துக்கு அனுப்பிய வீரத்தாயார் பலர். ஒருகால் பிரான்ஸ் நாட்டின் வெற்றிக்கு 'யோன் ஒவ் ஆர்க்' என்ற மாது காரணராயிருந்தாரென்பது சரித்திரவல்லோர் நன்கறிவர்.

கண்ணகியின் வரலாற்றை யறியாதோர் தமிழ்நாட்டிலிரார். தன் கணவன் அநியாயமாய்க் கொல்லப்பட்டதறிந்து, "வாயிலோயே! வாயிலோயே! அறநெறி பிழைத்தோன் வாயிலோயே!" என வீராவேசத்துடன் பாண்டியன்முன் சென்று தன் கொழுநன் அநியாயமாய்க் கொல்லப்பட்டதை உணர்த்தினள். பாண்டியன் "யானோ அரசன் யானே கள்வன்" என நடுக்குற்று இறந்தனன். இத்துணை அருவினையாற்ற யாரான் முடியும்? இது பெண்மையின் வீரமென்று சொல்லி இறும்பூதெய்துகிறேன். அரசனை அவன் மனச்சான்றே கொல்லுமாறு செய்ததன்றோ கண்ணகியின் வீரம். திருநீலகண்டநாயனார் பரத்தைபாற் செல்லுதலையுணர்ந்த அவர் தலைவியர் அவரை எவ்வழியில் நலமுறச் செய்தாரென்பது கவனிக்கத்தக்கது.

பாண்டியநாடு ஒருகால் சமணசமயத்தில் மூழ்கியது. மன்னனும் சமணசமயம் புக்கனன். அரசனைப் போலக் குடிகளுமாயினர். இந்நிலையில் அரசன் தேவி மங்கையர்க்கரசியும், மந்திரிகுலச் சிறையாருமே சைவர். அவர்களும் அரசனைப்போலாக வேண்டியதல்லவோ? ஆயின் அவர்களவ்வாறு சென்றாரில்லை. பின் யாது செய்தார்கள்? மங்கையர்க் கரசியார் அக்காலச் சைவப் பெரியார் சம்பந்த சுவாமிகளை அழைப்பித்தார்கள். அழைப்பித்துச் சமணசமயத்தை ஓட்டினார்கள். பாண்டிய மன்னனையும் அவன் பிரசைகளையும் சைவராக்கினார்கள். அந்நாள் மங்கையர்க்கரசியார் இல்லையேல் தமிழகம் இப்போது எந்நிலையிலிருக்கும். சமண சமய இருளால் மூழ்கி இருக்கும் என்று சொல்லவும்வேண்டுமோ? சைவசமயத்தைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்தியபெருமை ஒரு பெண்மணிக்குரியதென்று கூறுகிறேன்.

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் புதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே"

என்று வேத நெறி தழைத்தோங்கவும், சைவத்துறை விளங்கவும், அவதரித்த திருஞானசம்பந்தப் பெருந்தகை, மங்கையர்க் கரசியார் என்னும் பெண்மணியை வாழ்த்துகிறதென்றால் அடியேன் அவர்கள் பெருமை கூறவல்லனோ! மங்கையர்க்கரசியார் வரலாற்றால் சைவம் தழைத்ததென்பதை அறிவதோடு, இன்னொரு செயல் கருத்திலிருத்தற்பாலது. என்னை? பெண்கள் ஆண்கள் சொற்கேட்டோ அன்றியோ ஆண்கள் கருத்துக்கிசைய நடக்கவேண்டுமென்பது பலர் கருத்து. அவ்வாறு நடந்துவருதல் தகுதியுடைத்தோ இல்லையோ என்பதை நாம் ஆராய்ச்சிசெய்ய விரும்பவில்லை. மங்கையர்க்கரசியார் தம் தலைவர் பாண்டியன்வழி நிற்கவுமில்லை. அரசன் தன் தலைவியரைத் தன் வழி நடக்கச் சொல்லவுமில்லை. பின் எது நிகழ்ந்தது? இருவரும் தம் கருத்து வழி நிற்கிறார்களென்பது. எனவே ஆண்பெண் இருபாலார்க்கும் சம உரிமை அக்காலத்து இருந்ததென்பதே நாமறிவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிசிராந்தையார் என்ற புலவர்பெருமானைப்பற்றித் தமிழறிஞர்கள் கேள்விப்பட்டிருப்பர். அவர்கள் பலயாண்டுகள் உயிருடனிருந்தவர். அவர் நண்பர் சிலர் யாண்டுகள் பல சென்றும் நரைவாராமைக்குக் காரணமென்னவெனப் புலவரை வினவினர். அதற்கு அவர்கள்,

> "யாண்டு பலவாக நரையில வாகுதல்
> ........................................
> மாண்ட என் மனையொடு மக்களும்
> நிரம்பினர் ................"

என்று நரைவாராமைக்குரிய காரணங்கள் கூறுமிடத்து 'மாட்சிமைப்பட்ட மனைவியும்' இருப்பதாகக் கூறுகிறார்கள். இதனால் மகனொருவன் இளமைத் தன்மையோடு நல்வாழ்வு நடாத்துதற்குரிய காரணங்களில் கல்வியறிவுடைய துணைவியும் வேண்டுமென்பதைப் பழைய வரலாறு தெரிவிக்கிறதல்லவா? இதுவொன்றே பெண்மையின் பெருமைக்கும், பெண்மையின் உதவியின்றி ஆண்மகனும், அதனால் உலகமும் நலம்பெறுதல் இலதாகுமென்பதற்கும் சான்று பகரும். இவ்வாறு பண்டைநாளில் நம் தமிழகம் கல்வி, சமயம், அரசு, வாழ்வு முதலிய துறைகளில் சிறந்துவிளங்கப் பெண்கள் பெருந்துணை புரிந்திருக்கிறார்கள். இங்குக் கூறப்பட்டனபோன்ற வரலாறுகள் இன்னும் பல உள.

இடைக்காலத்துப் பெண்மைநிலை வீழ்ச்சியடைந்தது. காரணம் யாதோ அறிகிலேம். சுயநலமிக்க ஆண்களின் கொடுமையென்று கூறல் மிகையாகாது. வீரத்தாயாரில்லாவிடத்து வீரப்புதல்வர் யாங்ஙனமுறுவர்? வீரப்புதல்வர் இல்லாவிடத்து அவர் நாடு அடிமை நாடன்றோ. நெப்போலியன்போன்ற வீரர்கள், திருவள்ளுவர், நக்கீரர்போன்ற புலவர்கள், காந்தியடிகள்போன்ற அறப்பெரியார்கள் தோன்றவேண்டுமாயின் வீரத்தாயர்களே வேண்டும். ஆண்கள் வீரத்தைச் செம்மைசெய்பவள் பெண்மகளேயாவள்.

> "மாதர்தம்மை இழிவுசெய்யு மடமையைக் கொழுத்துவோம்
> வையவாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குள்ளே
> தாதரென்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும்
> சரி நிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே."

என்று பாரதியார் வீரமுழக்கஞ்செய்கிறார். இடைக்காலத்துப் பெண்மைநிலை குறைந்தபோதும், வீரத்தாயர்கள் உதிக்காது போகவில்லை.

நம் இந்தியநாட்டில் நிகழும் அறப்போரைப்பற்றி அறியாதாரில்லை. அதன் தலைவராய்க் காந்தியடிகள் விளங்குகிறாரென்பது யாவருமறிந்தது. அவரின் புகழை நாம் சிறிது நோக்கின் அது பெண்மையில் முடிவதைக் காணலாம். அடிகள் சட்டக்கல்விக்காய் இங்கிலாந்துதேசம் செல்ல விரும்பினார். அதனைத் தன் தாயாரிடம் அறிவித்தார். தாயார் மூன்று சத்தியவாக்குகள் பெற்று இங்கிலாந்துசெல்ல அனுப்பினார். அடிகள் இங்கிலாந்திலுறையும்போது நவநாகரீகப்பேய்கள் அவரை ஆட்கொள்ளவந்தன. அவர்கள் அதற்கிரையாகாது தாயாருக்கு உறுதியளித்ததை நினைந்து நீங்கிச் சட்டத்தேர்வில் வெற்றிபெற்றுத் தாயகம் திரும்பினர். அவ்வாறு திரும்பியமையாலன்றோ அடிகளிப்போது உலகம்போற்றும் உத்தமராய்க் காட்சியளிக்கிறார். அடிகள் தாயார் சத்தியவாக்குகள் பெறவில்லையேல், அவ்வாக்குகளை அடிகள் இங்கிலாந்துதேசத்தில் நினைவுக்குக் கொள்ளவில்லையேல் அவர் நிலை யாதாகும்? பிறர்மனை விழைந்து, மதுவுண்டு, புலாலருந்தித் தம் நாட்டுக்குச் சிறிதும் பயனில்லாப் பிறவியைப் பெற்றிருப்பார்கள். எனவே அடிகள் மகாத்மா ஆனதற்கும், இந்தியா அறப்போர் தாங்குதற்கும் காரணராவர் பெண்மணியென்று சொல்லவும் வேண்டுமோ?

அடிகள் உப்புச் சத்தியாக்கிரகத்தில் சிறையாக்கப்பட்ட பின், இந்தியக் கோகிலம் ஸ்ரீமதி. சரோஜனிதேவி கடற்கரை மணலில் நண்பகல் முழுவதும் பொலிஸ் புலிகளால் சிறைப்படுத்தப்பட்டதை உலகறியும். இவ்வாறு அறப்போர் தாங்கிய இந்தியப் பெண்மணிகள் பலர். இந்நூற்றாண்டில் இந்தியாவில் மாத்திரமன்று; யப்பான், ருஷியா, எகிப்து, துருக்கி முதலிய தேயங்களிலும் பெண்கள் முன்னணியில் நிற்கிறார்கள். 1931-ம் ஆண்டில் யாழ்ப்பாண வாலிப மகாநாட்டார் டொனமூர் அரசியலின் சீர்கேட்டை உணர்த்துமுகத்தான் அரசாங்கசபையைப் பகிஷ்கரித்தது யாவருமறிந்தது. அதற்கும் பெண்மையின் வீரமே மூலகாரணமென்பது அடியேன் கருத்து. என்னை? அவ்வாண்டு வாலிப மகாநாட்டாரின் ஆண்டு விழாவில் இந்திய இரத்தினங்களில் ஒருவராகிய ஸ்ரீமதி. கமலாதேவி தலைமையேற்றதும், தலைமையுரையில் டொனமூர் அரசியலின் தீமைகளை வாலிபருள்ளத்திற் பதியுமாறு சொற்பொழிவாற்றியதும், அதனாற் றூண்டப்பட்டே வாலிப மகாநாட்டார் அரசாங்கசபையைப் பகிஷ்கரிக்க நினைந்து வெற்றி பெற்றாரென்பதுமாம். அமெரிக்க ஐக்கியமாகாணத்து ஒரு பெண் மந்திரி பதவி பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. நமது இலங்கையின் அரசாங்கசபையில் இரு பெண்களிருப்பதும், வழக்கறிஞராய் ஒரு பெண்மணி கடமையாற்றுவதும் நேயர்களறிந்தன. இவ்வாறு உத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத் துறைகளிலும், பிறவற்றிலும் பெண்கள் வரலாமா? வந்தால் ஆண்கள் நிலை யாதாகும் என்று அன்பர்கள் வினவலாம்? பெண்கள் உத்தியோகம் நடாத்தல் போன்ற கருத்தை நிச்சயித்தற்கு அன்பர்களை உரியர் என்று அதனை அவர்களோடு விட்டுவிடுகிறேன். வீரப் புதல்வரை ஈன்று வளர்த்தற்கும், தம் தம் கொழுநற்கு ஏற்ற காலத்து நற்புத்திமதி கூறுதற்கும், ஏற்ற கல்வி வேண்டுமென்பதும், உலக நிகழ்ச்சிகளில் அன்பு, அறம், தியாகம் போன்ற சில கருமங்களில் பெண்களீடுபடவேண்டுமென்பதுமே தமியேன் கருத்து. இக் கருமங்கள் செவ்வனே நிகழின் நாடு விடுதலையடையுமென்ப தொருதலை.

பெண்கல்வி பண்டைநாளில் மிக்கிருந்தது. இடைக் காலத்தில் அஃதொழிந்தது. பெண்கல்வி கூடாதென்றும் கடியப்பட்டது. அஃது எத்துணை கொடுமை! கொடுமை! உலகின் ஒரு பாதி அறியாமை இருள் மூழ்கின் நம் நிலை என்னாகும்? "விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரோடேனையவர்" என வள்ளுவர் கூறுதல் காண்க. மக்களென்பது ஆண் பெண் என்னுமிருபாலாரையுங் குறிப்பது. மக்களென்பது ஆண்மகனைக் குறிப்பதென்பது ஒருசாரார் கூற்று. அவர் கருத்தொழிக. இக்காலத்துப் பெண்கல்வி நிகழ்கிறதேயென்று அன்பர்கள் கூறலாம். அஃது அடிமைக்கல்வி, அநாகரீகக்கல்வியென்று அடியேன் கருதுகிறேன். திருவள்ளுவர், நாலடியார்போன்ற நீதிநூல்களும், பெரியபுராணம் போன்ற சமய நூல்களும், நெப்போலியன், மகாத்மா, நேரு, படேல், தாஸ் போன்ற பெரியர் சரித்திர நூல்களும், கற்பித்தல்வேண்டும். இசை, நூல்நூற்றல் போன்றனவும் வேண்டப்படுவன. இவற்றைக் கற்று நல் வாழ்வு நடாத்துவதாலேயே வீர இளைஞர்கள் உதித்தல் கூடும். கற்றல் மாத்திரம் போதாது. கற்றதன்படி நடத்தல் வேண்டுப். தம் சிறுவர்க்கு அதனை ஊட்டலும் வேண்டும். படித்த தாய்மாரின் குழந்தைகள் கல்வியில் வல்லவராதலை நாம் காண்கின்றேம்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்
கண்க ளிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கொடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடுங் காணீர்"

என்று பாரதியார் வீரமுழக்கஞ் செய்கிறார்.

தற்போது நம் நாட்டில் நவ நாகரீகம் பெண்மக்களைப் பிடித்திருக்கிறது. இதிலனேகர் தந்நிலையில் வழுக்கி வீழ்கிறார். இது குறித்துக்கொண்டு சிலர் பெண் கல்வி கூடாதென்றும், பெண்ணுரிமை கூடாதென்றும் கடிகிறார். நற்கல்வியும், நல் வாழ்வும் நன்மை புரிவிக்குமன்றித் தீமை புரிவிக்க இடங்கொடாதென்றும் கூறுவேன். இந்நிலை யெய்தாதவாறு பெண்கள் தம்மைத் தாமே பேணிக்கொள்ளல் வேண்டும். தம் வாழ்வு நலனுக்காய் உணவு, ஒழுக்கம், உடை, உடல்நலன் என்பவற்றில் பெண்ணினல்லார் கவனஞ்செலுத்தல் வேண்டும். இயற்கைவாழ்வில் பயிலல் வேண்டும். புலாலுணவு, கார உணவு, காப்பி, தேனீர் போன்றவற்றைப் பெண்மகளிர் கனவிலும் கருதுதல்கூடாது. பிராணாயாமம், நோன்பு கொள்ளல் முதலியன மூலம் தம் உடல் நலனையும், ஒழுக்கத்தையும் பேணிக்கொள்ளல் வேண்டும். காமுகரிட்ட வாடை வீசுதலும் ஆகாது. இக்கொடும் வினையால் நம் நாட்டின் ஒரு பகுதி அதோ கதியடைந் திருக்கிறது அது வீழ்க. உடையெனும் நாகரீகப் பேய்க்கு நம் தாயர் இரையாதல் கூடாது. தட்ப வெப்ப நீக்கத்துக்கும் மானங்காப்பதற்குமே உடை வேண்டப்படுவது. அதற்கும் தம் கையால் நெச்வு செய்து அணிந்துகொள்ளலாம். இதனால் நாடும் நலனுறும். எத்தனையோ மகளிர் உடை விஷயத்தில் சுமைதாங்கிகளாகிறார். தலையணையுறைகள் ஒன்றன்மேலொன்றாய் அடுக்குதல் ஒழிதல்வேண்டும். உடல் நலனுக்கன்றி அழகுக்கல்ல உடையென்பதைக் கருத்தி லிருத்தல் வேண்டும். தூய மனமுடைய ஆண்மக்கள் மனத்தையும் உடைக்கும் வேடிக்கை உடைகளை நினைத்தலுங் கூடாது. பிறர்மனத்தைக் கவராவாறு உடையணிதல் நலமென்று கூறுவேன். தலைமயிர் பெண்களுக்கு இயற்கையா யமைந்தது. அதனை எத்துணைப் பாடுபடுத்துகிறார். இயற்கை இயற்கையாதல்வேண்டும். நம்மகளிர் எத்துணைப் பேர் செயற்கை முறைகளால் தம் அழகையும் கற்பையும் கெடுத்துக்கொள்கிறார். இதனால் நாடும் பாதவிக்கிறது. கற்பிழந்த மகளிர் மைந்தன் யாவரானும் இகழப்படுகிறான். மைந்தன் நல்வாழ்வு குறித்தும், நாட்டுப்பணி குறித்தும் பெண்ணினல்லாள் கற்புடையாளாயும் அழகுடையாளாயும் விளங்குக. பெண்ணின் அழகைத் தெய்வச்சேக்கிழார், "கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ, பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து — விற்குவளை, பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ" "ஒவியநான் முகனெழுத ஒண்ணுமை உள்ளத்தான், மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் செய்யு ளோவியமாக எழுதியிருத்தல் காண்க. இவைகளை நம் தாயரறிந்ததும் பெண்மக்களை நல்வழியில் வளர்த்துவருவாராக.

ஆண்மக்கள் கொடுமையினுல் சில பெற்ருர், பெண் மகவு பெறுதலை கூடாதென்றும், பாவமென்றும் கருதுகிருர். பெண்மை நலனும், நாட்டு விருப்பும் உடைய வருங்கால இளைஞர் சில கருத்துக்களைக் குறிக்கொள்ளல்வேண்டும். அதனுல் முற்கூறிய இரண்டும் நலனுறும். பெண்மகப் பெற்றோர் வருத்தமும் நீங்கும். அவையென்னை? என்று நண்பர்கள் வினவலாம் நாட்டுப் பணிக்குரிய கல்வியைக் கற்ற பெண்ணையே வாழ்க்கைத் துணையாய்க் கொள்வதென்ப தொன்று. விலை (ஸ்ரீதனம்) பேசி வாழ்க்கைத்துணை கொள்வதை ஒழித்தல் மற்ருென்று. இவையிரண்டாலும் முன்னைய இரண்டும் நலனுறும். இளைஞரின் குறிக்கோளால் பொருளின்றி வருந்தும் பெண்பெற்ருேர் கவல்வு நீங்கும். பெண்ணும் நற்கல்வி பெறுவாள். தாய்தந்தையர் ஸ்ரீதனத்துக்காய்த் தேடும் பொருளைக் கல்விக்காய்ச் செலவு செய்வர். இதனுல் பெண் நலனுறும். வருங்கால உலகம் செம்மையடையும். கருத்துவேற்றுமை குறித்து அன்பர்கள் கடியலாம். கருத்துவேற்றுமைக்கு இடங்கொடுக்குமாறு அன்பர்களை வேண்டுவதோடு பெண்ணுரிமை பெறுங்காலமும் அண்மையி லிருக்கிறதென்று கூறிப் பெண்மை சிறக்கவென்று வாழ்த்துவோமாக............................

“உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிரினுக் குயிரா யின்ப மாகிடும்
உயிரினு மிந்தப் பெண்மை யினிதடா
ஊது கொம்புகள்! ஆடுகிளி கொண்டே!”

# பலதூரம்.

வழிப்போக்கன்

ஓர் கச்சேரி முதலியார் தனக்கு இரண்டுநாட்களுக்குக் கூட ஈவு தரும்படி மாகாணத் தலைவரை வேண்டிப் பின்வருங் கடிதத்தை வரைந்தார். “வணக்கத்துக்குரிய ஐயாவே! முதலாவது இறைவன் திருவருளாலும், இரண்டாவது தங்களருளாலும் எனது மனைவி நேற்று ஓர் ஆண்மகவைப் பெற்றனள். தயைகூர்ந்து அடியேனுக்கு இரண்டு நாட்களுக்குக் கூட ஈவு தரவேண்டும்.” இங்ஙனம்....தங்கள் ஊழியன்....... (ஈவு கொடுபட்டது) ஈவு முடிந்து முதலியார் கச்சேரிக்குச் சென்ருர். மாகாணத் தலைவர் போதியளவு சிரித்து “முதலியாரே! உமக்கு இறைவனருளால் ஆண்குழந்தை பிறந்ததுபற்றிச் சந்தோஷம். ஆனுல் நான் அதற்கு எப்படி உதவிசெய்தேனென்பது விளங்கவில்லை.

* * *

புகையிரதத்தில் ‘காட்’ வேலை பார்ப்பவர் ஒருவருக்கு நித்திரையிலும் தமது வேலையைப்பற்றியே எண்ணம். ஒருநாளிரவு நித்திரையில் அவர் சென்றுகொண்டிருந்த புகையிரதம் வேறொரு புகையிரதத்துடன் மோதுப்படக் கனவுகண்டு ‘பிறேக்’ போட்டார். அவாருகே சயனித்திரிந்த மனைவியார் கூக்குரல்போட்டதும், திகைத்தெழுந்து பார்த்தபோது அவர் மனைவியாரின் கால்களையே ‘பிறேக்’ என்று எண்ணிப் பிடித்திழுத்தாரெனப் புலப்பட்டது.

* *

“கதிராமு வல்லிபுரம்” என்று பலமுறை கோட்டில் முதலியார் கூப்பிட்டும் குறிப்பிட்டவன் நீதிபதி முன் வெளிப்படவில்லை. நீதிபதி ‘விருந்து’ பிறப்பித்தார். மறுநாள் கோட்டு முதலியாரையே பொலிசார் விலங்கிட்டு நீதிபதிமுன் விட்டார்கள். அப்பொழுதுதான் முதலியாருக்குத் தனது பெயர் கதிராமு-வல்லிபுரம் என்பது ஞாபகத்துக்கு வந்தது.

* * *

சில காலத்துக்கு முன் யாழ்ப்பாணத்தில் மாகாணத் தலைவராகவிருந்த பிறைஸ் என்பவர் ஓர் விதானையைத் தனது சப்பாத்தை எடுத்துக்கொண்டு தெருவீதியிற் செல்லும்படி கட்டளையிட்டாராம். ‘யாழ்ப்பாணச் சங்கம்’ இச்செயலைக் கண்டித்து அரசியற் காரியதரிசிக்கு மனுச்செய்தது. ஷை விதானை இச்செய்தியை அறிந்ததும் “அது நானுகவே என் விருப்பத்துக்கு எடுத்துச்சென்றேன்” என்று சங்கத்துக்கு கடிதமனுப்பினுராம்.

* * *

ஒருமுறை யாழ்ப்பாணக் கோட்டில் ஓர் சாட்சி “எதிரி குத்தியபின் மேசைக்குக் கீழே ஒழித்திருந்தான்” என்று கூறினுன். மொழிபெயர்ப்பு முதலியார் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூருது “எதிரி இப்படிச் செய்தான்” என்று சொல்லிக்கொண்டு கோட்டிலிருந்த மேசைக்குக் கீழ் ஓடி ஒழித்திருந்தார். நீதிபதி “வெளியே வாரும்” என்றதன்பின் தான் வெளியே வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்ச லீலை.

நவாலியூர்
"சத்தியநாதன்"

இப்பிரபஞ்சமானது ஒரு பெரிய வித்தையாயிருக்கிறது. பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவரும் நொடிகளையும் விடுகதைகளையும் பார்க்க இது ஒரு பெரிய நொடியாயும் விடுகதையாயுமிருக்கிறது. இந்த நொடியை அவிழ்ப்பதற்கு உலகந் தோன்றியகாலந் தொட்டே பெரிய இருடிகளும், ஞானிகளும், தத்துவ அறிஞரும், மதாசாரிகளும், போர்வீரரும், அரசியல் தலைவரும், அரசரும், புலவரும், கலைஞரும், காவியக்காரரும், ஓவியக்காரரும் பலபட முயன்றுவந்தார்கள். பூதபௌதிக சாஸ்திரிகள் முயற்சி செய்தார்கள்; "வேதக்காட்சிக்கும்" இப்பிரபஞ்சத்தின் தத்துவம் புலப்படவில்லை. "உபநிடத்து உச்சியில் பழுத்தபோதக் காட்சிக்கும் இதன் மர்மம் தென்படவில்லை. அணுவைத் துளைத்து ஆராயும் விஞ்ஞானிகளுக்கும் அகப்படவில்லை. உலகத்தில் பிறந்த மேதாவிகள் எல்லாரும் இப் பிரபஞ்ச மென்னும் வித்தையைப் பார்த்துத் தாம் தாம் எண்ணியவற்றை வகுத்துரைத்தார்கள். மனிதனுடைய விவேகம் இந் நொடியை அவிழ்ப்பதற்குப் பல துறையிலும் முயன்று வந்தது. பல்வேறு வகைப்பட்ட வாதக்காரரும், கட்சியினரும், மதத்தினரும் தங்கள் தங்கள் வெற்றிக்கொடியை உயர்த்தினார்கள். உலோகாயதம் என்றும், மாயாவாதம் என்றும், வேதாந்தமென்றும், சித்தாந்தமென்றும் பலவகைப்பட்ட விடைகள் ஒவ்வொரு பகுதியினரால் தத்தம் மதி யூகத்திற்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டன. மேலைநாட்டிலும், கீழைநாட்டிலும், தெற்கிலும், வடக்கிலும் நாகரீக மக்களிடத்தும் அநாகரீக மக்களிடத்தும் எங்கும், அவரவர் வல்லமைக்கும் தத்துவத்துக்கும் இயன்றவரை இந்தப் பெரிய நொடிக்கு விளக்கவுரைகள் கூறப்பட்டன. "ஒருவனே டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம், வருமுறை வந்து நின்று போவது மாதலாலே, தருபவன் ஒருவன் வேண்டும்" என்று ஒருசாரார் இப்பிரபஞ்சம் ஒரு கர்த்தாவை உடைத்தென நிர்ணயித்தனர். கடவுளுக்குக் குணங்குறி கற்பிக்குமிடத்துக் குணங்குறி யில்லாதவர் அவர் என்று முடிபு கட்டினர். முடிபுசெய்து சில ஒழுக்கமுறைகளை மனிதன் கடைப்பிடித்து வாழ்வைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று கற்பித்தனர். இன்னொருசாரார் கடவுளைப்பற்றிக் கவனியாது சாக்ஷாத் பிரத்தியக்ஷமான பொருள்களை வைத்து ஆராய்ந்து மனிதன் சுகமாக வாழ வழிதேடினர். மனிதனுடைய பலவீனத்தை அறிந்த வேறு சிலர் கடவுளிடத்தில் சரணாகதி அடைந்தனர். இவ்வாறு பலதிறப்பட எழுந்த விடைகளுள் ஒன்றாவது இப்பிரபஞ்சமென்னும் ஜாலவித்தையின் முழுத் தத்துவத்தையும் ஒருங்குபட விளக்கவில்லை. "யார் செய்தது இந்த லீலை" என உலகத்தோடு உடன் தோன்றிய ஒரேயொரு கேள்வி இன்றும் புதிய கேள்வியாகவே இருக்கிறது. விடைகள் பகரப்பட்டும் கேள்வி புதிதாக மேலும் மேலும் கேட்கப்படுகிறது. வேதகால மகரிஷிகள் கேட்ட கேள்வியும் இதுதான். இன்று கேட்கப்படும் கேள்வியும் இதுதான். உலகத்தில் நடைபெறும் சம்பவங்களை நோக்குமிடத்து உலகம் இதுவரை இந்தக் கேள்விக்குக் கூறிவந்த விடைகளின் குறைபாடும் பிரபஞ்ச தத்துவத்தின் மர்மமும் பெரிதாகின்றன.

பின்வரும் பாட்டு எம் உள்ளத்தெழுந்த இக் கேள்வியேயாகும். இதில் ஒரு குழந்தை இந்த உலகத்திலுள்ள இயற்கையின் கோலாகலத்தையும், மனிதனுடைய வேறுபட்ட இயற்கையையும் செயலையும் எல்லாங்கண்டு வியப்பும் பெருமிதமும் கோபமும் உடையவனாய் "யார்செய்தது இவ்லீலை" என்ற கேள்வியைக் கேட்கிறான். இயற்கையின் சம்பவங்கள் அவனுக்கு வியப்பையும் பெருமிதத்தையும் கொடுக்கின்றன. இப்பிரபஞ்சம் யார்செய்த விளையாட்டு என்று நினைத்து அவன் சிரிக்கிறான். இவ்வுலகத்தில் எல்லாம் நன்மையாயில்லை. விவேகம்படைத்த மனிதகூட்டத்தில் ஏற்படும் குழப்பங்களும் சஞ்சலங்களும் நம் குழந்தைக்குக் கோபத்தையும் நகைப்பையும் உண்டாக்குகின்றன. ஒரு தேசத்தவர் சுயாட்சி நடத்துவதும் இன்னொரு தேசத்தவர் பராதீனப்பட்டு வாழ்வதும் முடியாட்சி நடத்திவந்த நாடுகள் குடியாட்சிசெய்வதும் சுயாட்சி பெற்ற நாட்டிலேயே "நாஸிகள்", "கமியூனிஸ்ட்", "ஸோஸலிஸ்ட்" என்ற கட்சி பாகுபாட்டினால் அவர்கள் ஒருவரை ஒருவர் முண்டிக் கலாம்விளைப்பதும் முதலாளித்தத்துவம், தொழிலாளித்தத்துவம் என்ற சிறப்புந் தாழ்வுமிருந்துவருவதும் வியாபார நெருக்கடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பஞ்சம், ஆயுதப்பரிஹாரணம் என்ற இன்னோரன்ன பிரச்சினைகள் இம்மக்கள்கூட்டத்திற் கிளம்புவதும், பெரியோர்கள் நன்னெறியைக் கடைப்பிடிக்கும்படி கேட்க அரசியல்வாதிகள் தலையசைத்து மாட்டோமென்று கூறுவதும் உலகத்தில் வேறுதிறப்பட நடக்கும் நீதியும் அநீதியும் இவையெல்லாம் நம்மிளவல் மனதில் சிரிப்பையும் கோபத்தையும் கொடுத்தன. உலகத்திலுள்ள அல்லல்கள் அவனுக்கு ஆத்திரமூட்டவே இந்தப் பிரபஞ்சமென்ற லீலையைச் செய்த "பையல்" யார்? இந்தப் பெரிய விளையாட்டுக்காரன் இம்மாதிரி ஒரு சமர்த்தை என் செய்கிறுன்? என்று குழந்தைக்குக் கோபம்வருகிறது. ஒருபுறத்தில் வியப்பும் இறும்பூதும் உண்டாகிறது. தத்துவத்தைக் காணும் ஊக்கமுடைய ஒரு சத்திய வாஞ்சைகொண்டவன்போல இந்தக் குழந்தை கேட்கிறுன்.

பாட்டென்ருல் கம்பன் பாட்டு. அது போலவே பாட்டல்லாததற்கு இலக்கணம் நமது பாட்டென்றே கூறுவோம். இவ்வாசிரியர் தம் மனதிலுதித்த ஒரு எண்ணத்தைப் பலமாக அறிவுறுத்தற்கு மொழியைத் துணைகொண்டு சில வரிகளை எழுதினுரேயன்றி காரிகையின்படி கவி இயற்றினுரில்லை. எனவே, இவ்வகவலடிகளில் வழுக்களில்லையென்று கூறுவதற்கில்லை. வசனத்தில் எழுதித் தமது எண்ணங்களை இத்துணைத் திட்டமாகக் கூற முடியாமையால் யாப்பு அறியாத இவர் இப்பாவினத்தை ஒரு துணையாகக் கொண்டனர். "பயறுண்டோ" என்று கேட்டார்க்கு "உழுந்து உண்டு" என்று கூறும் கூலவாணிகரைப்போல "பாட்டு" என்று கேட்பவர்க்கு இது ஒரு சாட்டு என்றே கூறலாம்.

"யாஅர் செய்த திவ்லீலை" என்ருன்
கருங்கடல் "ஓ"வென முழங்கிய தொருபால்
காலை; புள்ளினம், பூவினம் மாவினம்
சோலை வண்டினம், மக்கள்த மினமும்
துயில்விட் டெழுதருங் காலை;அக் காலையில்
மன்பதை என்னும் கடல்எறி திவலைபோல்
செங்கதிர் மேனிக் குங்குமக் குழந்தை
வேலையின் புறத்தலர் சோலையி விருந்து
"யார்செய்த திவ்லீலை" என்ருன்.
இதழ்விரிந் தலர்ந்த நறுமலர் போலப்
பால்வாய் முகிழ்த்து வெண்ணகை விரிய
"யார்செய்த திவ்லீலை" என்ருன்.
சிரித்தன ஞயினுஞ் சிரிப்பினில் கோபம்
உருத்துநின் றதுமவன் கருத்தினைக் காட்டும்
உலகினை நோக்கி அலமர விளித்துச்
சிந்தனை செய்தபின் தனியிருந் துசாவினன்
"யாஅர் செய்ததிவ் லீலையென் னம்ம!"
காலையில் எழுந்த கடுங்கதிர் ஞாயிறு
குறும்பினன் உளத்தில் இறும்பூ தூட்டும்
மேலே நோக்கினுல் வானப் பரப்பு
மற்றிங் கிதனைச் செய்தவர் யாரோ!
பசேலெனப் படர்ந்த பாரைமா மரங்கள்
சரேலென அவனைச் சஞ்சலஞ் செய்யும்
உலக நாயகன் மலரடி பரவத்
திருநில மடந்தை சிந்தனை செய்தென
வானுற ஓங்கிய மலைத்தொடர் அவனை
மானென மலைத்திடச் செயுமே இரவில்
சந்திர சோதி சிந்தையை மயக்கும்
இந்திர வாவியில் வெண்மலர் விரிந்தென
வெள்ளிகள் அவனைக் கொள்ளை கொள்ளும்மே.
பரிதியின் கள்ளக் கதிரினம் ஒளிக்கும்
வெள்ளம் நிறைந்த பள்ளத் தர்க்குகள்
பசுமலைச் சாரல், சுனைநீர்க் குட்டை
மலைகள் கண்ட கனவுகள் போல
அலைகள் அலைத்துக் கீதம் பாடி
பரிதபித் தோடும் யாற்றின மவனை
ஆற்ருு இன்பப் பேற்றினி லுய்க்கும்;
மின்னல் இரவில் தன்னலம் விரிக்க
கருமுகிற் கூட்டம் இருட்கிருள் கூட்ட
வானிடிந் தென்ன விசும்பிடை முழங்கி
மாமழை பொழியுமச் செய்கையவ் வேழையை
மனங்குழைந் தொருகால் அழுதிடச் செய்யும்
கால மென்னுஞ் சோலையில் நின்று
ஒளிந்தும் மறைந்தும் விளையாட் டயரும்
பருவப் பெயர்ச்சி திருவுடை யானது
வஞ்சனை அறியா நெஞ்சினி லொருகால்
சஞ்சல மூட்டும்; அஃதான் ரொருநாள்
கங்கை பாயச் செங்கதிர் தாழ
மலையடி வாரத் திருந்தவ னுக்கு
வேறுவே றியற்கையும் வேறுவே றியல்பும்
வேறுவே ரொழுக்கமும் வேறுவே றெண்ணமும்
பலபடப் பிரிந்த இம்மக்கள் கூட்டத்தின்
தத்துவம் யாதெனச் சித்தத் தெழுந்தது.
அன்றெழுந் தடங்கிய எண்ணமே யின்றும்
நின்றெழக் குழந்தை நிலவெனச் சிரித்தான்.
யார்செய்த திவ்லீலை யென்னம்ம!
மனிதன் என்றஇம் மானுடப் பூண்டு
புனித மானஇப் பூமியில் முளைத்த
அன்றுதொட் டெழுந்ததிச் சஞ்சல மெல்லாம்
விவேக மென்ற விளக்கினை எந்த
விவேகா னந்தன் வளங்கின னிவர்க்கோ?*

*'இவர்க்கு' என்றது இம்மக்கள் கூட்டத்தவர்க்கு என்க. விவேகத்தினுலேயே மனிதன் நன்மை தீமை என்ற பாகுபாடு செய்கிறுன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் மிடிபிணி மூப்பே இறப்பு
இன்பம் திருசுகம் இளமையே வாழ்வு
என்றிரு தாத்தஇவ் வுலகச் சாயல்
கண்டிடப் பெரிய கலகமா கும்மே
யாஅர் செய்ததிவ் லீலைஎன் னம்ம!!
நல்லவர் நலமுடை யாரெனத் திகழ்வதும்
தீயவர் பொல்லாத் தீயராய் மலிவதும்
குற்றம் பொலிவதும் குணம்தலை நிமிர்வதும்
அடிமை யுறுவதும் ஆட்சி பெறுவதும்
ஆட்சி பெற்ற நாட்டவர் தம்முள்
கட்சி பிரித்துக் கழுத்தை நெரிப்பதும்
ஒருவர் சிறப்பதும் மற்றவர் தாழ்வதும்
தாழ்ந்தவர் ஓலமிட் டுயர்ந்தஅச் செல்வரை
வீட்டைவிட் டோட்டித் தருமஞ் செய்வதும்
முடிசிதைந் தடியுறக் குடிமுடி புனைவதும்
ஆட்சி செய்வதும் வீழ்ச்சி யுறுவதும்
யார்செய்த திவ்லீலை என்னம்ம!!
போரினை விலக்குமின்! அன்பினைப் பெருக்குமின்!
நன்மையைப் பிடிமின்! தீமையை விடுமின்!
களவும் பொய்யும் பொறாமையு மகற்றுமின்
வாஞ்சைகொள் ளன்மின்! வஞ்சகந் தொலைமின்
பெருநெறி யாளர் திருநெறி கொள்மினென்
றுலகத் துச்சியில் அங்கு மிங்குமாய்
கமண்டல மேந்திய தளர்நடை முனிவரும்
கசாயந் தாங்கிய கண்ணகல் காட்சித்
தத்துவ அறிஞருஞ் சத்தமிட் டுரைப்பதும்
அரசியல் வாதிகள் உள்ளொன் றுரைத்துப்
புறம்பொன் றிசைத்து நயம்படப் பேசி
அல்லவென் றுரைத்து மல்லுப் படுவதும்
"யார்செய்த திவ்லீலை யென்னம்ம!
தத்துவ தரிசிகள் தம்முட் பிணங்குவர்
மாயை என்பர் மற்றொரு சாரார்
கன்ம மென்பர் கன்மநா லுணர்ந்தோர்
உலகெலாம் ஒன்றன் திரிபென மொழிவர்
உபநிட தத்தில் உண்மைகண் டோர்கள்
ஆயின்,
கடற்கரை இருந்தநம் மிளவல் மேலும்
யார்செய்த திவ்லீலை யென்றான்
தத்துவ மறிந்தவர் உரையீர் சொல்லோ
உலகிய லறிந்தவர் உரையீர் சொல்லோ
அரசிய லறிந்தவர் அறைவீர் சொல்லோ
மந்திர மறிந்தவர் சொல்வீர் சொல்லோ
தந்திர மறிந்தவர் சாற்றீர் சொல்லோ
கடற்கரை இருந்தநம் குழந்தை பின்னும்
யார் செய்ததிவ் லீலை யென்றான்
மானிடப் பூண்டின் மர்மமிங் கென்ன?
இத்திற மெழுந்த கேள்விமுன் நமது
கல்வி யென்னுந் தீபம் அணைந்தது
கலைகளின் விரிவு காணு தொழிந்தது
மக்கள்தம் மறிவு விக்கி விளித்தது
உலகமும் அன்றுதொட் டுசாவிய திவ்விதம்
"யாஅ ருடையதிவ் வுலகெனும் லீலை?"
கால மென்னும் சிலையில் பழமையின்
பெருமையுஞ் சிறப்பும் புகழு மெல்லாம்
சாயல் போலப் படிந்துநின் றதுவே
ஆண்டுகள் பல்லா யிரமாய்க் கழிந்தன
எனினும்,
கேள்வியொன் றுண்டிது மாமலை போல
மக்கள்தம் மறிவை முற்றுகை யிட்டது.
எவருடையதிவ் வுலகெனும்லீலை
உலக நாயகன் கண்டதோர் கனவோ
நாட்டியக் காரன் செய்தஓர் வித்தையோ
மகாகவி ஒருவனின் பரமகா வியமோ?
கடவுட் குழந்தையின் மண்விளை யாட்டோ
மற்றுஅவன்
வேய்ங்குழற் பிறந்த தீங்கனி யிசைதான்
உருவங் கொண்டு மருவிய விளைவோ
அளவிலா விளையாட் டாருடை யதுவோ
இன்பமும் நீதியும் துன்பமும் அநீதியும்
மலிந்திடச் செய்தஇச் சேட்டையை நினைந்து
குழந்தையுங் கோபமும் சிரிப்பும் மனத்தெழ
யார்செய்ததிவ் லீலைஎன்றான்
கருங்கடல் "யாரோ" எனஎதி ரொலித்தது
அந்தரத் தெழுந்த இவ்வொலி
கடலொலி யுடனே கலந்தொலித் ததுவே.

# பாண்டவ புத்திரனின் கீரிமலை யாத்திரை

(வீமன்காமம், திரு. த. சிவஞானம் அவர்கள்)

இந்து சமுத்திரத்தின் நடுநாயகமாய் சகலவளங்களும் பொலிவுற்றுத் திகழாநிற்கும் இவ்விலங்காபுரியின் வடபாகத்திற் கணிகலமாய் நின்று சிறப்பை நல்குவது இவ்வியாழ்ப்பாணமேயாம். எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கு இலங்காபுரியில் யாழ்ப்பாணத்தையே தனது தலைநகராக்கி இங்கிருந்து தனது ஏகச் சக்கிராதிபத்தியத்தை நெறி பிறழாது நடாத்தி வருகின்றனள். இந்நகரின் வடபாகத்தில் தற்போது கீரிமலையென்றழைக்கப்பெறும் நகுலம் என்ற புண்ணிய தீர்த்தமுளது.

இவ்வுலகின்கண்ணேயுள்ள விசேஷ புண்ணிய தீர்த்தங்களில் கீரிமலையுமொன்றும். பாண்டவ புதல்வனுகிய அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை செய்த காலத்தில் அதன் விசேஷ மகிமையைக் கேள்வியுற்று அதிக தூரத்தைக் கடந்து கீரிமலையில் வந்து தீர்த்தமாடிச் சென்றுனென்று சரித்திர நூலாராய்வோரின் உதவியால் அறிகின்றோம். இம் மகா புண்ணிய தீர்த்தத்திநுல் அர்ச்சுனன் எமது நாட்டிற்கு வந்ததை யெண்ணி எவ்வளவு பெருமையும் ஆனந்தமுமடைகின்றோம். மேலும் விஜய ராசன் இலங்கைக்கு வந்தபோது இதன் மகிமையையறிந்து அருகாமையில் 'திருத்தம்பலேஸ்வரம்' என்னும் கோவிலைக் கட்டியுள்ளான். அக்கோவில் சிலகாலமாக அழிந்திருந்து பின்னர் தற்போது அதேயிடத்தில் வேறோர் கோவில் கட்டப்பட்டு நன்னிலையுற்றிருப்பது மெச்சத் தகுந்ததாம். இப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து நகுலமுனிவர் தமது கீரிமுகம் மாறப்பெற்றுராகையால் இதற்கு நகுலம், நகு



[மாவிட்டபுரம், ஸ்ரீ கந்தசுவாமிகோவில் ஆடிமாதத் தேர்விழா.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேஸ்வரம், கீரிமலை யென்னும் காரணப் பெயர்கள் வழங்கவேண்டிவந்தன.

இற்றைக்கு ஆயிரத்துநாற்றுமுப்பத்தைந்து வருடங்கட்கு முன்னர் திசையுக்கிர சோழ ராசனின் குமாரத்தி தீர்த்த யாத்திரைக்காகக் கீரிமலைக்கு வந்தனள். இவையெல்லாம் இப்புண்ணிய தீர்த்தத்தின் மகிமையை எடுத்துக்காட்டுகின்றனவல்லவா. இத் தீர்த்தத்தின் மகிமைதான் என்னே! தற்போதும் பற்பல விடங்களிலிருந்தும் நோயாளர் அங்கு தீர்த்தமாடித் தமது துன்பங்கள் நீங்கப்பெற்று ஆனந்தத்துடன் செல்கின்றனர். பண்டைக்காலத்தி லிருந்ததுபோலன்றித் தற்போது ஆண் பெண் இருபாலாரின் வசதிக்காகவும் எல்லாச் சௌகரியங்களும் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாம். ஆடியமாவாசையாகிய விசேஷ புண்ணிய தினத்தன்று பல்லாயிரக்கணக்கானோர் பற்பலவிடங்களிலிருந்தும் வந்து தீர்த்தமாடி ஆனந்தத்துடன் போவதைப் பார்க்கலாம்.

இற்றைக்குப் பல்லாண்டுகட்கு முன்னர் திசையுக்கிர சோழனின் குமாரியாகிய மாருதப்புரவீகவல்லி தனது தோழியருடன் நந்தவனத்தில் உல்லாசமாக உலவிவரும்போது ஓரிடத்தில் கலைக்கோட்டு மகா முனிவர் தபஞ் செய்து கொண்டிருப்பதைக் கண்ணுற்றனள். அம்முனிவர் பெருமானுக்குத் தலையில் கொம்பிருப்பதைக் கண்டதிசயித்தவளாய்ச் சிறுபிள்ளைத் தனமாக அவரைப்பலவாறுகப் பரிகசித்துத் தூஷித்ததன்பயனாக அம்மகானிட்ட சாபப்படி தனது அழகிய மானிடவதனத்தையிழந்து குதிரை முகம் பெற்றனள். அம்முனிவர்பிரான் கூறியபடி சாப நிவிர்த்திக்காகப் பற்பல விசேட புண்ணிய தீர்த்தங்களாடிக் கீரிமலைக் கேகினள். அங்கு நகுல முனிவரைக் கண்டுவணங்கி, அவர்வாக்கின்படி அப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அண்டையில் இரண்டு மைலுக்கப்பாலுள்ள வள்ளவர் கோன் பள்ளத்தினருகே கோவில் கொண்டிருந்த கலியுகவரதராகிய ஸ்ரீ சுப்பிரமண்யப் பெருமானைப் பூசித்தனள். வேண்டுவார் வேண்டுவனஈவான் திருவருளினுல் சாபத்தால் வந்த குதிரை முகம் மாறித் தனது அழகிய வதனத்தைப் பெற்றுனந்தித்தனள். பின்னர், சோழ நாட்டிலும் மற்றுமிடங்களிலுமிருந்து அநேக சிற்ப வல்லுனரை வரவழைத்துப் பெரும் பொருள் செலவிட்டுக் கலியுகவரதருக்காகவோர் அழகிய கோவிலைக்கட்டுவதற்கு ஆரம்பித்தனள். அவ்வரசிளங் குமாரியின் வரவையும் பின் நிகழ்ந்த மெச்சத்தகுந்த விசேடங்களையும் அறிந்து அந்நாளில் அவ்விடத்தை யரசாண்டுவந்த உக்கிரசிங்கன் அவ்வரசிளங் குமாரியின்மேல் காதல்கொண்டு அவளை மணப்புரியப் பலவாறு முயன்றும் அவள் இணங்காதது கண்டு அவளை வலோற்காரமாய்ப்பற்றிச்சென்று மணம்புரிந்தனனென்று சரித்திரங்கூறுகின்றது. அதன்பின்னர் உக்கிரசிங்கமன்னன் தனது இன்ப இராணியாகிய மாருதப்புரவீகவல்லி ஆரம்பித்த திருத்தொண்டை நிறைவேற்றுவதற்காகவேண்டிய உதவி செய்ய, அக்கந்தசாமி கோவில் அதியுன்னதமாகவும் மிக அழகாகவும் கட்டிமுடிக்கப்பட்டது. திசையுக்கிர சோழனும் தனதுபுதல்வியின் வேண்டுகோட்கிணங்கி, ஸ்ரீ சுப்ரமண்யப்பெருமானின் அழகிய திரு விக்ரகங்களையும், கோவிலுக்கு அர்ச்சகராகச் சில அந்தணர்களையும் தன்னுட்டிலிருந்து அனுப்பினுன். குதிரைமுகம்விட்டுநீங்கியவிடமாகையால் அன்றுதொட்டு அவ்விடத்தை மாவிட்டபுரம் என்னும் காரணப்பெயர் கொண்டழைக்கின்றனர்.

சரித்திர நூலோர் இவை கி. பி. எண்ணூறும் நூற்றுண்டில் நடைபெற்றதாகக் கூறுவர். அக்காலத்தில் காயாவுக்கு யாத்திரை போவதற்காகக் கப்பலேறும் துறைமுகத்தைக்காயாத்துறை யென்றழைக்கப்பட்டது. பின்னர் அப்பெயர் "கசாத்துறை" யெனத்திரிந்து வழங்கப்பெற்றது. ஸ்ரீ சுப்ரமண்யப் பெருமானைக் காங்கேயனென்று மழைக்கப்படுவதாலும், காங்கேயனின் விக்கிரகங்களை மாருதப்புரவீகவல்லிக் கெனக் கொணர்ந்து அத்துறைமுகத்தி லிறக்கினமையாலும் அன்றுதொட்டு கசாத்துறை யென்னும் பெயர் மறைந்து காங்கேயன் துறையென்னும் காரணப்பெயரால் வழங்கிவருகின்றது. அவ்விசேட புண்ணிய தலமிருந்த விடத்திலேயே தற்போது மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் அதிமேன்மையுடன் விளங்குகின்றது.

இக் கோவிலில் வருடாவருடம் ஆடிஅமாவாசைத் தினத்தைத் தீர்த்தநாளாகக் கொண்டு இருபத்தைந்து திருநாட்கள் நடைபெற்று வருவது வழக்கம். இத் திருவிழாக்காலங்களில் கோவிலின் அலங்காரக் காட்சியும், பல்லாயிரக் கணக்கானோர் ஒருங்கே சந்திப்பதனுலுண்டான மகிழ்ச்சியும், பக்தகோடிகளின் பஜனையும், சங்கீதக்கோஷ்டியின் முழக்கமும், பல வேடிக்கைக் காட்சிகளின் ஆரவாரமும் அதி ஆனந்தமயமாயிருக்கும். சின்னுட்களில் கற்றறி நிபுணர் சங்கீத சகிதம் பகவான் திருவிளையாடல்களை ஓதுவதைக்கேட்டுப் பக்தசிகாமணிகள் அதீத பக்திக்கடலில் மூழ்கிக் கரையேறத் தெரியாது தத்தளிக்கும் காட்சியானது யாவருக்கும் பேரானந்தத்தையளிக்கும். ஆடியமாவாசைக்கு முதற்றினத்தில் கலியுகவரதர் சக்திகளுடனும் வெவ்வேறு திருக்கோலங்களுடனும் ஐந்து ரதங்களில் பவனிவரும் கோலாகலக் காட்சி காண்போர்மனதைக் கனிவுறச் செய்யுமென்பதற்குச் சற்றேனும் ஐயமில்லை. அன்றுசாயந்திரம் அறுமுகப்பெருமான் சக்திகள் சகிதம் ரதங்களைவிட்டிறங்கிக் கோவிலைநோக்கி வருங்காட்சியானது யாவருடைய மனதையுங் கொள்ளைகொண்டு விடுகின்றது. அக்காட்சியின் ஒருபகுதியையே மேலேயுள்ளபடம் குறிக்கின்றது.

தமிழ்ச் செல்வியின் ஆளுகைக்குட்பட்ட இக்கோவில் மென்மேலும் அதியுன்னத ஸ்திதியையடைய அக்கலியுகக்கடவுள் திருவருளை பாலிப்பதாகுக.

# வயாவிளான் செபமாலைத் தாசர் சபை

## (தோமாஸ் ஆச்சிரமம்)

[வயாவிளான், திரு. த. முத்தையா அவர்கள்.]

இச் சபை, வயாவிளானைச் சேர்ந்த தோலகட்டி என்னுங் குறிச்சியிலுள்ள கத்தோலிக்க ஆலயத்தின்கண் யாழ்ப்பாணவாசியும், கத்தோலிக்க சமயகுருவுமாகிய வண. B. A. தோமாஸ் சுவாமி அவர்களால் சென்ற 1928-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

பண்டைக்காலத்தில் உள்ள ஒவ்வொரு சமயத்தவரும், தத்தம் சமய ஒழுக்கின்படி ஆச்சிரமங்களமைத்துக் கடவுள்வழிபாடு செய்துவந்தனரெனச் சரித்திரவாயிலாக அறிகின்றோம். இடைக்காலத்தில் அவ்வித ஆச்சிரமங்கள் இல்லாதொழிந்தபோதிலும், இக்காலத்தில் சிற்சிலவிடங்களில் சிற்சில சமயிகளால் ஆச்சிரமங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் எமது யாழ்ப்பாணத்தில் எவ்வித ஆச்சிரமங்களும் இருந்தனவாகத் தெரியவில்லை. நவநாகரீகமுதிர்ச்சியின்பயனாகக் கடவுள் இல்லையென்னும் கொள்கை பரவிவரும் இக்காலத்தில், கடவுள்நெறிபற்றிய இவ்வித ஆச்சிரமம் எமது யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பெற்றிருப்பது அளப்பிலா ஆனந்தத்தைக் கொடுக்கின்றது. ஆதலால், அதைப்பற்றிச் சில கூறுவது அவசியமாகின்றது.

**நோக்கம்:**

இச்சபையில் கத்தோலிக்க சமயத்தைச்சேர்ந்த பிரமச்சாரிகளாயுள்ள ஆண்மக்கள் எவரும் சேர்க்கப்படுவர். சேர விரும்புவோர் ஆறுமாதகாலம் அங்குவசித்துப் பயிற்சிபெற்ற பின்னர், அங்குள்ள குருவுக்கு வாக்குறுதி செய்து சேர்ந்துகொள்ளலாம். இவர்கள் சாதாரணசனங்கள்போன்று ஒருவரோடொருவர் அளவளாவிச் சம்பாஷிக்கமாட்டார்கள். வாரமொருமுறை ஞாயிற்றுக்கிழமைகளில், ஒன்றரை மணித்தியாலமும், விசேட பெருநாட்களிலும் மாத்திரம் சம்பாஷிக்கும் உரிமைபெறுவர். இங்கு சாதிவித்தியாசம் பாராட்டப்படுவதில்லை.

**கடமை:**

இங்கு வசிப்போர் யாவரும் சூரியன் உதயமாவதற்கு இரண்டு மணித்தியாலங்களின்முன் நித்திரைவிட்டெழுந்து இரவு 9 மணிக்கு நித்திரைக்குப்போதல்வேண்டும். தினந்தோறும் பகல் நேரத்தில் அரை மணித்தியாலத்துக்கு இருவர் வீதமும், இரவு நேரத்தில் ஒரு மணித்தியாலத்துக்கு இருவர் வீதமும் அங்குள்ள ஆலயத்தில் இடைவிடாது வணக்கஞ்செய்வர். விரும்பினோர் பகலில் ஒரு மணித்தியாலம் போசனம் முடிந்ததும் நித்திரை செய்யலாம். பகல் நேரத்தில் வணக்கம்முடித்துக்கொண்டு தோட்டவேலையிலீடுபடுவர். இவர்கள் தங்களுக்குரிய உடுப்புகள் தைத்தல், அவைகளின் அழுக்குகளை நீக்குதல், உரோமங்களைதல், மலகூடஞ்சுத்திசெய்தல், கமத்தொழிலுக்குரிய ஆயுதங்கள் செய்தல், உணவு சமைத்தல் முதலிய எக்கருமங்களையுந் தாங்களாகவே செய்துகொள்ளுகின்றனர்.

**உணவு:**

இவர்கள் சாத்வீக குணத்தைக் கொடுக்கக் கூடிய தாவரப்பொருட்களைக் கறியாக்கிச் சோற்றுடன் உண்ணுகின்றனர். தினந்தோறும் காலையில் கோப்பிநீர், மல்லிநீர், தேநீர் முதலியனவற்றையும், மத்தியானத்தில் சோற்றையும், இரவில், களி, பிட்டு, கூழ் முதலியனவற்றையும் உணவாகக் கொள்ளுகின்றனர். சுருட்டுப்புகைத்தல், வெற்றிலையுண்ணல், மயக்கத்தைக்கொடுக்கும் குடிவகைகளை அருந்துதல் முதலியனவற்றைச் செய்யமாட்டார்கள். ஞாயிற்றுக்கிழமைகளிலும், விசேட பெருநாட்களிலும் மாத்திரம் விசேட உணவை உட்கொள்ளுகின்றனர்.

**உடை:**

இவர்கள் வேலைசெய்யும் நேரங்களில் செந்நிறமுள்ள குறுகிய அங்கிகளையும், ஏனைய நேரங்களில் வெண்மையான கைகள் நீளமாகத் தைக்கப்பட்ட மேலங்கியினையும் அணிந்துகொள்ளுகின்றனர்.

இச்சபையில் தற்போது 34 பிரமச்சரிய சந்நியாசிகளும் ஒரு குருவும் வசித்துவருகின்றனர். இதன் கிளைச்சபை ஒன்று மருதமடுச் செபமாலைமாதாகோயிலில் இற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகா! இன்னுஞ் சொல்கிறேன் கேள். இரண்டுநாட்களால் உனக்கு ஒருதத்து. தெருவீதியில் வண்டி, கார் ஆகியவைகள் கவனம். (ஆ! சாமி நம்பள் செத்துப் போமா?) இல்லை இல்லை, நீ சாகமாட்டாய். நீ செத்தால் ஒருவருடத்தால் எப்படிப் பிள்ளைகிடைக்கும்.

"இவ்வளவுக்கும் பத்துரூபா கொடுத்தாற்றான் மிகுதி சொல்லலாம்" என்று சாஸ்திரி கேட்டவுடன் பாய் தான் வியாபாரஞ்செய்து வைத்திருந்த பத்துரூபா சொச்சத்தில் பத்து ரூபாவையும் சாஸ்திரியாரிடத்திற் கொடுத்து மிகுதியைத் தனது வழிச் செலவுக்குப் பையிற்போட்டு வைத்தார்.

இவ்வளவுதான் வேறொன்றுங்கூற வியலாதெனக் கூறிச் சாஸ்திரி அவ்விடத்தைவிட்டகன்றார்.

நமது பாய்க்கு அன்றிரவு நித்திரையே கிடையாது. தமக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையைப்பற்றி யோசிக்கத்தொடங்கினர். பல யோசனைகளின்பின் ஒருவாறு இரண்டு மூன்று நாட்களில் கைவசமிருந்த துணிகளைக் கேட்டவிலைக்கு விற்று விட்டு ஊருக்குப்போவதாகத் தீர்மானித்தார். தமது நாயகிக்குத் தான் கூடிய சீக்கிரத்தில் ஊருக்குத் திரும்பிவருவதுபற்றியும் சாஸ்திரியார் கூறிய அதிஷ்டங்களைப்பற்றியும் கடிதம் எழுதி அனுப்பினர். இரண்டு நாட்களில் கைவசமிருந்த சரக்குகளை வீடுவீடாகச்சென்று விற்றுவிட்டார். பணம் இருநூறுரூபாவரையிற் சேர்ந்தது.

பாய் பிரயாணமாகி வண்டிவரக் குறிப்பிட்டநேரத்துக்கு மூன்றுமூன்றரை மணித்தியாலங்களுக்கு முன் புகையிரதஸ்தானம்வந்து சேர்ந்தார். மூன்றாம்வகுப்புச் சீட்டெடுத்தால் ஒருசமயம் இடமில்லாதுபோகுமென்ற யோசனையால் இரண்டாம் வகுப்புக்குச் சீட்டெடுத்தார். புகைரதம் ஒரு மைலுக்கப்பால் வருஞ் சத்தங்கேட்டது நமது பாய் இருந்தவிடத்திலிருந்து எழுந்து கைப்பையுடன் அவசரப்பட்டு நின்றார். புகையிரதம் கண்ணுக்குப் புலப்பட்டது. பாய் ஒரு சமயம் புகைரதம் அந்த ஸ்தானத்தில் தங்காது போய்விடுமோவென்று யோசித்துக் கீழேஇறங்கி வண்டிவரும் பாதையில்நின்று சிறுது நேரம் தாமதிக்கும்படி கைகாட்டினர். இதற்கிடையில் புகையிரதக் கூலியாள் ஒருவன் திடீரென இவரைப் பிடித்திழுத்து ஸ்தானமேடைக்குக் கொண்டுபோனாராயினும் இவரது கால் ஒன்று வண்டியின் சக்கரத்துக்குள் அகப்பட்டுவிட்டது. இஃது இவ்வாறாக;

பாயின் கடிதத்தை வாசித்தவுடன் "அந்தப் பரம்பொருள்தான் சாஸ்திரி வடிவாகச்சென்று நாயகனைச் சோதித்து இருக்கிறார்; இது அவரின் அருட்டிருவிளையாடல்; எமக்கு ஆண்பிள்ளை பிறக்கும் என்பது நிச்சயம் என்று மனசிலெண்ணிப் பெரியதொரு உவகை கொள்ளலும், இரண்டு மூன்று நாட்களில் திருப்புவதாக எழுதி இருந்தாரே இன்னும்வரக் காணவில்லையேஎன்று யோசித்துத் துன்பங்கொள்ளலுமாகிய இரண்டும் ஒருகணத்தில் காணப்பட்டன. சரோஜாபாய்க்கு லடபாய் பிரதம வைத்தியசாலையிற் கடினமான வருத்தமாய் இருக்கிறார் என்னும் செய்தி தந்திமூலம் கிடைத்தது. சரோஜாபாய்க்கு மனஞ் சகிக்கவில்லை. இரண்டு மூன்று தினங்களில் வைத்தியசாலைக்கு வந்துசேர்ந்தாள். அன்றையதினமே லடபாய்க்குக் குதிரைப்பந்தயத்தில் ரூபா 50,000 கிடைத்திருப்பதாகச் செய்தி கிடைத்தது. மூன்றுவாரங்களால் பாய் சுகமடைந்துவிட்டார். சுகமடைந்தும் முடவனாகவே இருந்தார். சிறிது நாட்களில் இருவரும் ஊருக்குச்சென்றார்கள்.

ஓராண்டின்பின் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. ஐந்து வயதானதும் வித்தியாசாலைக்கு அனுப்பினர்கள். பிள்ளையோ சற்குணன்; அழகில் மன்மதன்; கல்வியிற் சுபன்; கொடையிற்கன்னன் என்னும்படியானன். *

மகனின் கல்வியையிட்டுப் பாய் ஒரு சதமேனுஞ் செலவிடவில்லை.

இவனது கல்வித்திறமையையும் புத்திக்கூர்மையையும் வித்தியாசாலை அதிகாரிகள் கண்டு பரிசில் வழங்கித் தங்கள் பொறுப்பிலேயே கல்வியூட்டுவித்தார்கள். கல்லூரிப்படிப்புப் பதினறுவயசில் முடிந்தது. அவன் இங்கிலாந்தேகிக் கற்றுப் பரிஸ்டராக வேண்டும்; அதற்கு உதவிசெய்ய வேண்டுமெனப் பிதாவை வேண்டினன். பிதாவும் உடனே விடையளித்து 50,000 ரூபாவையும் வங்கியில்இட்டு இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தார்.

மகேந்திரபாய் ஒக்ஸ்வேட் சர்வகலாசாலையில் உயர்தர பரீட்சைகளுக்கு வாசித்துக்கொண்டிருக்குங் காலங்களில் பாராளுமன்றத்துக்குப் போய்ச் சேர்ச்சியல் முதலிய பிற்போக்கான அங்கத்தவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதுண்டு. சில சமயங்களில் தனது சுய

* ஒருநாள் சரோஜா அன்பு காரணமாக, மகனைப் பார்த்து "மகனே! நீ கெட்ட பிள்ளைகளுடன் சகவாசஞ் செய்வதுண்டா? அப்படிப்பட்டவர்களோடு நட்புக்கோடல் 'பன்றியுடன் கூடிய கன்றும்..............'" "இல்லையம்மா! ஒருபோதும் இல்லை. நான் கெட்ட பிள்ளைகளுடன் கூடுவதில்லை. ஆனல் கெட்டபிள்ளைகள் என்னுடன் கூடி 'கன்றுடன் கூடிய பன்றியும் பால் குடிக்கும்' என்ற பிரகாரம் திருந்திவிடுவதுண்டு" என்று பதில் உரைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தை அரசாட்சி செய்யும் ஆங்கிலேயரின் ஆட்சி முறைகளைப்பற்றி நினைப்பதுமுண்டு. இவருக்குத் தன்னையறியாது அரசியல் விடயங்களில் ஒரு பெரும் பற்று வந்துவிட்டது. ஆங்கிலேயர் பலர் இந்தியா இலங்கை முதலிய தேசங்களிற் பெரிய பதவிகளை வகித்து வருவதும் தம்மிலும் பார்க்கச் சிறப்பற்றவர்களுக்குச் சிவில் சேவிஸ் முதலிய உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டு அவர் கடமை பார்ப்பதும் இவரது மனத்திற்கு ஆச்சரியத்தை விளைவித்தது. ஆனால் அவர்களிற் சிலர் சில சமயங்களிற் குடிசனங்களுக்குச் செய்யும் அவமரியாதை முதலியவற்றை யோசித்தபோது அவர்களில் மனவெறுப்புக்கொண்டார். இவ்வளவில் இவருடைய மனதில் தேசாபிமானமும் சுயநாட்டுப் பற்றும் குடிகொண்டுவிட்டன. இவர் சிவில் சேவிஸ் பரீட்சையிற் சித்தியடையவேண்டுமென்ற எண்ணத்தை விட்டார். எனது சகோதரர் இந்த நிலையில் வருந்த நான் அரசினரின்கீழ் மேன்மை பொருந்திய உத்தியோகங்களை ஏற்றுப் பொருளீட்டுவதின் பயன் யாது? இவர் சுயநாட்டுக்காகச் சேவை புரியவேண்டுமென்று பலவாறு யோசிக்கத் தொடங்கினார். சிறிது காலத்திற் சர்வகலாசாலைப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டும் பரிஸ்டராகப் பதிவு செய்துகொண்டும் சுயதேசத்துக்குத் திரும்பினார். இது நிற்க,

வங்காளத்தில் ஓர் பெருந் தனவந்தரின் ஏகபுத்திரியான கமலா என்பவள்.............................அழகில் ரதிபோன்று யாவரின் மனதையுங் கவர்ந்து வந்தாள். இவள் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்றவள். அவ்வூர்ச் சனங்கள் எல்லோரும் இவளது குணாதிசயங்களை மெச்சி வந்தார்கள். ஒருநாள் இரவு இவள் ஓர் கீர்த்தி பெற்ற பரிஸ்டருடன் கூடிச் சென்று ஓர் பூங்காவனத்தி லிருப்பதுபோலக் கனவு கண்டாள். இது சம்பவத்தை மறுநாள் கமலா தனது தோழிப் பெண்களிடம் வேடிக்கையாகக் கூறினாள். பெண்களும் "அதன் பின்னும் எங்களைக் கவனிப்பார்களா? பரிஸ்டரும் நீங்களுமாகத்தான் இருப்பீர்கள் சரி ஆகட்டும்" என்று வேடிக்கையாகக் கூறினார்கள். ஒருநாள் அவளது தகப்பனார் சில பாட்டுத்தட்டுகளை விலைக்கு வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தார். "கற்புள்ள மங்கையர்மேலே விழக் கண்டோமே யன்னியநாட்டுச் சேலை" என்று அந்தத் தட்டொன்றில் பாடியிருக்கக் கேட்டு மனம்பதைபதைத்து "நான் உடுத்திருப்பது முதற்றரமான பிரித்தானிய பட்டல்லவா? எனது கற்புக்குப் பங்கம் வந்துவிட்டதே"யென நினைத்துத் தன் வசமிருந்த அந்நியநாட்டுச் சேலைகளனைத்தையுந்தீக்கிரையாக்கினாள். இதை அறிந்ததும் பிதாவுக்குக் கோபம் மூண்டது. பலவாறாகத் தனது அருமைமகளைத் தூஷித்தார். ஆயினும் மகள் தெளிவாக விடயங்களைத் தகப்பனாருக்கு எடுத்துரைத்தாள். பெற்றோரையன்றி வீட்டுப்பணியாட்களையும் கதரே உடுக்கச் செய்தாள். பாரதி பாடலை வீணையுடன் பலகாற் படித்துவந்தாள். வந்தேமாதரமென்பதும் "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே" "கதர்க்கப்பல்கொடி தோணுதே" "தாழ்த்தப்பட்ட சோதனைத் தாங்குவாருண்டோ" என்றற்றொடக்கத்துப் பாடல்களும் கமலாவீட்டுத் தெருவீதியாற் செல்பவர்களின் செவிகளில் வீழ்ந்துகொண்டிருக்கும். இது மாத்திரமா! எப்போது நான் சுயநாட்டுக்குத் தொண்டுபுரிவேன்; எப்போது பிதா விடை அளிப்பார்; என்பவைகளே கமலாவுக்கு' நித்தமும் யோசனைக்கு வரும். கமலாவின் பெற்றோர் இந்தப்பிள்ளையென்ன? "கானமயிலாடக் கண்டிருந்த..............."என்றபிரகாரம் வீட்டுவேலையற்ற பெண்கள் சிலர் பிள்ளைகளைத் தெருவழியே அலையவிட்டுச் சத்தியாக்கிரகஞ்செய்து திரிவதைக்கண்டு தானும் அவர்களுடன் செல்லவேண்டுமெனத் தலையை உடைக்கிறாளே. யாரேனும் ஒருவனின் கையிற் கொடுத்துவிடுவோம்" என்று சம்பாஷித்துக் கொண்டிருக்கும் சமயம் ஓர் கடிதம்கிடைத்தது. "இறைவனருளால் இன்புற்றிருக்கும் அன்புடை மைத்துனருஞ் சகோதரியும் அறிவது: எனது மகன் சிவில்சேவிஸ் இரண்டாம் வகுப்புக்கு உயர்த்தப்பட்டு வேறு ஜில்லாவுக்குக் கலெக்டராக வருகிறமாசம் போகவிருக்கிறான். கமலாவின் காரியத்தை நிறைவேற்றிவைக்கத் தங்களுக்கு விருப்பமானாற் சீக்கிரம் விடை அனுப்பவும்" என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

கமலா மேன்மாடத்தில் தேசியம் என்னும் தலையங்கத்துடன் திரு. மகேந்திரா M. A. (Oxon) LL. B. பரிஸ்டர் அவர்களால் எழுதப்பட்ட வியாசத்தைப் பத்திரிகையில் படித்துக்கொண்டிருந்தாள். இவளுடைய பிதா மேன்மாடத்துள்பிரவேசித்துப் பிள்ளாய்! என்ன வாசித்துக்கொண்டிருக்கிறாய்? (விடயத்தலையங்கத்தை எட்டிப்பார்த்துவிட்டு) ஓகோ! தேசியமாம். அதுதான் உனக்கு எப்போதும். இருக்கட்டும். இங்கேவா; இப்படி உட்கார்ந்துகொள். உனது மைத்துனன் இராஜாபாய் சிவில் சேவிஸ் பதவி உத்தியோகத்தில் உயர்த்தப்பட்டு வேறு ஜில்லாவுக்குப்போக இருக்கிறானெனச் செய்தி கிடைத்திருக்கிறது. அதற்குமுன் உனது திருமணத்தை முடித்து அவர்கையில் உன்னைக்கொடுக்கவேண்டியிருக்.... "சரி! சரி! பிதாவே! இதுதான் தாங்கள் எனக்குச்செய்யவேண்டிய அரிய காரியம். மன்னிக்கவேண்டும் குராங்

W



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின் கையிற் பூமாலைபோற்தானிருக்கும். என்னால் முடியாது" என்று அருவருப்பாகக் கூறினாள் கமலா.

பிதா உண்மையாகவே இதுபோன்ற விடை காத்திருக்கவில்லை ஆதலால் தடதடப்பாகப் பேசத்தொடங்கிச் "சிவில் சேவிஸிலிருக்கும் பெருங் கலெக்டரை மணஞ்செய்யாவிட்டால் வேறு யாரைக் கலியாணஞ்செய்யப் போகிறாய்? கவணர்வேண்டுமா? என்னபிள்ளை பேதமை. ஆங்கிலத்தில் பீ. ஏ. யா சித்தியடைந்து இருக்கிறாய்? சொந்த மைத்துனன்; பதவியிலோ 'கலெக்டர்' உனக்கு இது கிடைக்கக்கூடிய காரியமா? வீண் எண்ணங்களை விட்டுவிடு! என்றார்.— பிதாவே! மன்னிக்கவேண்டும். 'கலெக்டர்' என்றதினால் மயங்கிவிடுவதா? உத்தியோகத்தைமாத்திரம் பார்த்தாற்போதுமா? குணதிசயங்கள் பார்க்கவேண்டாமா? தங்கள் மருகன் ஆங்கிலநாட்டில் இருந்தபோது நடந்துகொண்டமாதிரியை அறியவில்லைப் போலும் ....... அன்னிய தேசத்தவரின் கட்டளைப்படி ஊழியஞ்செய்துதான் தங்கள்மருகன் பொருளீட்டுகிறார். தனது தேசத்தவராகிய சகோதரருக்கு மாறாக ஆங்கிலேயருடன் ஒத்துழைக்கிறார். அன்னிய நாட்டு உடைநடை பாவனைகளைப் பின்பற்றி நடக்கிறார். பிதாவே! வேண்டாம்! வேண்டாம். என்னால் முடியாது! இதோ இந்தவியாசத்தில் சிவில்சேவிசிலுள்ள இந்தியரைப்பற்றி என்னகூறப்பட்டிருக்கிறது பாருங்கள் என்று அழுத்தமாய்க்கூறிவிட்டுப் பத்திரிகையைப் பிதாவிடம்கொடுத்தாள். பிதாவும் பத்திரிகையுடன் மாடத்தைவிட்டகன்றார். கமலாவின் தகப்பனார் பத்திரிகையில் உள்ள விஷயத்தைப் படித்ததும் மயங்கிவிட்டார். இந்த மகேந்திரா என்னும் பரிஸ்றர் யாரென்று யோசித்தார். புலப்படவில்லை. பத்திரிகையின்பக்கங்களை ஒவ்வொன்றாகப் பார்க்கத்தொடங்கினார். உயர்தர நீதிமன்றத்தில் ஓர் பெரிய வழக்கு விசாரணை செய்யப்பட்டதாகவும், பரிஸ்டர் மகேந்திரா நீதிபதிக்கு எடுத்துக்காட்டிய சட்ட அனுசரணைகளாலும், அவரது வாக்குவன்மையாலும் அவர் ஏற்பட்டபக்கத்துக்கே அனுகூலமாகத் தீர்வையாய் இருப்பதாகவும் ஒருபக்கத்தில் வெளிபிடப்பட்டிருந்தது நமது கிழவனார் எடுபட்டுவிட்டார். தனக்கும் தனது மைத்துனனுக்கும் காணிசம்பந்தமாக இருக்கும் சிவில்வழக்கிற்கும் மகேந்திராவையே ஏற்படுத்துவதாக நிச்சயித்துத் தனதுதரணிமூலமாகமகேந்திராவுக்குக்கடிதமனுப்பினார் அதுபோன்ற வழக்குகளுக்குத் தான் 50,000 ரூபா வாங்குவதாகவும், அதற்கு மேற்படத் தான் தனது ஊரில் இருந்து உவ்விடம்வருதற்குச் செலவுகொடுத்தால் வருவதாகவும் பதிலளித்தார். கமலாவின் தகப்பனார் அதற்குடன்பட்டு இவரை வரும்படி எழுதினார். வழக்கு விசாரணைக்கு முதனாள் சாயந்தரம் பரிஸ்டர் மகேந்திரா கமலாவின் ஜில்லாவுக்கு வந்துவிட்டார். தனது வேதன விஷயமாகச் சம்பாஷிப்பதற்காகக் கமலாவின் தகப்பனாரிடம் வந்தார். கமலாவின் தகப்பனாரும் மகேந்திராவின் அழகையும், தோற்றத்தையும், வாக்குவன்மையையும் கண்டு மயங்கிவிட்டார். சிற்றுண்டி வழங்கியபின் தனது பூங்காவனத்துக்கு அழைத்துச்சென்றார். தோழிமார்கள் வாசமலர்க்கொடியில்ஊசலாடவும் நறுமலர்கொய்துமாலை புனையவும் இன்னும் பலப்பல துறைகளிலும் பிரிந்து செல்லப் பூங்காவனத்தில் தமியளாய் நின்ற கமலா தான் ஓரிரவு கனவிற் கண்ட புருஷோத்தமன் தனது தகப்பனாருடன் பூங்காவனத்துக்கு வருவதைக் கண்டு நாணமுற்று மயங்கி நின்றாள். தகப்பனார் மகேந்திராவை யறிமுகப்படுத்தியதும் தான் பத்திரிகை வாயிலாக அன்புகொண்டு இருந்தவரும் கனவிற்கண்டவரும் ஒருவராக இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்து தலைகுனிந்தவண்ணம் யோசிக்கத் தொடங்கினாள். மகேந்திரா கமலாவின் கட்டழகையும் மடப்பத்தையும் கவனித்ததும் அவரை அறியாமலே மனம் அவள்பாற் சென்றுவிட்டது. கதர்ச்சேலை கட்டியிருப்பதைக் கண்டு அதிக சந்தோஷப்பட்டு, "ஓர் பிரபுவின் ஏகபுத்திரி கதருடை அணிந்திருக்கிறாள்போலும்?" என்று புன்சிரிப்புடன் கேட்க, கமலா "ஆங்கிலநாடு சென்று பாண்டித்திய பட்டம் பெற்று விளங்குவோர் கதர் உடை அணிவதானால் அதன் மகிமையை என்சொல்வது! அதன் மகிமை அறிந்தே நானும் அணிந்தேன் என்று சிரிப்பும் கதையுமாகக் கூறினாள். தகப்பனாருக்கும் இவர்களின் மனக்கொள்கையி னொற்றுமை புலப்பட்டது. பரிஸ்டர் தனது விடுதிச்சாலைக்குச் சென்றார். கமலாவும் தகப்பனாரும் வீடு சென்றனர். கமலா மகேந்திராவுக்குத் தனது காதலைக் கடிதமூலம் தெரிவித்தாள். மகேந்திராவும் கழிபேருவகை கொண்டு பதிற் கடிதம் வரைந்தார். கமலா தனது தாயாரிடம் தனது மனஎண்ணத்தைப் பூர்த்தி செய்யவேண்டுமெனக் கூறினாள். வழக்கு விசாரணை முடிய மூன்று நாட்கள் சென்றன. நீதிபதி பரிஸ்டர் மகேந்திராவைப்பற்றிப் புகழ்ந்துரைத்து வழக்கைக் கமலாவின் பிதா சார்பாகவே தீர்த்தார். கமலாவும் இது செய்தியை அறிந்து உவகைக்கடலில் ஆழ்ந்தாள். கமலாவின் தகப்பனாருக்கும் தாயாருக்கும் மகேந்திரா மீது அன்புமிக்கது. அவர்களும் கமலாவின் எண்ணங்களுக்கு இசைந்தார்கள். கமலா கடிதமூலமாக எல்லாச் செய்திகளையும் மகேந்திராவுக்கு அறிவித்து வந்தாள். மகேந்திரா தனது பெற்றோருக்கு இதுசம்பவத்தைக் கூறி விடைபெற்று அவர்களுடன் கமலாவின் வீட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயோதிபனின் ஞாபகக் குறிப்பு

## (1833--1935)

1833—1874. எட்டு முத்துக் குழிப்பால் சேர்ந்த பணம் 194,388—18¾ பவுண்.

1888—1925. ஒன்பது முத்துக்குழிப்பால் சேர்ந்த பணம் ரூபா 5, 734, 711. 38

1841. (1) டைக்துரையவர்களால் (Friend-inneed Society) நிறுவப்பட்டது. (2) "உதயதாரகை" (Morning Star) அமெரிக்கன் மிஷனரால் வெளியிடப்பட்டது.

1842. யாழ்ப்பாண வாசிகசாலை திறக்கப்பட்டது.

1847. மானிப்பாய் 'கிறீன்' வைத்தியசாலை ஆரம்பம்.

1850. யாழ்ப்பாணத்தில் F. N. S. வைத்தியசாலை ஆரம்பம்.

1853. (1) திரு. வைமன் கதிரவேற்பிள்ளை அவர்களால் "Literary mirror" என்னும் பத்திரிகை வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை பின்னர் "இலங்கைத் தேசாபிமானி" (The Ceylon Patriot) யாக மாற்றப்பட்டது.
(2) யாழ்ப்பாணத்தில் நிழலுருவப்படம் பிடிக்கும் விதம் அமெரிக்கன்மிஷனரால் காட்டப்பட்டது.

1858. பேதிப் பிரளயம்

1863. "இலங்கைத் தேசாபிமானி" (The Ceylon Patriot) வெளியிடப்பட்டது.

1866. யாழ்ப்பாணத்தில் பொலிஸ்தானம் ஸ்தாபிக்கப்பட்டது.

1876. "சத்தியவேதபாது காவலன்" (The Catholic Guardian) என்னும் பத்திரிகை வெளியிடப்பட்டது.

1879. ஆறுமுகநாவலரின் பிரிவு.

1880. (1) நாயன்மார்கட்டு ஆயுள்வேதவைத்தியசாலை ஆரம்பம். (2) யாழ்ப்பாணம் சுப்பிறீங் கோட்டில் மாகாணத்தலைவர் சேர். வில்லியம் துவைனம் அவர்களின் பரிபாலனத்தை தூஷித்து "Ceylon Examiner" என்னும் பத்திரிகையில் எழுதியதற்காக திரு. லூடோவிக்கி என்னும் பத்திராசிரியருக்கு ரூபா. 1000 அபராதம் விதிக்கப்பட்டது

1884. (1) கிறீஸ்த வாலிப சங்கம் (Y. M. C. A.) வட்டுக்கோட்டையில் நிறுவப்பட்டது.

(2) யாழ்ப்பாணத்தில் புயல்காற்றால் பெருஞ் சேதம்.

1889. சைவபரிபாலன சபையாரால் "இந்துசாதனம்" (The Hindu Organ) பத்திரிகை வெளியிடப்பட்டது.

1894 (மாசிமீ 3உ) யாழ்ப்பாணத்தில் பூகம்பம்.

1895. "இந்து சாதன" (Hindu Organ) பத்திராசிரியர் "சத்தியவேதபாது காவலன்" (Catholic Guardian) பத்திராசிரியர்மீது வைத்த மானநஷ்டத்தராட்சி சுப்பிறீங்கோட்டில் விசாரணை செய்யப்பட்டு விடுதலை யடைந்தது.

1898. இணுவில் பெண் வைத்தியசாலை ஆரம்பம்.

1902. (1) யாழ்ப்பாண புகைரத வீதி சேர். றிச்வே தேசாதிபதி யவர்களால் திறக்கப்பட்டது.

(2) சுன்னாகத்தில் சுண்ணம்பால் செய்யப்பட்ட புத்தரின் உருவம் Dr. போல் ஈ பீரிஸ் அவர்களால் புதைக்கப்பட்டவிடத்திலிருந்து கிளறியெடுக்கப்பட்டது.

1903. இந்துவாலிபர் சங்கம் வண்ணார்பண்ணையில் நிறுவப்பட்டது.

---

வந்து சேர்ந்தார். திருமணச் செய்தி யாவருக்கும் அறிவிக்கப்பட்டது. அநேக பிரபுக்கள் சமுகத்தில் விவாகம் நடைபெற்றது. சிறிது காலத்தின்பின் இருவருந் தேச நன்மைக்காகத் தமது பொருள்களைத் தியாகஞ்செய்யத் தொடங்கினார்கள். ஆங்கிலேயர் என்றால் இவர்களுக்கு அக்கினிபாயாசம் போலிருக்கும். விவாகஞ்செய்த பின் மிகவும் சொற்பகாலத்துக்குள் நீதிமன்றத்துக்குப் போகும் வேலையை விட்டுவிட்டார். மகேந்திரா விவாகஞ் செய்யு முன் பரிஸ்டராக இருவருடங்களிற் சம்பாதித்த தொகை வங்கிக்கணக்கின்படி ஏறக்குறைய இருபதுலட்சம் ரூபா தாய் தந்தையர் கமலாவுக்குக் கொடுத்த தொகை ஏறக்குறைய நாற்பதுலட்சம் ரூபா. இப்போது இவ்வறுபதுலட்சம் ரூபாவையும் தங்கள் உடல்பொருள் ஆவி ஆகிய எல்லாவற்றையும் தாய்நாட்டிற்காக அர்ப்பணஞ் செய்து தியாகபுருஷர்களாக யாவர் மதிப்பையும் பெற்றுவிளங்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1906. "யாழ்ப்பாணச் சங்கம்" நிறுவப்பட்டது.

1907. 'யாழ்ப்பாண F. N. S. வைத்தியசாலை அரசினரால் சிவில் வைத்தியசாலையாக மாற்றப்பட்டது.

1912. திரு. அலன் எபிரகாம் என்னும் யாழ்ப்பாணத் தமிழ் கணிதவிற்பன்னர் லண்டனில் F. R. A. S. ஆகத் தெரியப்பட்டது.

1916. புதைக்கப்பட்டிருந்த திரவிய மெடுப்பதற்காக வண்ணார் பண்ணையில் மனுஷபெலி.

1917. சுன்னாகத்தில் பாழாயிருந்த புத்தகோயிலின் அடிக்கட்டிடம் Dr. போல் ஈ பீரிஸ் அவர்களால்கண்டுபிடிக்கப்பட்டது.

1918. யாழ்ப்பாணத்தில் புயல்காற்றும் பெருவெள்ளமும்.

1922. (1) ஸ்ரீமதி. சரோஜினி தேவியின் யாழ்ப்பாண விஜயம்.

(2) சுன்னாகம். அ. குமாரசாமிப்புலவரின் பிரிவு.

1925. மாணவ மகாநாடு (பின்னர் வாலிபமகாநாடு) நிறுவப்பட்டது.

1926. மதுஸ்தானங்கள் மூடப்பட்டன.

1927. காந்திபடிகளின் யாழ்ப்பாண விஜயம்.

1928. டொனமூர் அரசியற்றிட்ட விசாரணையதிகாரிகளின் யாழப்பாண விஜயம்.

1929. யாழ்ப்பாணத்தில் "சுகாதாரவாரம்" தொடங்கப்பட்டது.

1930. (1) "ஈழகேசரி"ப் பத்திரிகை வெளியிடப்பட்டது.

(2) சேர். பொன். இராமநாதனின் பிரிவு.

(3) வடமராட்சி வாலிபர் சங்கம்

1931. (1) 'வலிகாமம் வடக்கு வாலிபர் சங்கம்' நிறுவப்பட்டது.

(2) கமலாதேவியின் யாழ்ப்பாண விஜயம்.

(3) வாலிபமகாநாட்டாரால் அரசாங்கசபை பகிஷ்காரம்

(4) பண்டிதர் ஜவகர்லால்நேரு, கமலாநேரு, இந்திரா நேரு அவர்களின் யாழ்ப்பாண விஜயம்.

(5) யாழ்ப்பாணத்துக்கு மின்சார வெளிச்சம்.

1932. (1) வலி-மேற்கு வாலிபர் சங்கம்.

(2) முதல் யாழ்ப்பாணப் பெண் பிரதிநிதி அரசாங்க சபைக்குத் தெரியப்பட்டது.

1933. (1) வடமாகாணத்துக்கு முதன் முறை இலங்கைவாசி (திரு. எட்மன்ட் ரொட்றிக்கோ) மாகாணத் தலைவராக்சப்பட்டது.

(2) "பிறீப் பிரஸ்" பத்திரிகை வெளியிடப்பட்டது.

(3) யாழ்ப்பாணப் பெரிய கோட்டு நீதிபதியாக முதன் முறை யாழ்ப்பாணத் தமிழர் (திரு. சி. குமாரசுவாமி நியமிக்கப்பட்டார்.

1934. யாழ்ப்பாணத்திலிருந்து அரசாங்கசபைப் பிரதிநிதிகள் தெரிந்தனுப்பப்பட்டனர்.

1935. (1) இலங்கையின் முதல் பெண் நியாயவாதியின் யாழ்ப்பாண விஜயம்.

(2) யாழ்ப்பாணப் பொலிஸ் நீதிபதியாக முதன் முறை சிவில் சேவிசிலுள்ள யாழ்ப்பாணத் தமிழர் (திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை) நியமிக்கப்பட்டார்.

---

# தீண்டாமை

அரசர் பெருமான் ஆட்சிச் சிறப்பு விழாவன்று நன்கு அலங்கரித்துக் கொண்டாடும்படி தாழ்த்தப்பட்டவர்களை வழி திரு. R. சிறினிவாசன் M. L. C. அவர்கள் கூறியவை. "தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளை அரசர் பெருமான் இங்கிலாந்தில் சந்தித்தபோது "தீண்டாமை" யென்றால் என்னவென வினவினர். பிரதிநிதிகளிலொருவர் "உயர்ந்தவகுப்பு மனுஷர் தாழ்ந்த வகுப்பு மனுஷனைத் தீண்டமாட்டார்" என்று பதிலுரைத்தார். அதற்கு அரசர்பெருமான் அதிசயப்பட்டவராகப் பிரதிநிதியைப் பார்த்து "தெரு வீதியில் தாழ்த்தப்பட்டவனொருவன் வீழ்ந்தாலும் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவன் தூக்கிவிடமாட்டானா? வென வினவினர். அதற்கு "ஒருபோதும் தீண்டமாட்டார்" என்றே பிரதிநிதி பதிலளித்தார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உங்களுக்காக

மிகத்திறமையாகச் செய்யப்பட்ட


# இந்தியச் சவுக்காரங்கள்

இந்தியாவில்
சுத்தமாகச் செய்யப்பட்ட
இந்த 'ரொம்கோ' என்னும்
சவுக்காரத்தில்
ஒன்று அல்லது இரண்டு கட்டிகளை
ஒருமுறை வேண்டி
நீங்கள் உபயோகித்தால்
பின்பு ஒருபோதும்
புறநாட்டுச் சவுக்காரங்கட்கு
அவசரமின்றிப் பணம்கொடுக்க
எண்ணம் வராது

இப்போது மிக நேர்த்தியான சுகந்த வாசனையுள்ள சவுக்காரத்தை தீர்வை வரி சிறிதும் கொடாமல் பெறலாம். இவ்வாறு உங்கள் பணத்துக்கு முன்னரிலும் பார்க்க நல்ல சவுக்காரம் பெறக்கூடியதாகின்றது. உண்மையாக நாம் சொல்வதொன்றுண்டு 'ரொம்கோ' என்னும் இந்தச் சவுக்காரங்களில் எதனிலாவது கொழுப்புச் சிறிதும் கிடையாதாகுமென்பதே.



TOMCO



## THE NATIONAL AGENCIES,

**No. 213, MAIN STREET,**
**COLOMBO**

*BRANCH:*

## GANDHI VASTRALAYA,

**Vannarponnai, JAFFNA.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**GANI BHAI STORES,**
**Grand Bazaar, JAFFNA.**
**கனி பாய் ஸ்டோர்ஸ்**
பெரியகடை, யாழ்ப்பாணம்.

விதம் விதமான
**சில்க் வேட்டிகள்**
**சில்க் சேலைகள்**
கட்டத்தகுந்த
**பட்டுத் துணிகள்**
எல்லாரும் விரும்பும்
**உல்லாச உடைகள்**
**எங்கே? எங்கே? எங்கே?**
**கனி பாய்**
**பிடவை ஸ்டோரில்**
**வியப்புறத்தக்க விசேட விலைகள்!**
**இன்றே வருக! இலாபம் பெறுக!**

[எமது உத்தமக்கொள்கையை உணர்ந்த நண்பர்களின் உண்மை வெளியீட்டின் நற்சாட்சியை 97-ம் பக்கத்தில் பார்க்கவும்.] *Proprietor:*
**அப்துல் கனி அப்துல் றகுமான்**

எங்களிடம்
ஸ்பன்ஸ் சில்க்
பூனா சில்க்
பலஸ் சில்க்
பலேஞ் சில்க்

மேற்கண்ட சில்க்களில், பிளேனாகவும் புலாவர் போடராகவும் முகப்புக்கு போடருள்ள சேலைகளாகவும் இன்னும் அநேக புதுமாதிரியானசேலை வகைகளும் சகலவித லேஸ் வகைகளும் வேட்டிசால்வைகளும்
தொகையாகவும்
சில்லறையாகவும்
**விலை சகாயமாகப்**
**பெற்றுக்**
**கொள்ளலாம்.**

FOR
**HARDWARE**
***Consult***
**EHAMPARAM & Co.**
**WALKER & GREIG REPRESENTATIVES**
***Prices Moderate & Goods Reliable***
**All**
**Engineering Works**
**undertaken**
**Grand Bazaar, JAFFNA.**

யாழ்ப்பாணம், பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப் பக்கமாயிருக்கும்
**சு. வி. பொ. கார்த்திகேயபிள்ளை**
**மருந்துச் சரக்கு**
**மாளிகையில்**
திறம் கஸ்தூரி, கோரோசனை,
குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், புனுகு,
சவ்வாது, அத்தர்வகை, பன்னீர்வகை
முதலிய வாசனைத் திரவியங்களும்,
கருணனந்தர், குரு மருந்துகளும்
**மரக்கறி வற்றல்வகைகளும்**
மற்றும் மருந்துச் சரக்குகளும் சாடி வகைகளும்
விலை நிதானமாகப்
பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊக்கங்கொள்மின்!
# தாமதம்வேண்டாம்!!
## உயரிய நூல்கள் வெளிவந்துவிட்டன!!!

எமது

**ஆசிரியன் ஸ்ரீமான் K. S. சிற்றம்பலமவர்கள்**

இயற்றிய

**நாட்டுச்சீவனசாஸ்திரம் Part I விலை ரூபா 1-25**
**நாட்டுச்சீவனசாஸ்திரம் Part II „ „ 2-00**

இப்புத்தகங்கள் தமிழ் 6-ம், 7-ம், 8-ம், உயர்தர வகுப்புகளின் நாட்டுச் சீவனசாஸ்திரப் படிப்பிற்கென இலங்கை வித்தியாபகுதியாரால் நியமிக்கப் பட்ட புதிய பாடத்திட்டத்திற்கும், பொழிப்பிற்கும் முற்றுயமைய எழுதப் பட்டுள்ளது. மாணவர்கட்கு இவ்விஷயத்தில் சுருக்கமாகவும், விளக்கமாகவும் அறிவுகொடுக்கும் நூல் இது ஒன்றே!

இலங்கையின் அரசியல் முறை, நியாயாதிக்கம், கமத்தொழில், பிராணிகளின் சீவியம், இலகுவான கைத்தொழில் முறைகள் முதலியவற்றைப்பற்றி அறிவுவேண்டும் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகங்கள் சிறந்த அறிவுக்களஞ்சியமாகும்.

**இன்றே வாங்குங்கள்!** **இவற்றினருமையை நோக்குங்கள்!!**

இப்புத்தகங்கள் பிரபல புத்தக வியாபாரிகளிடமும் எம்மிடமும் கிடைக்கும்.

**வீ. கே. எம். நாகலிங்கம்,**
GENERAL MERCHANT,
**பருத்தித்துறை.**
POINT PEDRO, Ceylon.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செ சிவக்கொழுந்து அவர்களின்

# மருந்துச்சரக்குக்கடை, பெரிய கடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கிளை:—**சட்டநாதர் கோவிலடி**, நல்லூர்வடக்கு, யாழ்ப்பாணம்.

எங்கள் மருந்துச்சரக்குக் கடைகளில் முதல்தரமான கஸ்தூரி, கோரோசனை,
குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு, **சுத்தமான சிப்பிமுத்து** முதலியவைகளும்.
சுருள் தங்கம், புனுகு, பச்சைக்கற்பூரம், ஜவ்வாது, சந்தணம், சந்தணக்கட்டை,
சாம்பிறுணிப் பதக்கம்—தைலம், ஆதிபனவும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத்திரவியங்களும்,
திறமான பன்னீர் வகைகளும், அபிஷேகத் திரவியங்களும்
ஓமவாட்டர், சுருட்டுக் கோடாச்சரக்கு வகைகளும், பலவிதமான திறம் ஊதுவத்திவகைகளும்,
**மற்றும் மருந்துச்சரக்குவகைகளும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.**

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும்,
திருச்சி டக்றர் A. மதுரம் அவர்களின் குரு மருந்துவகைகளும்,
யாழ்ப்பாணம் டக்றர் ஜே. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துகளும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்
வீ. பீ மூலம் பெறவிரும்புவோர் நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—**ஆ. இராசையா**, மருந்துச் சரக்குக் கடை, பெரிய கடைத்தெரு, யாழ்ப்பாணம்.



**விலை நிதானம்!** **நயம் சரக்கு!**

## எங்கே?

யாழ்ப்பாணம், பெரியகடை, கெங்கா சத்திரத்திற்கு
மேற்குப் பக்கமாக இருக்கும்

# மு. குமாரசுவாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும், கயிற்றுவகைகளும், நூல்வகைகளும்
ஜேர்மன், இங்கிலீஸ் மேக் வாளிவகைகளும், பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
**விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.**
திறம் இங்கிலீஸ் மேக் குடைகளும், யப்பான் குடைகளும்
குறைந்த விலையில் தொகைக்கும், சில்லறைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**மு. குமாரசுவாமிப்பிள்ளை**, பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைநிலை இமநிலை! உ விலைநிலை அணுநிலை!

வீடுகள், கந்தோர்கள், வித்தியாசாலைகள், வியாபார ஸ்தலங்கள் முதலிய இடங்களில்

மங்களசூரியனைக விளங்கத் தகுந்தது

எவர்க்கும் விருப்பைத்தரும் மங்களகரமான

# மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்

கொழும்பு, மெய்கண்டான் அச்சியந்திரசாலையினின்றும்
திருவருளால் ஆண்டுதோறும் திருத்தமாகத் துலங்கி வருவது.

ஒவ்வொரு தேதியிலும்
திருக்குறள்
மூலமும் உரையுமாக
வரிசையாக வரும்முறை
அறிஞர்களின்மதிப்புக்கும்
அன்புக்குமுரியது.
மாணவர்,
ஆடவர்,
மகளிர்,
யாவரும்
காலையிலெழுந்தவுடன்
பார்த்து
மகிழத்தக்கது.
அன்புக்குரிய
ஆப்தநண்பர்களுக்கு
ஞாபகப்பொருளாக
அனுப்பத்தகுந்தது.
கண்கவர்ச்சியான
அழகிய படங்களுள்ளது.
விலை சதம் 50.



அழகிய பெரிய
இங்கிலிஷ்-தமிழ்-அறபு
தேதிகள்,
விரதங்கள்,
திதி-நக்ஷத்திர-யோகம்,
இராகுகாலம்,
பொதுச்சுபநேரம்,
அமாவாசை, பூரணை,
கார்த்திகை, அட்டமி,
அரசாங்கவிடுமுறை,
ஆகிய தினங்களைத்
துலக்கிக் காட்டும்
விசேஷ
அடையாளங்கள்,
திருக்குறள்
ஒருதேதியில் பாட்டு
அடுத்த தேதியில்
அதன் உரை
(இனிய வசனம்)
உள்ளது.

# மெய்கண்டான் தமிழ் டயறி

மிகவும் பிரயோசனமுள்ளது! எவரும் விரும்பத்தக்கது!

இலங்கையில் முதன்முதல் அச்சிட்ட தமிழ் டயறி இதுவே.
அறியவேண்டிய பல விஷயங்களடங்கியுள்ள அழகிய இந்த டயறி தமிழ்ப் பேசும்
ஒவ்வொருவர் கையிலும் அபிமானத்துடன் இருக்கத்தகுந்தது. விலை சதம் 75.
புதுவருடக் கலண்டர் டயறிகளுக்கு நவம்பர் மீ 1ந்தேதிக்கு முன் முற்பணத்துடன்
எழுதுவோர்க்கு நூற்றுக்கு 25 சதம் கமிஷன் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விலாசத்திற்கு எழுதுக:— ☞ மெய்கண்டான் அச்சியந்திரசாலை 68-ம் நம்பர் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சில்லாலை
# முத்து வைத்தியசாலை
## வைத்திய விளம்பரம்.

**நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம்.**

நமது வைத்தியத்தைப்பற்றி அறிந்தோர் பலரும் நம் சுதேசபதியாகிய சில்லாலை ஆயுள்வேத வைத்தியர் என்பதை அறியுமிடத்து மிக்க ஆநந்த—சீவகாருண்ணிய பரோபகார உத்தமர் என்பதைப் போற்றி ஏற்றி மகிழுவார்கள். ஏனெனில் இஃது பல தலை முறை வைத்தியம். இலங்காமங்கையின் முதன்மை பெற்ற வைத்தியம். அரசினராலும் மற்றும் கல்விமான்களாலும் ஏற்றிப் போற்றப்பட்ட வைத்தியம். இதனை நன்கறிந்த தெல்லியம்பதி வாசர்களின் கேள்விப்படி அதன் கிளைச்சாலையாக ஒன்றை அங்கு ஸ்தாபனம்பண்ணி, தினதினம் அங்கு சாயந்தரம் 3–மணி தொடக்கம் சாயந்தரம் 6–மணி வரையும் நமது வைத்தியத்தை நடத்தி வருகின்றோம். நோயாளர் குறிக்கப்பட்ட நேரத்துள் வந்து தரிசனை செய்வதால் மிக்க நன்மை உண்டென்பதை ஈண்டு குறிப்பிடவேண்டியதின்று.

தலைமை வைந்தியசாலை:—சுண்டிக்குளி,

கத்தோலிக்க அச்சியந்திர சாலைக்கு முன்பாக,

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

நெடுநாட்பட்ட கிரந்தி, கரப்பன் வியாதிகள், மேகரோகங்கள், பலவகைச் சுரங்கள், காமாலை, சோகை, பாண்டு, கணை, வாயு, வாதப்பகுதிகள் முதலியன தீரவும், மலடு நீக்கிப் புத்திரசந்தானம் உண்டாகவும், கெற்பநோய்கள் நீங்கவும், குழந்தை நோய்கள் சொஸ்தமாகவும் மருந்துகள் கொடுக்கப்படும். தீராதென்றிருப்போர் ஓர் முறை காட்டிப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

இன்னும் மிகக்கியாதி பெற்ற கிரந்தி எண்ணெய், மகா சந்தனாதி எண்ணெய், முலைப்பால் எண்ணெய், புத்திரசந்தான எண்ணெய், தாளங்காய் எண்ணெய், நயனவிதி எண்ணெய், மற்றுமுள்ள எண்ணெய் வகைகளும், செந்தூர வகைகள், பஸ்பவகைகள், லேகிய வகைகள், குளிகை வகைகள், சூரண வகைகளும், எம்மிடத்தில் நேரோ எழுதியோ பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம், உங்களன்புள்ள,

அ. செபஸ்தியாம்பிள்ளை,

அரசினரின் அங்கிகாரம்பெற்ற (முத்து) வைத்தியர்,

கிளை வைத்தியசாலை:—தெல்லிப்பழை,

அமெரிக்கன் மிஷன் பாடசாலை முன்பக்கம்.

---

# "MEDIUM"
## REGISTERED COMMERCIAL CENTRE
## JAFFNA (Branch)

**Undertakes to Buy, Sell and Exchange all kinds of Costly Jewels and Precious Stones on a purely commission basis**

---

## அன்பர்கள் கவனிக்க!

நானும் என் நண்பர்கள் பலரும்
பன் முறை பல கடைகளில்
பிடவைகளை வாங்கியதில்
யாழ்ப்பாணம் பெரியகடைத் தெருவிலுள்ள
**கனிபாய் ஸ்டோர் ஒன்றுதான்**
நேர்மையானதும் விலைசகாயமுள்ளதும்
நீங்களும் லாபமடைய வேண்டுமானல்
தற்காலத்திற்சேற்ற சில்க் முதலியவைகளும்
இன்னுந் தேவையான கொற்றன் பிடவைகளும்
**விலை சகாயமாய்ப்**
**பெற்றுக் கொள்வது உண்மை.**

இங்ஙனம்,
இ. திருஞானம், ஆசிரியர்.

Y



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE NISSEI TRADING Co.

FOR

**PAPER**

AND

**STATIONERY**

OF

**EVERY DESCRIPTION**

*PROPRIETORS:*

**The Ceylon Paper Box Manufacturing Co.**

The Nissei Farm, Anuradhapura.

TELEGRAMS: 'NISSEI' Colombo.
TELEPHONES: 1798 & 1799.

92, 100, 1st Cross Street,
COLOMBO.

நிஸி டிறேடிங் கம்பெனி, காகித வியாபாரம், கொழும்பு.

# நோட்டன் & கம்பெனி

சூளை, சென்னை.

தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு அச்சுஎழுத்துகள், போர்டர்கள்,
ஆப்டோன் - லயன் - எங்கிரேவிங் படங்கள் முதலியன
கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு சிறந்தமுறையில் செய்வித்து
நீண்டகாலமாகச் சப்ளை செய்து வருகின்றோம்.

உங்களுடைய அடுத்த ஆர்டரை
எங்களுக்கு அனுப்புங்கள்

முழுத்திருப்திக்கு உத்தரவாதம்!

**NORTON & CO.,** Spartan Type Foundary,
1-16, Baker Thiruvengada Mudali Street, CHOOLAI, **MADRAS.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருநோய்களுக்கு

## கைகண்ட நூதன மருந்து வகைகள்.

பெருநோய்வகைகளை வேரறுக்கும் உத்தரவாதமும் பத்திய முறைகளில்லாததுமான மருந்துவகைகள்.

கசம், குஷ்டம், ஈழை, தொய்வு, நீரிழிவு, குன்மம், பாண்டு, பெருவயர், மகோதரம், வயிற்றுக்கட்டி, திமிர்வாதம், சோர்வாதம், பாரிசவாதம், சர்வாங்கவாதம், முடக்கு, சூலை, கன்னப்புற்று, பறங்கி, மூலம், உட்டணம், சூதகசூலை, காக்கைவலி, குதிரைவலி, கண்டமாலை முதலிய நோய்வகைகளுக்கு வெகுகால அனுபவத்திலும், நூதன முறையிலும் பெருநோய் வகைகளுக்கென்றே புதிதாய்க் கண்டுபிடித்துப் பல்லாயிரக்கணக்கான நோயாளர்களைச் சுகப்படுத்திக் கியாதிபெற்றதுமான கைகண்ட மருந்து வகைகளைப் பெரு நோயாளர்களின் நன்மையைக் கருதி இம்மருந்து வகைகளைப் பரப்புவதற்காய் எனது கையாட்சியிலிருக்கிறது. நெடுநாட்பட்ட நோய்வகைகளையும், கெற்ப நோய்வகைகளையும் வேரறுப்பதற்கு இம்மருந்து வகைகளைத் தவிர வேறெவ்வித மருந்து வகைகளினாலும் பூரணசுகம் ஏற்படாதென்று பல்லாயிரக்கணக்கான நோயாளர்களின் அனுபவத்திலும் வைத்தியர்களின் அனுபவத்திலும் தெரியக்கிடக்கிறது.

**தர்ம வைத்தியம்:** கெதியற்ற ஏழைகளுக்கு எல்லா வியாதி வகைகளுக்கும் நேரில் தர்ம வைத்தியம்.

**விபரம் வேண்டியவர்களுக்கு நற்சாட்சிப்பத்திரமடங்கிய கேட்லாக் அனுப்பப்படும்.**

| | ரூ. ச | | ரூ. ச. |
|---|---|---|---|
| கசவியாதி வகைகளுக்கு ஒருமாதமருந்தின் விலை | 26-00 | ஏழைகளுக்குப் பாதி விலை ,, ,, | 11-25 |
| ஏழைகளுக்குப் பாதிவிலை ,, ,, | 13-00 | மகோதரவியாதிவகைகளுக்கு ,, ,, | 17-50 |
| குஷ்டவியாதிவகைகளுக்கு ,, ,, | 18-60 | ஏழைகளுக்குப் பாதி விலை ,, ,, | 8-75 |
| ஏழைகளுக்குப் பாதிவிலை ,, ,, | 9-30 | வயிற்றுக்கட்டி வகைகளுக்கு ,, ,, | 19-50 |
| ஈழை தொய்வு வகைகளுக்கு ,, ,, | 16-90 | ஏழைகளுக்குப் பாதி விலை ,, ,, | 9-75 |
| ஏழைகளுக்குப் பாதிவிலை ,, ,, | 8-45 | வாய்வு வகைகளுக்கு ,, ,, | 18-50 |
| நீரிழிவுவியாதிவகைகளுக்கு ,, ,, | 24-50 | ஏழைகளுக்குப் பாதி விலை ,, ,, | 9-25 |
| ஏழைகளுக்குப் பாதிவிலை ,, ,, | 12-25 | மூலவியாதி வகைகளுக்கு ,, ,, | 16-00 |
| வாதவகைகளுக்கு ,, ,, | 16-40 | ஏழைகளுக்குப் பாதிவிலை ,, ,, | 8-00 |
| ஏழைகளுக்குப் பாதிவிலை ,, ,, | 8-20 | வலிவகைகளுக்கு ,, ,, | 19-80 |
| குன்மவகைகளுக்கு ,, ,, | 16-60 | ஏழைகளுக்குப் பாதி விலை ,, ,, | 9-90 |
| ஏழைகளுக்குப் பாதிவிலை ,, ,, | 8-30 | பைத்தியவியாதிவகைகளுக்கு ,, ,, | 36-00 |
| பாண்டுவகைகளுக்கு ,, ,, | 16-20 | ஏழைகளுக்குப் பாதி விலை ,, ,, | 18-00 |
| ஏழைகளுக்குப் பாதி விலை ,, ,, | 8-10 | விசர்வியாதிவகைகளுக்கு ,, ,, | 40-00 |
| பெருவயர்வகைகளுக்கு ,, ,, | 22-50 | ஏழைகளுக்குப் பாதி விலை ,, ,, | 20-00 |

வீ. பீ. யில் மருந்து தருவிக்க விரும்புகிறவர்கள் தங்களது நோய் தொடங்கிய காலமும் விபரமும் தெரிவிக்க வேண்டியது.

**குறிப்பு:** உடுவிற் பெண்பாடசாலையிலிருந்து மேற்குமுகமாய்ப் போகும் டச்சுறோட்டு வழிபாக அரைமைல் தூரம்வந்து விசாரித்தால் எனது வீடு புலப்படும்.

வீட்டின் விலாசம்:

**எஸ். வீ. தம்பையா,**
பெருநோய்களின் வைத்தியன்,
விசுவநாதர் வீடு, டச்சு றோட்டு,
உடுவில், மானிப்பாய்.

தபால் விலாசம்:

**S. V. TAMBIAH,**
Physician of all chronic diseases,
**UDUVIL, Manipay,**
CEYLON.

தனலக்ஷுமி புத்தகசாலை
சுன்னாகம்

### எமது

## சொந்தப் பிரசுரங்கள்.

| | |
|---|---|
| இரகுவமிசம் மூலமும் உரையும் | |
| ,, ,, முதற்பாகம் | 2-00 |
| ,, ,, இரண்டாம்பாகம் .... | 2-00 |
| குசேலர் சரிதம் .... .... | 36 |
| இரகுவமிச சரிதாமிர்தம் .... | 50 |
| கந்தபுராண விளக்கம் .... | 60 |
| இராமோதந்தம் அரும்பதவுரை.... | 25 |
| ,, ,, உரையுடன் .... | 50 |
| ,, ஆங்கில மொழிபெயர்ப்பு.... | 30 |
| மகாபாரதம் வாரணாவதச் சருக்கம் உரையுடன் .... | 60 |
| ,, பழம்பொருந்து சருக்கம் / ,, நச்சுப்பொய்கைச் சருக்கம் / ,, நாடுகரந்துறை சருக்கம் | 75 |
| பிரித்தானிய சக்கிராதிபத்தியச் சரித்திரச் சுருக்கம் | 1-00 |
| கண்ணகி கதை .... .... | 10 |
| ஆத்திசூடி .... .... | 05 |
| கொன்றைவேந்தன் .... .... | 05 |
| சைவவினாவிடை .... .... | 10 |
| திருக்குறள் அதி. 49–58 ஆங்கில மொழிபெயர்ப்புடன் | 40 |
| கிராதார்ச்சுனீயம் | 60 |

தனலக்ஷுமி புத்தகசாலை
சுன்னாகம் : வண்ணார்பண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்.

# இதோ! இதை வாசியுங்கள்.

அன்பிற் சிறந்த நேயர்களே!

பல் வளங்களும் ஒருங்கே யமையப்பெற்ற இவ்விலங்கா துவீபத்தின் தலைமாகாணத்தின் தலைநகராகிய இவ்வியாழ்ப்பாண மாநகரின் கண் யாழ்ப்பாண மக்களால் முதல் முதலாக நிறுவப்பெற்று நிறைவோடு பொது ஜனங்களின் வறுமையை அகற்றி செல்வத்தை யளித்துக் கொண்டே வருகின்ற அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுச் சமுதாயத்தின் பெருமையை அகத்தின் கண் ஒரு சிறிதும் அடக்கி வைக்க இயலாது இவ்வாண்டு வெளியிடும் "ஈழகேசரி" விசேட பத்திரத்தில் ஒருவாறு பிரசுரஞ் செய்யத் துணிந்தனன்.

இச்சமுதாயத்தின் பெருமையை எடுத்து உரைப்பதால் சமுதாயமுகாமைக்காரர் கர்வமடையாது சமுதாய வளர்ச்சியை மென்மேலும் பெருக்கிப் பொது சனங்களை ஈடேற்ற எல்லாம் வல்ல இலைமுகப் பைம் பூணிறை திருவருள் பாலிப்பாளுக.

இச்சமுதாயத்தின் கண் சேர்ந்துள அங்கத்தினர் அனைவரும் பெரும்பாலும் தகைமை வாய்ந்தோரென்பது பெறப்படுகின்றது. அன்றி கொண்டு நடத்துபவரும் கடவுட் பயமும் பொதுஜன நலப் பிரியமும் உடையோரென்பது யாம் மறுக்கொணு உண்மையாம். இச்சமுதாயம் ஆரம்பித்த 3 வருட காலத்துக்குள் மேற்படி முகாமைக்காரர் சமுதாய பிரமாணங்களை ஒரு சிறிதும் வழுவாது அநுசரித்து வந்ததோடு உறுப்பினரை ஒரு சிறு அணுவளவேனும் பட்சபாதமின்றி நடத்தியும் வந்துளார் என்பது சீட்டங்கத்தவராகிய யாமும், வனையோரும் நன்கறிந்த விடயமே.

இச்சமுதாயத்தைப் போல் வனைய சீட்டுச் சமுதாயங்களும் செவ்வனே நடைபெற்றுவர ஆண்டவன் அருள் புரிவாளுக. சீட்டங்கத்தவராய யாம் அனைவரும் மேற்படி சமுதாய முகாமைக்காரரோடு ஒத்துழைத்துச் சமுதாய வளர்ச்சியை மென்மேலும் கூட்டிக் கொண்டுவரப் பெருமான் பேரருள் சுடாட்சிப்பாளுக.

சீட்டுச் சமுதாயங்களை நடத்திவரும் நேயர்களனைவரும் அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டு சமுதாயத்தைப் பின்பற்றி நடப்பார்களாயின் அவர்களுக்கு ஓர் வித கஷ்டமும் நிகழாதென்பதென் துணிபு. இச்சமுதாயம் ஆரம்பித்த மூன்றேவருட காலத்துக்குள் இவ்வுன்னதநிலைக்கு வந்ததன் காரணத்தை நாம் அனைவரும் நன்கறிவோம். தற்போதுமாதவிதம் ரூபா 15000-க்கு மேல் பண வசூல்செய்து தொழிலாற்றுவதை நினைக்க என்மனம் இறும்பூதெய்துகின்றது. உண்ணாட்டுச் சமுதாயங்கள் பிரபலமடைந்து நம் நாட்டுப்பணம் பிறநாடு செல்லாவண்ணம் பாதுகாக்க இறைவன் அருள்புரிவாளுக.

## வெள்ளிதிசையென்கிறார்.

யான் சில நாட்களுக்கு முன் அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுச் சமுதாயத்தார் சிலரோடு கலந்துரையாடியவிடத்து மேற்படி சமுதாயத்தார் சீட்டுச் சமுதாயங்கட்கு அரசினர் பொறுப்புப் பணம் (Govt Security) கேட்கும்படி உள்நின்று அருள்புரிந்த ஈசனைத் துதித்ததோடு அரசாங்கத்தையும் மெச்சுகின்றேம் என்றனர். இச்சமுதாயத்தார்க்கு, சனிதிசையல்லவென்று உரைப்பது மிகையாகாதுபோலும்.

## செலுத்தமாட்டேன்

அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுச் சமுதாயத்தில் ரூபா 250. மொத்தத்தொகைகொண்ட சீட்டு வகுப்பிற் சேர்ந்து பணம் பெற்றபின் கடனைச் செலுத்தாது மறுத்ததின் காரணமாய் மேற்படி சமுதாய முகாமைக்காரன் குறிக்கப்பட்ட கடன்காரன்மீது வழக்குத் தொடர்ந்ததன் பயனாக நீதிபதி யவர்கள் பிரதிவாதியைக் கோட்டுச்செலவுடன் வட்டி கூட்டிக் கழிவின்றிக் கடன் தொகையைச் சமுதாய முகாமைக்காரனிடம் செலுத்துமாறு தீர்ப்பிட்டுள்ளார்.

## இல்லையென்றார்

ஒருவர் ரூ 125 மொத்தத் தொகைகொண்ட சீட்டுவகுப்பிற் சேர்ந்து ஏலத்தில் ரூபா 30 - கழித்து சீட்டுப்பணத்தைத் தமக்குரியையாக்கிக்கொண்டு குறிக்கப்பட்டகாலத்தில் பணத்தைப் பெற்றுக்கொள்ள விருப்பின்றி .......... ..............பொருட்டு சமுதாய முகாமைக்காரர் மீதும் சமுதாயத்தில் ஓர் சிறிதும் உரிமையற்ற பகர் மீதும் வழக்குத் தொடர்ந்திருந்தார். விளக்கத் தவணையிலனறு வாதி மாயமாய் மறைய பிரதிவாதிகளே சமுகங்கொடுத்தனர். நீதிபதியவர்கள் வழக்கைத் தள்ளும்படி செய்ததோடு பிரதிவாதிகளுக்கு கோட்டுச்செலவு கொடுக்குமாறு தீர்ப்பிட்டனர்.

அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுச் சமுதாயத்து ஒரு அங்கத்தவன்

இது, யாழ்ப்பாணம் – மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலையத்தி" லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம் "தலைபாட்டி" என்னுங் காணியிலுள்ள "திருமகள் அச்சியந்திரசாலை" யில், 1935-ம் ஞு ஏப்பிரல் மீ 14௳ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனலக்குமி புத்தகசாலை

சுன்னுகம் : வண்ணார்பண்ணை

இயற்றமிழ்ப் இலக்கண இலக்கிய இதிகாச இலங்கை இந்திய
பதிப்புகள் இங்கே கிடைக்கும்.



கலாசாலைகளுக்கு வேண்டிய எல்லாப் பொருட்களும்
விலை சகாயமாய் விற்கப்படும்.

## THANA LUCKUMY BOOK DEPOT,

**CHUNNAKAM & VANNARPONNAI.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org